809

திருமங்கை - ஆழ்வார்

3/4

திருக்கோவலூர் – ஸ்ரீ தேஹளீசப்பெருமாள்

ஆருயிரப்படி — பத்தொன்பதாம் பாட்டு

அவ:— பத்தொன்பதாம்பாட்டு. நப்பின்னைப் பிராட்டியையெழுப்பி, ''சீராற் வளையொலிப்ப வந்துதிறவாய்'' (18) என்றவாறே, எழுந்திருந்து கதவைத்திறக்கும் புகாள: ''நம்மை ஆஸ்ரயித்தவர்களை இவள் தன்னுடையாரென்று இருக்குமோ பாதி, இவளைப்பற்றினர் நம்முடையாராயன்றே இருப்பது; நம்முடையார்க்கு இவள் முற்பட்டாளாகவொண்ணாது; இவளைத் திறவென்றார்க்கு நாம் முற்பாடராய்க் கார் யஞ் செய்தோமென்னும் தரம்பெறவேணும்'' என்று, இவளைத் திறக்கவொட்டாதே பின்னிட்டு வந்து மல்கட்டாகக் கட்டிக் கொண்டுபோய்ப் படுக்கையிலே விழவிட்டு, இவளுடைய ஸ்பர்ஶத்தாலே தானும் மயங்கி, இவர்கள் வந்த காரியத்தையும் மறந்துகிடக்க; அவனை எழுப்பினவளவிலே அவனெழுந்திருந்து இவர்களுக்கு ப்ரதிவசநம்பண்ணுதபடி அவனுக்கு முற்பாடுகொடாதே கட்டிக்கொண்டு கிடந்து உறங்குகிற இவள்தன்னையே திரியட்டும் எழுப்புகிறார்கள்—மீளவும் அவனை உணர்த் துகைக்காக. இத்தால்—ஆஸ்ரிதர்க்கு மாறி மாறி ஒருவர்க்கொருவர் பரிந்து நோக்குகையாலே நமக்குத் தஞ்சமாயிருப்பதொரு மிதுநமுண்டென்கிறது. இப் படிக்கொத்த மிதுநத்தைத் தனித்தனியே பற்றுகிறவர்கள் ராவணசூர்ப்பணகைகளோ டொப்பார்கள்: பெருமாளைப்பற்றி, திருவடி பிராட்டிதிருவடிகளிலே செல்ல, அவனைக் கடாக்ஷித்து, இளையபெருமாளறியாத காகவ்ருத்தாந்தத்தை அருளிச் செய்தாள்: பிராட்டியைப் பற்றிவந்த ஸ்ரீவிபீஷணழ்வானை A ''விபீடணற்கு வேருகநல்லானை'' என்னும்படி விஶேஷஸ்நேஹம் பண்ணியருளினர் பெருமாள். 1. ''த கஶ்சிந்நாபராத்யதி'' என்னுமவனையும், B ''என்னடியாரதுசெய்யார்'' என்னுமவனையுங்காணும் நாம் தஞ்சமாகப் பற்றியிருக்கிறது. C ''நின்திருவரு ளும் பங்கயத்தாள் திருவருளுங்கொண்டு நின்கோயில்சீய்த்து'' என்றாளே. D ''ஆள்கின்றருளழியான் ஆமாவ்குறைவுடையம்—வாள்கெண்டையொண்கண்'' E ''கூரம்பன்'' என்று பகவத்ப்ரபந்நர், அம்பின் புகரையும் கூர்மையையும் நினைத்திருப்பர்கள்; த்வயநிஷ்டர் இவள் கண்ணின் கூர்மையையும் புகரையும் தஞ்சமாக நினைத்திருப்பர்கள்.

ஶ்ரீவ்யா:— (குத்துவிளக்கெரிய) ''நம்மைப்போலே ஊரார் இசைவும் வேண் டாதே, விடிகிறது என்கிற பயமுமின்றிக்கே, இருள் தேடவும் வேண்டாதே, பகலே இரவாக்கவும் வேண்டாதே. விளக்கிலே க்ருஷ்ணன் முகத்தைப்பார்த்துப் படுக்கைபடுத்துக்கொண்டு கிடக்கப்பெறுவதே இவளொருத்தி! இதென்ன ஐஶ் வர்யம்!'' வென்கிறார்கள். F ''காணிலொட்டார்'' என்னும்படி தங்களுக்கு ஊரா ரிசைவும் தேட்டமாய், ''கீழ்வானம் வெள்ளென்றது'' (8) என்கிற பயமும் நடந்து

A பெரியதிரு 6-8-5. B பெரியாழ்திரு 4-9-2. C திருவாய் 9-2-1. D திருவாய் 10-4-3. E நான்-திருவ 8. F நாச்-திரு 3-7.

A "நள்ளிருட்கண்" என்று—இருளும் தேட்டமாய், இரா பகலாம்படி விஶ்லேஷத்தோடே க்ருஷ்ணன் முகத்தில் விழிக்கவும் பெறுதே, தறைக்கிடை கிடப்பதாயிறே நாங்கள் படுகிற பாடு: சோரர்க்கு விளக்கும் நிலவும், பகையிறே. இவளுக்கு ப்ரஸித்₄தமான முறையுண்டாகையாலே விளக்கிலே படுக்கை படுக்கத் தட்டில்லையே; க்ருஷ்ணனைப் பற்றினவர்கள் அவனுடை ஸாத₄ர்ம்யம் பெறுமோபாதி, "தூமணி மாடத்துச் சுற்றும் விளக்கெரிய" (9) என்று உன்னுடைய மாளிகையோடு ஸாத₄ர்ம்யம் பெற்று, எங்களுடைய மாளிகைகளிலே உன்னைப் பற்றின நாங்களும் உன்னுடை ஸாத₄ர்ம்யம் பெற்று, க்ருஷ்ணனும் நாங்களும் எங்களகங்களும் இப்படி விளக்கும் படுக்கையுமாயுலன்றே உன்னுடைய அநுப₄வத்துக்கு ப்ரயோஜநமுள்ளதும், இது உனக்குப்பொறுப்பதும். இரா உண்ணுதார்க்கு உண்டார் அடியரன்றே. (குத்துவிளக்கு) வேண்டினவிடத்திலே பேர்த்துவைக்கலாம் விளக்கு. நீயும் அவனுமாய்க் கண்வளரும்போது வேண்டுமிடங்களிலே எடுத்துவைத்து, அடிமை செய்கைக்கு நாங்களும் வேண்டாவோ? 1. "ரமமாணா வநே த்ரய:" என்னும்படியே. (எரிய) புறம்பே ஒரு கொடிவிளக்குப் புகரழிந்துகிடக்க ஒருநிலைவிளக்கு உள்ளேநின்று ப்ரகாஶியாநின்றது. (எரிய) அப்ரகாஶமுமாய், அந்யாதி₄நப்ரகாஶமுமாயிருப்பதொரு விளக்குண்டாம்படி ஸ்வயம் ப்ரகாஶமுமாய், பரப்ரகாஶகமுமாய் நின்றெரிகிறதொரு விளக்கு. தன்னையுங் காட்டாதே, தன்னைப் புருஷகாரமாகக் கொண்டு காணக்கடவ அவனையுங்காட்டாதேயிருப்பதேயிவள்; 2. "பா₄ஸ்கரேண ப்ரபா₄ யதா₂" ப்ரபை₄ தன்னையுங்காட்டி ஆதி₃த்யனையுங்காட்டவற்றிறே. B ஆயர்பாடிக்கணிவிளக்கு ப்ரகாஶிக்கைக்கு இட்ட நிலைவிளக்கிறே இவள்தான். ஒன்று ஸ்வயம்ப்ரகாஶமுமாய் பரப்ரகாஶகமுமாயிருக்கும்; ஒன்று அப்ரகாஶமுமாய் அந்யாதி₄நப்ரகாஶமுமாயிருக்கும்; தன்னைத்தான் காட்டாமையாலே அப்ரகாஶமென்கிறது; க்ருஷ்ணன் பாரதந்த்ரியத்தாலே அந்யாதி₄நப்ரகாஶமென்கிறது; இவள் தன்னைக்காட்டுகையாலே ஸ்வயம்ப்ரகாஶமென்கிறது. ஸ்வாஶ்ரயத்தை விளக்குகையாலே பரப்ரகாஶகமென்கிறது: அவனுக்கு விளக்கானவளிறே இவள்தான். 3. "அதிவ ராமஶ்மஶ்மபே₄" என்கிறவனுக்கும் ப்ரகாஶகையாய், ஒளஜ்ஜ்வல்யாவஹையாயிறே இவளிருப்பது. C "திகழ்கின்றதிருமார்வில் திருமங்கைதன்னோடும்"

(கோட்டுக்கால் கட்டில்மேல்) இருள்தேட்டமன்றிக்கே ப்ரகாஶம்பொறுத்து தீலை விளக்கெரிகிறதுக்கு மேலே, எங்களைப்போலே ஶ்ரீப்₃ருந்தா₃வநமும் மணற்குன்றுந்தேடிப் போகவேண்டாதே உள்ளகத்துக்குள்ளே படுக்கை படுத்துக் கூச்சமற்க் கிடக்கப்பெறுவதே! இதென்ன பா₄க்₃யப₂லந்தான் என்கிறார்கள். (கோட்டுக்கால்) ஆனைகளை உயிர்ப்பிடியே பிடித்து அவற்றின் கொம்புகளைப் பறித்து அவற்றை ஆதா₄ரமாக்கக் கடைந்து மடுத்துச்செய்த கட்டில். வீரபத்நியாகையாலே இப்படி சமைந்த கட்டிலிலொழிய மற்றையவற்றில் கண்ணுறங்காதாகாதே! 4. "க₃ஜம் வா வீக்ஷ்ய ஸிம்ஹம் வா வ்யாக்₄ரம் வாபி வஸாநநா!

A நாச். திரு 12-3. B நாச்-திரு 13-10. C திருவாய் 10-6-9.

நாஹாரயதி ஸந்த்ராஸம்'' பிராட்டிக்குக் காட்டிலே ஆனையுள்ளிட்டன கண்டால் அபூர்வதர்ஶநத்தாலே வந்த முகவிகாஸம் போக்கி, ஸ்த்ரீத்வ ப்ரயுக்தமான அச்சம் குடிபோய்த்து. அதுக்கடியென்னென்னில்: 1. ''பரஹ ராமஸ்ய ஸம் ஸரிதர:'' தனக்கென்னத் தோள்படைக்கையாலே, உயிரோடே பிடித்துக் கொம்பை வாங்கவல்ல வீரனுடைய பத்நிக்கு அஞ்சவேண்டாவே. வீரபத்நிக்கு நாயகனேடே அணையும்போது கையில் நாண்தழும்பால் வந்த சரசரப்புக் கண்டதில்லையாகில் தங்களோட்டைப் பெண்களே அணைத்தாற்போலே இருக்கும். 2. ''பரித்தாரம் பரிஷஸ்வஜே'' என்று பிராட்டி பெருமாளுடைய வீரக்கோலங்கண்ட பின்பிறே ஆண் என்று அணைத்தது; மற்றைப்போது 3. ''ஸ்த்ரியம் புருஷவிக்ரஹம்'' என்றிறே இருப்பாள். ஏயாகிணைகர்க்கஶமான தோள்களாலே அணைக்கவேணும். 4. ''மாதங்க இவ ஸிம்ஹேந'' ராவணனுகிற ஆனையை உயிர்ப்பிடிபிடித்த லிம்ஹமிறே பெருமாள். 5. ''உபதாய புஜம் தஸ்ய லோகநாதஸ்ய'' என்னுமபடியான தோள்களாய்த்து. 5. ''லோகநாதஸ்ய'' என்கிறது, 6. ''பதிம் விஶ்வஸ்ய'' என்கிறபடியே அவனுக்கும் தங்களுக்குமுண்டான முறையை உணர்ந் திருப்பார்க்கு பயப்படவேண்டாவென்றபடி. 7. ''ஆநந்தம் ப்ரஹ்மணோ வித் வாந்'' வீரபத்நிகள்படி ப்ரபந்நர்படிபோலே. தந்தாமுக்கென்ன மிடுக்கற்றவர் களுக்கு அவனுடைய பலமே பலமாகவேண்டாவோ? ஆநுகூல்யத்தில் தாரதம் யங்கொண்டு த்யாகஸ்வீகாரம் பண்ணுவது அவன் அபரிபூர்ணனுகிலிறே: பரி பூர்ணனவனுக்கு இவன் விலக்காமையிறே வேண்டுவது. இவன் பண்ணின ப்ராதிகூல்யத்துக்கு அபுத்திபூர்வகமான ப்ரபத்தி ப்ராயஶ்சித்தமாம்போது ஶரண் யன் நீர்மையே பலிக்கிறவித்தனையிறே; பலத்தோடே ஸந்திப்பிக்குமதிறே உபாபமாகிறது. ஸர்வஸ்வதாநம் பண்ணின வெறுவியனுக்கு நன்மை உண்டாம்போது வேறேயொருவன் அநுக்ரஹத்தாலே பலமாக வேண்டாவோ? இரண்டுக்ரியையாலு மன்றிக்கேயிருந்ததிறே பலம்; அத்தாலேயிறே, 8. ''ஆர்த்தோ வா யதிவா த்ருப்த:'' என்கிறது. அங்ஙனேயாகில் ப்ரபத்திதானென்னென்னில்: சைதந்யகார்யம் வேண் டுகையாலே. இவனுடைய ஸத்தை உபாயமாமன்றிறே ஸ்வீகாரமும் உபாயத்தில் புகுவது. 8. ''ரக்ஷிதவ்ய: க்ருதாத்மநா'' — அவன் க்ருதாத்மாவாகையாலே இவன் பக்கல் பெற்றது கொண்டு தன் நீர்மையாலே ரக்ஷித்துவிடுமித்தனே. (கோட்டுக் கால்கட்டில்) குவலயாபீடத்தின் கொம்பைப் பறித்துக்கொண்டு போந்து சமைத்த கட்டில். 9. ''ஸக்ய: பஶ்யத'', என்று பார்த்துக்கொண்டு நின்ற பெண்களெல் லாம் கிடக்க, கோடுகள் கொண்டு கட்டில் சமைப்பது ஒக்கப் பட்டங்கட்டின ப்ரதாந மஹிஷிபான இவளுக்கிறே: A கோட்டிடையாடிற்றும் இவளுக்கு; கொடுத்ததுமிவ ளுக்கு. B ''வேழமுமேழ்விடையும்.'' (கோட்டுக்கால்) C ''பின்னைதன் கேள்வன் தான் கண்டுகொண்டு'' என்று மேல் கிடக்கிற மிதுநத்தின் காலிலும், அம்மிதுநத்

A திருவிருத்தம் 21. B பெரியாழ்திரு 1-5-3. C திருவாய் 10-4-3.

தைச் சுமக்கிற காலிலே தலையை மடுக்கிறார்கள். க்ருஷ்ணன் படுக்கையின் காலைப் பற்றினவர்களிறே — பர்யங்கவித்₃யையிற் சொல்லுகிற படுக்கையிற்காலிட்டேறுவார். ஆஸ்நத்தின் காலிக்கட்டின ஸர்ப்பம் ஆஸநத்தின் A ஆகத்திலே ஏறினாற்போலே. (கட்டில்) பெருவிலையனை பொன்னாலும் ரத்நத்தாலும் சமைத்தாலும், இடையரா கையாலே "கட்டில்" என்று ஜாதிப்பேச்சு. (கட்டில்மேல்) ப்₃ரஹ்மாதி₃கள் வரவிட்ட B சிறுத்தொட்டில்களாகிலிறே C கிழிய உதைத்துப் பொகடுவது; படுக்கைப்பற்றில் படுக்கைபாகையாலே ஆத₃ரத்தோடே பேணிக்கொண்டு போரும்.

(மெத்தென்ற பஞ்சசயனம்) மெத்தென்ற பஞ்சாலே செய்த படுக்கை, (மெத் தென்ற) நாங்கள் ஆர்த்தைகளாய் வந்து கிடக்க, படுக்கையின் உள்மாநம் புற மாநங்கொண்டாடிக் கண்ணுறங்குவதே! (மெத்தென்ற) நாங்கள் புறம்பே நின்றுல் படுக்கை கடி₃னமாக வேண்டாவோ? அவனோடு கிலாய்த்தபோது சிறுவது அவன் படுக்கையையிறே; D "தம் பாம்புபோல்". E "சரணேசரண்" என்று திருவநந்தாழ்வானைப் பெரியாழ்வாரோபாதியிறே நினைத்திருப்பது. (பஞ்சசயனம்) பஞ்சவித₄மான ஶயநம். ஶீதபரிஹாரமுமாய், உஷ்ணபரிஹாரமுமாய், த₃ர்ஶநீய முமாய், பரிமளவத்துமாய், விஸ்தாரபாண்ட₃ரோபேதமுமாயிருக்கை.

(சயனத்தின்மேலேறி) நாங்கள்உள்ளுப் புகுரப்பெருதே புறம்பே நின்றுல், படுக்கை, காலிடவொண்ணுதபடி உறுத்தவேண்டாவோ? புத்ராதி₃கள் துணையாத படுக்கை பித்ராதி₃களுக்கு அஸஹ்யமாமாபோலே, நாங்கள் துணையாத படுக்கை F வெம்பள்ளியாகாதே தண்பள்ளியாவதே! அவர்களுக்கு நெருப்பு நீராம் ஔஷத₄ம் உன்கையிலேயுண்டே. (மேலேறி) நாங்களும் மிதித்தேறினுலன்றே நீ ஏறுவது. 1. "பாதே₃நாத்₄யாரோஹதி" என்று ஸ்ரிய:பதியினுடைய பர்யங்க வித்₃யையிற் சொல்லுகிறபடியே குறைவற்ற படுக்கையிலே சென்றேறக்கடவன் இந்த முக்தாத்மா; அவன் 2. "கோஹி" என்னக்கடவன். இவன் 2. "அஹம் ப்₃ரஹ்ம மாஸ்மி" என்னக்கடவன். 3. "யஸ்யாஸ்மி" என்கிறவன் 2. "ப்₃ரஹ்மாஸ்மி" என்கிறது—'ப்₃ரஹ்மப்ரகாரபூ₄தன் நான்' என்றபடி. இவர்களும் அத்தையிறே கணிசிக்கிறது. (ஏறி) G வெள்ளை வெள்ளத்தின்மேலொருபாம்பை மெத்தையாக விரித்துறங்குகிறவன், 4. "நாக₃பர்யங்கமுத்ஸ்ருஜ்ய" இங்கேற வரவிட்ட படுக்கை, இங்கே தனக்கும் முற்பட வந்த விஸ்மயத்தைக்கண்டு ஆஶ்சர்யத்தாலே ஸதிமிதனுய் அதிலேயேறின வருத்தத்தைச் சொல்லுகிறது.

இப்படிக்கொத்த படுக்கையிலே துகைக்கைக்கு நிதா₃நஞ் சொல்லுகிறார்கள் — (கொத்தலர் பூங்குழல் நப்பின்னை) திருக்குழலில் ஸ்பர்ஶத்தால் கொத்துக்கொத் தாக அலராநின்றுள்ள பூவையுடைத்தான குழலையுடையு நப்பின்னை. கொத்தாகப் பறித்துக் குழலிலே சூட்டினுல் தன்னிலத்திற்போலே குழலிலேயிருந்து செவ்வி

A நான் திருவ 74, B பெரியாழ் திரு 1-3-1, C பெரியாழ் திரு 1-1-9 D நாச் திரு 10-3, E திருவாய் 5-10-11, F திருவாய் 9-9-4, G பெரியாழ் திரு 5-1-7.

மாறுமல் அலருமாய்த்து. கொம்பினின்றும் போந்து குழலிலேயிறே அலருகிறது. இவள் மயிரில் பூ அலருகைக்குக் காலத்தோபாதியாகாதே, 1. ''கால: கலயதா மஹம்'' என்றவனுடைய ஸ்பர்ஶம். (கொத்தலர்) ஒரு ப்ரணயகலஹத்திலே எடுப்பும் சாப்புமாக மஹாபாரதம் நடவாநின்றால், பூ அலராதொழியும்படி எங்ஙனே? (பூங்குழல்) ''மலர்கிட்டு நாம்முடியோம்''(2) என்று எங்கள் குழல் பூவும்மாறி செவ்விப்பூவை வைக்கிலும் தொங்காதே, தொங்கினபூ விரஹாக்நியாலே சருகாம்படி பிருக்க, நீ முடிப்பது எங்கள்தலையில் பூப்பொறுத்தாலன்றே? இவளை இழவுசொல்லும்போது தங்களோடே கூட்டுவர்கள்; பேறு சொல்லும்போது அவளோடே கூட்டுவர்கள். அவளுக்கு இரண்டு தலையும் விடவொண்ணாது. (நப்பின்னை கொங்கைமேல் வைத்துக்கிடந்த) (பூங்குழல் நப்பின்னை) விலக்ஷணமாய் நிரதிஶயமான குழலையுடையவள். கேசவனையும் பிச்சேற்றவல்ல குழலையுடையவள். இவன் குழலை வாருகைக்கு அக்காக்கை வருவது A ''பின்னை மணாளனை'' என்று இவளோட்டை ஸம்பந்தமும் சொன்னலாயித்து.

(கொங்கைமேல் வைத்துக்கிடந்த) நப்பின்னைப் பிராட்டியினுடைய திருமுலைத் தடத்தைத் தன்மேலே வைத்துக்கிடந்த என்னுதல்; கொங்கைமேலே தன்னை வைத்துக்கிடந்த என்னுதல், 2. ''ந ஶாஸ்த்ரம் நைவ ச க்ரம:'' என்றிறே ப்ரணயமிருப்பது; 3. ''பர்யாயேண ப்ரஸுப்த:'' என்னக்கடவதிறே. B ''மலராள் தனத்துள்ளான்'' பர்வதபாரஶவத்தைப்பற்றி ஜீவிப்பாரைப்போலே. (கிடந்த) திறக்கக் கணிசித்தவன் நஞ்சுண்டாரைப்போலே பரவஶனாய் மயங்கிக்கிடக்கிறபடி. (மலர்மார்பா) அவன் அண்டைகொண்ட அரணும் இவள் ஜீவநமும். முலையைப்பற்றி அவன் கிடக்கும், மார்பைப்பற்றி இவள் கிடக்கும். இவள் முலைப்பரப்பெல்லாம் ஒரு மூலைக்குப்போராதபடி அகன்ற மார்பையுடையவனே! C பெரியவரை மார்பிறே அது. D ''முற்றுராவனமுலையாள்... அகலத்துள்ளிருப்பாள்'' என்னக்கடவதிறே.

(மலர்மார்பா) திருமுலைத்தடங்களுறுத்தும்படி அணைத்த ஸ்பர்ஶஸுகத்தாலே பூ அலருமாபோலே விகஸிதமான மார்பை உடையவனே! 4. ''ஸதை3க்ரூப ரூபாய'' என்னுஞ்செய்தே ''மலர்மார்பா'' என்கிறதிறே இவ்விகாரத்தோடு விரோதி யாமைபாலே. கர்மநிப3ந்த4நமாய் வரும் வ்ருத்தி3ஹ்ராஸங்கள் தோ3ஷாவஹங்களாகையாலே அவையில்லையென்கிறதித்தனையிறே. நித்யாநபாயிநியாயிருக்கிறவளுடைய ஸம்ஶ்லேஷத்தால்வரும் விகாரம் இல்லையென்கிறதன்றே, ஆஶ்ரிதஸம்ஶ்லேஷத்தில் அஹங்கார்த்வம் அவத்3யமித்தனையிறே, இவ்விகாரமுண்டானால் கல்யாணகு3ணங்களிலேபாமித்தனையிறே. E ''மலராது குவியாது'' என்கிறவிடம் ஸ்வரூபமிறே. யஶோதைப்பிராட்டி கட்டுக்கு அலருகிற மார்பு, இவளுடைய ஸ்தநப3ந்த4த்துக்கு அலரச்சொல்லவேணுமோ? F ''புடைக்கலந்தானை'' G ''வரைநெடுந்தோள் மூர்த்தி கண்டீர்'' இவளோடணைந்த பின்பு இவ்விகாஸம் பிறவாதாகில் இவர்களுக்குத்

A பெரியாழ் திரு 2-5-1, B மூன்-திருவ 3, C மூன்-திருவ 55, D திருநெடு 19
E திருவாய் 3-1-8, F திருவிருத்தம் 86, G பெரியதிரு 4-4-5.

தான் என்செய்ய? அவனுக்கு விகாஸத்தைப் பண்ணி ஸ்வரூபம் பெறவிருக்கிறவர்களிறே இவர்கள். 1. ''நித்யகிங்கர:'' A ''ஓர் குற்றேவல்''; அதனை விகஸிப்பிக்கை இவர்களுக்கு ஸ்வரூபமாயிறே இருப்பது. ஸோஷியை விகஸிப்பிக்கும்போது ஸோஷவஸ்துவேணும்; இல்லையாகில் ஸ்வதந்த்ரமாயிருப்பதொரு வஸ்துவுண்டாய் விகஸிப்பிக்கிறதன்றே. இச்சா₃நுகு₃ணமாக விளையுமது சைதந்யப்ரயுக்தமிறே.

(வாய்திறவாய்) அவன் ஊமத்தங்காய் தின்றுகிடக்க இவர்கள்தான் ஆரையெழுப்புகிறது? (வாய்திறவாய்) கிடந்த விடத்தே கிடந்து உன் க₃ம்பீ₄ரமான மிடற்றோசை கேட்கும்படி ஒருவார்த்தை சொல்லாய். 2. ''அநந்யா'' என்கிறபடியே ஏகத்₃ரவ்யம்போலே இருக்கிறவர்களைப் புறப்படச் சொல்லுவார் ராவணதி₃களோ பாதியிறே; ஆகையாலே ''எழுந்திராய்'' என்கிறிலர்கள். (வாய்திறவாய்) 3. ''ஆர்த்தோ வா யதி₃வா தீ₃ருப்த:'' என்று சொல்லி வைத்து, உன்னுலல்லது செல்லாதிருக்கிற எங்களுக்கு ஒருவார்த்தையும் அரிதாம்படி பேசாதே கிடக்கிறதென்? திறக்கிறவர்களையும் திறக்கவொட்டாதே, நீயும் முலைக்கீழே அழுக்குண்டால், கிடந்தவிடத்தே கிடந்து 4. ''மாஸூச:'' என்னவுமரிதோ? (மலர்மார்பா வாய்திறவாய்) மார்பை அவளுக்குக்கொடுத்தால், பேச்சை எங்களுக்குத் தந்தாலாகாதோ? B ''கொங்கைமேல்'' இத்யாதி. மார்பது முலையானுல் வாயதுமுத்தோ? ''வாய்திறவாய்'' என்றதைக்கேட்டு, ''போர நொந்தார்களாகாதே'' என்று அவன் மறுமாற்றம் சொல்லப்புக; ஆர்த்தவிஷயத்தில் நம்மில் முற்பாடனுக வொண்ணுதென்று, கண்ணுலே ''வாய்வாய்''என்று கழுத்தைக்கட்டி அழுக்கிக்கொண்டு கிடந்தாள் — (மைத்தடங்கண்ணினுய்) என்கிறார்கள். நாம் ஆரேனுமின்னுதாகிறதென், நம்பரிகரம் நமக்குதவாதே கண்ணுலே வாயை நெரியாநிற்க?—(மைத்தடங்கண்ணினுய்) உன்னுடைய கண்ணில்புகரும் பெருமையும் எங்கள் பேற்றுக்கு உடலென்றிருந்தோம், அது இழவுக்கு உடலாவதே! (மைத்தடங்கண்ணினுய்) ''மையிட்டெழுதோம்'' (2) என்றிருக்கிற எங்களையும் மையிடப்பண்ணினுலன்றே நீ கண்ணுக்கு மையிடுவது. இரண்டு கண்ணுக்கும் ஒருமையிறே யிடுவது. C மைப்படி மேனியிறே. (மைத்தடங்கண்) 5. ''ந ஜீவேயம் க்ஷணமபி'' என்னப்பண்ணுங்கண்ணிறே அவனை. (தடங்கண்) இக்கடலைக் கரைகண்டாலிறே அவன் நம்மைப்பார்ப்பது.

(நீ யுன்மணுளனை) அவன் நினைவே நினைவாயிருக்கும் நீ; உன் நினைவே நினைவாயிருக்கும் அவன். அவனைப் பெறுகைக்கடியான நீ, உன் புருவம் நெறித்தவிடத்திலே குடநீர் வார்க்கும்படி பவ்யனுயிருக்கிறவனை விலக்கக்கடவையோ? உன்னுடைய போக்₃யதையிலே அவன் துவக்குண்கிறது உனக்கு இஷ்ட விநியோகார்ஹனுய் எங்களுக்குப் பெறுகைக்குடலென்றிருந்தோம். இனி உனக்கே ஸோஷமென்றிருக்கிறேம். பண்டு, இருவருங்கூட, தங்களுக்கு ஸ்வம் என்றிருக்கையாலே கூடச் சொல்லிப்போந்தார்கள்; இப்போது, அந்யத்வம்தோற்ற ப்ரணயரோஷத்தாலே

A நாச்—திரு 3—9. B நாச்—திரு 8—7. C திருவிருத்தம் 94.

"நீர்மையாலே குறைந்தவர்களோடொப்பர்கள்" என்னுமித்தனையிறே குற்றம். 1. "த்₄விதா₄ பூ₄ஜ்யேயம்" என்றிக்குமவனுடு, 2. "ஶரணம் க₃த:" என்றிருந்தவனுடு வாசியறக் கைக்கொள்வேனென்றவனே கபோதஸ்தா₂நீயனுக்கினுல், கபோதியில் கெட்ட பிராட்டியில்லையிறே; அரைக்ஷணம் தாழ்த்தது பொறுக்கமாட்டாமல் சொல்லுகிறவையிறே இவை.

அன்றிக்கே, (தத்துவமன்று, தகவுமன்று) உன்னுடைய ஸ்வரூபத்துக்கும் போருமதன்று, ஸ்வபா₄வத்துக்கும் சேருமதன்று. புருஷகாரமாய்நின்று சேர்ப்பாருடைய ஸ்வரூபத்துக்கும் ஸ்வபா₄வத்துக்கும் சேருமதோ இது 3. "அகி₂லஜக₃ந்மாதரம்" என்கிறதுக்கும் சேராது, 3. "அஶரண்யஶரண்யாம்" என்கிறதுக்குஞ் சேராது, 3. "தே₃வதே₃வதி₃வ்யமஹிஷீம்" என்று கட்டின பட்டத்துக்குச் சேருமித்தனை....19.

ஈராயிரப்படி — பத்தொன்பதாம் பாட்டு

அவ:— பத்தொன்பதாம் பாட்டு. இவள் திறக்கப்புக, "நம்முடையார்க்கு இவள் முற்பட்டாளாகவொண்ணுது" என்று இவளைத் திறக்கவொட்டாதே கட்டிக்கொடு கிடந்து, அந்த ஸுகு₂ஸ்பர்ஶத்தால் மறந்து உறங்குகிறவனை எழுப்பி, மறுமாற்றம் கேளாமை பின்பும் அவனை உணர்த்துகைக்காகவும் அவளை எழுப்புகிறார்கள்.

(குத்து விளக்கெரிய) "நமக்குப் போலே இருள் தேட வேண்டாதே பகலையும் இரவாக்கிக்கொண்டு விளக்கெரியக் கிடக்கப் பெறுவதே இவள்!" என்கை. (கோட்டுக்கால்) குவலயாபீட₃த்தைக்கொன்று அதன் கொம்பாலே செய்த கால்களையுடைய கட்டில்: வீரபத்நியாகையாலே மற்றையவற்றில் கண்ணுறங்காது. (கட்டில்) ஜாதிப்பேச்சு.

(மெத்தென்ற) ஆர்த்தராயலைந்து கிடக்க, படுக்கையில் உள்மானம் புறமானம் கொண்டாடிக் கண் உறங்குவதே! இவர்களுக்கு A மென்மலர்ப்பள்ளி வெம்பள்ளியிறே: அவனுக்கு நெரும்பு நீராம் ஔஷத₄முண்டிறே. (பஞ்சசயனத்தின் மேலேறி) 4. "பா₃தே₃நாத்₄யாரோஹதி" என்று நாங்கள் மிதித்து ஏறினுலன்றே நீ படுக்கையிலேறுவது என்கை. அங்கேறில் அவன் 5. "கோ ஸி" என்ன, இவன் 5. "அஹம் ப்₃ரஹ்மாஸ்மி" என்னும்; "ப்ரஹ்மம் நான்" என்னப் போமோ? என்னில் 6. "பரவானஸ்மி" என்னுமாபோலே ப்ரகாரமான ப்₃ரஹ்மம் என்கை. 7. "ரமமாணு வதே₄ த்₃ரய:" என்று ஆசைப்படுகிறார்கள்.

(கொத்தலர் பூங்குழல்) பெரிய திருநாளாய்ச் செல்லாநிற்க, குறியழியாதிராதிறே; ஒரு மஹாபா₄ரதத்தாலே அலருகை. காலம் அலர்த்துமாபோலே அவனுடைய ஸ்பர்ஶம். "மலரிட்டு நாம்முடியோம்" (2) என்றது மறந்தாயோ? இழவு சொல்லும்போது தங்களோடே கூட்டுவர்கள்; பேறு சொல்லும்போது அவனோடே கூட்டுவர்கள். (கொத்தலர் பூங்குழல்) B "வாசம் செய் பூங்குழலாள்"

A திருவாய் 9-9-4, B திருவாய் 10-10-2.

என்னுமாபோலே. (கொங்கைமேலித்யாதி3) கொங்கையைத் தன்மேலே வைத்துக் கிடத்தல், கொங்கையின் மேலே தன்னை வைத்துக் கிடத்தல். 1. "ந ஶாஸ்த்ரம் நைவ ச க்ரம:" 2. "பர்யாயேண ப்ரஸுப்தஶ்ச" A "மலராள் தனத்துள்ளான்" (மலர்மார்பா) அவனுக்கு உஜ்ஜீவனம். (வாய்திறவாய்) 3. "ஆர்த்தோ வா யதி3 வா த்3ருப்த:" என்று சொல்லிவைத்துப் பேசாதே கிடக்குமித்தனையோ? இருவரும் கூடினபின்பு த்3வயத்தில் உத்தரார்த்தம் போலே அனுபவிக்குமித்தனை. அங்கொன்றும் காணுமை — (மைத்தடங்கண்ணினாய்) என்கிறார்கள். இவன் வாய் திறக்கப்போக, அவள் "நானன்றே" என்ன, பேசாதே கிடந்தான். நீ கண்ணுலே விலக்க வேணுமா? — (தடங்கண்ணி) இக்கடலைக் கரைகண்டாலிறே நம்மைப் பார்ப்பது. 4. "ந ஜீவேயம் க்ஷணமபி"யிறே உன்னுலே அவனைப்பெறுகை தவிர்ந்து, இப்போது மற்றைப்படி செய்கையாய்த்தோ? (உன்மணுளனை) 5. "கோபீஜன வல்லப4" னென்கை. இனி உனக்கே மோக்ஷமென்றிருக்கிறேரும்.

(எத்தனை போதும் துயிலெழவொட்டாய்காண்) கட்டின கை நெகிழ்ந்து பிழைக்க மாட்டாய். புணர்ச்சிக்காகப் பிரியவும் பயப்படுவுதி. (எத்தனையேனு மித்யாதி3) B "அகலகில்லேனிறையும்" என்று நீ நில்லாநின்றுய்; உனக்காக வன்றே அவன் புறப்படமாட்டாதொழிகிறது; பிரியில் நீ பிழையாய், உன்னை இழக்கவொண்ணுதென்று.

(தத்துவம்) ஸத்யம்; (அன்று தகவு) தகவன்று என்று எங்கள் ஆந்ருமையாலே சொல்லுகிறேமன்று; மெய்யே தர்மமன்று. தத்துவமன்று — ஸ்வரூபமன்று.

19.

நாலாயிரப்படி — பத்தொன்பதாம் பாட்டு

அவ:— பத்தொன்பதாம் பாட்டு. இவள் திறக்கப்புக, 'நம்முடையார்க்கு இவள் முற்பட்டாளாகவொண்ணுது' என்று இவளைத் திறக்க வொட்டாதே மல்கட்டாகக்கட்டிப் படுக்கையிலே விழவிட்டுக் கட்டிக்கொண்டு கிடக்க, மறுமாற்றம் கேளாமையாலே பின்னையும் க்ருஷ்ணனை உணர்த்துகைக்காக 'நீ திறக்கவேணும்' என்கிறார்கள். இத்தால் ஆர்ஜி தர்க்கு மாறிமாறிப் பரிகைக்கு இருவருமுண்டென்கை C "என்னடியாரது செய்யார்" என்னும் அவன். இவள் 6. "ந கஶ்சிந்நாபராத்4யதி" என்னும். 'அவர்கள் உள்ளு பிறந்த வ்யாபாரம் அறிந்தபடி எங்ஙனே?' என்னில்: ஸகேஶ்வரிகளாகையாலே அறிவர்களிறே.

வ்யா:— (குத்துவிளக்கெரிய) நாம் புறம்பே பனியிலே தரையிலே கிற்க ஊராரிசையும் வேண்டாதே. 'கீழ்வானம் வெள்ளென்றது' (8) என்கிற பாயும்மின்றிக்கே இருட்டுத் தேடவும் வேண்டாதே, பகலையும் இரவாக்கிக்கொண்டு விளக்கெரியப் படுக்கையிலே கிடக்கப் பெறுவதே! இவள் தன்னை விளக்காகக்கொண்டு

A மூன்-திருவ 3, B திருவாய் 6-10-10, C பெரியாழ் திரு 4-9-2.

ப்ரகாஶிப்பதொரு நிலைவிளக்குண்டாவது என்றுமாம். அப்போது எம்பெருமானுக்குங் கூட அவள் விளக்காயிருக்கிறபடி. 1. "அதீவ ராமஶ் ஶுஶுபே₄". (கோட்டுக்கால்) குவலயாபீட₃த்தைக் கொன்று அதின் கொம்பாலே செய்த கட்டில். வீரபத்நி யாகையாலே மற்றையவற்றில் கண் உறங்காது. மாணிக்கத்தாலே செய்யிலும் பள்ளிக்கட்டிலென்னுமத்தனையிறே. 2. "நாஹாரயதி ஸந்த்ராஸம்" ஆனையுள் ளிட்டன காட்டிலே கண்டால் முக₄விகாஸம் பிறக்குமத்தனை. ஸ்த்ரீத்வப்ரயுக்தமான அச்சமில்லை. அதுக்கடி தனக்கென்னத் தோள் படைக்கையாலே. இத்தால் 3. "பதிம் விஶ்வஸ்ய" இத்யாதி₃யில் ஓதிக்கிடக்கிறபடியே அவனுக்கும் தங்களுக்கும் உண்டான முறையை உணர்ந்திருப்பார்க்கு ஸ்வரூபப்ரயுக்தமான ப₄யமில்லை என்கை. வீரபத்நிகளுக்குத் தோளில் சரசரப்புக்காணுமிடில் தங்களோட்டைப் பெண்களைத் தழுவினத்தோ டொக்கும். 4. "ஜ்யாகிண கர்க்கஶை:" 5. "உபத₄ாய பு₄ஜம் தஸ்ய லோகநாத₂ஸ்ய ஸத்க்ருதம்" 6. "ப₃ாஹூ ராமஸ்ய ஸம்ஶ்ரிதா" உயிரோடே பிடித்துக் கொம்பை வாங்கும் வீரனுடைய பத்நியிறே. வீரபத்நிகள்படி ப்ரபந்நர்படி. 7. "ஆர்த்தோ வா யதி₃வா த்₃ருப்த:" என்னும்போது அவன்ப₄லமே உபாயமாக வேண்டாவோ? பு₃த்₃தி₄பூர்வகமாகப் பண்ணின ப்ராதிகூல்யத்துக்கு அபு₃த்₃தி₄பூர்வகமாகப் பண்ணின ப்ரபத்தி ப்ராயஶ்சித்தமாம்போது ஶரண்யன் நீர்மையே ப₄லிக்கிறதத்தனை. ப₄லத்தோடே ஸந்தி₄ப்பிக்குமதன்றே உபாயமாவது. அங்ஙனன்றேயாகில் ப்ரபத்தி வேண்டுவானென்? என்னில்; சைதன்யகார்யம் வேண்டுகையாலே. ப்ரபந்நனுக்கும் தத்ஸ்வீகாரா தி₃களடைய உபாயமாக வேணுமோ? அங்ஙனன்றேயாகில் இவன் தன்னுடைய ஸத்தை உபாயமாகவேணுமே. ஸர்வஸ்வதா₃நமும் தூற்றிலே நெருப்பிடுகையும் ஒத்தாப்போலே இங்கும், 7. "ஆர்த்தோ வா யதி₃வா த்₃ருப்த:" என்கிறது. கட்டில் ஜாதிப்பேச்சு.

(மெத்தென்ற) "நாங்கள் ஆர்த்தைகளாய் வந்துகிடக்க, படுக்கையில் உள்மானம் புறமானம் கொண்டாடிக் கண்ணுறங்குவதே!" என்கிறார்கள். இவர்களுக்கு A மென்மலர்ப்பள்ளி வெம்பள்ளியிறே. அவளுக்கு நெருப்பு நீராம் ஔஷத₄முண்டிறே. (மெத்தென்ற பஞ்சசயனத்தின் மேலேறி) பஞ்சவித₄மான ஶயநத்தின் மேலேறி. அதாவது — உஷ்ணபரிஹாரமும், ஶீதபரிஹாரமும், தூ₃ர்ஶநீயமாகையும், மெத்தென் றிருக்கையும், பரம்பியிருக்கையும். அஞ்சுருவிட்டுப் பண்ணின படுக்கை என்றுமாம். அழகு, குளர்ச்சி, மார்த்த₃வம், பரிமளம், தா₄வள்யம். பஞ்சாலே செய்த என்றுமாம். (மேலேறி) 8. "பாதே₃நாத்₄யாரோஹதி" என்று நாங்கள் மிதித்தேறிலுலன்றே நீ அப்படுக்கையை ஏறுவதென்கை. அங்கேறிலுல் அவன் 9. "கோஸி" என்னில்; இவன் 9. "அஹம் ப்₃ரஹ்மாஸ்மி" என்னக்கடவன். 'ப்₃ரஹ்மம் நானென்னப்போருமோ!' என்னில் 10. "பரவானஸ்மி" என்னுமாபோலே ப்ரகாரமான ப்₃ரஹ்மமென்கை. 11. "ரமமாணோ வநே த்ரய:"என்று ஆசைப்படுகிறார்கள். 12. "யஸ்ய ஶ்ரீருப₃ர்ஹணம்" என்று பர்யங்கவித்₃யையிலே சொல்லுகிறபடியே குறையற்றது; இனி மிதித் தேறுவார் குறை.

A திருவாய் 9-9-4

(கொத்தலர் பூங்குழல் நப்பின்னை) இவளோட்டை ஸ்பர்ஶத்தாலே கொத்துக் கொத்தாக அலருகிற பூவையும் குழலையுமுடைய நப்பின்னைப் பிராட்டி. (கொத்தலர் பூங்குழல்) பெரிய திருநாளாய்ச் செல்லாநிற்கக் குறி அழியாதிராதிறே. ஒரு மஹாபாரதத்திலே அலருகை. காலம் அலர்த்துமாபோலே அவனுடைய ஸ்பர்ஶத்தாலே அலருகை என்னவுமாம்; இங்குத்தைக்குத் திருப்பூமண்டபம் செய்வானும் தானேயிறே. "மலரிட்டு நாம் முடியோம்" (2) என்றத்தை மறந்தாயோ? இழவு சொல்லும்போது தங்களோடே கூட்டுவர்கள். பேறு சொல்லும்போது அவனோடு கூட்டுவர்கள். அவளுக்கு இரண்டு தலையையும் விடவொண்ணாது. (கொத்தலர் பூங்குழல்) A "வாசம்செய்பூங்குழலாள்" என்னுமாபோலே.

(கொங்கைமேல் வைத்துக்கிடந்த மலர்மார்பா) கொங்கையைத் தன்மேலே வைத்துக்கிடந்த என்னுதல், கொங்கைமேலே தன்னை வைத்துக்கிடந்த என்னுதல். 1. "ந ஶாஸ்த்ரம் நைவ ச க்ரம:" 2. "பர்யாயேண ப்ரஸுப்தஶ்ச" B "மகரான் தனத்துள்ளான்" மலைப்பார்ஶ்வத்தைப்பற்றி ஜீவிப்பாரைப்போலே. (மலர்மார்பா) அவளுக்கு ஜீவநம். த்வந்த்வம் பரஸ்பராஶ்ரயம். (மலர்மார்பா) திருமூலத்தடங்கள் உறுத்துகையாலே அகன்றிருந்துள்ள மார்பு. அப்போது 3. "ஸதா ஸுகரு பரு பாய" என்பதுக்குக் குற்றமன்றே? என்னில், ஹேயகுணங்களில்லையென்கை. இது கல்யாணகுணங்களிலே புகும். (வாய்திறவாய்) 4. "ஆர்த்தோ வா யதி வார்த்த:" என்று சொல்லிவைத்துப் பேசாதேகிடக்கு மத்தனையோ? அவன் ஊமத்தங்காய் தின்று கிடக்க, இவர்கள் ஆரை எழுப்புகிறது? (வாய் திறவாய்) இருவரும் கூடினபின்பு த்வயத்தில் உத்தரார்த்தம்போலே அநுபவிக்கப் புகுருங்கோள் என்னுமித்தனை. நம்மைப் புறப்படாயென்னில் ராவணனைப்போலேயாவீர்கள். C "அலர்மேல் மங்கையுறை மார்பா"

அங்கொன்றும் காணுமையாலே (மைத்தடங் கண்ணினாய்) என்கிறார்கள். இவன் வாய் திறக்கப்புக்கவாறே, 'இவர்கள் நம்மையொழிய இவனை யெழுப்புவதே' என்று அவனைக் கண்ணாலே 'வாய்வாய்' என்ன, பேசாதே கிடந்தான். 5. "ஆக்ஞாயாதி ஶ்ருதயம் ஶ்ருதா". "நாம் ஆரேனையுமின்னுதாகிறதென்? நம் பரிகரம் நமக்கு உதவுகிறதில்லை" என்கிறார்கள். இவள் விலக்கவேணுமோ? இக்கண்ணுண்டாகவமையாதோ? இக்கடலைக் கரைகண்டாலிறே நம் அநீதியை அவன் பார்ப்பது. D "அல்லிமலர்மகள் போகமயக்குக்களாகியும் நிற்கு மம்மான்" E "மணநோக்கமுண்டான்" 6. "ந ஜீவேயம் க்ஷணமபி" என்னப் பண்ணுமவையிறே. 'மையிட்டெழுதோம்' (2) என்றவர்களையும் உன்படி ஆக்க வேண்டாவோ? உன்னுலே அவனைப் பெறுகை தவிர்ந்து மற்றைப்படி செய்கையாய்த்து. (உன்மணாளனை) 7. 'கோபீஜநவல்லப' என்கை. 8. "லோகபர்த்தாரம்" என்கை தவிர்ந்து உனக்கு விலையும் ஒத்தியும் செல்லும்படியிருக்கிற இருப்பெல்லாம் எங்களுக்கு உடலென்றிருந்தோம். இனி உனக்கே மோஷமென்றிருக்கிறோம்; பண்டு இருவரையும் தங்கள் ஸ்வம் என்றிருக்கையாலே அவனுடைய நீயும் உன்னுடைய அவனும் என்றிருந்தோம். இனி உன்னுடைய மணாளன் என்று கிலேயக்கிறார்கள்.

A திருவாய் 10-10-2, B முன்-திருவ 3, C திருவாய் 6-10-10, D திருவாய் 3-10-8; E பெரிய திரு 8-10-1.

(எத்தனை போதும் துயிலெழவொட்டாய் காண்) கட்டின கை நெகிழ்க்கில் பிழைக்க மாட்டாய்; புணர்ச்சிக்காகப் பிரியவும் பயப்படுவுதி. (எத்தனையேனும் பிரிவாற்ற கில்லாயால்) A "அகலகில்லேனிறையும்" என்று கிடவாகின்றாய். உனக்காக வன்றே அவன் புறப்படமாட்டாதொழிகிறது; பிரியில் நீ பிழையாய், உன்னை இழக்கவொண்ணுதென்று.

(தத்துவம்) ஸத்யம்; (அன்றுதகவு)—(தகவன்று) தர்மமன்று. எங்களாற் றமையாலே சொல்லுகிறுமன்று; மெய்யே தர்மமன்று—(தத்துவமன்று) ஸ்வரூபமன்று. உன் ஸ்வரூபம் நீர்மையன்று; இனி அவனில் உனக்குவாசியில்லை என்றிருக்கிறேம். 1. "பாபாநாம்" என்றவிடம் பொய் என்கிறார்கள். 2. த்ரவிதா பஜ்ஞேயம்" என்றத்தோடு 3 "ஶரணம் கருதி:" என்றத்தோடு வாசியில்லை. இவள் ஸங்கதி, வுண்டானால் பெறுகைக்குக் கபோதியில் கெட்ட பிராட்டியுண்டோ? என்றிருந்தார்கள்.

19.

ஸ்வாபதேஶவ்யாக்யாநம் - பத்தொன்பதாம் பாட்டு

அவ:— பத்தொன்பதாம் பாட்டு. (குத்துவிளக்கு இத்யாதி) இப்பாட்டில் புருஷகாரபூதையான பிராட்டி கதவு திறக்கப்புக; "நம்முடையார்க்கு இவள் முற்படுவதே" என்று அவளை எழுந்திருக்கவொட்டாமல் கட்டிக்கொண்டு கிடக்கிற ஸ்வரனை எழுப்பி, அங்கு மறுமாற்றம் பிறவாமையாலே மீளவும் அவள் தன்னையே எழுப்புகிறார்கள்.

வ்யா:— (குத்துவிளக்கெரிய) ஜ்ஞாநம் ப்ரஜ்வலிக்க. (கோட்டுக்கால் கட்டில் மேல்) சதுர்த்தந்தியான குவலயாபீடத்தினுடைய தந்தங்களாலே செய்யப்பட்ட கால்களையுடைய கட்டில்மேல்; இத்தால் — சதுர்விதகர்த்ருத்வ மூலமான அஹங்காரகார்யமான ஶோஷத்வேகர்த்ருத்வம் ஜ்ஞாத்ருத்வேகர்த்ருத்வம் கர்த்ருத்வேகர்த்ருத்வம் போக்த்ருத்வேகர்த்ருத்வமாகிற கால்களையுடைத்தாய், அந்தக் கர்த்ருத்வ விஷயமான தர்ம அர்த்த காம மோக்ஷங்களாகிற பட்டங்களையுடைத்தாய்த் ததநுஷ்டானாபிநிவேஶமாகிற கச்சையை உடைத்தாயிருக்கிற கட்டில்மேல் என்கிறது. (மெத்தென்ற பஞ்சசயனத்தின் மேலேறி) ஶோஷத்வாதி கர்த்ருத்வ ராஹித்யத்தாலே மருதுவான அர்த்தபஞ்சகஜ்ஞாநமாகிற படுக்கைமேலேறி.

(கொத்தலர் பூங்குழல் இத்யாதி) வர்க்கவர்க்கமாக விகஸிதஜ்ஞாநரான ஆத்மாக்களாகிற புஷ்பங்களையுடைய பரகவத்விஷய ஸ்வவ்யாமோஹமாகிற அளகபாரத்தையுடைய நப்பின்னைப் பிராட்டியுடைய போகோபகரணமான யுக்தியை ஸ்வவிஷயத்திலே வைத்துக்கொண்டு, அத்தால் விகஸிதஹ்ருதயனானவனே! (வாய்திறவாய்) நீ வாய்திறந்து ஒரு வார்த்தை அருளிச்செய்ய வேணும் என்றவாறே: அவன் வாய்திறக்கப் புக;

---

1 திருவாய் 6-10-10.

இருபதாம் பாட்டு

மூப்பத்து மூவ ரமரர்க்கு முன்சென்று
கப்பம் தவிர்க்கும் கலியே! துயிலெழாய்
செப்ப முடையாய்! திறலுடையாய்! செற்றார்க்கு
வெப்பம் கொடுக்கும் விமலா! துயிலெழாய்
செப்பன்ன மென்முலைச் செவ்வாய்ச் சிறுமருங்குல்
நப்பின்னை நங்காய்! திருவே! துயிலெழாய்
உக்கமும் தட்டொளியும் தந்துன் மணாளனை
இப்போதே எம்மைநீ ராட்டேலோ ரெம்பாவாய்.

பதவுரை:— முப்பத்து மூவர் அமரர்க்கு — முப்பத்து முக்கோடி தேவர்கட்கு, முன் சென்று — (இடர் வருவதற்கு) முன்னமே எழுந்தருளி, கப்பம் — (அவர்களுடைய) நடுக்கத்தை, தவிர்க்கும் — போக்கியருளவல்ல, கலியே — பலத்தையுடைய கண்ண பிரானே, துயில் எழாய் — படுக்கையினின்றும் எழுந்திராய்; செப்பம் உடையாய் — (ஆஸ்ரிதர்களை ரக்ஷிக்கும் விஷயத்தில்) நேர்மை உடையவனே! திறல் உடையாய் — (ஆஸ்ரித விரோதிகளை அழியச்செய்யவல்ல) பலத்தை உடையவனே! செற்றார்க்கு — எதிரிகளுக்கு, வெப்பம்—துக்கத்தை, கொடுக்கும்—தரும்படியான, விமலா—பரிசுத்தனே! துயில் எழாய் — ; செப்பு அன்ன — பொற்கலசம் போன்ற, மென்முலை — மிருதுவான முலைகளையும், செவ்வாய் — சிவந்த வாயையும், சிறு மருங்குல் — நுண்ணிய இடையையு முடைய, நப்பின்னை நங்காய் — நப்பின்னைப் பிராட்டியே! திருவே — பெரியபிராட்டியை ஒத்தவளே! துயில் எழாய் — ; உக்கமும் — (நோன்புக்கு உபகரணமான) ஆல வட்டத்தையும் (விசிறியையும்), தட்டொளியும் — கண்ணாடியையும், தந்து — கொடுத்து, உன் மணாளனை — உனக்கு நாதனான அவனையும், எம்மை — எங்களையும், இப்போதே நீராட்டு — இக்கணத்திலேயே நீராட்டக்கடவாய்.

ஸ்வா:- அவனை, 'நீ க்ரமம்தப்பிநடப்பதே!' என்று கண்ணாலே அதட்ட, அவனை எழுப்புவதற்காக மீளவும் அவளை எழுப்புகிறார்கள்:— (மைத்தடங்கண்ணினாய்) மாத்ரு ஸத்வமாகிற அஞ்ஜநத்தையுடைத்தாகையாலே விஸ்ருங்கலமான ஸ்வரூபயாதாத்ம்யஜ்ஞாநமுடையவளே! (நீ) ஸ்வரூபயாதாத்ம்யதர்ஶிநியான நீ. (உன்பணாளனை) உனக்கு வல்லபனான க்ருஷ்ணனை. (எத்தனைபோதும் துயிலெழுவொட்டாய் காண்) அத்யல்பகாலமும் நித்ராப்ரதமான படுக்கையினின்றும் எழுந்திருக்கவொட்டுகிறிலை. ஒட்டுதல்—ஸம்மதித்தல்.

ஏனென்னில் (எத்தனையேலும் பிரிவாற்றகில்லாய்) ஸம்ஶ்லேஷார்த்தமான விஶ்லேஷமும் நீ பொறுக்குகிறிலை: அது உன்குற்றமோ? உன் பல ஹாநியின் குறை. ஆல் — ஆஶ்சர்யே.

(தத்துவமன்று தகவு) ஆகிலும், புருஷகாரபூதையான உனக்கு எம்பெரு மானை நம்மோடே சேரவொட்டாமல்பண்ணுகை ஸ்வரூபமன்று. 19.

மூவாயிரப்படி - இருபதாம் பாட்டு

அவ:— இருபதாம்பாட்டு. a "அவனுக்கும் எங்களுக்கும் அடியான நீ எங்களை நீராட்டுவுதி" என்று க்ருஷ்ணனையும் நப்பின்னைப் பிராட்டியையும் கூட எழுப்புகிறார்கள்.

வ்யா:— b (முப்பத்துமூவர்) c ரக்ஷணத்துக்கு ஸங்க்₃யாநியதி உண்டோ? dபஞ்சலக்ஷம்குடியில் பெண்களானுல் ரக்ஷிக்கலாகாதோ? e ஆர்த்தியே கைம்முதலாக ரக்ஷிக்குமவனல்லையோ? f (அமரர்க்கு) g எல்லாவளவிலும் சாவாதார்க்கோ உதவலாவது? உன்நோக்குப் பெருவிடில் சாகும் எங்களுக்கு உதவலாகாதோ? h முகூர்த்தரத்தாலே ஜீவிப்பார்க்கோ உதவலாவது; உன்முக₃த்தாலே ஜீவிப்பார்க்கு

பெ. அ. இருபதாம்பாட்டு. (முப்புத்து மூவர் இத்யாதி₃) a "உன்மணாளனை — எம்மை நீராட்டு — விமலா துயிலெழாய்" என்ற பத₃ங்களைக் கடாக்ஷித்து அவதாரிகை அருளிச்செய்கிறார் (அவனுக்கும் இத்யாதி₃) கீழ்ப்பாட்டில் க்ருஷ்ணனையும் நப்பின்னையையும் எழுப்பியிருக்கவும், மீளவும் இப்பாட்டில் இருவரையும் எழுப்புகைக்கு ஸங்க₃தி எங்ஙனே யென்னில்; — "'துயிலெழவொட்டாய்காண், தகவன்று' என்று — பெண்கள் ஆற்றுமையாலே நம்மைச் சில குற்றங்களைச் சொன்னார்களேயாகிலும் திருவுள்ளம் பார்த்து இடம் பெற்ற போதிலே விண்ணப்பம் செய்யவேணும் என்று நப்பின்னைப் பிராட்டி பேசாதே பள்ளிகொண்டருள, 'இவளைப்பற்றினாலும் கார்யம் செய்யக்கடவ அவன் இவள்தன்னையும் திறக்கவொட்டாதே பே₄ர₃ப்ரஸக்தனுய்ப் பேசாதே கிடந்தான். என்றவாறே 'சிவிட்கென்று கிடக்கிறானைக்கூடும்' என்று பார்த்து 'நீ முன்பு ஆர்த்த ரக்ஷணம் பண்ணி ஆர்ஜித்த கு₃ணங்களெல்லாம் இப்போது எழுந்திராமையாலே இழக்கக் கிடாய் புகுகிறாய்' என்று சொன்னவிடத்திலும் அவன் வாய்திறவாமையாலே, 'நப்பின்னைப் பிராட்டி நிறத்தில் ப்ரணய ரோஷத்தாலே சொன்னவையும் இவனுக்கு அஸஹ்யம் போலேயிருந்தது' என்று பார்த்து, இவளுடைய தே₃ஹகு₃ணங்களையும் ஆத்மகு₃ணங்களையும் சொல்லி ஏத்தி, 'அவள் தனக்கு உரியளோ? பரதந்த்ரனானவனை நலிகிறதென்?' என்று, 'எங்களுக்கும் அவனுக்கும் கடவையான நீயே எங்களபேக்ஷிதங்களைத் தலைக்கட்டித் தரவேண்டாவோ?' என்று நப்பின்னைப்பிராட்டியை அர்த்தி₂க்கிறார்கள்" என்று ஆருயிரத்தில் சொன்ன ஸங்க₃தி இங்கும் கண்டுகொள்வது.

b, c, d, e "முப்பத்துமூவர்" என்றதுக்கு — முப்பத்துமுக்கோடி தே₃வரென்று ஶப்₃த₃ார்த்த₂மாய், "அமரர்" என்றபோதே இது அர்த்த₂ஸித்₃த₄மாயிருக்கவும் சொன்னதுக்கு உட்கருத்தை அருளிச்செய்கிறார் (ரக்ஷணத்துக்கு இத்யாதி₃ வாக்யத்ரயத்தாலே) அஷ்டவஸுக்கள், ஏகாத₃ஶருத்₃ரர், த்₃வாத₃ஶாதி₃த்யர். அஶ்விநிகள் என்று முப்பத்துமூவரென்று ஸங்க்₂யையாகும். f, g "நம்ரியந்தே இத்யமரா:" என்ற வ்யுத்பத்தியைக் கடாக்ஷித்துத் தாத்பர்யம் அருளிச்செய்கிறார் (எல்லாவளவிலும் இத்யாதி₃) h அமர பத₃த்தில் ருட்₄யர்த்த₂மான தே₃வத்வத்தைத் திருவுள்ளம்பற்றி 1. "அக்₃நிமுகா₂வை தே₃வா:" என்ற ப்ரமாண ப்ரஸித்₃த₄மான ஸ்வப₄ாவத்தை நினைத்துத் தாத்பர்யாந்தரம் அருளிச்செய்கிறார் (முகூ₂ர்த்தரேத்யாதி₃) 'அஷ்டவஸுக்களுடைய முக₂த்தாலே' என்றும் சொல்

சி. அ. இருபதாம்பாட்டு (முப்பத்துமூவர்) b, c (ரக்ஷணத்துக்கு ஸங்க்₂யாநியதியுண்டோ) என்றதுக்குத் தாத்பர்யம்—முப்பத்து மூவரானுலொழிய அநேகமானுல் ரக்ஷிக்கவொண்ணுதோ? என்றபடி. h (முகூ₂ர்த்தரத்தாலே ஜீவிப்பார்க்கோ) என்றது அம்ருத

உதவலாகாதோ? i ப்ரயோஜநாந்தரபரருமாய், மிடுக்கருமானுர்க்கோ உதவலாவது: அநந்யப்ரயோஜநைகளுமாய் அபூலிகளுமாயிருப்பார்க்கு உதவலாகாதோ? (முன் சென்று) நோவு வருவதற்கு முன்னே சென்று ஏற்கவே ரக்ஷிக்கக்கடவ நீ நோவு பட்டு வந்த எங்களை ரக்ஷிக்கலாகாதோ? (சென்று) நீ சென்று உதவக்கடவ உனக்கு, உன் வாசலிலேவந்த எங்களுக்கு உதவலாகாதோ? உன்பக்கலிலே வருகை மிகை என்னுமவனல்லையோ? A எழுதுமென்னுமிது மிகையாயன்றே இருப்பது. j (கப்பம் தவிர்க்கும்) "கம்பம்" என்கிற இத்தை "கப்பம்" என்று வலித்துச் சொல்லுகிறது; அதாகிறது — நடுக்கம். கம்பம் தவிர்க்கையாவது — 1. 'தேஉவாः ஸ்வர்க்கமும் பரித்யஜ்ய" என்று—அஸுர ராக்ஷஸாதிகளாலே குடி யிருப்புமகப்பட இழந்து க்லேசித்த அத்தைத் தவிர்க்கை. நாட்டார் நடுக் கத்தைத் தவிர்க்கக்கடவ நீ எங்களை நடுங்கப்பண்ணுதே கொள்ளாய். k துஃக்க திவ்ருத்தியை ஆசைப்பட்ட தேஉவர்களுக்கோ உதவலாவது? நீ உணரும்படி காண ஆசைப்பட்டார்க்கு உதவலாகாதோ? l (கலியே) m மிடுக்கையுடையவனே! n அபூலிகளான எங்களுக்கு உன்மிடுக்கையொழிய உண்டோ? o அரணிமையை யுடையவனே என்றுமாம். p (துயிலெழாய்) q தேஉவதைகளுக்குக் குடியிருப் பும் ஜீவனமும் போலே எங்களுக்கு நீ உணரும்படி காண்கை. r (செப்பமுடை யாய்) s ஆஸ்ரிதர்க்குச் செவ்வையழியாதிருக்குமவனே! எங்களுக்குச் செவ்வை யழியாதிருக்கவேண்டாவோ? t செப்பம்—ரக்ஷை என்றுமாம். u (திறலுடையாய்) v திறல்—பராபிபவநஸாமர்த்யம், v_2 அநாஸ்ரிதர்க்கன்றிக்கே v_3 எங்களுக்கு

பெ. அ. லுவர்கள். i தேஉவர்களுடைய ஸ்வபாவத்தையும், புல்லிங்கத்தையும் பற்ற மூன்றும் தாத்பர்யம் அருளிச்செய்கிறார் (ப்ரயோஜநாந்தர இத்யாதி) j, k "கப்பம் தவிர்க்கும்" என்றதற்குத் தாத்பர்யாந்தரம் அருளிச்செய்கிறார் (துஃக்க இத்யாதி) l, m, n "கப்பம் தவிர்க்கும்" என்றபோதே அர்த்தஸித்தமாயிருக்கவும், மிடுக்கை மீளவும் சொன்னதுக்கு பாவம் அருளிச்செய்கிறார் (அபூலிகள் இத்யாதி) o 'அரணிமையை' என்றது கல்மதிளிட்டாற்போலேயிருக்கும் ஆழ்வார்களால் வந்த அரணை என்றபடி. p, q இப்பாட்டில், "துயிலெழாய்" என்று இருகால் சொல்லுகை ஆதராதிக்யத்தாலே என்று திருவுள்ளம்பற்றி. அவ்வாதரம் வருகைக்கு நியாமகமாகக் கீழைக்கடாக்ஷித்து பாவம் அருளிச்செய்கிறார் (தேவதைகளுக்கு இத்யாதி) r, s செப்பம் — ஆர்ஜவம் t "கலியே" என்ற பதத்துக்கு மிடுக்குச்சொன்ன பக்ஷத்துக்குச் சேர. செப்பம் - ரக்ஷை என்று கண்டுகொள்வது. u, v_2 "திறலுடையாய்" என்றதுக்கு உட்கருத்தை அருளிச் செய்கிறார் (அநாஸ்ரிதர்க்கு இத்யாதி) v_3 எங்களுக்கு அணுகவொண்ணுதோ என்று

சி. அ. பாணரூப ப்ரயோஜநாந்தரத்தாலே ஜீவிப்பார்க்கோ? என்றபடி. c, h, i இந்த வாக்யத்ரயத்தையும் விவரிக்கிறார்(ப்ரயோஜநாந்தரபரருமாய் இத்யாதி) j கப்பம்—நடுக்கமும், முறையிடலும். l, m கலி — மிடுக்கு. l, o கலிக்கு—இரண்டாவது பொருள் — அரணிமை— சவரணை—ரக்ஷை என்றபடி. r, s, t செப்பம்—ஆர்ஜவம் ரக்ஷா. u, v திறல் — மிடுக்கு

A திருவாய் 9-3-9.

அணுகவொண்ணுதிருக்கைக்கோ? (செப்பமுடை₋யாய் திறலுடையாய்) பாண்ட₃வர்களுக்குச் செவ்வியனுய், துர்யோத₄நாதி₃களுக்கு அநபி₄ப₄வநீயனனவனே! w திறல் — மிடுக்காகவுமாம்.

x (செற்றார்க்கு x₃ வெப்பம் x₃ கொடுக்கும் விமலா) y நீ ஆஸ்ரிதவிரோதி₄களுக்கு y₂ து₃:க்க₂த்தைப் y₃ பண்ணும். z A 'செய்குந்தாவரும் தீமை'' இத்யாதி₃ இப்போது அநுகூலர் பக்கத்திலாய்த்தோ? ''விமலா'' என்றது — ஸம்ப₃ந்த₄ம் ஒத்திருக்க, ஆஸ்ரிதர்க்காகக் a கண்ணற்று அழிக்கவல்ல ஸாத்₃நி₃. (துயிலெழாய்)- அம்பு எய்யவேணுமோ எங்களுக்கு? எழுந்திருந்து நோக்கு அமையாதோ?

b (செப்பன்ன மென்முலை) அவன்பக்கல் மறுமாற்றம் பெருமையாலே புருஷகாரபூ₄தையான நப்பின்னைப்பிராட்டியை எழுப்புகிறார்கள். மேல் அவன் அகப்படும் சுழிகள் சொல்லுகிறது. c நிதி₄ இட்டுவைக்கும் செப்புப்போலே அவன் கிடக்குமிடம்; B ''மலராள் தனத்துள்ளான்'' என்னக்கடவதிறே. d செப்புப்போலே ஸந்நிவேஸமென்னவுமாம். (மென்முலை) e விரஹஸஹமன்றிக்கேயிருக்கை. (செவ்வாய்) அவனைத் தனக்காக்கிக்கொள்ளும் ஸ்மிதம்; f அந்த முலையிலேயிருந்து அநுப₄விக்கும் ஜீவநம். (சிறு g மருங்குல்) அத₄ரத்தை பு₄ஜிக்கும்போது துணுக்கோடே இருக்கவேண்டியிருக்கை. (சிறுமருங்குல்) மேலுங் கீழுங்கொண்டு ''இடையுண்டு'' என்று அறியும்படி ப₄யஸ்தா₃நமாயிருக்கை. (நப்பின்னை h நங்காய்) i பூர்ணையானவனே! பூர்த்தியாகிறது—அநுக்த ஸௌந்த₃ர்யஸமுச்சயம். j (திருவே) k, C ''ஒசிந்த ஒண்மலராள்'' என்னுமாபோலே ஸம்ஸ்லேஷத்தாலே வந்த துவட்சி

பெ.அ. கருத்து. l, o, w ''கலியே'' என்றதுக்கு-அரணிமை சொன்ன பக்ஷத்திலே அர்த்த₃ாந்தரம் அருளிச்செய்கிறார் (திறல் இத்யாதி₃)

x, y அசுரர்பக்கல் செய்யும் வெப்பம். அநுகூலரான எங்கள்பக்கலிலே ஆய்த்தோ என்று தாத்பர்யம் அருளிச்செய்கிறார் (நீ இத்யாதி₃) a கண்ணற்று – நிர்த்த₃யனுய்,

b ''செப்பன்ன'' என்றது—செப்புக்கு ஸத்₃ருஸமென்றுய், அதுதான் கார்யத்தாலே யென்னுதல். ஆகாரத்தாலே யென்னுதல். c முந்தினத்தை அருளிச்செய்கிறார் (நிதி₄ இத்யாதி₃) d இரண்டாவது - (செப்பு இத்யாதி₃) e ஸ்தநங்களுக்குக் காடி₂ன்யம் சொல்ல வேண்டியிருக்க, மார்த்த₃வம் சொல்லக் கூடாமையாலே தாத்பர்யம் அருளிச்செய்கிறார் (விரஹோத்யாதி₃) f அத₄ராம்ருதபரமாகத் தாத்பர்யாந்தரம் அருளிச்செய்கிறார் (அந்த இத்யாதி₃) h, i அவனகப்படும் சுழிகளைச் சொல்லும் ப்ரகரணத்துக்கு சேர, ''நங்காய்'' என்றதுக்குத் தாத்பர்யம் அருளிச்செய்கிறார் (பூர்ணை இத்யாதி₃) j, k ''திரு'' என்றதுக்கு – ஸம்போ₄க₃ஸ்ரீயையுடையவளென்று ஸப்₃த₃ார்த்த₂ம் உட்கொண்டு தாத்பர்யம் அருளிச்செய்கிறார் (ஒசிந்த இத்யாதி₃)

சி.அ. x, y செற்றார்—பகைவர். x₂, y₂ வெப்பம்—து₃:க்க₂ம். x₃, y₃ கொடுக்கும்—பண்ணும். z 'ஆஸ்ரிதர்க்காக அநாஸ்ரிதர்க்கு து₃:க்க₂த்தைப் பண்ணுமோ?' என்ன அருளிச்செய்கிறார் (செய்குந்தாவரும் இத்யாதி₃) b செப்பன்ன—அதினுடைய காடி₂ன்யமாதல் ஆகாரமாதல். d அதாவது - செப்புப்போலேயிருக்கிற ஸந்நிவேஸத்தையுடைய முலை என்னுதல். g மருங்குல்—மத்₄யம். j, k 'திரு' என்று அழகாய், அத்தாலே துவட்சியைச் சொல்லுதல்; j, l 'திரு' என்று லக்ஷ்மீபானவன் என்னுதல்;

A திருவாய் 2-6-1 B மூன்-திருவ-3 C திருவாய் 6-7-8

(துயிலெழாய்) நீ உணர்ந்து எங்கள் ஸத்தையை உண்டாக்காய். (திருவே துயிலெழாய்) l பிராட்டியைப்போலே, ஆஸ்ரிதைகளான எங்களுக்காக உணர வேண்டாவோ? ஆஸ்ரிதர்க்காகவன்றே பத்துமாஸம் உறங்காதிருந்தது.

'எழுந்திருந்து உங்களுக்குச் செய்யவேண்டுவதென்?' என்ன; m (உக்கமும் இத்யாதி3) உக்கம் — ஆலவட்டம். தட்டொளி—கண்ணுடி; n பறை என்றுமாம். (உன் மணாளனை) உன் புருவம் நெறித்தவிடத்திலே கார்யஞ் செய்யும்படி பவ்யனானவனை. o உக்கத்தோபாதி அவனையும் இவள் தரவேணுமென்கை. p உன் மணாளனை இப்போதே எம்மை நீராட்டு என்றுமாம். (இப்போதே) பிற்றைப் போதைக்கு இராத எங்களை. q (எம்மை) r 1. "ஏஹி பஶ்ய ஶரீராணி" என்று விரஹம் தின்ற உடம்பைக் காட்டுகிறார்கள். (எம்மை) "பேய்ப்பெண்ணே" (7) என்றும், "நாயகப் பெண்பிள்ளாய்" (7) என்றும் தங்களில் தாங்கள் சொல்லுமித்தனை; பேற்றில் வந்தால் எல்லாரும் ஒத்திருப்பார்கள் என்றுமாம். (எம்மை) s எங்களையும் அவனையுங்கூட முழுக்கூட்டவேணும் என்றுமாம். t (நீராட்டு) u 2. "தா3ரா: பித்ருக்ருதா இதி" என்னுமாபோலே இவர்களுகப்பது இவள் தந்த க்ருஷ்ணனென்று. v பெருமாள், பிராட்டியுடைய ஸௌந்ய3ர்யாதி3 கள் கிடக்க, ஐயர் பண்ணிவைத்த விவாஹமென்று உகப்பர்; அதுபோலே, க்ருஷ்ணன்பக்கல் ப்ராப்தியும் போக்3யதையும் கிடக்க, இவள் தந்த க்ருஷ்ணனென்று உகப்பர்கள். 20.

பெ.அ. m, o "உக்கமும் தட்டொளியும்—உன்மணாளனையும்—தந்து" என்று அந்வயித்துத் தாத்பர்யம் அருளிச்செய்கிறார் (உக்கத்தோபாதி இத்யாதி3) m, p "மணாளனை" என்ற ஐகாரம்—அவ்யயமாய், "உன் மணாளனுவான் — உக்கமும் தட்டொளியும் தந்து எம்மை நீராட்டும்படி — துயிலெழாய்" என்று அந்வயமாகக் கருதித் தாத்பர்யாந்தரம் அருளிச் செய்கிறார் (உன் மணாளனை இத்யாதி3) இப்பக்ஷத்தில், "நீராட்டு" என்றவிடத்தில் அகாரம் கடைக்குறைத்தலாகவிருக்கிறதென்று கொள்வது. o, s "மணாளனைத்தந்து" என்ற பக்ஷத்தில் சேரத் தாத்பர்யம் அருளிச்செய்கிறார் (எங்களையும் இத்யாதி3) t, u "தந்து — நீராட்டு" என்று ப்ரார்த்த2னை தோற்றுகையாலே இதுக்கு நியாமகம் அருளிச்செய்கிறார் (தா3ரா இத்யாதி3) u, v கீழ்வாக்யவிவரணம் (பெருமாள் இத்யாதி3) 20.

சி. அ. m உக்கம்—ஆலவட்டம். n தட்டொளி—பறை; ஒளி என்று ஒலியாய், அத்தாலே ஶப்3தி3க்கிற பறை. m "உக்கமும் தட்டொளியும்" என்றதுக்கு மூன்று பொருள்; o "உக்கமும் தட்டொளியும் உன் மணாளனையும் தந்து எம்மை இப்போதே நீராடும்படி துயிலெழாய்" என்னுதல்; s அன்றிக்கே, 'உக்கமும் தட்டொளியும் தந்து உன் மணாளனையும் எங்களையும் இப்போதே நீராட்டத்துயிலெழாய்' என்னுதல்; q, r இந்தப் பக்ஷத்திலே எம்மை என்றதுக்கு 1. "ஏஹி பஶ்ய" என்று அர்த்த2மும் கொள்ளவேண்டா. m மூன்றும் அர்த்த2த்துக்கு "மணாளனை" என்ற ஐகாரம் அவ்யயமாய் உன் மணாளன் எம்மை நீராட்ட என்றபடி. o, u முந்தின அர்த்த2த்தைக் கடாக்ஷித்துக்கொண்டு அருளிச்செய்கிறார் (தா3ரா: பித்ருக்ருதா: இத்யாதி3) 20.

ஆருயிரப்படி — இருபதாம்பாட்டு

அவ :— இருபதாம்பாட்டு. ''துயிலெழவொட்டாய்காண், தகவன்று'' (19) என்று பெண்கள் ஆற்றுமையாலே நம்மைச் சில குற்றஞ்சொன்னர்களேயாகிலும் திருவுள்ளம் பார்த்து இடம்பெற்ற போதிலே விண்ணப்பஞ் செய்யவேணுமென்று நப்பின்னைப்பிராட்டி பேசாதே பள்ளிகொண்டருள, இவளைப்பற்றினாலும் கார்யஞ் செய்யக்கடவ அவன் ''இவள் தன்னையும் திறக்கவொட்டாதே போகவ்ப்ரஸக்தனைப் பேசாதே கிடந்தாய்'' என்றவாறே, சிவிட்கென்று கிடக்கிறானைக் கூடுமென்றுபார்த்து, 'நீ முன்பு ஆர்த்தரக்ஷணம்பண்ணி ஆர்ஜித்த குணங்களெல்லாம், இப்போது எழுந்திராமையாலே இழக்கக்கிடாய் புகுகிறாய்'' என்று சொன்னவிடத்திலும் அவன் வாய்திறவாமையாலே, நப்பின்னைப்பிராட்டி திறத்தில் ப்ரணயரோஷத்தாலே சொன்னவையும் இவனுக்கு அஸஹ்யம்போலே இருந்ததென்று, புரிந்து இவளுடைய தேஹகுணங்களையும் ஆத்மகுணங்களையும் சொல்லியேத்தி, 'அவன் தனக்குரியனே? பரதந்த்ரனைவனை நலிகிறதென்?' என்று, 'எங்களுக்கும் அவனுக்கும் கடவையான நீயே எங்களபேக்ஷிதம் தலைக்கட்டித் தரவேண்டாவோ?' என்று நப்பின்னைப்பிராட்டியை அர்த்திக்கிறார்கள்.

வ்யா :— (முப்பத்துமூவர்) நீ ரக்ஷிக்குமிடத்தில் ஸங்க்யாநியதி வேணுமோ? க்ரமவிவக்ஷைதானுண்டோ? அஞ்சுலக்ஷங்குடியிலுள்ளாருமாய் நோவுபட்டால் உதவலாகாதோ? ஆண்களுமாய் ப்ரபலருமானாலே ரக்ஷிக்கலாவது; பெண்களுமாய், அபலைகளுமானால் ரக்ஷிக்கலாகாதோ? ஸ்மிதைபாதி ஸாவித்ரிபாதியாய் ஸ்வரக்ஷணத்திலே அதிகரிப்பார்க்கோ உதவலாவது; உன்னையேபற்றித் தந்தாமும் ஒருதலை பற்றுதார்க்கு உதவலாகாதோ? 1. ''ஈச்வரோஹம்'' என்றிருப்பார்க்கோ உதவலாவது; ''அடியோம்'' என்றிருப்பார்க்கு உதவலாகாதோ? அநந்யப்ரயோஜநரைப்போலே பதர்கழித்துக் கார்யந்தலைக்கட்டினவாறே அஞ்ஞதைகொண்டு எதிரிடுமவர்களையோ ரக்ஷிப்பது; கார்யஞ் செய்யாவிடிலும் அகதிகளாய் அநந்யப்ரயோஜநராயிருப்பார்க்குக் கார்யஞ் செய்யலாகாதோ? A ''நீகைக் நீளெரிவைத்தருளாய்'' என்று உன்னையெழுப்பி அடிபுக்கு இலக்காக்குவார் கார்யமோ செய்வது; உன்னழகுகாண ஆசைப்பட்டார் கார்யம் செய்யலாகாதோ?

(அமரர்) கொன்றாலும் சாவாதார்க்கோ உதவலாவது? வ்யதிரேகத்தில் பிழைபாத நாங்களிருக்க. உன்னையொழிய வேறொன்று தாரகம் என்று முகாந்தரத்தாலே ஜீவிப்பார்க்கோ உதவுவது; உன்முகமும் உன்நோக்கும் ஜீவநமாயிருப்பார்க்கு உதவலாகாதோ? முக்தர்க்கோ கார்யஞ் செய்வது; அமுக்தர்க்குக் கார்யஞ்செய்யலாகாதோ? நோவுபட்டால் ஆற்றவல்லார்க்கோ கார்யஞ்செய்வது? (முன்) நோவுவருவதற்குமுன்னே, ஏற்கவே பரிஹரிக்கக்

A திருவிருத்தம் 92

2008 பகுதி III/09 L.dis.456 கற்பி

கடவ நீ, நோவுபட்ட எங்களை ரக்ஷியாதொழிகிறதென்? நினைவுக்கும் முற்பட்டுக் கார்யஞ் செய்யக்கடவ நீ, எங்கள்நினைவைக் குற்றமாக்கினையோ? (சென்று) நீ இரந்துசென்று கார்யம் செய்வார்க்கோ செய்யலாவது; நாங்கள்வந்து இரந்தாலாகாதோ? உன்னையழைத்துவிட்டுக் கார்யம்கொள்வார்க்கோ உதவலாவது; உனவாசலிலே வந்துநின்று துவளுகிற எங்கள் கார்யஞ் செய்யலாகாதோ? நாங்கள் உன்வாசலிலே வருகை குற்றமென்றிருக்கிறையோ? 1. ''ஸ்மராமி'' என்னுமவனுக்கு நினைக்கை குற்றம்; 2. ''உவாச'' என்னுமவனுக்கு வார்த்தை சொல்லுகை குற்றம்; 3. ''பத்ப்யாமபிகமாத்'' என்னுமவனுக்கு வருகை குற்றம்; A ''உன்மனத்தால்'' B ''வார்த்தையென்னே'' C ''திருமாலும் போந்தானே''. D எழுதுமென்னுமிதுமிகையாயன்றே அவ்விடத்துக் கிருப்பது.

(கப்பம் தவிர்க்கும்) ''கப்பம்'' என்கிறது — கம்பமென்றபடி. அதாகிறது — நடுக்கம். ''கம்பம்'' என்கிற இத்தை ''சப்பம்'' என்று வலித்துக்கிடக்கிறது. 4. ''தேவாஸ் ஸ்வர்க்கம் பரித்யஜ்ய'' என்று — அஸுராராக்ஷஸராலே குடியிருப்புட்பட இழந்து புக இடமற்றுப் படுகிற நடுக்கத்தைத் தவிர்க்கை. நாட்டார் நடுக்கத்தைத் தவிர்க்கக் கடவ நீ, எங்களை நடுங்கப்பண்ணுதே கொள்ளாய்; அவர்கள்நடுக்கத்துக்கும் எங்கள்நடுக்கத்துக்கும் வாசியறியவேண்டாவோ? அவர்கள்நடுக்கம் எதிரிகள் நிமித்தமாக; 'நீயுணரும்படி காணதொழியம் புகுகிறேமோ! உன்னைக்கிடையாதொழியப் புகுகிறதோ' என்று எங்களுக்கு நடுக்கம். ''கப்பம்'' என்று — இறையாகவுமாம். ராவணதிகளுக்குப் பணிப்பூ இட்டுத் திரியாமைக் காக்கை. (கலியே) மிடுக்குடையவனே! ஒரு மேட்டுக்கு ஒரு பள்ளம் நேராமாபோலே, உன்மிடுக்குக்கு எங்கள் பலஹாநியும் நேரன்றே. அபலைகளான எங்களுக்கு 5. ''க்ருஷ்ணபலா:'' என்கிற உன்மிடுக்கல்லது உண்டோ? (துயிலெழாய்) தேவதைகளுக்குப்போலே எங்களுக்குக் குடியிருப்புப் பண்ணித்தரவும், மார்பிலே அம்பேற்கவும் வேண்டா; உணரும்போதையழகு காண்கையே எங்களுக்குக் குடியிருப்பும் ஜீவநமும். (துயிலெழாய்) நீ உகக்குமவர்களான முப்பத்துமூவராக நினை; ஆண்களாக நினை; ப்ரயோஜநாந்தரபரராக நினை; மருந்துதின்று சாவாத பேராக நினை; உன்னை ரக்ஷியமாக நினையாதே ரக்ஷகனாக நினைக்கும் பேராக நினை. எங்களுக்கு நீயுணரும்படியும், நீ நோக்கும்படியும், நீ வார்த்தை சொல்லும்படியுந் தொடக்கமானவற்றைக் காண்கையே வேண்டுவதென்கிறார்கள்.

(முப்பத்துமூவரித்யாதி) அஷ்டவஸுக்கள், ஏகாதசருத்ரர்கள், த்வாதசாதித்யர்கள், அஸ்விநிதேவதைகள், இவர்கள் தொடக்கமாக ப்ரஹ்மாவெல்லையாக நடுவுண்டான தேவதாவர்க்கம், க்ருஷ்ணன் திருவவதரித்தபோதே

A பெரியதிரு 2-7-1 B நாச்-திரு 8-2 C நாச்-திரு 8-1 D திருவாய் 9-3-9

தொடங்கி A தொட்டில்கள் தொடக்கமான பிள்ளைப்பணிகள் வரவிட்டு, தாங்களும் B மந்திரமாலைர் கொண்டு சிலநாள் மறைவது வெளிப்படுவதாய்த்திரிந்து, C ஆயர்பாடி நிறையப்புகுந்து, இடைச்சிகள் பின்னடியிலே ஒதுங்குகையாலும், இவர்கள் கார்யம் க்ருஷ்ணனே செய்து திரிகையாலும், இடைப்பெண்கள் அறிகையாலே இவ்ருத்தாந்தத்தைச் சொல்லுகிறார்கள். ''கலி'' என்று — மிகுதியாய். 'ஸகலதே₃வதைகளையும் ரக்ஷிக்கையாலே ஸர்வாதி₄கனனவனே' எனறுமாம்.

இப்படி தே₃வகார்யஞ்செய்து வ்யாபரியாநின்றால் தனக்கொரு தீங்குவரும்படியிருக்குமோவென்னில் — (செப்பமுடையாய்) தனக்கு ரக்ஷையுண்டாம்படி வ்யாபரிக்கும் அரணிமையையுடையவனே! என்கிறார்கள். அன்றிக்கே, ''செப்பம்'' என்று — செவ்வைபாய், ஆஸ்ரிதரோடு செவ்வையழியாதே பரிமாறும் ஆர்ஜவ குணத்தை உடையவனே! என்னுதல். 1. ''ரக்ஷிதா ஜீவலோகஸ்ய'' என்கிற ஸாமாந்யதர்மத்தால் தழும்பிழந்தாலும், 1. ''ஸ்வஜநஸ்ய ச ரக்ஷிதா'' என்கிற இவ்விசேஷத்தையும் இழக்கவோ? எங்கள் செவ்வைக்கேடும் உன்செவ்வையாலே நிரப்பவிருந்தோம்; அதுதன்னையும் அஸத்ஸமமாக்காநின்றாய்; நாங்கள் வரக்கிடந்துறங்குகையாலே. விரகாலே நீரை மேட்டில் ஏற்றுமாபோலே, உன்னுடைய வாத்ஸல்யம் எங்கள் பக்கலிலும் ஏறிப்பாய வேண்டாவோ? இச்செவ்வைதானே அநாஸ்ரிதவிஷயத்திலும் ஒக்குமாகில் பா₃த₄கமாமிறே. அதுவாராமைக்காக — (திறலுடையாய்) என்கிறார்கள். திறலாவது — பராபி₄பவ ஸாமர்த்₂யம். ஆஸ்ரிதரோடு செவ்வியனான செயல்தன்னிலே அநாஸ்ரிதர்க்கும் அநபி₄பவநீயனனவனே! பாண்ட₃வர்கள் விஷயத்தில் செவ்வியனான நிலையிலே து:ர்யோத₄நாதி₃களை அழிக்கும்படியை நினைக்கிறது. ஆயுத₄மெடேனென்று ஆயுத₄மெடுக்கையும், பகலே இரவாக்குகையும் தொடக்கமானவை. அநுகூலரான எங்கள் பக்கலிலேயோ திறல்காட்டுவது? அது எங்களுக்கு அணுகவொண்ணாதபடியாபோ?

அத்திறலால் பா₃லித்த அம்மம் கொவ்வுகிறதுமேல் — (செற்றார்க்கு வெப்பங் கொடுக்கும்) செற்றாராகிறார் — ஶத்ருக்கள். 2. ''ஸுஹ்ருத்₃ஸர்வபூ₄தாநாம்'' என்றிருக்கிற தனக்கு ஶத்ருக்களில்லையிறே — ஆஸ்ரிதருடைய ஶத்ருக்களேயிறே தனக்கு ஶத்ருக்களாகிறார். ஆஸ்ரிதவிரோதி₄களுக்கு து:க்க₄த்தைப் பண்ணிக் கொடுக்கும். (செற்றார்) ஶாத்ரவம் இருவர்க்கும் பொதுவாயிருக்கிறபடி. இவர்கள், 3. ''ஶத்ரோஸ் ஸகாஶாத்'' என்பர்கள்; அவன், 4. ''த்₃விஷத₃ந்நம்'' என்னும். (வெப்பங் கொடுக்கும்) பயஜ்வரத்தைக்கொடுக்கும். பாண்ட₃வர்களுடைய கலக்கமெல்லாம் அவர்களுக்கு எதிரிகள்பக்கலிலே ஆக்குகை.

A பெரியாழ்திரு 1-3-1, B பெரியாழ்திரு 2-8-1, C பெரியாழ்திரு 3-6-7.

A ''பாண்டவர் தம்முடைய பாஞ்சாலி மறுக்கமெல்லாம்'' B ''சந்தமல் குழலாளி அலக்கண் நூற்றுவர்தம் பெண்டிருமெய்தி'' (கொடுக்கும்) அருட்கொடையான ஔதார்யமிருந்தபடி. (விமலா) ஸம்பந்தமொத்திருக்கச் செய்தே ஆஸ்ரிதர்க்காகக் கண்ணற்று முடிக்கையாலே வந்த ஸுத்தியைச் சொல்லுகிறது. C ''செய்குந்தாவருந் தீமை'' இத்யாதி... ஆஸ்ரிதர்கார்யம் செய்தாலுயிருக்கையன்றிக்கே, தன்பேருயிருக்கை. D ''போழ்ந்த புனிதன்''. அநாஸ்ரிதர்க்கு முடிகைக்கு வேண்டுமவற்றைக் கொடுத்து, ஆஸ்ரிதர்க்கு உஜ்ஜீவநஹேதுவான தன்னைக் கொடுக்கும் ஸுத்தி. துர்யோதனனுக்குப் பரிகரத்தைக் கொடுத்து, அர்ஜுநனுக்குத் தன்னைக் கொடுத்து நின்ற நிலை. (துயிலெழாய்) ட்ரயோஜநாந்தரபரர்க்குக் கார்யம் செய்ததால் வந்த புகழும், ஆஸ்ரிதரக்ஷணத்தால் வந்த ஏற்றமுமெல்லாம் அழியக்கிடாய் புகுகிறது; சடக்கெனவெழுந்திருந்து அவற்றை நிலைநிறுத்திக்கொள்ளாய்.

அவன் தாழ்த்திருந்தவாறே அவன்பக்கல் மறுமாற்றம் பெறுமையாலே, ''தன்னைப்பிரியில் தரியாதவனைச் சிறையிலேயிட்டுவைத்து முரட்டு தேவர்கள் கார்யஞ்செய்து திரியுமவனை விடீர்'' என்று, திரியவும் நப்பின்னைப்பிராட்டியை எழுப்புகிறார்கள். (செட்டன்ன மென்முலை) பரதந்த்ரனுன இவனைக் கிடந்து நலிகிறதென் நம் ஆர்த்தத்வநி கேளாதபடி உள்ளே பொதிந்து கிடக்கிறவனைச் சொல்லாதே? (செப்பன்ன) செப்புக்குள்ளே பொதிந்துவைத்த ஆபரணம் நினைத்தபோது பூணக்கிடையாதாப்போலே, செப்புப்போலேயிருந்த ஸந்நிவேசத்தையுடைத்தான அவள்முலையிலே அழுந்திக்கிடக்கிறவனை நமக்குக் கிடைக்கப்புகாநின்றதோ? E ''மாகடல் நீருள்ளான் மலராள் தனத்துள்ளான்'' க்ஷாமகாலத்துக்கு அஞ்சினார், கடற்கரையைப்பற்றிக் கிடத்தல், பர்வதங்களைப் பற்றிக் கிடத்தல் செய்யக்கடவது; இவனும், கடலையும் மலையையும் விடான்; F ''திருமாலிருஞ்சோலை மலையே திருப்பாற்கடலே''. (செப்பன்ன) விலக்ஷணமான பண்டமிட்டு வைக்கும் செப்பு அவன்; அவன்றன்னையடக்கும் செப்பு இவள் முலைகள். G ''சுடர்வான் கலன் பெய்ததோர் செப்பினைத் திருமங்கைமணாளனை''. (மென்முலை) விரஹாஸஹமான முலை படைத்தாளாகிலிறே இழந்திருக்கலாவது; அவனுரைவும் வினவவுமுள்ள விளம்பும் பொறுதமுலை.

செவ்வாய்) அம்முலையிலே வர்த்திப்பார் நுகருங்கனியும் தேனும், H ''தொண்டையம் செங்கனிவாய்நுகர்ந்தான்'' என்னும்படியே. (செவ்வாய்) க்ருஷ்ணனையும் தனக்காக்கிக் கொண்ட அதரமும் ஸ்மிதமும். I ''கோவைவாயாள் பொருட்டு J 'தளவேழ்முறுவல் பின்னைக்காய்''. இவ்வதரமும் முறுவலும் புஜிக்

A பெரியாழ்திரு 4-3-6 B பெரிய திரு 2-3-6 C திருவாய் 2-6-1 D பெரியதிரு 1-7-1 E மூன் திருவ 3 F திருவாய் 10-7-8 G பெரியதிரு 7-10-6 H பெரியதிரு 3-7-2 I திருவாய் 4-3-1 J திருவாய் 1-5-1

கைக்கிறே ஏறுகள்பொருதது. 1. ''காந்தஸ்மிதா'' 2. ''ஜக₃த் ஸ்மேரலம் பரிவர்த்தயாமி''. அவன் நெஞ்சை வருத்துமது என்னம்பாலே? என்னில்; நாட்டையழிப்பனென்று கலங்கப்பண்ணுவது இவ்வத₃ரமும் முறுவலுமிறே 3. ''ஈஷது₃ந்நம்யபாஸ்யாமி ரஸாயநமிவோத்தமம்'' என்றிருக்குமவனைப் பெற்றுல் விடுமோ? (செவ்வாய்) A செம்பவளத்திரள்வாயன் தோற்ற வாய். (சிறுமருங்குல்) அம்மலையிலேபிருந்து பக்வப₃லத்தை புஜிப்பார்க்கு ஸுகமாயிருக்கவொண்ணுதபடி 'இருக்கிறதோ! முடிகிறதோ!' என்று துணுக்கென்னப்பண்ணும் பயஸ்தா₃நமும், ஸந்தே₃ஹஸ்தா₃நமும், மேலுங் கீழுங்கொண்டு நடுவுண்டு என்று அநுமிக்குமத்தனை; இதொரு நிராஸ்ரய ஸ்தி₂தி இருக்கிறபடி! B ''ஒசிந்த நுண்ணிடைமேல் கையை வைத்து.'' (நப்பின்னைநங்காய்) அநுக்தஸௌந்த₃ர்யஸுச்சயம். சொல்விச் சொல்லாத ஸௌந்த₃ர்யங்களெல்லாவற்றுலும் பூர்ணையானவளே! (நங்காய்) C ஆய்ப்பாடி வளர்த்த நம்பியினுடைய பூர்த்திக்கும் அடியான பூர்த்தியையுடையவளே!

(திருவே) 4. ''ஸ்ரத்₃த₄யா தே₃வோ தே₃வத்வமஸ்நுதே'' என்னும்படியாயிருக்கை. அழகு அவளாலே; கு₃ணங்கள் அவளாலே; மேன்மை அவளாலே; நீர்மை அவளாலே; நிரூபித்தால், அடங்கலும் அவள் தோயலாயிருக்கும். D ''பின்னை நெடும்பணைத்தோள் மகிழ்பிடிடை'' ''செப்பன்னமென்முலை'' என்று தொடங்கி இச்சுழிகளிலே அகப்பட்டவன் தப்பி ஏறினுலிறே நம்கார்யம் செய்வது. (திருவே) இனி அவ்வருகில்லையென்னும்படி யாதொரு பதா₃ர்த்த₂மும் ஸர்வோத்க்ருஷ்டம், அதுக்கு வாசகஸப்₃த₃மும் இதுபோலே. ஸர்வாதி₄கனவன்தனக்கும் ஏற்றஞ்சொல்லும்போது இஸஸப்₃த₃மிட்டாய்த்துச் சொல்லுவது. 5. ''கஸ்ரீஸ்ரிய:'' 6. ''ஸ்ரியஸ்ரியம்'' E ''திருவுக்குந்திருவாகிய'' என்றும் சொல்லக்கடவதிறே. 7. ''யஸ்யா: கடாக்ஷணம்'' இத்யாதி₃ உதா₃ரவாக்குக்களாகிறுர் - திருமங்கையாழ்வாரும், ஆளவந்தாரும், ஆழ்வானும், பட்டரும். (திருவே) உன்னுலே அவனுக்குப்பெருமையுண்டாம்படியான ஏற்றமுடையவளே! (திருவே துயிலெழாய்) அவள் பேர் படைத்தால், செய்வதும் அவளைப்போலேயிருக்கவேண்டாவோ? அவளுடைய வாசகஸப்₃த₃த்தை உனக்குச்சொல்லும்போது தே₃ஹகு₃ணங்களும் ஆத்மகு₃ணங்களும் உண்டானுலும், பத்துமாஸம் ஆஸ்ரிதார்த்த₂மாக உறங்காதிருந்தவள்படி உனக்கும் உண்டாகவேணுங்காண்! (திருவே துயிலெழாய்) F பெண்ணின் வருத்தமறியாதவனைப்போலே உறங்கலாமோ ஸஜாதியமாய்ப்பிறந்த உனக்கு? நீயுணர்ந்தெழுந்திருந்து எங்கள் ஸத்தையை உண்டாக்காய்.

''நான் உறங்குகிறேனல்லேன், அவனையிடுவித்து உங்களுக்குத் தருமவை மநோரதி₂க்கிறேனித்தனை; நான் எழுந்திருந்து செய்யவேண்டுவது சொல்லுங்கோள்'' என்ன; ஆகில் அவற்றைக் கேளென்கிறுர்கள்— (உக்கமும் தட்டொளி:

A திருவாய் 3-5-4, B திருவாய் 6-7-8, C பெரியதிரு 5-5-5, D திருவாய் 1-7-8 E பெரியதிரு 7-7-7, F நாச்சியார்-திரு 13-1.

யும்) ஆலவட்டமும், கண்ணடியும், நோன்புக்கு வேண்டுமுபகரணங்களுக்கெல்லாமுபலக்ஷணம், (உன்மணாளனே) இவற்றுக்குபாதி உனக்கு உபகரணகோடியிலேயாய், தன் கார்யம் உன் புத்தி பரியந்தமாம்படி இருக்கிறவனே. நீ புருவம் நெறித்தவிடத்தே கார்யஞ்செய்யும்படி பவ்யனனவனே.

(இப்போதே) அநந்தரக்ஷணத்தில் ஊராருமிசையார்கள்; நாங்களும் ஜீவிபோம். (எம்மை) பிற்றைப்போதைக்கு இராத எங்களை. (எம்மை) 1. "ஏஹி பஶ்ய ராகாணி" என்று வசநஞ் சொல்லவேணுமோ!' என்று விரஹம் தின்ற உடம்பைக் காட்டுகிறார்கள். "எம்மை" என்ற இந்தப்பன்மையாலே "பேய்ப்பெண்ணே" (7) என்னுதல், "பிள்ளாய்" (6) என்னுதல், "நாயகப்பெண்பிள்ளாய்" (7) என்னுதல் எத்தனையிழிச்சம் சொன்னார்களேயாகிலும் பாலதசையிலே எல்லாரும் ஒத்திருக்கிறபடி. எல்லார்க்கும் உபாயமொன்றுணர்போலே உபேயமுமொன்றுயிருக்கை. ஒருத்தன் திருவடிகளைப் பலர் ஆஶ்ரயித்தால் ஸுக்ருத தாரதம்யத்தாலே விளம்பமுண்டானாலும் பாலம் எல்லார்க்கும் ஒத்திறே இருப்பது. எம்பெருமான் பக்கலிலே ந்யஸ்தபரனானால், தேஹயாத்ரையிலே அல்பம் ஸக்தர்க்கும், அவனையடியிலே செல்லாதார்க்கும், இங்குள்ள வைஷம்யமொழிய பாலதசையிலே ஒப்புச்சொல்லா நின்றதிறே.

(உன்மணாளனே எம்மை நீராட்டு) எங்களையும் அவனையுங்கூட முழுக்கூட்ட வேணும். (நீராட்டு) 2. "தாராபித்ரு க்ருதா இதி" என்று-பெருமாள், பிராட்டியுடைய ஸௌந்தர்யங்களெல்லாம்கிடக்க, 'ஐயர்செய்வித்த விஷயம்' என்று பிராட்டியை ஆதரித்தாற்போலே, க்ருஷ்ணனே நீ தந்த விஷயமென்றுய்த்து நாங்கள் விரும்புவது. (உன்மணாளனே எம்மை நீராட்டு) 3. "ஏஷ ப்ரஹ்ம ப்ரவிஷ்டோஸ்மி க்ரீஷ்மே ஶீதமிவ ஹ்ரதம்" A "அப்பன் திருவருள் மூழ்கினள்," எங்கள் விடாயுங் கெட்டு எங்களை எல்லாருங் கொண்டாடும்படி பண்ணு. (திருவே-எம்மை நீராட்டு) எங்களையும் அவனையும் ஒருதுறையிலே சேராதபோது நீ திருவாகைக்கு உபாயமுண்டோ? "ஶ்ரீயதே-ஶ்ரயதே" என்றிறே-ஶ்ரீயாய்த்து, ஸ்வதந்த்ரரோடு பரதந்த்ரரோடு வாசியில்லை, இவள்கைபார்த்திருக்கவேணும். (உன்மணாளனே எம்மை) உனக்கு ஒருக்காலெழுதித்தந்து ப்ரதிக்ஷணம் எழுத்துவாங்குகிறவனே. B "நீராட்டமைத்து வைத்தேன்" என்று உனக்கும் அவனுக்குங்கூடக்குளிக்கச் சமைத்த நீரிலே எங்களையுங்கூட முழுக்கூட்டு. (உக்கமித்யாதி) எங்கள் ஶ்ரமத்தை ஆற்றுப் பரிகரத்தையும், எங்கள் வைலக்ஷண்யத்தை நாங்கள் கண்டுகக்கும் பரிகரத்தையுந் தந்து எங்கள் விரஹதாபமாறும்படி C வாசத்தடத்திலே அவகாஹிக்கும்படி பண்ணவேணும். ஜ்ஞாநதர்ஶந ப்ராப்திகளைப் பண்ணித் தரவேணும் என்றபடி. 20

A திருவாய் 8-9-5, B பெரியாழ் திரு 3-3-3, C திருவாய் 8-5-1

ஈராயிரப்படி—இருபதாம் பாட்டு

அவ:— இருபதாம் பாட்டு:—அங்கு சொல்லுவதெல்லாம் சொல்லி இவளைப் பற்றியெழுப்பி அவனுணராவிட்டவாறே "அவன் தனக்கு உரியனே? அவனுக்கும் எங்களுக்குமடியான நீ எங்களை நீராட்டுவி" என்று நப்பின்னைப் பிராட்டியோடே அர்த்திக்கிறார்கள்.

A திருநெடு 23. B திருநெடு 22. C திருவாய் 6-9-3. D பெரியாழ் திரு 3-6-4. E பெரியதிரு 3-3-7. F நாச் திரு 13-1. G பெரியாழ்திரு 1-8-1. H பெரியாழ் திரு 3-3-5. I பெரியதிரு 10-7-4.

(உன்கோயில் நின்று இத்யாதி) நம்பெருமாள் கோயிலாழ்வாரில் நின்றும் புறப்பட்டருளி, பெரியதிருமண்டபத்திலே சேரபாண்டியனிலே நாய்ச்சிமாரோடே கூட விருந்து நினைப்பிட்டது என்றுல் தப்பாதாப்போலே. (சிரியசிங்காசனம்) ஓரணு சென்று அடியிடிலும் க்ருஷ்ணனேடு ஸாம்யாபத்தியைக் கொடுக்கும் ஆஸநம். A "இருந்தால் சிங்காசனமாம்" என்கிற ஆஸனத்திலே ஏறவிறே தங்களுக்குக் கனிசம்; கண்வளரு கிறபோதையழகும் உலாவுகிறபோதையழகும் கண்டால், இருக்கும் போதையழகும் காணவேணுமிறே; B "இருந்தமை காட்டினீர்" என்றிறே உத்தேஸ்யம். C "தடங் கொள் தாமரைக்கண் விழித்து—உன் தாமரைமங்கையும் நீயும் இடங்கொள் மூவுலகுந் தொழவிருந்தருளாய் திருப்புளிங்குடிக் கிடந்தானே!". கிடந்தமைகண்டா லும் நடந்தமைகண்டாலும் கண்களின் விடாய் கெட்டுக் குளிராது. D "கண் னிணை குளிரப் புதுமலராகத்தைப் பருகவிருந்திடாய்." (சிரியசிங்காசனத்திருந்து) நாங்கள் சுற்றும் ஒலக்கமிருக்க நீ ஸிம்ஹாஸனத்திலே இருந்தாலன்றே E "பல் லாயிரம் பெருந்தேவிமாருடனே - எல்லாருஞ் சூழச் சிங்காசனத்தேயிருந்தானைக் கண்டவர்களுண்டு" என்கிற ப்ரஸித்தி உனக்குப் படைக்கலாவது. (இருந்து) காவலுங்கட்டுமாய் "நில்" என்பாரின்றிக்கே, நினைத்தபடி அநுபவிக்கலாம்படி இருந்த இருப்பிறே.

(யாம்வந்த) எங்களை அறிவுதியிறே, நீ வரவிருக்குமவர்களன்றே நாங்கள், (வந்த) விரஹதெளர்ப்பல்யத்தால் கால்நடைதாராத நாங்களன்றே வந்தோம். (காரியம்) கார்யமின்னதென்ஞவிடுகிறது — அவஸரத்திலே சொல்லவேணுமென்று நினைத்து; ஸ்ரீபரதாழ்வான் தம்மோடொக்க ஆர்த்தராஞரெல்லாரையும் திரட்டிக் கொண்டுசென்று திருவடிகளிலே விழ இரங்குவரென்று வர, அவன் நினைத்து வந்ததுக்கு அவஸரமில்லாமையாலே அணுகவொண்ணுதபடியிருந்து திருவடி நிலைகளைக் கொடுத்துவிடும் ஸ்வதந்தரனுகையாலே, 'இப்போது சொல்லுவோமல் லோம்; இன்னம் இரண்டடி புகுரநின்றவாறே "உற்றேமேயாவோம்" (29) என் கிறேம்' என்று கார்யமின்னதென்னுமிடத்தை "சிற்றஞ் சிறுகாலைக்கு" (29) வைக்கிறார்கள். (காரியம்) ஸ்வஸ்வரூபாபத்தியளவுமிறே விதிக்கு விஷயமுள்ளது. அவ்வருகு பரிமாற்றத்தால் வருமவையெல்லாம் ப்ரமாணவிஷயமாய்ப் பேச்சுக்கு, நில மாயிராதே; அதுதானும் காரியவறுதிபிறந்தாலிறே சொல்லுவது. (ஆராய்ந்தருள்) "நாம் போமிடந் தேடிக் காலம்பார்த்து F எதிர்சூழல்புக்கு, புருஷகாரமாகப்பற்றி, நாம்படுவதெல்லாம் நீங்கள் படுவதே! நீங்கள் என்செய்திகோள்! என்பட்டிகோள்!" என்று ஆராயவேணும். "பெண்காள்! ஒருவரையொருவரெழுப்பி, எல்லாருந் திரண்டு நம்வாசற் காக்குமவனையெழுப்பி, ஐயரை எழுப்பி, ஆய்ச்சியை எழுப்பி, நம்மை எழுப்பி, அண்ணரை எழுப்பி, மீளவும் நம்மையெழுப்பி, போர வ்யஸநப் பட்டிகோளே!" என்று திருவுள்ளம்பற்றி க்ருபைபண்ணி அருளவேணும். 23.

A முதல் திருவ 53. B திருவாய் 6-5-5. C திருவாய் 9-2-3, D திருவாய் 9-2-9. E பெரியாழ் திரு 4-1-6- F திருவாய் 2-7-6.

ஈ₃யிரப்படி—இருபத்து மூன்ரும்பாட்டு

அவ: இருபத்துமூன்ரும் பாட்டு:- "பெண்காள்! உங்கள் காரியமழகிதாகச் செய்து தருகிரேம்; உங்களுக்குச் செய்ய வேண்டுவதென்?"என்ன; "இங்ஙனே தன்ஞங்குருச்சியாகக் கேட்டருளவொண்ணுது; புறப்பட்டுக் கேட்டருள வேணும் என்கிரர்கள். A "பின்னை நெடும்பணைத்தோள் மகிழ்ப்டுடை முன்னை அமரர் முழுமுதலானே".

வ்யா: (மாரிமலை முழைஞ்சில்) பெருமாள் மால்யவானிலே எழுந்தருளி யிருந்தாப்போலே வர்ஷம் பெய்து வழிகளெல்லாம் தூறெழுந்து ராஜாக்கள் படைவிட்டிலேயிருந்து வினையுண்டானலும் புறப்படாதாப்போலே, ஸிம்ஹங்கள் கி₃னிகு₃ஹைகளிலே கிடந்துறங்குங்காலம். விஶ்லேஷித்தார் கூடுங்காலம். கூடி யிருந்தார் ஸம்பே₄க₃ம் அனுப₄விக்குங்காலம். நாங்கள் உன்வாசலிலே நிற்குங் காலம். (மன்னி) ஆருக்கஞ்சுமது? மலைக்குவடு போலேயிருக்கை. (கிடந்துறங்கு மித்யாதி₃) ஒருத்தர் முடிசூட்ட வேண்டாதே புறம்பே ம்ருகே₃ந்த்₃ரனுகையும் நிரங்குசவைப₄வமுண்டாகையும். 1. "ஸ மயா பே₃தி₄த: ஸ்ரீமாந்" கூஶ₂த்₃ர ம்ருக₃ங்கள் மண்ணுண்ணும்படியிருக்கை. 2. "அபி₄த: பாவகோபமம்" அனுகூல ரென தம்பிக்குமகப்பட அணுகவொண்ணுதபடியிருக்கை. (அறிவுற்று) பூவலர்ந் தாற்போலே காலத்திலே உணருகை. ஸம்ஸாரி உறங்கும்போது தமோபி₄ பூ₄தலுய், உணர்ந்தால் பராக₃ர்த்த₃ானுப₄வமாயிருக்கும்; இவனுறக்கம் வ்யதி ரேகத்தில் ஆற்ருதார் வருமளவும். (தீ விழித்து) ப்ரத₂மாகூஷிஸந்நிபாதத் திலே பேடைக்கும் அருகே நிற்கவொண்ணுதென்கை.

(வேரிமயிர்) உஜ்ஜமயிர். அவனுக்காகில் 3. "ஸர்வ க₃ந்த₄:". (எப்பாடும் பேர்த்துதறி) ஒரு கார்யப்பாடில்லாமையாலே நாலு பாடும் பேருகிறபடி. (உதறி)! அவயவங்களைத் தனித்தனியே உதறினபடி. (மூரி நிமிர்ந்து) உடம்பு ஒன்ருய் நிமிர்ந்தபடி. (முழங்கி) மானுள்ளிட்ட ம்ருக₃ங்கள் முழுக்காயாகப் பினத்திக்கிடக்கும்படி. (முழங்கிப் புறப்பட்டுப் போதருமா போலே) 'கி₃ரி கு₃ஹ்வரத்தில்நின்றும் இப்படிப்பட்டதொரு ஸிம்ஹம் புறப்பட்டுப் போருமா போலே போரவேணும்" என்ன, "பெண்காள்! நரஸிம்ஹம் போருமாபோலே போரவேணுமோ?" என்ன (நீ பூவைப்பூவண்ண) கா₃ம்பீ₄ர்யத்துக்கு ஒன்றைச் சொன்னேமாகில் நீ போருமாபோலே போரவேணும் என்கை. வடிவையும் தி₃ரத்தையும் உன்னைப் போலே பண்ணவொண்ணுமோ? என்கை. இவ்வை ஸிம்ஹத்தைப்போலே ப₄விக்கிறது நாச்சியார் விழிவிழிக்கைக்காக. (உன் கோயில் நின்றிங்ஙனே போந்தருளி) நப்பின்னைப்பிராட்டியை ஊன்றிக்கொடு திருப்பள்ளியறையில்நின்றும் பெரிய திருமண்டபத்தேறப் புறப்பட்டருள வேணும்; 4. "பூர்வாம் தி₃ஶம்" இத்யாதி₃ப்படியே பிராட்டி மங்க₃ளாஶாஸநம் பண்ணப் புறப்பட்டருளினாப்போலே. 5. "பர்வதாதி₃வ நிஷ்க்ரம்ய ஸிம்ஹோ கி₃ரி குஹாமுக₂: । லக்ஷ்மணம் த்₃வாரி ஸோ(ऽ)பஶ்யத் ப்ரஹ்வாஞ்ஜலிபுடம் ஸ்தி₂தம்॥" என்னக் கடவதி₃ற.

A திருவாய் 1-7-8.

(இங்ஙனே போந்தருளி) கண்வளர்ந்தருளின அழகு காணப்பெற்றேம். இனி நடையழகும் இருப்பில் வேண்டப்பாடுங்கண்டு வாழவேணுமென்கிறார்கள். A "தடங்கொள் தாமரைக்கண் விழித்து நீயெழுந்து" இத்யாதி₃வத். (போந்தருளி) 1. "சதுர்க்கு₃தி" யிறே, 2. "கு₃ஜஸிம்ஹகு₃தீ விரௌ" இத்யாதி₃ப்படியிறே நடையழகிலே ருஷப₄த்தின் செருக்கும், மத்தகு₃ஜத்தினுடைய திமிர்ப்பும், புலியினுடைய உறட்டும், ஸிம்ஹத்தினுடைய பராபி₄ப₄வன ஸாமர்த்₂யமும் தோன்றியிருக்கும். இதெல்லாம் நம்பெருமாள் நடையழகிலே காணலாம். (கோப்புடைய) உப₄யவிபூ₄தியும் தொழிலாக வகுப்புண்டிருக்கை. (சீரிய சிங்காசனம்) ராஜாக்கள் இன்ன மண்டபத்திலே இன்ன ஸிம்ஹாஸனத்தில் இருந்தாப்போலே. (யாம் வந்த காரியம்) இப்போது சொல்லார்கள்; சிற்றஞ்சிறுகாலே (29) வைக்கிறார்கள். (ஆராய்ந்தருள்) "நீங்கள் என்பட்டீர்கள்? என்செய்தீர்கள்" என்கை. 23.

நாலாயிரப்படி — இருபத்துமூன்றும் பாட்டு

அவ: இருபத்துமூன்றும் பாட்டு. "பெண்காள்! உங்கள் கார்யம் அழகிதாகச் செய்கிறேம்; உங்களுக்குச் செய்யவேண்டுவதென் என்னச் செய்யும்படியை உள்விரியிட்டுத்தாருங்கோள்" என்ன, பாசுரத்தைச் சுருங்கவிட்டு உள்விரியிட்டுச் செய்துகொடுக்கிறார்கள். "சங்கமிருப்பார்போல்" (22) என்ற வார்த்தையைக் கேட்டு, 'நீங்கள் அநந்யகு₃திகளென்பதே நப்பின்னைப் பிராட்டி பரிக்₃ரஹமாயிருந்துவைத்து' என்று திருவுள்ளம் புண்பட்டு, 'உங்களுக்குச் செய்யவேண்டுவதென்?' என்ன: "இங்ஙனம் குன்ஞங்குருச்சியாகக் கேட்டருளவொண்ணாது; பேரோலக்கமாகவிருந்து நீ கேட்டருளுமாபோலே கேட்டருளவேணும்" என்கிறார்கள். புருஷகாரம்—B "பின்னை நெடும்பணைத்தோள் மகிழ்பீடுடை முன்னையமரர்முழுமுதலானே". அழகர் கிடாம்பியாச்சானை அருளப்பாடிட்டு, 'நீ ஒன்று சொல்' என்ன, 3. "அபராது₄ ஸஹஸ்ரப₄ாஜநம்" என்று தொடங்கி, 3. "அகு₃திம்" என்ன, 'நம் இராமாநுசனையுடையையாயிருந்துவைத்து அகு₃தியென்னப்பெறுய்' என்று அருளிச்செய்தாராம். அநந்தாழ்வான், 3. "அமர்யாத₃:" என்கிற ம்லோகத்தை ஆளவந்தார் அருளிச்செய்தாரென்னக்கேட்டு 'எனக்கது சொல்லவேண்டா' என்றான், அவர் ஸம்பந்தத்தாலே. 4. "வசஸா ஸாந்த்வயித்வைநம்" என்றருளி, 'ஸாபராத₄னன்றே ஸாந்த்வநம் பண்ணுவான்' என்றருளிச்செய்தாப்போலே, 'நீங்கள் சொல்லிற்றெல்லாம் நம் குறையாலே வந்தது' என்றருளிச்செய்து, பெண்களை ஸாந்த்வநம் பண்ணியருளினான்.

வ்யா:— (மாரிமலை முழைஞ்சில்) பெருமாள் மால்யவானிலே எழுந்தருளியிருந்தாப்போலே வர்ஷம் பெய்து வழிகளெல்லாம் தூறெழுந்து, ராஜாக்கள் படைவீட்டிலேயிருந்து விஜயுண்டானாலும் புறப்படாதாப்போலே, ஸிம்ஹங்கள் கி₃ரிகு₃ஹாரந்த்₄ரங்களிலே கிடந்துறங்கும் காலம்; விஶ்லேஷித்தார் கூடும் காலம்; கூடியிருந்தார் ஸம்போ₄கு₃ரஸமநுப₄விக்கும் காலமென்றுமாம். நீ எங்கள் வாசலிலே வரட்டுப்தமாயிருக்க, நாங்கள் உன்வாசலிலே நிற்கும் காலமென்றுமாம். (மன்னி) ஆர்க்கு அஞ்சவேணுமிதுக்கு? மலைக்குவடுபோலே பொருந்தியிருக்கை. தன் பேடையோடே ஏகவஸ்து என்னலாம்படி பொருந்திக்கிடக்கிறது என்றுமாம். இங்கு

A திருவாய் 9-2-3. B திருவாய் 1-7-8.

'நப்பின்னை கொ₃ங்கைமேல் வைத்துக்கிடந்த மலர் மார்ப'னிறே (19). ஹாரவிஶேஷம். 1. "ஶ்ரீஸ்தநாப₄ரணம்". இது முலை; அது மலை 2. "ஆஷாடே₄" (கிடந்துறங்கும் சீரிய சிங்கம்) ஒருத்தர் முடிசூட்டவேண்டாதே பிறப்பே ம்ருகே₃ந்த்₃ரனுகையும். நிரங்குஶவைப₄வமுண்டாகையும். 3. "ஸ மயா பே₃தி₄த: ஶ்ரீமாந்" இத்யாதி₃'. 3. "பரந்தப:" — கூஶாத்₃ர ம்ருகே₃ங்கள் மண்ணுண்ணும்படியிருக்கை. 4. "அபி₄த: பாவகோபமம்" அநுகூலரான தம்பிக்குமகப்பட அணுகவொண்ணாத படியிருக்கை. (அறிவுற்று) பூ அலர்ந்தாற்போலே காலத்திலே உணருகை. ஸம்ஸாரிக்கு நித்₃ரை மேலிட தமஸ்ஸு அபி₄ப₄விக்கை. இவனுக்கு உறக்கம் வ்யதிரேகத்தில் ஆற்றுதார் வருமளவும். (தீவிழித்து) ப்ரதா₃மாகூஷிஸங்கிபாதத்திலே பேடைகளும் அருகு நிற்கவொண்ணாதென்கை.

(வேரி மயிர்பொங்க) உஜ்ஜ்வலமயிர் சிலும்ப. (வேரி) ஜாத்யுசிதமான கா₃ந்த₄ம். அவனுக்காகில் ஸர்வகா₃ந்த₄ம். (சிப்பாடும் பேர்ந்துதறி) ஒரு கார்யப்பாடில்லாமை போலே, நாலு பாடும் பேருகிறபடி. (உதறி) அவயவங்களைத் தனித்தனியே உதறினபடி. (மூரிநிமிர்ந்து) உடலொன்றுக நிமிர்ந்தபடி. (முழங்கி) மானுள்ளிட்ட ம்ருகே₃ங்கள் முழுக்காயாக அஞ்சி ஒடுங்கும்படி முழங்கி. (புறப்பட்டு) 'கி₃ரி கு₃ஹையில் நின்றும் இப்படி புறப்பட்டதொரு ஸிம்ஹம் புறப்பட்டுப்போருமா போலே போரவேணும்' என்ன, "பெண்காள்! நரஸிம்ஹம் போருமாபோலே போரவோ?" என்ன;—

(நீ பூவைப் பூவண்ணா) கா₃ம்பீ₄ர்யத்துக்கு ஒன்றைச் சொன்னேமாகில், நீ போருமாபோலே போரவேணுமென்கை. வடிவையும் நிறத்தையும் உன்னைப்போலே பண்ணவொண்ணாதோவென்கை. இவன் ஸிம்ஹத்தைப்போலே வருகையாகிற இது காய்ச்சிபார் விழி விழிக்கையாயிருக்கை. (உன் கோயில் நின்றிங்ஙனே போந்தருளி) பிராட்டிபோடேயிறே கண்வளர்ந்தருளுவது; அவள் எங்களைத் தனித்தனியே போக்கியருளும்படி. அவள் திருக்கையை ஊன்றிக்கொண்டு திருப்பள்ளியறையில் நின்றும் பெரிய திருமண்டபம் புறப்பட்டருளவேணும். பிராட்டி மங்கு₃ளாஶாஸநம் பண்ண, பெருமாள் புறப்பட்டருளினாற்போலே புறப்பட்டருள ஆசைப்படுகிறார்கள். 5. "பர்வதாதி₃வ நிஷ்க்ரம்ய ஸிம்ஹோ கி₃ரிகு₃ஹாஶய:। லக்ஷ்மணம் த்₃வாரி ஸோபேயத் ப்ரஹ்வாஞ்ஜலிபுடம் ஸ்தி₂தம்॥". கண்வளர்ந்தருளுமழகு காணப்பெற்றோம்; இனி நடையழகும் இருப்பில் வேறுபாடும் கண்டு வாழவேணுமென்கிறார்கள். A "தடங்கொள் தாமரைக் கண்விழித்து நீயெழுந்துன் தாமரை மங்கையும் நீயும் இடங்கொள் மூவுலகுந்தொழவிருந்தருளாய்" என்கிறார்கள். இப்படியிருந்தருள வேணும். (போந்தருளி) 6. "சதுர்க்கு₃தி"யிறே. 7. "கு₃ஜஸிம்ஹகா₃தீ வீரௌ ஸார்தூ₃லவ்ருஷபே₄க்ஷணௌ। புண்டரீகவிஶாலாக்ஷௌ கட்₃கி₃தூணீ த₄நுர்த₄ரௌ॥"—நடையிலே ருஷப₄த்தின் செருக்குத் தோற்றியிருப்பது; மத்தகு₃ஜத்தின் நிமிர்ப்புத் தோற்றியிருப்பது; புலியினுடைய உறட்டுத் தோற்றியிருப்பது; ஸிம்ஹத்தினுடைய பராபி₄ப₄வநமும் தோற்றியிருப்பது. நமக்கிவையெல்லாம் நம்பெருமாள் நடையழகிலே காணலாமிறே. (கோப்புடைய) உப₄யவிபூ₄தியும் தோழிலாக வகுப்புண்டிருக்கை.

(சீரியசிங்காசனம்) ராஜாக்கள் இன்ன மண்டபத்திலே இன்ன ஆஸநத்திலே இருந்து நினைப்பிட்டதென்றால் அதையறியுமாபோலே. இங்கு 'கடற்கரையில்

A திருவாய் 9-2-3.

வார்த்தையும், திருத்தேர்த்தட்டில் வார்த்தையும்' என்னுமாபோலே ஸிம்ஹாஸநத்திலேயிருந்து நிணைப்பிட்டதென்றுல் பெண்களுக்குப் போய் சொல்லும் க்ருஷ்ணனேயாகிலும் அமோகமாய்த் தவிரவொண்ணுதிருக்கை. தூர்மாஸநம்போலே தூர்மாதிபீடமிறே. சீரிய சிங்கத்துக்குத் தகுதியான ஆஸநம் — சீரிய சிங்காசநம் ஓரணுவாகிலும் க்ருஷ்ணனுடைத்த வரிசையைக்கொடுக்கவற்றுன ஸிம்ஹாஸநமென்றுமாம். (யாம்வந்த காரியம்) இப்போது சொல்லார்கள். சிற்றம் சிறுகாலைக்கு (29) வைக்கிறார்கள். (ஆராய்ந்தருள்) "நீங்கள் என்பட்டிகோள்? என்செய்திகோள்?" என்கை. அதாகிறது— "பெண்களை எழுப்புவது, வாசல்காப்பானை எழுப்புவது, ஸ்ரீநந்தகோபருள்ளிட்டாரை எழுப்புவது, நம்மை எழுப்புவதாய்ப் போர வ்யஸநப்பட்டு வந்திகோளாகாதே" என்கை. ப்ரஜை கிணற்றில் விழுந்தால், தாயன்றே நோக்காதே பரிவவிட்டாளென்பர்கள். அவன் A எதிர்சூழல் புக்குத் திரிந்தால் இன்றிறே இவன் B "ஒழிவில் காலம்" என்பது.

23.

ஸ்வாபதேஸவ்யாக்யாநம்—இருபத்துமூன்றுர்பாட்டு

அவ:— இருபத்துமூன்றும்பாட்டு. (மாரி இத்யாதி) இப்பாட்டில், 1. "வஸாஸாந்த்வயித்வைநம்" என்கிறபடியே "பெண்காள்! என்செய்திகோள்! என்பட்டிகோள்! பெண்களை எழுப்புவது, கோயில்காப்பான் முதலானரை எழுப்புவது, நப்பின்னைப்பிராட்டியை எழுப்புவது, நம்மை எழுப்புவதாக வ்யாஜீகரமப்பட்டிகோளே, உங்களுக்கு நான் செய்யவேண்டுவது என்?" என்ன; 'பேரோலக்கமாய் ஸிம்ஹாஸனத்திலே இருந்து கேட்டருளவேணும்' என்கிறார்கள்.

வ்யா:— (மாரி இத்யாதி) வர்ஷாகாலத்தில் பர்வதகுஹையிலே பர்வதஸிகரமென்னலாம்படி தன் பேடையோடே ஏகத்ரவ்யமென்னலாம்படி கிடந்து உறங்கும் அத்தஸை தன்னிலும் க்ஷுத்ர ம்ருகங்கள் முழுக்காயாயவியலாம்படி பராபிபவநஸாமர்த்யத்தையுடைய ஸிம்ஹமானது காலமுணர்த்த உணர்ந்து ப்ரதமகடாக்ஷத்திலே தன் பேடைக்கும் அணுகவொண்ணுதபடி க்ரூரமாக விழித்து, ஜாத்யுசிதகந்தம் மயிர்க்கால்தோறும் அபிவ்ருத்தமாக நாலு பார்ஶ்வத்திலும் துல்யமாக எழுந்திருந்து. அவயவங்களைத் தனித்தனியே உதிர்த்து, முன்னும் பின்னும் ஏகரீதியாய் நீண்ட முதுகு உயரும்படி நிமிர்ந்து கர்ஜித்து குஹையில்நின்றும் வெளிப்பட்டு வருமாபோலே, நீயும் தம:ப்ரசுரமானகாலத்திலே வேதாந்தங்களில் அதில் ஏகதேஸமென்னலாம்படி கிடந்து; பிராட்டியோடே ஏகவஸ்து என்னலாம்படி கிடந்து என்னவுமாம். யோகநித்ரை பண்ணுநிற்கிற வளவிலும் தமோவித்வம்ஸநஶக்தியையுடைய நீ, 2. "காலே ஶம்ஸதி" என்கிறபடியே காலமுணர்த்த உணர்ந்து, பிராட்டிக்கும் அணுகவொண்ணுதபடி தீயதாகக் கடாக்ஷித்து 3. "ஸர்வகந்த:" என்கிற தன்னுடைய கந்தம் திருமேனியில் மயிர்க்கால்வழியேஎங்கும்பரிமளிக்கும்படி ஜகத்ஸ்ருஷ்டியிலே உத்யோகித்து, தன்னுடு அவிபக்தநாமரூபங்களாய் ஸ்வாவயவங்களான சேதநாசேதநங்களை விபக்த நாமரூபங்களாம்படி பண்ணி. இப்படி ஸ்வாவயவவிஶிஷ்டனை தான் தண்டகாரமாய் நீண்டு, பிண்டகாரமாய் நிமிர்ந்து, மஹாஸம்ப்ரமத்துடனே மஹாதிநபேண ப்ரக்ருதியில்நின்றும் வேறுபட்டு வருமாபோலே, பூவைப்பூவண்ணு!

A திருவாய் 2-7-6. B திருவாய் 3-3-1.

இருபத்துநான்காம் பாட்டு

அன்றிவ் வுலக மளந்தா யடிபோற்றி
சென்றங்குத் தென்னிலங்கை செற்றாய் திறல்போற்றி
பொன்றச் சகட முதைத்தாய் புகழ்போற்றி
கன்று குணிலா வெறிந்தாய் கழல்போற்றி
குன்று குடையா வெடுத்தாய் குணம்போற்றி
வென்று பகைகெடுக்கும் நின்கையில் வேல்போற்றி
என்றென்றுன் சேவகமே யேத்திப் பறைகொள்வான்
இன்றியாம் வந்தோம் இரங்கேலோ ரெம்பாவாய்.

பதவுரை :— அன்று — (இந்திரன் முதலானவர்கள் மஹாபலியினுல் வருந்திய) அக்காலத்தில், இ உலகம் — இந்த உலகங்களை, அளந்தாய் — (இரண்டடிகளால்) அளந்தருளினவனே! அடி — (உன்னுடைய அந்தத்) திருவடிகள், போற்றி — பல்லாண்டு பல்லாண்டு வாழ்க; அங்கு — இராவணன் இருக்குமிடத்தில், சென்று — எழுந்தருளி, தென் இலங்கை — (அவன் நகராகிய) அழகிய இலங்கையை, செற்றாய் — அழித்தவனே! திறல் — (உன்னுடைய) பலம், போற்றி — பல்லாண்டு வாழ்க; சகடம் — சகடாசுரனுனவன், பொன்ற — அழிந்துபோகும்படி, உதைத்தாய் — (அச்சகடத்தை) உதைத்தவனே! புகழ் — (உன்னுடைய) கீர்த்தியானது, போற்றி — நீடுழி வாழ்க; கன்று — கன்றாய் நின்ற வத்ஸாஸுரனை, குணிலா — எறிதடியாகக்கொண்டு, எறிந்தாய் — (விளங்கனியாய்நின்ற அஸுரன் மீது) எறிந்தருளியவனே! கழல் — (அப்போது மடக்கிநின்ற) உன் திருவடிகள், போற்றி — நீடுழி வாழ்க; குன்று — கோவர்த்தநமலையை, குடையா — குடையாக, எடுத்தாய் — தூக்கினவனே! குணம் — (ஸௌஶீல்யம் முதலான உன்) குணங்கள், போற்றி—பல்லாண்டு விளங்கவேணும், வென்று—(எதிரிகளை) ஜயித்து, பகை கெடுக்கும்—அப்பகைவர்களை அழியச்செய்யும், நின் கையில் வேல் — உன் கையிலுள்ள வேல், போற்றி — நீண்டநாள் வாழவேணும்; என்று என்று — என்று இப்படிப் பலதடவை மங்களாஶாஸனம் பண்ணிக்கொண்டு, உன் சேவகமே — உன்னுடைய வீர்யங்களையே, ஏத்தி — புகழ்ந்து, பறை கொள்வான் — பறைகொள்வதற்காக, யாம் — நாங்கள், இங்கு—இவ்விடத்திற்கு, வந்தோம்—வந்து சேர்ந்தோம்; இரங்கு—கிருபை புரியவேண்டும்.

ஸ்வா:- நீ. (உன்கோயில் நின்றுஇத்யாதி) உன்னுடைய தி3வ்யாந்த:புரத்தினின்றும் தி3வ்யாஸ்தா2நமண்டபத்துக்கு எழுந்தருளி. (கோப்புடைய இத்யாதி3) ஏழுலகும்தொழிலாக வகுப்புண்டதாய், நினைப்பிட்ட கார்யம் தலைக்கட்டும்படியான சீர்மையையுடைய ஸிம்ஹாஸனத்திலே எழுந்தருளியிருந்து, உனக்கு அநந்யார்ஹ ஶேஷபூ4தரான நாங்கள் வந்த கார்யத்தை விசாரித்து அருளவேணும்.

''ஸஞ்சரணயோக்3யமல்லாத ராத்ரி காலத்திலே அரண்மனையில் தி3வ்யாந்த:புரத்தில் நப்பின்னைப்பிராட்டியோடே ஏகதத்வமென்னலாம்படி படுக்கையிலே சாய்ந்து உறங்கும் அவ்விருப்பிலேதானே ஶத்ருக்கள் மண்ணுண்ணும்படி வீரஶ்ரீயை உடையனுய், காலமுணர்த்த உணர்ந்திருந்து அருகிருந்த நப்பின்னைப் பிராட்டிக்கும் அணுகவொண்ணுதபடி க்ரூரமாகத் திருக்கண்களை விழித்துத் திருமேனிகந்த3ம் மயிர்க்கால்வழியே பரிமளிக்க, நாலுபாடும் ஒக்க எழுந்திருந்து அவயவங்களைத் தனித்தனியே உதறி, நீண்டு நிமிர்ந்து ஸிம்ஹநாத3த்தைப் பண்ணி, பூவைப்பூவண்ணு? நீ இத்யாதி3'' ஆகவுமாம்.

மூவாயிரப்படி — இருபத்துநாலாம் பாட்டு

அவ:— இருபத்துநாலாம்பாட்டு. a தாங்கள் அபேக்ஷித்தபடியே செய்தருளக் கண்டு, வந்த கார்யத்தை மறந்து அத்திருப்பள்ளியறையில்நின்றும் திவ்ய ஸிம்ஹாஸநத்தளவும் நடக்கிறபோதை நடையழகுக்குத் திருப்பல்லாண்டு பாடுகிறார்கள். b காணுமளவுமிறே "அதுவேணும் இதுவேணும்" என்பது; கண்டால் அவனுக்குப் பரியுமித்தனையிறே.

வ்யா:— c (அன்றிவ்வுலகமளந்தாயடிபோற்றி) d தன் விபூ4தியை மஹாப3லி அபஹரிக்க நோவுபட்டிருக்கிற (அன்று;) e தன்னைப்பிரிந்து நாங்கள் ஆர்த்தியாலே நோவுபட்ட இன்று. f ஜக3த்தை மஹாப3லியினுடைய அபி4மாநத்தினின்றும் மீட்ட அன்று; g எங்களுடைய ஸ்த்ரீத்வாபி4மாநத்தினின்றும் மீட்ட இன்று. h நாட்டுக்கெல்லாம் தன் திருவடிகளே h3 தூ4ளித3ாநம் பண்ணின அன்று; i அழகையும் ஸீலத்தையும் எங்களுக்கு தூ4ளித3ாநம் பண்ணின (இன்று.)

பெ. அ. இருபத்துநாலாம்பாட்டு. (அன்று இத்யாதி3) a சீரியசிங்காசனத்து இருந்தபின்பு 'குற்றேவல்செய்கையாகிற அந்தரங்கஸ்வரூபத்தி கண்டருளவேணும்' என்று சொல்லவேண்டியிருக்க, "உன்சேவகமேயேத்திப் பறைகொள்ளுகைக்காக யாம்வந்தோம்" என்று மங்க3ளாஸாஸநமாகிற கார்யாந்தரத்தை இப்போது சொல்லுகை சேருமோவென்னும் ஸங்கையிலே, ஸிம்ஹாஸநத்தில் வந்தபின்பு சொல்லத்தக்க கார்யத்தை மறந்து இவனழகிலே ஈடுபட்டு, இதுவே தங்களுக்குக் கார்யமென்று தோற்றிச் சொல்லுகிறார்களென்று அவதாரிகை அருளிச்செய்கிறார் (தாங்கள் இத்யாதி3) b தங்கள் ப்ரயோஜநத்தை மறந்து திருப்பல்லாண்டு பாடக்கூடுமோவென்ன, — அருளிச்செய்கிறார் (காணுமளவும் இத்யாதி3)

c 'க்ருஷ்ணாநே அநுப4விக்கிறவர்கள் த்ரிவிக்ரமாபத3ாநத்தைச் சொல்லுவானென்?' என்ன; தங்களார்த்திக்கு உதவினது இந்த்3ரனுடைய ஆர்த்திக்கு உதவினாற்போலே இருக்கிறதென்றதைப் பற்றவாதல், வஸ்த்வைக்யத்தாலேயாதல். c...i "இவ்வுலகமளந்தாய்" என்ற நிர்த்தே3ஶத்தாலேதானே பூ4தகாலம் தோன்றியிருக்க, "அன்று" என்றதுக்கு ப4ாவம் அருளிச்செய்யாநின்றுகொண்டு, "அன்று" என்ற பதத்3ம் இன்று என்றத்தையும் காட்டுகையாலே இவையிரண்டுக்கும் உண்டான ஆகாரத்தை மூன்றுவகையாகக் காட்டுகிறார் (தன் விபூ4தி இத்யாதி3 வாக்யஷட்கத்தாலே) h2 'தூ4ளித3ாநம்' என்றது-தூ4ளி பர்யந்தத3ாநமென்றாய், ப3ஹுவாக ஜநங்களுக்கு வஸ்துக்களைக் கொடுக்கும்போது அதில்

சி. அ. இருபத்து நாலாம் பாட்டு. (அன்றிவ்வுலகம்) c 'க்ருஷ்ணனே அனுப4விக்கிறவர்கள் த்ரிவிக்ரமாபத3ாநத்தைச் சொல்லுவானென்?' என்னில்: தங்களார்த்திக்குதவினது இந்த்3ரனுடைய ஆர்த்திக்குதவினாற்போலே இருக்கிறதைப் பற்றவாதல், வஸ்த்வைக்யத்தாலேயாதல். b தாங்கள் வந்த கார்யத்தை விட்டு மங்க3ளாஸாஸனம் பண்ணுகிறதென்? என்ன (காணுமளவுமிறே இத்யாதி3) c அன்று-முன்பு. c...i 'அன்று' என்றது இன்றையும் காட்டுகையாலே, அன்றைக்கும் இன்றைக்குமுள்ள வாசியை முக2பே4தே3ந அருளிச்செய்கிறார் (தன்விபூ4தியை இத்யாதி3 வாக்யத்ரயத்தாலே)

i இதிறே ஸ்ரீ க்ருஷ்ணனுக்கும் ஸ்ரீவாமநனுக்கும் ஸாம்யம். k (இவ்வுலக்மளந்தரள்) l பிராட்டிமார் பூத்தொடுமாபோலே கூசிப்பிடிக்கும் திருவடிகளைக் கொண்டு காடுமோடையும் அகப்பட அளப்பதே! என்கை. m அன்று எல்லே நடந்து மஹாப₃லிபக்கல்நின்றும் பூ₄மியை மீட்டுக்கொண்டாற்போலே நடை அழகைக்காட்டி m₁ விஸ்லேஷத்தினின்றும் மீட்டுக்கொண்டாயென்கை. n (அடி போற்றி) o தாங்கள் சொல்லுமளவிற் புறப்பட்டு ஸுகுமாரமான திருவடிகளைக் கொண்டு உலாவியருளினபடி — திருவுலகளந்தருளின o₁ ஆயாஸம் போரும் என்று மங்க₃ளாஸாஸநம் பண்ணுகிறார்கள். p திருவுலகளந்தருளுகிறபோது இரண்டடியிறே இட்டது; இப்போது எங்களுக்காகப் பத்தெட்டடி இடுவதே! q திருவுலகளந்தருளின அன்று, இந்த்₃ரன் ப்ரயோஜநத்தைக் கொண்டுபோனான், மஹாப₃லி ஔதா₃ர்யம்பெற்றுப்போனான், தாங்கள் அன்று உதவப்பெருத இழவு தீரத் திருப்பல்லாண்டுபாடுகிறார்களென்றுமாம். (அடிபோற்றி) r A "உன்செவ்வடி செவ்வி திருக்காப்பு" என்னுமவர்களிறே.

---

h அ .உதிர்ந்த ரேணுக்களையும்கூட உதறிக்கொடுக்கை என்றபடி. j க்ருஷ்ண் எம்பெரு மாநந்தேற எழுந்தருளும்போது த்ரிவிக்ரமாபதா₃நத்தைச் சொல்லுகைக்கு நிமித்தம் அருளிச் செய்கிறார் (இதிறே இத்யாதி₃) K, l "இ" என்றதுக்குப் பரிவுதோற்றத் தாத்பர்யம் அருளிச் செய்கிறார் (பிராட்டிமார் இத்யாதி₃) c, m "அன்றிவ்வுலகமளந்தாய்" என்ற ஸமுதா₃யத் துக்கு ஹார்த்த₃ாபி₄ப்ராயத்தை அருளிச்செய்கிறார் (அன்று எல்லே நடந்து இத்யாதி₃) m₂ (விஸ்லேஷத்தில்நின்றும் மீட்டுக்கொண்டாய்) என்றது உபலக்ஷணமாய், ஸ்த்ரீத்வா பி₄மாநத்தினின்றும் மீட்டுக்கொண்டாயென்று கண்டுகொள்வது. உலகளக்கை என்கிற வ்யா ஜத்தாலே எல்லார்தலையிலும் திருவடிகளை வைத்தருளுகையாகிற தூ₄ளிதா₃நம் பண்ணினாற் போலே எங்களுக்கும் நடையழகை தூ₄ளிதா₃நம் பண்ணினாயென்று ப்ரீத்யநுஸந்தா₄ நமாகவும் தாத்பர்யம் கண்டுகொள்வது. இத்தால், 'அன்று' என்றதுக்குச் சொன்ன தாத்பர்யத்ரயா நு₃ணமாக ஸமுதா₃யத்துக்கு பா₄வம் சொல்லிற்றாயித்து. n, o ஸ்ரீம்ஹாஸநத்துக்கு எழுந் தருளுகிறபோது ஆயாஸப்ரஸக்தியின்றிக்கேயிருக்க, "அடிபோற்றி" என்பானென் னென்ன: அருளிச்செய்கிறார் (தாங்கள் இத்யாதி₃) o₂ (ஆயாஸம் போரும்) என்றது — ஆயா ஸத்துக்குத் துல்யமென்றபடி. p மஹாப்ரதி₂வியை அளக்கையும், இங்கு நாலடியிடுகையும் துல்யமாக ஆயாஸத்தையுண்டாக்குமோவென்னும் ஸங்கையிலே, அதிற்காட்டில் ஆதி₃க் யமேசெல்லுமென்று கோபிமார்க்குக் கருத்தாகக் கீழ்ச்சொன்னதை த்₃ருடீ₄கரிக்கிறார் (திருவுலகளந்தருளுகிற இத்யாதி₃) q கீழே க்ருஷ்ணனுக்கும் வாமநனுக்குமுள்ள ஸாம் யத்தாலே க்ருஷ்ணனுக்கு "மங்க₃ளாஸாஸநம்பண்ணினார்களாக ஒரு தாத்பர்யம் அருளிச் செய்து, க்ருஷ்ணனுக்கும் ஸ்ரீவாமநனுக்குமுள்ள த₄ர்ம்யைக்யத்தாலேதானே அவ்வபதா₃நத் துக்கு மங்க₃ளாஸாஸநம்பண்ணுகிறார்களென்று தாத்பர்யாந்தரம் அருளிச்செய்கிறார் (திரு வுலகளந்தருளினவன்று இத்யாதி₃) r பத்தெட்டடியிட்ட மாத்ரத்திலேதானே காடுமோடை மூடளந்த அபதா₃நத்திலும் விஞ்சின, ஆயாஸம் என்னக்கூடுமோ? என்ன; இவர்கள் செவ் வியைக்கண்டு அஞ்சும்படியான ப்ரேமத்தாலே சொல்லுகிறார்களென்னுமதை த்₃ருஷ்

---

i அ. j (இதிறே) என்றது அழகும், ஸௌலப்யமும். k, l "உலகம்" என்ற அசேதநஸமாதி₄க்குத் தாத்பர்யம் (பிராட்டிமார் இத்யாதி₃) c "அன்றிவ்வுலகமளந்தாய் அடிபோற்றி" என்றது தம்மை அங்கீகரிக்கைக்காக ஸ்ரீம்ஹாஸநத்திலே எழுந்தருளும்போது இந்த்₃ரனுக்காகத் திருவுலகளந்தப்போலேயிருக்கிறதென்று த்₃ருஷ்டாந்தமாதல், பூ₄தகாலத்தில் அபதா₃நமானது நமக்கே மங்க₃ளாஸாஸநம் பண்ணுகிறார்களென்றுதல். p முந்தின அர்த்த₂த்துக்குச்சேர அருளிச்செய்கிறார் (திருவுலகளந்தருளினபோது இத்யாதி₃) அதாவது:- அத்தைப்பற்றவும் இது மிகவும் ஆயாஸமென்றபடி.

---

s (சென்று இத்யாதி3) t அழகுக்கு இலக்காகாதாரை அம்புக்கு இலக்காக்கினபடி. u (சென்றங்கு) v புலிகிடந்த தூற்றிலே செல்லுமாபோலே பிராட்டியைப் பிரித்த பையலிருந்தவிடத்தே செல்லுவதே! (சென்று) w வழிப்போக்கிலே கூ கபந்த4 விராத4ாதி3களை அழியச்செய்தபடி என்றுமாம். x (அங்கு) y நின்றவிடத்தே நின்று பூவலர்ந்தாற்போலே அநாயாஸேந அளந்தவளவன்றிக்கே, A ''கானகம் படி உலாவி உலாவி'' என்னுமாபோலே, கொடிய காட்டிலே அந்தத் திரு வடிகளைக்கொண்டு நடப்பதே! என்கை. B ''எவ்வாறு நடந்தனை'' என்று வயிறு பிடிக்கை இவர்களுக்குக் குடிப்பிறப்பு. (தென்னிலங்கை) அழகியதான கோட் டையையும் அரணையும் உடைத்தாய், குளவிக்கூடுகொண்டாற்போலே ஹிம்ஸகர் சேர்ந்த தே3ஶம். (செற்றுப்) ஆ்ரிதவிரோதி4கள் தனக்கு ஶத்ருக்களென்கை z (திறல்3போற்றி) a மதிளுக்கு மதிளிடுமாபோலே மிடுக்குக்குத் திருப்பல்லாண்டு பாடுகிறார்கள். b C ''மல்லாண்டதிண்டோள் மணிவண்ணு'' என்னுமவர்களாகை யாலே. குடிப்பிறப்பாலே வந்தது. c D ''இலங்கை பாழாளாகப் படை பொரு தானுக்குப் பல்லாண்டு கூறுதும்'' என்னுமவர்களிறே.

பெ. அ. டாந்தமுகேந அருளிச்செய்கிறார் (உன் செவ்வடி இத்யாதி3) s. t தன்னழகைக்காட்டி மஹாப3லியை வஶீகரித்துச் செய்த அபத3ாநத்துக்கு மங்க3ளாஶாஸநம் பண்ணினவாறே அழ குக்கு இலக்காகாதார்விஷயத்தில் செய்த அபத3ாநம் தோற்றிற்றென்று ஸங்க3தியைக் காட்டுகிறார் (அழகுக்கு இத்யாதி3) u, v ''தென்னிலங்கை செற்றும்'' என்றபோதே அங்குச் செல்லுகை ஸித்3த4மாயிருக்க, ''அங்குச்சென்று'' என்றதுக்கு து3ஷ்கரதை தோற்றத் தாத் பர்யம் அருளிச்செய்கிறார் (புலிஇத்யாதி3) u, w அங்கு—லங்கையிலே, சென்று-கிட்டி என்று ஸப்3தா3ர்த்த2ம் திருவுள்ளம்பற்றித் தாத்பர்யம் அருளிச்செய்து, அங்குச்சென்று - லங்கையை உத்3தே3ஶித்து நடந்து என்று ஸப்3தா3ர்த்த2மாய், அழித்துக்கொண்டுசென்று என்று தாத்பர்யாந்த2ரம் அருளிச்செய்கிறார் (வழி இத்யாதி3) x, y 'அங்கு' என்றது—பு3த்3தி4ஸ்த2 வாசியாய், தூ3ண்டா3காரண்யத்தைச் சொல்லுகிறதென்று தாத்பர்யாந்த2ரம் அருளிச் செய் கிறார் (நின்றவிடத்தே இத்யாதி3) b 1. ''அங்கு3ள்ளக்3ரேண தாந் ஹந்யாம்'' என்று பரிவரான மஹாராஜர் ப4யம் தீரக்காட்டும்படியான மிடுக்குக்கு மங்க3ளாஶாஸனம் பண்ணுவா னென்னென்ன; அருளிச்செய்கிறார் (மல்லாண்ட இத்யாதி3) c அதீதகாலாபத3ாநத்துக்குப் போற்றுகிறதென்னென்ன; அருளிச்செய்கிறார் (இலங்கை இத்யாதி3)

சி, அ. t அழகுக்கிலக்கானுன் மஹாப3லி; அதுக்கிலக்கன்றிக்கேயிருக்கிற ராவணனை அம்புக்கிலக்காக்கினன் என்றபடி. u, v, w ''சென்று'' என்றதுக்கு இரண்டு தாத்பர்யம். w இரண்டாவது (வழிப்போக்கிலே இத்யாதி3) அதாவது—செல்லுகிறபோதே கூ3ராதி3களை முடித்துக்கொண்டு சென்று லங்கையை அழித்தாய் என்றபடி. x, y ''அங்கு'' என்ற பதா3த்துக்குத் தாத்பர்யம் (நின்றவிடத்தே நின்று இத்யாதி3) z திறல்-மிடுக்கு. z, a திறலுக்கு மங்க3ளாஶாஸனம் பண்ணவேணுமோ? என்ன அருளிச்செய்கிறார் (மதிளுக்கு மதிளித்யாதி3) b திறலுக்கு மங்க3ளாஶாஸனம் பண்ணினபேருண்டோ? என்ன அருளிச்செய்கிறார் (மல்லாண்ட திண்டோள் இத்யாதி3) c இலங்கை செற்றதுக்கு மங்க3ளாஶாஸநம் பண்ணினவர்களுண்டோ? என்ன அருளிச்செய்கிறார் (இலங்கை பாழாக்

A பெரியாழ் திரு 3-6-4. B பெரு திரு 9-2. C திருப்பல்-1. D திருப்பல்-3.

d (பொன்ற இத்யாதி₃) e ராவணனைப்போலே விரோதி₄ என்று இருய்க்க வொண்ணுத அபாயம். f (பொன்ற) g மாரீசனைப்போலே g₃ குற்றுயிராக்கி மேல் அநர்த்த₃ம்விளைக்க வையாதே, முடிக்கப்பெற்றபடி. (புகழ்போற்றி) தாயுங்கூட உதவாத த₃ஶையிலே அநாயாஸேந திருவடிகளாலே ஶகடாஸு₃ரனை அழித்த புகழ். (போற்றி) h ராமாவதாரத்திற்காட்டில் மங்க₃ளாஶாஸநம் பண்ணவேண்டியிருக்கை; ராமாவதாரத்துக்கு, பிதா ஶம்ப₃ராந்தகன்; ஊர் திருவயோத்₄யை; புரோஹிதர் மந்த்ரவாதி₃களான வஸிஷ்ட₂ாதி₃கள்; பிள்ளைகள் A ஆண்திறல் மீளிமொய்ம்பிலரக்கன்குலத்தைத் தடிந்தவர்கள்; 1, "இச்சா₃ம:" என்னும்படி தாங்கள் கு₃ணவான்கள்; இங்கு, மாதாபிதாக்கள் ஸாது₄ இடையர்: ஊர் இடைச்சேரி; கம்ஸாதி₃கள் எதிரிகள்; ஶ்ரீ ப்₃ருந்த₃ாவநத்தில் முளைத்தெழும் பூண்டுகளடைய ராக்ஷஸர்கள், i தமையன் ஒருக்ஷணம் தப்பில், பாம்பின்வாயிலே விழும் தீம்பன்; பூதநாதி₃களாலே பிறந்த அபாயங்களுக்கு ஓர் அவதி₄யில்லை: ஆனபின்பு, இனி மங்க₃ளாஶாஸநமொழியக் காவலில்லை.

j (கன்று இத்யாதி₃) k ஶத்ருவையிட்டு ஶத்ருவை எறிந்தால் ஸங்கேதித்து வந்து இருவருமொக்க மேல்விழுந்தார்களாகில் என்செய்யக்கடவோம்! என்று வயிறுபிடிக்கிறார்கள்; l குஞ்சித்த திருவடிகளுக்குத் திருப்பல்லாண்டு பாடுகிறார்கள். (கன்று m குணிலா) கன்றை n எறிதடியாக. குணில் - எறிதடி.

பெ.அ. d, e தென்னிலங்கை செற்றுற்போலே ஒருஶகடத்தை உதைத்தது து₃ஷ்கரமோ? இதுக்கு மங்க₃ளாஶாஸநம் பண்ணுகை என்? என்ன;— அருளிச்செய்கிறார் (ராவணன் இத்யாதி₃) f, g "பொன்ற" என்றதுக்கு நஶிக்கவென்று ஶப்₃த₃ார்த்த₂மாய், அத்தை வ்யாவர்த்ய பூர்வகமாக அருளிச்செய்கிறார் (மாரீசநை இத்யாதி₃) g₃ குற்றுயிர் – குறுகின உயிர்; அல்பப்ராணனென்றபடி. h ராமாவதார அப₃த₃ாநத்துக்கு ஒருகால் மங்க₃ளாஶாஸநம் பண்ணி, இது தொடங்கி மேலெல்லாம் க்ருஷ்ணாவதாரவ்ருத்தாந்தங்களைச் சொல்லிப் போற்றுகைக்கு நிமித்தத்தைப் பலபடியாக உபபாதி₃க்கிறார் (ராமாவதாரத்தில் இத்யாதி₃) i 2. "ஏகத₃ா து விநா ராமம் க்ருஷ்ணே ப்₃ருந்த₃ாவநம் யயௌ" என்று தொடங்கி 3. "அகி₄ருஹ்ய பதிஷ்யாமிஹ்ரதே₃ऽஸ்மிந் அநிலாஶந:" என்ற ப்ரமாணத்தைக் கடாக்ஷித்து காளியன்மடுவிலே விழுகையே பாம்பின் வாயிலே புகுருகையென்று அருளிச்செய்கிறார் (தமையன் இத்யாதி₃)

j, k கன்றையெறிந்தால் இதுக்கு "போற்றி" என்னவேணுமோ? என்ன; அருளிச்செய்கிறார் (ஶத்ருவை இத்யாதி₃) வத்ஸாஸு₃ரனும் கபித்த₂ாஸு₃ரனும் ஶத்ருக்களென்று கருத்து. l "எறிந்தாய் கரம்போற்றி" என்னவேண்டியிருக்க, கழலுக்கு ப்ரஸக்தி யேதென்ன; அருளிச்செய்கிறார் (குஞ்சித்த இத்யாதி₃) இரண்டும் ப்ரஸக்தங்களாகிலும் அடிவிடாதவர்களாகையாலே கழலிப்போற்றினார்களென்று கருத்து.

கி.அ. இத்யாதி₃)d பொன்ற—முடிய. g மாரீசநை விஶ்வாமித்ரயாக₃த்திலே ஸமுத்₃ரத்திலே பொகட்டார்; அத்தைச் சொல்லுகிறது (மாரீசநை இத்யாதி₃) l குஞ்சித்த – வளைத்த; எறியும் போது ஒரு ஶ்ரீபாத₃மெடுத்து, ஒரு ஶ்ரீபாத₃ம் குஞ்சிதமாயிருக்கும்; அத்தைச் சொல்லுகிறது (குஞ்சித்த திருவடிகள்)என்று. m, n குணில் — எறிதடி. o இந்த்₃ரனையும் தலையறுத்துப்

A திருவாய் 7-6-9.

(குன்று இத்யாதி) இதுக்கு முன்பு இந்த்ரனுக்காகச் செய்த செயல். இப்போது அவன்தான் பகையானபடி. மலையைக் குடையாக எடுத்துப் பசுக்களுக்கும் இடையர்க்கும் வந்த ஆபத்தைப் போக்கினபடி. o அனுகூலன் ப்ரதிகூலித்தால், செய்யலாவதில்லையிறே. (குணம்போற்றி) பசிக்ராஹத்தாலே கையோயுந்தனையும் வர்ஷிக்க, மலையெடுத்துக்கொண்டு நின்ற ஆந்ருஶம்ஸ்ய குணதநிற்கு மங்களாஶாஸநம் பண்ணுகிறார்கள்.

(வென்று பகைகெடுக்கும் இத்யாதி) p இவன்பக்கல் பரிவாலே, இவன் மிடுக்கைக்கண்டு கண்ணைச்சிற் படுவர் என்று பயப்பட்டு அத்தை விட்டு, 'இவ்வேலன்றே இவ்யாபாரமெல்லாம் பண்ணிற்று' என்கிறார்கள். q A "மிடுக்கிலாமையால் நான் மெலிந்தேன்" என்றிறே இவர்கள்படி. r சக்ரவர்த்தி விற்பிடிக்கப் பெருமாளும் விற்பிடித்தாற் போலே, "கூர்வேல்கொடுந்தொழிலன்"(1) என்னுமவர் மகனுகையாலே, வேலே ஆயுதம். s (வென்று பகைகெடுக்கும்) t ஆஶ்ரிதவிரோதிகளான ப்ரதிபக்ஷத்தை அறச்செய்து மாய்க்கை, (நின்கையில் வேல் போற்றி) வெறும்புறத்திலே ஆலத்தி வழிக்க வேண்டியிருக்க, அதுக்கு மேலே வேலைப்பிடிப்பதே! என்று வேல்பிடித்த கைக்குத் திருப்பல்லாண்டு பாடுகிறார்கள். B "வடிவார்சோதி வலத்துறையும் சுடராழியும் பல்லாண்டு" என்று ஆயுதங்களுக்கு மங்களாஶாஸநம் பண்ணினாறே தமப்பனார். u "கதே ஜலே ஸேதுபந்தம் தமப்பனுருக்கும் மகளுக்கும் பணி" என்று சீயர் அருளிச்செய்வர்.

பெ.அ o "அன்றிவ்வுலகமளந்தாய்" என்று தொடங்கி இவ்வளவும் - ஆஶ்ரித விரோதிகளை வென்ற ப்ரகாரங்களைச் சொல்லி மங்களாஶாஸநம் பண்ணி, அவற்றைக் காட்டிலும் ஆஶ்ரிதனுனவன் பகைத்துவருகையாலே இவ்வபதநாநத்துக்கு மிகவும் பரியவேணுமென்று தாத்பர்யத்தை அருளிச்செய்கிறார் (அநுகூலன் இத்யாதி) ஒருகால் தமோகுணத்தால் ப்ரதிகூலித்தாலும் பொறுக்கவேணுமென்று கருத்து.

p இவ்வளவும் சொன்ன அபதநாநங்களால் மிடுக்குத் தோற்றுகையால் அந்த நிகனத்துக் கண்ணைச்சில் வராமைக்காக, "இவ்வபதநாநங்கள், இவன் மிடுக்காலல்ல, வேலாலே" என்று அந்யத்ர ஆரோபித்து, அதுவும் இவனதாகையாலே அதுக்கு மங்களாஶாஸநம் பண்ணுகிறார்களென்கிறார் (இவன் பக்கல் இத்யாதி) s, t "பகையை - வென்று- கெடுக்கும்" என்று அந்வயம் திருவுள்ளம்பற்றி, வெல்லுகைக்கும் கெடுக்கைக்கும் அர்த்தம் அருளிச்செய்கிறார் (ஆஶ்ரிதேத்யாதி)

கி.அ.போகடாதே வைத்ததென்? என்ன அருளிச்செய்கிறார்(அநுகூலன் ப்ரதிகூலித்தால் இத்யாதி) p (இவன் பக்கல் பரிவாலே) என்ற பதத்துக்குத் தாத்பர்யம் — கீழெல்லாம் அவனுக்கு மங்களாஶாஸனம் பண்ணிக்கொடுவந்து இப்போது வேலுக்கு மங்களாஶாஸனம் பண்ணுவானென்? என்ன, இவனுடைய மிடுக்கைச் சொன்னால், இப்படி பலிஷ்டனோ? என்று பிறர் கேட்டால் த்ருஷ்டிதோஷமாமென்று 'இவன் ஒன்றும் செய்தானல்லன்; இவ்வேலே எல்லா வ்யாபாரங்களும் செய்தது' என்று அந்யதாகரித்து அருளிச்செய்கிறார் என்றபடி. q அப்படி அந்யதாகரித்த பேருண்டோ? என்ன (மிடுக்கிலாமையால் இத்யாதி) அதாவது A "கிடக்கில் தொட்டில் கிழிய உதைத்திடும்" என்கையாலே, அவனுடைய பலத்தைச்சொல்லி A "மிடுக்கிலாமையால்" என்கையாலே அது அவனுடைய ஸ்வபாவமன்று; நம்முடைய பலஹானியாலே அல்பவ்யவஹாரமும் அதிகமாகத் தோற்றுகிறதென்று மறைத்துச் சொன்னாறே" என்றபடி. r க்ருஷ்ணனுக்கு வேலுண்டோ? என்ன (சக்ரவர்த்தி விற்பிடித்த இத்யாதி) u (கதே ஜலே ஸேதுபந்தம்) என்றது பூதகாலங்களில் அபதா

A பெரியாழ் திரு 1-1-9, B திருப்பல் 2.

v (என்றென்று) w இதுதானே ப்ரயோஜநமென்கை. 1. "தே₃ஹி மே தத்₃தா₃மி தே" என்னுமவர்களன்றே. ஸம்ஸாரிகள் புறம்பும் கொள்ளுவர்கள், இவன் பக்கலிலும் கொள்ளுவர்கள்; இவர்கள் புறம்பும் கொள்ளார்கள், இவன் பக்கலிலும் கொள்ளார்கள். A "ஒன்று நூறுயிரமாக் கொடுத்துப் பின்னுமாளுஞ் செய்வன்" என்று - அவனுக்கும் தான் கொடுத்து, "ஆந்தனையும் கைகாட்டி"(2) என்று புறம்பும் தானே கொடுக்கும் என்கை. (உன் சேவகமேயேத்திப் x பறை கொள்வான்) உன்னுடைய வீர சரிதமே ஏத்தி y உன்னை அனுப₄விக்கைக்காக; B"உன்னுடைய விக்கிரமமொன்றெழியாமலெல்லாம், என்னுடைய நெஞ்சகம்பால் சுவர்வழி எழுதிக்கொண்டேன்" என்னுமவர்களிறே.

(இன்று) z இசைவுபிறந்த இன்று என்னுதல்; a நீ உறங்க நாங்கள் உறங்காத இன்று என்னுதல். b நென்னேற்று வந்தோமோ? ஊராக இசைந்த இன்று என்றுமாம். c (யாம்) d பு₃ந்து₄க்களாலே நெடுங்காலம் நலிவுபட்ட நாங்கள். (வந்தோம்) e வ்ருத்₃தை₄கள் உறங்க, நாங்கள் ஆற்றுமையாலே வந்தோம்; f எங்களிழவுகளெல்லாம் உன்னுலே தீரும். g (யாம் வந்தோம்) h எங்கள்வரவு உனக்குப் புண்ணியிருக்க, நாங்கள் ஆற்றுமையாலே வந்தோம். i (இரங்கு) எல்லாம்பட்டாலும் அவனிரங்கினுலல்லது காரியகரமாகாமை. j அத்தலைக்கு இரங்குகை ஸ்வரூபம்; 'அவனுக்கு என்வருகிறதோ!' என்றிருக்கை-இத்தலைக்கு ஸ்வரூபம். k தாங்கள் பண்ணின மங்க₃ளாஶாஸநம் ஸாத₄நமன்று என்று இருக்கிறார்கள். 24,

---

பெ.அ. v. w "என்றுஎன்று" என்ற வீப்ஸைபாலே—இதுவே இவர்களுக்கு யாவதா₃த்ம பா₄வியென்று தோன்றுகையாலே, இதுக்குப் பலாந்தரமில்லை என்று தோன்றுகையால் பலித்த அர்த்த₂த்தை அருளிச்செய்கிறார் (இதுதானே இத்யாதி₃) x. y 'பறைகொள்வான்' என்றதுக்கு ஸ்வாபதே₃ஶாநுகு₃ணமாக ஶப்₃த₃ார்த்த₂ம் (உன்னையனுப₄விக்கைக்காக) என்றது.

z ஸ்வாபதே₃ஶத்திலே அருளிச்செய்கிறார் (இசைவுபிறந்த இத்யாதி₃) b (நென்னேற்று வந்தோமோ?) என்றது—கே₃பவ்ருத்₃த₄ர் ஸம்மதியாத நேற்று வந்தோமோ? என்றபடி. c, d, e, f, h "யாம்" என்றதுக்கு நாலு] தாத்பர்யம் – நிலவறைகளிலே நலிவுபட்ட நாங்கள் என்றும், வ்ருத்₃தை₄களைப்போலேயன்றிக்கே ஆற்றுமை மிகுந்த நாங்கள் என்றும், விஶ்லேஷது₃:க்க₃ம் தீருகைக்கு உன்கைபார்த்திருந்த நாங்கள் என்றும், உன்னைப் புண்படுத்தும்படி வரவையுடைய நாங்கள் என்றும்; இவற்றை அடைவே அருளிச்செய்கிறார் (பு₃ந்து₄க்களாலே இத்யாதி₃) 24,

---

சி.அ. னங்களுக்கு உத்தரகாலத்திலே வரவிளைகிறதுக்கு த்₃ருஷ்டாந்தம். v, w வீப்ஸைக்குத் தாத்பர்யம்(இதுதானே ப்ரயோஜனமென்கை)என்று. a(நீ உறங்க நாங்கள் உறங்காத இன்று) என்றதுக்குந் தாத்பர்யம்—ரக்ஷகனை நீ உபேக்ஷித்திருக்க நாங்கள் ஸாபேக்ஷராய் வந்த இன்று என்றபடி. g, h "இன்றுயாம் வந்தோம்" என்கிற பத₃ங்களுக்குத் தாத்பர்யாந்தரம் (எங்கள் வரவு இத்யாதி₃). i, j கீழே "போற்றி போற்றி" என்றதெல்லாம் 'இரங்கு' என்றதுக்கு ஸாத₄நம்போலே இருக்கிறதே என்ன (அத்தலைக்கு இத்யாதி₃) k இதுக்கு விவரணம் (தாங்கள் பண்ணின இத்யாதி₃). 24.

A நாச்-திரு 9-7, B பெரியாழ் திரு 5-4-6.

ஆருயிரப்படி—இருபத்து நான்காம்பாட்டு

அவ:— இருபத்துநாலாம்பாட்டு. (அன்றிவ்வுலகம்) ஒருநாள் அர்ஜுநன் ''உபயஸேனைக்கும் நடுவே தேரை நிறுத்து'' என்று சொல்ல, அப்படியே செய்தவன், இத்தனை பெண்கள் திரண்டு ''இங்ஙனே போந்தருளி'' (23) என்றால் அது செய்யாதிருக்கமாட்டானிறே; தாங்கள் அபேக்ஷித்தபடியே திருப்பள்ளியறையில்நின்றும் திவ்ய ஸிம்ஹாஸநத்தளவும் நடந்துபோரத் தொடங்கினால்; பிராட்டி கட்டுவாசலளவுந் தொடர்ந்து மங்களாஶாஸநம் பண்ணினாற் போலே, நப்பின்னைப் பிராட்டியும் தொடர்ந்து ஏத்துமிறே. அவனைக் காணுமளவுமிறே 'இங்ஙனே போரவேணும், எழுந்தருளியிருக்கவேணும், வந்த கார்யமாராய்ந்தருளவேணும், அது வேணும், இது வேணும்' என்று பல தேவைகளைச் சொல்லி அலக்கலாவது. தண்டகாரண்யத்தில் ரிஷிகள், கண்டவாறே ராக்ஷஸபரிபவங்களை மறந்து மங்களாஶாஸனத்திலே மண்டினார்களிறே; அப்படியே இவர்களும் பெரியாழ்வார் படியாயாய்த்து. இங்ஙனே போந்தருளுகிறபோது பின்னை நின்று நடந்த நடையழகு கண்டு மாறி இட்டஇட்டவடிதோறும் மங்களாஶாஸநம் பண்ணிக்கொண்டு வந்து, திவ்ய ஸிம்ஹாஸநத்திலேயிருந்த வநந்தரம் ''பறை என்று ஒரு வ்யாஜத்தையிட்டு இங்குத்தை மங்களங்களை ஆராஹித்து மங்களாஶாஸநமே பரமப்ரயோஜநமாக வந்தவர்களன்றோ நாங்கள்'' என்கிறார்கள். ''இங்ஙனே போந்தருளி'' (23) என்று தாங்கள் சொல்லத் தங்களுக்காக நப்பின்னைப்பிராட்டியோடேகூட சிரிய சிங்காசனத்திலே யிருந்தவள்விலே ஆலவட்டக் காற்றிலே அத்தவாளத்தலை மேலேபறக்க, பாதபீடத்திலே நீட்டியருளின திருவடிகளையும் மடித்திட்ட திருவடிகளையுங்கண்டு, திருமுலைத் தடங்களிலும் திருக்கண்களிலும் ஒற்றிக்கொண்டு, தங்கள் கரஸ்பர்ஶம் பொறாத கன்றும்படியான மார்த்தவத்தைக்கண்டு, 'இப்படி ஸுகுமாரமான திருவடிகளைக்கொண்டு இங்ஙனே நடக்கச் சொல்லுவோமே! திருவடிகள் வாங்கிவிடுகிறபோது திருவுலகளந்தருளினபடிக்கு ஸ்மாரகமாயிருந்தது; அன்று அளக்கப்பண்ணினவர்களோடொத்தோமிறே இன்று நடக்கப்பண்ணின நாங்களும்; A ''நடந்தகால்கள் நொந்தவோ'' என்றுபிடித்து நாங்கள் சொல்லுமளவில் புறப்பட்டு உலாவியருளினபடி, திருவுலகளந்தருளின ஆயாஸத்தோபாதிபோருமே!' என்று —' அன்றிவ்வுலகமளந்தாயடி போற்றி'' என்கிறார்கள்.

வ்யா:— (அன்றிவ்வுலகமளந்தாய் — இன்று யாம்வந்தோம்) அன்றுமின்று காணும் இவர்களுக்கு வயிற்றெரிச்சல். இவர்களுக்கு இரண்டு காலமும் ஒரு காலமாய்த் தோற்றுகையாலே, ''அன்று, இன்று'' என்கிறார்கள். (அன்று) ஆர் நோவுபட நோற்கத்தான் இச்செயல் செய்தது? நோற்றுக் கூடுவாரையும் விலக்குமவர்கள் தலையிலேயிறே திருவடிகளை வைக்கிறது. (அன்று) தன்னதான

A திருச்சந்த 61.

விபூ₄தியை அஸு₃ரனுன மஹாப₃லி நெருக்கித் தன்னதாக்க, நோவுபட்ட அன்று; அவனபி₄மாநத்தில்நின்றும் மீட்டுத் தன்காற்கீழே இட்டுக்கொண்ட அன்று; எங்கள் ப₃ந்து₄க்களும் எங்களை உன்னுடனே சேர்க்கவொட்டாதே நாங்களும் ஆர்த்தைகளாய் அபி₄மாநம் கால் கட்டி வ்ராதிருக்க, எங்களுடைய ஸ்த்ரீத்வா பி₄மாநத்தையும் ப₄ங்₃நமாக்கி உன்காற்கீழே இட்டுக்கொண்டு உன்வடிவழகையும் ஸீலத்தையும் எங்களுக்கு தூ₄ளித₃ானம் பண்ணின அன்று.

(இவ்வுலகம்) திருவடிகளின் மார்த்த₃வத்தையும், காடுமோடையுமான பூ₄மியினுடைய காடி₂ந்யத்தையும், இங்கு வர்த்திக்கிறவர்களுடைய வன்மையையும் அநுஸந்தி₄த்து, ''இவ்வுலகம்'' என்கிறார்கள். ஸீலவயோவ்ருத்தாதி₃களால் துல்யரென்று கவிபாட்டுண்டார் கடக்க நிற்கவேண்டும்படி வடிவுக்கு இணையில்லாத பெரியபிராட்டியாரும், எடுத்துக்கழிக்கைக்குமொப்பில்லாத ஸ்ரீபூ₄மிப்பிராட்டியும், ''நாம பிடிக்கை ஸாஹஸம்'' என்னும்படியாய், பூத்திதாடுமாபோலே கூசிப் பிடிக்கும் மெல்லடிகளைக்கொண்டு இவ்வெவ்விய நிலத்திலே வ்யாபரிப்பதே! (அளந்தாய்) A ''பிரமாணித்தார் பெற்ற பேறு'' என்று — உபகாரஸ்ம்ருதி பண்ணுதவளவேயன்றிக்கே உகக்கவுமறியாத பூ₄மியைத் திருவடிகளின் கீழே இட்டுக்கொள்வதே!

(அடிபோற்றி) 'அக்காலத்தில் சிலர் இழவோடே போனார்கள்; சிலர் B ''அப்பனறிந்திலன்'' என்று ஆணையிடத் தொடங்கினார்கள்; சிலர் ப்ரயோஜநங் கொண்டு போனார்கள்; அப்போது பரிந்து காப்பிட்டாரில்லை' என்கிற இழவு தீ₃ர்ந்திருக்கிறார்கள். (அடிபோற்றி) C ''திசை வாழியெழ'' என்கிற அப்போதைப் பல்லாண்டிசைக்கை. D போற்றியென்றேற்றெழுவாரோபாதியிறே ப்ரயோஜ நாந்தரபரராகையாலே. (அடிபோற்றி) E ''மன்னன்றன் தேவிமார்கண்டுமகிழ் வெய்த'' என்று — கூத்துக்கண்டு சிரிப்பாரைப்போலே F மாயக்கூத்துக்கண்டு மகிழ்ந்து போனார்கள். G ''செவ்வடிசெவ்வி திருக்காப்பு'' என்னும் குடிப்பிறப் பாலே ''அடிபோற்றி'' என்கிறார்கள். திருவுலகளந்தருளினவிடத்தில் H சிவந்த தன் கையினைத்துமார I ''சென்னி மேலேறக் கழுவினன்'' என்று ப்₃ரஹ்மருத்₃ராதி₃கள் அநுவர்த்திக்கும்படி ஐஸ்வரமான செயல்களைச்செய்த அவதாரமாகை பாலும், J ''அங்கேநின்று'' என்னும்படி நின்று, K இரண்டாமடியிலே தாவடி யிட்டு வருத்தமறச்செய்ததாகையாலும் அத்தனவயிறெரிதலில்லையிறே. ராமாவ தாரத்தில் தே₃வத்வம் கலசாதபடி ப்₃ரஹ்மருத்₃ரர்கள் ''நாராயணன்'' என்றாலும் மனிசுக்கு இசையுமிடமாகையாலும், L ''கானமருங்கல்லதர்போய்'' என்னும்படி து₃ஷ்டஸத்வ பூ₄யிஷ்ட₂மான வெங்கானத்தூடே ஸஸ்த்ராஸ்த்ரங்கள்பட வ்யாபரித்த விடமாகையாலும் ராமாவதாரத்தில் செய்த செயலுக்கு வயிறெரிகிறார்கள்.

A இர-திருவ 61, B பெரியாழ் திரு 1-8-8, C திருவாய் 7-4-1 D திருவாய் 9-1-3 E பெரியாழ் திரு 2-5-9, F திருவாய் 8-5-1, G திருப்பல் 1, H இர-திருவ 78 I நான் திருவ 9, J திருவாய் 5-10-9, K பெரியாழ்திரு 2-10-7, L பெரியதிரு 11-5-9.

ஜ்ந்மஹித்₃த₄மிறே. A உலதமளந்த பொன்னடிக்குக் காப்பிட்டவோபாதி B காடுறைந்த பொன்னடிக்குக் காப்பிடத் தேடுகிறவர்களுக்கு அஞ்சாமைக்குத் திறலைக்காட்டினன்; அத்திறல்தனக்கும் அஞ்சத்தொடங்கினர்கள். தோளிலழகுக்கு காப்பிடப்புக, மல்ல டர்த்த திண்மையைக்காட்ட, அதுதனக்கு வயிறெரிந்தாற்போலே. (திறல்போற்றி) C ''கல்லாதவரிலங்கை கட்டழித்த'' D ''தேவனே தேவனுவான்'' என்று மண்டோ த₃ரியுள்ளிட்டாரைப்போலே தத்வநிர்ணயம் பண்ணுதல், E ''தன்வில் அங்கை வைத் தான்'' F ''எந்தன் தனிச்சரண்'' G ''கூரம்பனல்லால்'' H ''மற்றிலேன் தஞ்ச மாகவே'' என்று ரக்ஷகத்வபு₃த்₃தி₄நடத்தல், I ''தென்னிலங்கையீடழித்த தேவர்க்கு'' J '' என்னையும் உளள் என்மின்கள்'' என்று பே₄க்₃யதாபு₃த்₃தி₄ நடையாடி இழவுசொல்லிவிடுதல் செய்யாதே தங்களை ரக்ஷகராக நினைத்துப் பரி கிருர்கள். சக்ரவர்த்தித்திருமகன் த₃ஶரத₂னிலும் விஞ்சும்படி பா₃ல்யாவஸ்தை₂யிலே ஆயுத₄ப்ரயோகம்பண்ணி விஶ்வாமித்ராதி₃களோடே ஸஸ்த்ராஸ்த்ரமந்த்ரங்கள் ஸிக்ஷித்துச் சமையவளர்ந்தபின்பு செய்த செயலிறே லங்கையை அழித்த செயல்.

K ''பிறந்த எழுதிங்களில்'' என்கிறபடியே - பிறந்து மறுபத்துக்கழிந்த வளவிலே எதிரிகளுண்டென்று அறிகைக்குடலான ஜ்ஞானமுமின்றிக்கே, ஆயுத₄ம் பிடிக்கவுமறியாத தொட்டில் பருவத்தில் செய்த செயலிறே ஶகட₃ப₄ங்க₃ம். ராவணன் நேரே ஸத்ருவாய்த் தோற்றினனிறே; அப்படியன்றிக்கே ப்ரச்ச₂ந்நஶத்ருவாகை யாலே ''கள்ளச்சகடம்'' (6) என்றத்தை அறிந்து முற்பட்டபடிக்கு வயிறெரிந்து பரிகிறார்கள். (பொன்றச்சகட முதைத்தாய்) ஶகடம் பொன்ற-முடிய, ஸஹர்ப்பணகீ₂ யையும் மாரீசனையும்போலே குற்றுயிரோடே விட்டு, பின்பு அநர்த்த₄ம்விளையும்படி இளம்பூடாதே, தோற்றரவிலே ஶகடாஸுரனை முடித்துவிட்டபடி. (உதைத்தாய்) மூலவரவு தாழ்த்துத் தொட்டிலே உதைத்த திருவடிகளுக்கு இலக்காய் முடியும்படி பண்ணின அநாயாஸம். (உதைத்தாய்) பெருமாள்கைக்கு வில்பிடித்த தழும்பு போலே க்ருஷ்ணன் திருவடிகளுக்குச் L சாடுதைத்த தழும்பு; M ''தழும்பிருந்த''.

புகழ்) பெற்ற தாயுங்கூட உதவாத ஸமயத்திலே, பெரும்படையாண்டு செய்த செயல்களைக் காற்கூருக்கிவிட்டபடி, N ''திருக்காலாண்ட பெருமானே'' என்கிற படியே. (புகழ்போற்றி) O ''நின்சிறுச் சேவகமும்'' என்று. *காரைமூரிருகிக் கன்னிப் போருக்குக் காப்பிடவேணுமிறே. P ''அருளின் பெருநசையால்'' என்று ஆண் பிள்ளையென்று ஆசைப்படுவார், Q ''என்னை நிறைகொண்டான்'' என்று அடக்கங் கெட்டு மடலெடுக்கத் தேடுவார், R ''உறுக்கிவ் நிமிர்த்தீர்'' என்று ஊடுதலாய்ப் போனார்கள் பெண்கள்; இவர்கள் அச்செயலுக்கு வயிறெரிந்து பரிகிறார்கள்.

A பெரிய திரு 5-8-9. B பெரியதிரு 11-5-1. C நான்-திருவ53. D திருமாலை-7. E முதல் திருவ 59. F பெரியதிரு 3-10-6. G நான்-திருவ. H திருவாய் 3-6-8. I பெரியதிரு 11-3-1. J திருவாய் 6-1-10. K பெரியதிரு 10-7-9. L முதல் திருவ 100. M முதல் திருவ 23. N திருவாய் 6-9-4. O திருவாய் 5-10-3. P திருவாய் 2-1-8. Q திருவாய் 5-3-3. R பெரியதிரு 10-8-3. *(பா) காலை மூரித்திருகின.

''பசலைத்தனத்தில்செய்த செயல் என்று விடலாம் அது; பருவம் நிரம்பிச் செய்தசெயலோதான் கணக்குவழக்குப் பட்டிருக்கிறது?'' என்று அதுக்குவயிறெரிகிறார்கள். (கன்று குணிலாவெறிந்தாய்) ஸகடாஸுர நிரஸநம் பண்ணின வயிறெரித்தல் அல்லகிடாய்; கன்றுய் நின்ற அஸுரனைக்கொன்ற திட்பு பூமியெல்லாம் ப்ரகாசிக்கும்படி செய்தாயென்று வயிறெரியும் செயலிறே. A ''வழக்கன்றுகண்டாய் வலி சகடஞ்செற்றாய் - குழக்கன்றுதீவிளவின் காய்க்கெறிந்த தீமைதிருமாலே பார்விளங்கச் செய்தாய்பழி'' — மார்பிலிருக்கிறவர்களோடு மண்ணில் கிடக்கிறவர்களோடு வாசியற ''பழிகேடன்'' என்று சொல்லும்படியிறே செய்த தீம்பும்; ஸகடாஸுரபங்கமும் பண்ணிச்செய்த தீம்பு. B [திரிதூற்சகடம் சினமழித்துக் கன்றால் விளங்காயெறிந்தான்] ''ஓரஸுரன் விளாவாய் நிற்க, ஓரஸுரன் கன்றாய் நிற்க, சத்ருவையிட்டு சத்ருவை எறிந்தால் ஸங்கேதித்து இருவருமொக்க மேல்விழுந்தார்களாகில் என் படக்கடவோம்'' என்று வயிறுபிடிக்கிறார்கள். C ''என்றுமென்பிள்ளைக்குத் தீமைகள் செய்வார்கள் அங்ஙனமாவர்கள்'' என்று தாயாருட்பட வயிறுபிடிக்குமதிறே. (குணில்) எறிகருவி, (குணிலாவெறிந்தாய்) எதிரிகளையிட்டு எதிரிகளை முடித்தபடி.

(கழல்போற்றி) விளாவை இலக்காகக்குறித்துக் கன்றை எறிகருவியாகக் கொண்டு எறிவதாக இச்சித்து நடந்தபோதைக் குஞ்சித்த திருவடிகளில் வீரக் கழலும் அகவாயில் சிவப்பையுங்கண்டு காப்பிடுகிறார்கள். (கழல்போற்றி) D ''கன்றினுல் வீழ்த்தவனே'' என்று பக்திபண்ணுதல். E ''காயுதிர்த்தார்தாள்பணிந்தோம்'' என்று - விரோதி, நிவர்த்தகமாகப் பற்றுதல். F ''கனைகழல்காண்பதற்கு'' என்று - யமவச்யதைக்கு நிவர்த்தகமென்றிருத்தல் செய்யாதே மங்களாசாஸனம் பண்ணுகிறார்கள். (அடிபோற்றி, கழல்போற்றி) நீட்டினதிருவடிகளுக்கும் குஞ்சித்த திருவடிகளுக்கும் G சூழ்ந்திருந்து பரிவாரைப்போலே பரிகிறார்கள்.

''விரோதிநிரஸநம் பண்ணித் தன்னை நோக்குகைக்கு அடைவுகெட்டிருந்தால் அநுகூலர் விரோதிகளாக ஆச்ரிதரக்ஷணம் பண்ணுமதோ சால அடைவுண்டாயிருக்கிறது?'' என்று அதுக்குப் பரிகிறார்கள்—(குன்று குடையாவெடுத்தாய்) விரோதிகளுக்குக் கன்றெடுத்த மாத்ரம்போலேகாணும் கன்று நோக்குகைக்குக் குன்றெடுத்தது. H ''கன்றுகொண்டு விளங்கனியெறிந்து ஆனிரைக்கழிவென்று மாமழை நின்று காத்துகந்தான்'' என்னக்கடவதிறே. கீழெல்லாம் இந்த்ரனுக்கு சத்ருவானவர்கள் நலிந்த நலிவு பரிஹரித்தபடிக்கு வயிறெரிந்தார்கள்; இப்போது அவன்றன் நலிந்த நலிவு பரிஹரித்தபடிக்கு வயிறெரிகிறார்கள். அஸுரர்களோடு தேவர்களோடு வாசியில்லையிறே பகவச்சேஷமான வஸ்துவைத் தங்களதாக நினைத்திருக்கைக்கு ஸர்வயஜ்ஞபோக்தாவாகத் தன்னை அருளிச்செய்தானே. தனக்கிட்டசோற்றை அமுது செய்தால் ஸ்வதந்த்ரபுத்தி பண்ணி, பண்டு புஜித்தவிடமுள்ளபடி ஆத்மாபஹாரத்தோடொவ்வாநிற்க, அதீயபுத்தி பண்ணுதே ஸ்வதந்த்ரபுத்தி பண்ணி நலியத்தேட மலையைக்குடையாகவெடுத்து, பசுக்களுக்கும் இடையருக்கும் வந்த ஆபத்தைப் பரிஹரித்தபடி.

A இர-திருவ 19. B பெரியதிரு 8-6-9. C பெரியாழ் திரு 3-3-7. D இர்-திருவ 100. E பெரியதிருவ 54. F முதல்திருவ 87. G திருப்பல் 12. H பெரியதிரு 9-10-7.

(குணம்) ''அநுகூலனனவனுக்கு ப்ராமாதி₃கமாகப் புகுந்ததன்றே? அநந்த ரத்திலே வந்து கோ₄விந்தா₃பி₄ஷேகம் பண்ணவன்றே புகுகிறன்; பெரும்பசியாலே வந்த கோபத்தாலே வர்ஷித்தானகில் கைநொந்தவாறே விடுகிறன், பெரும்பசியிலே இவனை நலிந்தால் நாமே உண்பதுகொண்டார் உயிர்கொண்டு தலையை அறுக்கவோ? அவன் கைசலிக்குந்தனையும் கடகிட்டுக்காப்போம்'' என்று அவனைத் தலையழியாதே மலையையெடுத்து ரக்ஷித்தது ஆந்ருஶம்ஸ்யத்தாலே. அந்த கு₃ணத்துக்குப் போற்றி, A ''பாயும் பனிமறுத்தபண்பாளா'' B ''சீர்கற்பன்வைகல்'' என்று அறிவுடைபார் நாள்தோறும் கற்பதொரு கு₃ணமிறே. (குணம்போற்றி) C கொடியேறு செந்தாமரைக் கைவிரல்கள் கோலமழிந்ததோ வாடிற்றே என்று பார்த்துப் பரியத்தேட, அவ்வளவு போகவொட்டிற்றில்லை மலையெடுத்த கு₃ணந்தான். (குணம் போற்றி) D ''என்றனக்கோர் துணையாளனுகாயே'' என்று நொய்யதொருமலையைப் பொகடுவித்து, கனவிது, இரண்டு மலையைக் கையிலே கொடாதே மலையையெடுத்த சுமாகு₃ணத்துக்குக் காப்பிடுகிறார்கள்.

வர்ஷம் விட்டவாறே மலையைப்பொகட்டு வேலைப்பிடிக்குமித்தனையிறே. க்ருஷ்ணன் பசுக்களின்பின்னே திரியாநின்றுல் ஸிம்ஹம் வந்தாலும் வேலாலே குத்தியெடுத்துப் போக்குமித்தனையிறே. அதுக்கெடுத்த வேலுக்குப் பரிகிறார்கள். ''எல்லா கு₃ணங்களையும் ஒருவ்யக்தியிலே சொன்னால் கண்டுணராது'' என்று வேலிலே அசலிட்டுச் சொல்லுகிறார்கள் வெற்றியை. (வென்று பகைகெடுக்கும்) ஶத்ருக்களை வென்று ஓட்டக்கடவதாயிருக்கும். (நின்கையில்வேல்) சக்ரவர்த்தியும் வில்பிடித்து, பரிகரமும் வில்பிடித்து, பிள்ளைகளும் வில்பிடித்தாற்போலே, ஶ்ரீநந்த₃கோபரும் இடையரும் பிள்ளைகளும் வேல்பிடித்தாய்த்துத் திரிவது. ''கூர்வேல் கொடுந் தொழிலன்'' (1) E ''வேலைப்பிடித்தென்னைமார்கள்''. (நின்கையில்வேல்) வெறும்புறத்திலே ஆலத்திவழிக்க வேண்டியிருக்க, அவ்வழகுக்குமேலே வேலைப்பிடித்த அழகு. (கையில்வேல்) எதிரிகள்மேலே படவேண்டா, பிடித்தபிடியிலே உகவாதாரை முடிக்கும். (நின்கையில்வேல்) தன்னை உணராதே அஸத்யப்ரதிஜ்ஞனாய்ச் சிறினபோது காணும் ஐந்மாந்தரம் மேலிட்டுத் திருவாழியை எடுப்பது. (வேல்போற்றி) ஈஶ்வரனிக்காணிலிறே F ''ஆழியும்பல்லாண்டு'' என்பது. பெருமாளிக்காணிலிறே G ''சார்ங்கமென்னும் வில்லாண்டான் தன்னை-பல்லாண்டு'' என்பது. (நின்கையில்வேல் போற்றி) H வெற்புடைய நெடுங்கடலுள் தனிவேலுய்த்த வேள்முதலாக வென்றவன் கையில்வேலிறே; ஆகையாலே பரிகிறார்கள். (என்றென்று) ப்ரயோஜநம் பெறுமளவுஞ்சொல்லி பின்னை அது மாறுகிறதன்றே; ப்ரயோஜநத்துக்கு ப்ரயோஜநம் வேணுமோ? என்று இதுதானே பூல்மாக இருக்குமவர்களிறே.

A முதல்-திருவ 86, B திருவாய் 1-8-4, C பெரியாழ் திரு 3-5-10, D பெரியதிரு 3-6-5 E நாச் திரு 3-5, F திருப்பல் 2, G திருப்பல் 12, H திருநெடு 7.

(என்றென்று) A ''பல்லாண்டு'' என்றுல் பின்னையும் A ''பல்லாண்டு'' என்னு மித்தனையிறே; போற்றியென்று ப்ரேமமடியாக வந்த கலக்கத்துக்குத் தெளிவுண் டாகிலிறே இச்சொல்லு மாறுவது; அங்குப்போனுலும் B சூழ்ந்திருந்திறே. C ''வெம்மா பிளந்தான்றன்னைப்போற்றி'' என்னக்கடவதிறே. ''அடிபோற்றி, திறல் போற்றி, புகழ்போற்றி, கழல்போற்றி, குணம்போற்றி, வேல்போற்றி'' என்று இவர்கள் நாக்குக்கு இடும் ஷட்ரஸமிருக்கிறபடி. (உன்சேவகம்) வீர குணத்துக்குப்போலே காணும் இவர்கள் தோற்பது. பந்துநிரோதத்தாலே தளர்ந்த அபலைகளுக்கு அவனுடைய விஜயமிறே பலஹேது. (என்றென்றுன் சேவகம்) D ''உன்னுடைய விக்கிரமம் ஒன்றெழியாமலெல்லாம்'' என்னும்படியே, (உன்சேவகமே—யேத்தி) வேறொருவருடைய சேவகம் கலந்தேத்தோம், திரிவிக்கிரமனையும் பெருமானையும் கலந்தன்றே ஏத்திற்று. அது அவதாராந்தரத்தின் செயலென்றிருக்கிறார்கள். இவன் பால்யத்தில் செய்ததோபாதி பூர்வாவஸ்தையும்என்றிருப்பர்கள். E ''சிலை யொன்றிறுத்தாய்திரிவிக்கிரமா திருவாயர்பாடிப்பிரானே'' F ''வருகவருகவருகவிங்கே வாமனநம்பீவருக இங்கே கரியகுழல் செய்யவாய் முகத்துக் காகுத்தநம்பீ வருக விங்கே'' என்றுதாயாருட்பட க்ருஷ்ணனையழைப்பது இப்படியேயிறே. இவனுக்கு நாள் ஸ்ரீவாமனன்பிறந்தநாளாக்கினுள்; எட்டுமாஸம் வயிற்றிலேயிருந்த இவனை G ''பன்னிரு திங்கள் வயிற்றில்கொண்ட'' என்றுள். ''என்மகன் பால்யத்தை மஹாபலி பக்கலில் சென்று கேட்டுக்கொள்'' என்றுள்; H ''சார்ங்கபாணி தளர்நடை நடவானே'' என்றுள்; I ''மணிக்குறளனே தாலேலோ வையமளந்தானே'' என்று தாலாட்டினுள்; இவர்கள் ''ஓங்கி யுலகளந்த'' (3) என்றார்கள்; ''சார்ங்கமுதைத்த'' (4) என்றார்கள்; அநந்தரம் ''ஆயர்குலத்தினில் தோன்றும்'' (5) என்றார்கள்; ''போற்றப்பறை தரும் புண்ணியன்'' (10) என்றார்கள்; எழுப்புகிறபோது ''உலகளந்த உம்பர் கோமானே'' (17) என்றார்கள்; அவன்றன் பிறந்தபோதே ''மூன்றுபிறவி யுண்டே உங்களுக்குப் பிறக்கிறது'' என்றன! 'வில்பிடித்தாரில் சக்ரவர்த்திபிள்ளை நான்' என்றன்; ஆகையாலே அவதாராந்தரம் என்றிருப்பாரொருவருமில்லை. (ஏத்திப் பறைகொள்வான்) எங்கள் பலம் முன்னுக நாட்டார் பலம் பெறுவதாக. பலம்—ஏத்துகை; பின்பு அபிமதம் ஊரார் ஸம்ருத்தி; உத்தேச்யபலமும் ஆநுஷங்கிகபலமும்.

(இன்று) இசைவுபிறந்த இன்று நென்னேற்று வந்தோமோ? நாளைக்கு இங்கே நிற்கவொட்டுவர்களோ? (யாம்) பெருமிடுக்கரான வ்ருத்தைகளெல்லாங் கிடந்துறங்க குளிர் பொருத பாலைகளான நாங்கள். (வந்தோம்) நீ வர ப்ராப்தமாயிருக்க விரஹதெளர்பல்யத்தாலே ஆற்றுமை இழுக்க வந்தோம். (யாம் வந்தோம்) நாங்களும் எங்களை அறியாமற் செய்தோம்; நீயும் உன்னை அறியாமற் செய்வதுண்டாய்த்திறே. (இரங்கு) எல்லா வ்யஸநங்கள் பட்டாலும் கிழ் பிரவர்த்தித்ததெல்லாம் பேற்றுக்குடலன்று, அவனிரக்கமே கார்யகரமாவது. அவனுக்கென் வருகிறதோ! என்று இரங்கி மங்களாஶாஸநம் பண்ணுகை இவர் களுக்கு ஸ்வரூபம்; இத்தலைக்கு இரங்குகை அவனுக்கு ஸ்வரூபம்.

A திருப்பல் 1, B திருப்பல் 12, C திருவாய் 4-5-1, D பெரியாழ் திரு 5-4-6
E பெரியாழ் திரு 2-3-7, F பெரியாழ் திரு 2-9-2, G பெரியாழ் திரு 3-2-8
H பெரியாழ் திரு 1-7-1, I பெரியாழ் திரு 1-7-1.

(வந்தோம் இரங்கு) இரங்காமைக்கு வேண்டுவது செய்தோமேயாகிலும் இரக்கவேணும். 'இத்தலையில் பரபக்தியும் பேற்றுக்குடலன்று; அவனுடைய இரக்கமே அவ்யவஹிதோபாயம்' என்றிருக்கிறார்கள். (அன்றிவ்வுலகமளந்தாய்—இன்று யாம்வந்தோம்) நீ எங்களைத் தேடி A எல்லாவுலகும் தடவந்தாய் அன்று; இன்று உன்னைத்தேடி நாங்கள் வந்தோம். (யாம் வந்தோம்) B வையந்தாய மலரடிக்கீழ் முந்திவந்து நீ நிற்க நாங்கள் பெற்றேம்; (அளந்தாய், தென்னிலங்கை செற்றாய், சகடமுதைத்தாய். யாம் வந்தோம்) C "மண்ணளந்த கண் பெரிய செவ்வாயெங்காரேறுவாரானுல்" D "காகுத்தன்வாரானுல்" E "கண்ணனும்வாரானுல்" என்றிருந்த உன்னுடைய ப்ரதாநமஹிஷிகளில் எங்களுக்குண்டான வாசிபாராய். (அன்றிவ்வுலகமளந்தாய், இரங்கு) F உவந்த வுள்ளத்தனுய் எங்களோடணைந்திலையாகிலும் ஸத்தாப்ரயுக்தமான க்ருபையையாகிலும் பண்ணு. (அளந்தாய்—இரங்கு) G "நீரேற்றளந்த நெடிய பிரானருளாவிடுமே" என்றன்றே நாங்களிருப்பது. (தென்னிலங்கை செற்றாய்—இரங்கு) சிறிது தாழ்க்கில் H "இரக்கமெழீர்" என்று உன்னை வசைபாடுவர்கள் கிடாய் என்று தாய்கள் சொல்லுமளவேயோ. I "இரக்கமேல் ஒன்றுமிலாதாய்"—என்று நாங்கள்தான் சொல்லோமோ? (சகடமுதைத்தாய்—இரங்கு) J உருளுஞ்சகடமுதைத்த பெருமானருளின் பெருநசையாலன்றே நாங்கள் வந்தது. (குன்றுகுடையாவெடுத்தாய் — இரங்கு) K "குன்று குடையாக ஆகாத்த கோவலனுர் ஒன்றுமிரங்கார்" என்னுமே இரங்கு. 24.

ஈராயிரப்படி—இருபத்துநாலாம் பாட்டு

அவ: இருபத்துநாலாம்பாட்டு. — நப்பின்னைப் பிராட்டியோடேகூடி திவ்யஸிம்ஹாஸநத்திலேயிருந்த இருப்பிலே சாத்தியருளின அத்தவாளத்தலை மேலே பறக்க, திருவடிகளைக் கண்டு, அத்திருவடிகளைத் திருமுலைத்தடங்களிலும், திருக்கண்களிலும் ஒற்றிக்கொண்டு] L "உன்சேவடி செவ்விதிருக்காப்பு—நின்வலமார்பினில் வாழ்கின்ற மங்கையும் பல்லாண்டு" என்கிறார்கள்.

வ்யா: (அன்றிவ்வுலகமித்யாதி) இவ்வழகிய திருவடிகளைக் கொண்டே காடும் மலையும் அளந்துகொண்டது? M மலர்மகள் பிடிக்கும் மெல்லடியிறே. (அடிபோற்றி) L "உன் சேவடி செவ்வி திருக்காப்பு". (சென்றங்குத் தென்னிலங்கையித்யாதி) பிராட்டியைப் பிரித்த ராவணனிருந்தவிடத்தே நடந்து கொல்லுவதே! புலியிருந்த தூற்றிலே சென்று கொல்லுமாபோலே. N "இலங்கை பாழாளாகப் படை பொருதானுக்குப் பல்லாண்டு" என்றவர் மகளிறே. (பொன்றச்சகடமுதைத்தாய்) ஒருத்தரோடும் விசாரியாதே முடித்தபடி. மாரீசனைப் போலே குற்றுயிராக்கி மேலே அனர்த்தத்தை விளைக்க வையாதே முடித்தபடி. (புகழ்போற்றி) ஸ்ரீப்ருந்தாவனத்தில் முளைத்த பூண்டகப்பட ராக்ஷஸராகை

A திருவாய்6-9-6. B திருவாய் 8-5-7. C திருவாய் 5-4-4. D ஷை5-4-3. E ஷை 5-4-2. F அமல 2. G திருவிருத்தம்-69. H திருவாய் 2-4-3. I நாச் திரு 3-4. J திருவாய் 2-1-8. K பெரிய திருவ 74. L திருப்பல் 1, 2. M திருவாய் 9-2-10. N திருப்பல் 3-

யாலே மங்களாசாஸனமொழியக்காவலில்லை. தாய் உதவாத தசையிலே திருவடிகளுக்கு உதவுகை புகழாயிற்று. (கன்று குணிலா எறிந்தாயித்யாதி3) "மத்ரு வையிட்டு முத்ருவை எறிந்தால் அவர்களிருவரும் ஸங்கேதிக்கில் என் செய்யக் கடவோம்" என்று வயிறுபிடிக்கிறார்கள். (குணில்) எறிகருவி கன்று.

(கன்று குடையா எடுத்தாயித்யாதி3) இந்த்3ரனும் பகையானபடி. அனுகூலர் ப்ரதிகூலிக்கையால் தலையறுக்கவொண்ணுதே, ஆந்ருசம்ஸ்யத்தாலே மலையெடுத்தது. (வென்றுபகை கெடுக்குமித்யாதி3) சக்ரவர்த்தி வில் பிடிக்க பிள்ளையும் வில் பிடித்தாற்போலே. கூர்வேல் கொடுந்தொழிலன் (1) மகனிறே! பசுக்களின் பின்னே திரியாநின்றுல் ஸிம்ஹம் வந்தாலும் வேலாலே குத்திப் புடைத்துப்போமத்தனை.

(என்றென்று) ப்ரயோஜனம் போருமளவும் சொல்லி, பின்னை 1."தே3ஹி மே தத்3தாமி தே" என்னுமவர்களன்று. இது தானே ப்ரயோஜனம். A "ஒன்று நூறுயிரமாக் கொடுத்து, கொண்டதுக்குக் கைக்கூலியும் கொடுப்பர்கள். (என்றென்றுன் சேவகமேயேத்தி) B "உன்னுடைய விக்கிரமமொன்றெழியாமலெல்லாம் என்னுடைய நெஞ்சகம் பால் சுவர்வழி எழுதிக்கொண்டேன்" என்னுமவர்களிறே. (இன்று இசைவு பிறந்த இன்று; நீயுறங்க நாங்கள் உறங்காதே இருந்த இன்று. (யாம்) பந்துக்களாலே நெடுங்காலம் நலிவுபெற்ற நாங்கள். (வந்தோம்) எங்களாற்றுமையாலே வந்தோம். எல்லா இழவுகளும் தீர்ந்தோம். (இரங்கு) இத்தலைக்கு இரங்குகை அத்தலைக்கு ஸ்வரூபம். "அவனுக்கு என் புகுகிறதோ" என்று இரங்குகை இத்தலைக்கு ஸ்வரூபம். 24.

நாலாயிரப்படி—இருபத்து நான்காம்பாட்டு

அவ:— இருபத்துநாலாம் பாட்டு. அவனைக் காணுமளவுமிறே "அதுவேணும், இதுவேணும்" என்பது. கண்டால் அவனுக்குப் பரியுமத்தனையிறே. நப்பின்னைப் பிராட்டியோடே கூடவிருந்த இருப்பிலே சாத்தியருளின அத்தவாளத்தலை மேலே பறக்க, நீராடுகோபனைக் கோத்துக்கொண்டு மெத்தனவெழுந்தருளுகிற திருவடிகளைக் கண்டு, அத்திருவடிகளைத் திருமுலைத்தடத்திலும் திருக்கண்களிலும் ஒற்றிக்கொண்டு C "உன் செவ்வடி செவ்விதிருக்காப்பு, வடிவாய் நின்வலமார்பினில் வாழ்கின்ற மங்கையும் பல்லாண்டு" என்று திருப்பல்லாண்டு பாடுகிறார்கள். இங்ஙனே போர வேணுமென்ன, நடந்த நடைகண்டு மங்களாசாஸனம் பண்ணுகிறார்களாகவுமாம்.

வ்யா:— (அன்றிவ்வுலகமளந்தாயடி போற்றி) பகவத்விபூதியை மஹாபலி நெருக்கி அபஹரிக்க நோவுபட்டவன்று; பண்டும் ஒரு நாள் இப்படியே எல்லா நடந்து மீட்டுக்கொண்டான் என்கை. இவ்வழகிய திருவடிகளைக்கொண்டே காடு மோடையளந்துகொண்டது? (இவ்வுலக மளந்தாய்) 'பிராட்டிமார்க்கும் பூத்தொடு மாபோலே கூசிப்பிடிக்க வேண்டின திருவடிகளைக்கொண்டு கூசமுமறியாத காடு

A நாச்-தி நு 9-7. B பெரியாழ் திரு 5-4-6. C திருப்பல் 1, 2.

மோடுமளப்பதே! என்கை. A "வன்மாவையம்". (அடி போற்றி) B "உன் செவ்வடி செவ்விதிருக்காப்பு. (சென்றங்குத் தென்னிலங்கை செற்றுய் திறல் போற்றி) அழகுக்கிலக்காகாதாரை அம்புக்கிலக்காக்கினபடி. "கீழ் நமுசி ப்ரப்₄ருதிகளேயுள்ளது; பிராட்டியைப் பிரித்த ராவணனிருந்தவிடத்தே செலவுவதே" என்கை. கால்நடை நடப்பித்த கைகேயியை நோக்கினார்கள். (சென்று) புலி நின்ற தூற்றிலே சென்று கொல்லுமாபோலே; C "தென்னிலங்கை யரண்சிதறியவுணன் மாளச்சென்று". (சென்று) வழிப்போக்கிலே கூர கபா₃ந்த₄ விராத₄ாதி₃களையே மணல்கொட்டகமிடறினாற்போலே இடறிக்கொண்டு போனபடி. (தென்னிலங்கை செற்றுய் திறல் போற்றி) D "மைவாயகளிறொழிந்து" இத்யாதி₂. 'ராவணனைக் கால்நடையே நின்று பொருவதே!' என்கை. (திறல் போற்றி) என்ன குடிப்பிறப்பு! மதிளுக்கு மதிளிடுகிறார்கள். E "இலங்கை பாழாளாகப் படை பொருதானுக்குப் பல்லாண்டு கூறுதுமே" என்றவர் மகளிறே. (தென்னிலங்கை) ஆரியர்கள் இகழ்ந்த தேசம்.

(பொன்றச் சகடமுதைத்தாய் புகழ்போற்றி) ராவணனைப்போலே நினையாமை முடிந்தபடி. அங்கு பருவம் நிரம்புகையாலே லீலாரஸமநுப₄வித்தானென்கை. இங்கு அந்த லீலையில் நுழையும் பருவமன்று. (பொன்ற) மாரீசனைப்போலே குற்றுயிராக்கி மேலே அனர்த்த₄மும் விளைக்க வையாதே முடிக்கப்பெற்றபடி. (புகழ் போற்றி) ராமாவதாரத்தில் பிதா த₃ஶரத₂ன்; ஸப்த₃ராந்தகன்; ஊர் அயோத்₄யை: தம்பிமாரோ கல்மதிள்; மந்த்ரவாதி₃களான வஸிஷ்ட₂ாதி₃கள் புரோஹிதர்; ஸுமந்த்₂ாதி₃கள் மந்த்ரிகள்; நாட்டையக் காவல்; ஸ்பர்த்தை₄ பண்ணுவாரும், 1. "இச்ச₃ாம:" என்னும்படியான கு₃ணவான்; ஆகையாலே அஞ்சவேண்டா. இங்கு மாதாபிதாக்கள் ஸாது₄ இடையர்; ஊர் இடைச்சேரி; பு₃த்₃தி₄சொல்லும் மந்த்ரிகளும் இளவிடையர் ஸம்ஸாரிகள்; கம்ஸாதி₃கள் எதிரிகள்; ஸ்ரீப்₃ருந்த₃ாவனத்தில் முளைத்த பூண்டுகளைப்பட ராக்ஷஸர்; தமையன் ஒருக்ஷணம் தப்பில் பாம்பின் வாயிலே விழும் தீம்பன்; பூதனாதி₃களால் புகுந்த அபாயங்களனவை; இனி மங்க₃ளாஶாஸன மொழியக் காவலுண்டோ? தாயுமுதவாத த₃ஶையிலே திருவடிகள் உதவுகை புகழாவது. F "செய்ய பாதமொன்றால் செய்த நின் சிறுச்சேவகமும்" என்று காலை முரித்த கன்னிப்போராகையாலே காப்பிடுகிறார்கள். (கன்று குணிலாவெறிந்தாய் கழல்போற்றி) 'ஸத்ருவையிட்டு ஸத்ருவையெறிந்தால் அவர்கள் க்ருதஸங்கேதிகளாய் மேல் விழில் என்செய்யக் கடவோம்? என்று வயிறுபிடிக்கிறார்கள். குஞ்சின திருவடிகளுக்குத் திருப்பல்லாண்டு பாடுகிறார்கள். (குணில்) எறிகருவி.

(குன்றுகுடையா எடுத்தாய் குணம் போற்றி) இதுக்கு முன்பு செய்த செயல்கள் இந்த்₃ரனுக்கு; இப்போது அவன்தான் பகையானபடி சொல்லுகிறது. 'அநுகூலர் ப்ரதிகூலிக்கையால் தலையறுக்கவொண்ணாது; பெரும்பசியாலே அவனை நலிந்தோம்; அவன் கைநோவுந்தனையும் வர்ஷிக்கிறான். அவ்வளவு கல்லிட்டுக் காப்போம்' என்று ஆங்ருஶம்ஸ்யத்தாலே மலையை எடுத்துக் கொண்டு நின்ற கு₃ணத்துக்கு மங்க₃ளாஶாஸனம்பண்ணுகிறார்கள். சவலைப்பசல் தன்னைக் கிள்ளப் புக்கால் கைநொந்தவாறே விட்டுப் போகிறதென்று உடம்பு கொடுத்திருக்கும் தாயைப்போலே.

A திருவாய் 3-2-2, B திருப்பல் 1, C திருநெடு 28, D பெரு - திரு 9-2, E திருப்பல் 3, F திருவாய் 5-10-3.

(வென்று பகை கெடுக்கும் நின்கையில் வேல் போற்றி) ஒரு வ்யக்தியிலே எல்லா அபதா₃நங்களையும் சொன்னால் த்₃ருஷ்டிதோ₃ஷமாம் என்று பிடித்து வேலுக்கு மங்க₃ளாஶாஸநம் பண்ணுகிறார்கள். சக்ரவர்த்தி வில்பிடிக்க, பிள்ளைகள் வில்பிடித்நாற்போலே; "கூர்வேல்கொடுந்தொழிலன்"(1) மகனிறே. பசுக்களின் பின்னே நிரையாநின்றால் ஸம்ஹரம் வராநின்றாலும் வேலாலே குத்திப் பொகட்டுப்போமத்தனை. (நின் கையில் வேல் போற்றி) வெறும் புறமே ஆலத்திலழிக்க வேண்டியிருக்க, அவ்வழதுக்கு மேல் வில்லைப்பிடித்த அழகு; A "வடிவார் சோதி வலத்துறையும் சுடராழியும் பல்லாண்டு".

(என்றென்று) ப்ரயோஜநம் பெறுமளவும் சொல்லி, பின்னை 1. "தே₃ஹி மே த₃த₃ாமி தே" என்னுமவர்களன்று; இதுதானே ப்ரயோஜநமாயிருக்கும். ஸம்ஸாரிகள் புறம்பும் கொள்ளுவர்கள்; அவன்பக்கலிலும் கொள்ளுவர்கள் இவள் புறம்பும் கொள்ளாள்; இவன் பக்கலிலும் கொள்ளாள். B "ஒன்று நூறுயிரமாக் கொடுத்து", "ஆந்தனையும் கைகாட்டி"(2)புறம்புத்தைக்கும் தானே கொடுக்குமித்தனை. (உன் சேவகமே ஏத்தி) C "உன்னுடைய விக்கிரமம் ஒன்றொழியாமல் எல்லாம் என்னுடைய நெஞ்சகம்பால் சுவர்வழியெழுதிக் கொண்டேன்" என்னுமவர் மகளிறே.

(இன்று) இசைவு பிறந்த இன்று. நீயுறங்க, நாங்கள் உறங்காதேயிருந்த இன்று. வ்ருத்₃தை₄களுறங்க நாங்கள் வந்தோம். "நென்னேற்று வந்தோமோ? ஊராரிசைந்த இன்று வந்தோம்" என்றுமாம். (யாம்) ப₃ந்து₄க்களாலே நெடுங்காலம் நலிவுபட்ட நாங்கள். (யாம் வந்தோம்) "நீ வர ப்ராப்தமாயிருக்க, எங்களாற்றுமையாலே வந்தோம்" என்றுமாம். (வந்தோம்) எங்களாற்றுமையால் வந்த இழவெல்லாம் தீர வந்தோம். (இரங்கு) எல்லாம் பட்டுவந்தாலும் அவனிரங்கியல்லது காரியமாகாது. வ்யபி₄சாரமில்லாத உபாயமிதுவே என்கை. இத்தலைக்கு இரங்குகை அவனுக்கு ஸ்வரூபம். 'அவனுக்கு என்வருகிறதோ' என்று இரங்குகை இத்தலைக்கு ஸ்வரூபம். 24.

ஸ்வாபதே₃ஶவ்யாக்₂யாநம்—இருபத்து நாலாம்பாட்டு

அவ:— இருபத்துநான்காம்பாட்டு. (அன்று இத்யாதி₃) இப்பாட்டில் — இவர்கள் ப்ரார்த்தி₂த்தபடியே அவன் திருப்பள்ளியறையில் நின்றும் தி₃வ்யாஸ்தா₃நமண்டபத்துக்கு எழுந்தருள, அந்நடையழகிலே ஈடுபட்டு, வந்த கார்யத்தை மறந்து மங்க₃ளாஶாஸநம் பண்ணுகிறார்கள்.

வ்யா:— (அன்று இத்யாதி₃) ப்ரக்ருதி ஸம்ப₃ந்த₄ நிப₃ந்த₄நமான அஹங்காரம் ஜக₃த்தை ஆக்ரமித்த அன்று, அஹங்கார க்₃ரஸ்தமான இந்த லோகத்தை அஹங்காரத்தினின்றும் மீட்டுத் தன் திருவடிகளாலே அளந்து தனக்காக்கிக் கொண்டவனே! உன் திருவடிகளுக்கு மங்க₃ளாஶாஸநம். (சென்று அங்கு இத்யாதி₃) இந்த லோகத்தை அஹங்காரத்தினின்றும் மீட்டவளவன்றிக்கே, அந்த அஹங்காரத்துக்குப் பிறப்பிடமான இடத்தே சென்று த₃ர்ஶநீயமான ப்ரக்ருதி ஸம்ப₃ந்த₄ நிர்வாஹகமான அஹங்காரத்தை அழித்தவனே! உன்னுடைய பராபி₄

A திருப்பல் 2. B நாச்-திரு 9-7. C பெரியாழ்-திரு 5-4-6.

இருபத்தைந்தாம் பாட்டு

ஒருத்தி மகனுய்ப் பிறந்தோ ரிரவில்
ஒருத்தி மகனு யொளித்து வளரத்
தரிக்கிலா னுகித்தான் தீங்கு நினைந்த
கருத்ஸதப் பிழைப்பித்துக் கஞ்சன் வயிற்றில்
நெருப்பென்ன நின்ற நெடுமாலே யுன்னை
அருத்தித்து வந்தோம் பறைதருதி யாகில்
திருத்தக்க செல்வமுஞ் சேவகமும் யாம்படி
வருத்தமுந் தீர்ந்து மகிழ்ந்தேலோ ரெம்பாவாய்.

பதவுரை:— ஒருத்தி—தேவகிப்பிராட்டியாகிற ஒருத்திக்கு, மகன் ஆய்—பிள்ளையாய், பிறந்து—தோன்றி, ஓர் இரவில்—(அவதரித்த அந்த) ஒப்பற்ற இரவிலேயே, ஒருத்தி—யசோதைப்பிராட்டியாகிய ஒருத்தியுடைய, மகன் ஆய்—பிள்ளையாக ஆகி, ஒளித்து வளர—ஒளித்திருந்து வளரும் காலத்தில், தான்—(கம்ஸனுகிற) தானே, தரிக்கிலான் ஆகி—(ஒளிந்து வளருவதையும்) பொறுக்கமாட்டாதவனுய், தீங்கு நினைந்த—(இவனைக் கொல்ல வேணும் என்னும்) தீச்செயலை நினைத்த, கஞ்சன்—கம்ஸனுடைய, கருத்தை—எண்ணத்தை, பிழைப்பித்து—வீணுக்கி, (கஞ்சன்) வயிற்றில்—அக்கம்ஸனுடைய வயிற்றில், நெருப்பு

ஸ்வா:- பூவநஸாமர்த்யத்துக்குப் பல்லாண்டு. (பொன்றச்சகடம் இத்யாதி) காம க்ரோதங்களை ஸ்வரூபேண நசிக்கும்படி உன்திருவடிகளாலே உதைத்தவனே! உன்னுடைய யாஸ்ஸுக்குப் பல்லாண்டு.(கன்று குணில் இத்யாதி) லோபத்தைஎறிதடியாக எறிந்து (மோஹத்தை)? நசிப்பித்தவனே! உன்னுடைய குஞ்சிதமான திருவடிகளுக்குப் பல்லாண்டு. இவ்வளவில் ப்ரதிகூலர் விஷயத்தில் செய்யும் அம்சத்தைச் சொல்லிற்று; இனி அநுகூலர் ப்ரதிகூலித்தால் செய்யும் அம்சத்தைச் சொல்லுகிறது — (குன்று இத்யாதி) இந்த்ரன் சிலாவர்ஷம் வர்ஷித்தபோது பர்வதத்தைக் குடையாகக்கொண்டு கோகோபரக்ஷணம் பண்ணினுற்போலே, அஜ்ஞாநகார்யமான அஹங்காரம் இவ்வதிகாரிக்கு விஷயப்ராவண்யத்தை உண்டாக்குவதற்கு ப்ரதிக்ரியையாக வைதிகமாய்க் கைங்கர்யரூபமான விஷயப்ராவண்யத்தை உண்டாக்கி, ஸ்வப்ரபந்நஜந ரக்ஷகனும்படியைச் சொல்லுகிறது. ஆக, இப்படி ஆச்ரிதரக்ஷகனனவனே! உன்னுடைய சீலகுணத்துக்குப் பல்லாண்டு. (வென்று பகை கெடுக்கும் இத்யாதி) அஹங்காரத்தை ஜயித்து தத்விஷயவைமுக்யத்தை மாற்றும் நின்திருக்கையில் திருவாழியாழ்வானுக்குப் பல்லாண்டு. (என்று என்று இத்யாதி) இப்படிப் பல்லாண்டு பாடுகையே யாத்ரையாய், உன்னுடைய வீரசரிதத்தையேத்திப் புருஷார்த்தத்தை லபிக்கைக்காக ஸத்வம் தலையெடுத்த இன்று உன்கை பார்த்திருக்கும் நாங்கள் வந்தோம்; நீ க்ருபை செய்தருளவேணும். "ஏத்திப் பறைகொள்வான்" என்கிற இடத்தில், ஏத்துகைக்கு அநந்தரம் புருஷார்த்தலாபமாகையாலும், ஏத்தாதபோது புருஷார்த்தலாபம் இல்லாமையாலும் ஏத்துகையே புருஷார்த்தமென்கிறது. "இரங்கு" என்று க்ருபைபே ஸாதநமென்கையாலே, "வந்தோம்" என்று - ருசிகார்யத்தைச் சொல்லுகிறது.

என்ன நின்ற — 'நெருப்பு' என்னும்படி நின்ற. நெடுமாலே — ஸர்வாதி₄கனே! உன்னை — உன்னிடத்தில், அருத்தித்து வந்தோம்—(எங்களுக்கு வேண்டியவற்றை) யாசித்துக்கொண்டு வந்தோம்; பறை தருதி ஆகில் — எங்களுடைய விருப்பதை நிறைவேற்றுவாயாகில், திரு தக்க செல்வமும் — பிராட்டியும் ஆசைப்படத்தக்க (உன்) செல்வத்தையும், சேவகமும் — வீர்ய கு₃ணத்தையும், யாம் பாடி — நாங்கள் பாடி, வருத்தமும் தீர்ந்து — (உன்னைப் பிரிந்து படும்) துக்கமும் நீங்கி, மகிழ்ந்து — மகிழ்ந்திடுவோம்.

மூவாயிரப்படி — இருபத்தந்தாம் பாட்டு

அவ:— இருபத்தைந்தாம் பாட்டு. a 'உங்களுக்கு வேண்டுவது என்?' என்ன, ''ஏதேனும் ப்ரதி₃ப₃ந்த₄கம் a₂ உண்டேயாகிலும், நீயேபோக்கி எங்கள் து₃:க்க₂மெல்லாம் கெட விஷயீகரிக்கவேணும்'' என்கிறார்கள்.

வ்யா:— b (ஒருத்தி) c 1. ''அந்த:ப்ரவிஷ்ட: ஶாஸ்தா ஜநாநாம் ஸர்வாத்மா'' என்கிறபடியே c₂ ஸர்வலோகங்களுக்கும் நியாமகனனவனையுங்கூட c₃ நியமிக்குமவளாகையாலே நாட்டில் தனக்கு ஒப்பற்றிருக்குமவள். (ஒருத்தி மகனுய்) d 2. ''பூ₄தாநாம் யோऽவ்யய: பிதா'' என்று ஸர்வலோகங்களுக்கும் பிதாவானவன் ஒருத்திமகனுவதே! e சக்ரவர்த்தி தபஸ்ஸுபண்ணி மாணிக்கம் போலே நாலுபிள்ளைகளைப் பெற்றாற்போலே e₂ நால்வருங்கூடித் தபஸ்ஸு பண்ணி ஒரு மகனைப் பெற்றபடி. f (மகனுய்ப்பிறந்து) g பிறந்தபோதே

பெ. அ. இருபத்தைந்தாம்பாட்டு. (ஒருத்தி இத்யாதி₃) a ''கஞ்சன் வயிற்றில் நெருப் பென்னநின்ற'' என்றதையும், ''வருத்தமும் தீர்ந்து மகிழ்ந்து'' என்றதையும் கடாக்ஷித்து ''மாநிலம் முழைஞ்சில்'' என்கிறபாட்டோடே ஸங்க₃திதோன்ற அவதாரிகை அருளிச்செய் கிறார் (உங்களுக்கு இத்யாதி₃) (உங்களுக்கு வேண்டுவதென்னென்ன) என்றது — ''யாம் வந்தகாரியமாராய்ந்தருள்' (23) என்று தாங்கள் ப்ரார்த்தி₂த்ததை மறந்து மங்க₃ளாஶா ஸனத்திலே மூண்டு இதுக்காக வந்தோமென்றார்களென்று ஸர்வஜ்ஞனவன் நினைத்திருக் கையாலே, நீங்கள் வந்த காரியமென்னென்று கேட்டானென்கை. a₂ (உண்டேயாகிலும்) என்றது—பு₄ருவத்₃விஷயத்திலிழியவே ப்ரதிப₃ந்த₄கங்களெல்லாம் ''தீயினில் தூசாகும்''(5) என்றிருக்குமவர்களாகையாலே என்று கருத்து.

c₂ அத்₃விதீயையானவளென்று விவக்ஷித்து ஹேதுபூர்வகம் தாத்பர்யம் அருளிச் செய்கிறார் (ஸ்வேத்யாதி₃) c₃ (நியமிக்குமவளாகையாலே) என்றது — 3 ''உபஸம்ஹர ஸர்வாத்மந்'' 2. ''பூ₄தாநாம் யோऽவ்யய: பிதா'' என்று நியமிக்கையைப்பற்ற. d ''ஒருத் திக்குப்பிறந்து'' என்னலாயிருக்க, ''மகனுய்'' என்றதாலே—மகனுகத்தக்கவனல் லாதவன் மகனுனென்று தோன்றுகையால் வந்த ஈடுபாட்டைக்காட்டுகிறார் (பூ₄தாநாம் இத்யாதி₃) e எல்லார்க்கும்பிதாவானவன் மகனுகைக்கு ஹேதுவென்? என்ன, அருளிச்செய்கிறார் (சக்ர வர்த்தி இத்யாதி₃) f, g, h, i ''மகனுய்'' என்றதுக்கு—மகன் செய்யும் கார்யம்செய்து கொண்டு பிறந்தானென்று தாத்பர்யம் அருளிச்செய்கிறார் (பிறந்தபோதே இத்யாதி₃

கி. அ. இருபத்தஞ்சாம்பாட்டு. (ஒருத்தி) b, c, d ''ஒருத்தி'' என்றதுக்கு இரண்டு தாத்பர்யம்; அல்பத்திலேயாதல்; அதி₄கத்திலேயாதல். f ஆய்-பரதந்த்ரனுய், e ''ஒருத்திமகனுய்ப் பிறந்து ஒருத்திமகனுய் ஒளித்து வளர'' என்கையாலே, நால்வரையும் சொல்லுகிறது; இத் தால் க்ருஷ்ணனுக்கு அதி₄கயம் சொல்லிற்றுய்த்து. f, g ''மகனுய்ப் பிறந்து'' என்றதற்குத்

சொல்லிற்றுச் செய்கை. h சக்ரவர்த்தித்திருமகன் பக்வனன பின்பு பித்ருவசந பரிபாலநம் பண்ணினனன்: i இவன் பிறந்தபோதே 1. "உபஸம்ஹர ஸர்வாத்மந்" என்று சொல்ல, ஆழ்வார்களையும் தோள்களையும் மறைத்தானிறே. j (பிறந்து) k கர்மவஸ்யர் படுவதெல்லாம் க்ருபாவஸ்யனனய்க்கொண்டு பட்டபடி. l (பிறந்து) m ஆவிர்ப்ப₄விக்கலாகாதோ? n பத்து மாஸம் வயிற்றிலே இருப்பார்களாகில், பன்னிரண்டு மாஸம் வயிற்றிலேயிருந்து பிறக்கவேணுமோ? o A "பன்னிரு திங்கள் வயிற்றில் கொண்ட" இறே. p 2. "தே₃வகீ பூர்வஸந்த்₄யாயாமாவிர்ப்பூ₄தம் மஹாத்மநா" என்று — 'பிறந்தானென்கை அவத்₃யம்' என்று பரிஹரித்தான் ரிஷி; q அதுதான் அவத்₃யமென்று 'பிறந்தான்' என்கிறார்கள். r நம்முடைய கர்மம் நம்மோடே அவனை ஸஜாதீயனுக்கும்; s அவனுடைய க்ருபை நம்மை அவனோடே ஸஜாதீயமாக்கும்; t 3. "பரமம் ஸாம்யமுபைதி" என்னக் கடவதிறே. u "அவன்பிறவி u₃ நமக்கென்று கோல, நம்பிறவி அவன் மாதாபிதாக்கள் காலில் விலங்குபட்டது படும். v நம் பிறவி— நம்மையும் அவனையும் அகற்றுகைக்கு உடலாயிருக்கும்; w அவன் பிறவி இருவரும் அணுகுகைக்கு உடலாயிருக்கும்.

பெ. அ. வாக்யத்ரயத்தாலே) j, k "அவதரித்து" என்னுதே, "பிறந்து" என்றதுக்கு உட்கருத்தை அருளிச்செய்கிறார் (கர்மவஸ்யர் இத்யாதி₃) l,m,n,o "மகனுய்" என்றதாலே பிறப்பு அர்த்த₂ஸித்₃த₄மாயிருக்கவும், "பிறந்து" என்று விஶேஷித்தது, லோகத்தார் பிறவியிலும் வ்யாவ்ருத்தமென்று தோற்ற என்று தாத்பர்யாந்தரம் அருளிச்செய்கிறார் (ஆவிர்ப்ப₄விக்கல் இத்யாதி₃ வாக்யத்ரயத்தாலே) P, q ரிஷி 2. "ஆவிர்ப்பூ₄தம்" என்று சொல்லியிருக்க, இவர்கள் "பிறந்து" என்னக் கூடுமோ? என்ன, அருளிச்செய்கிறார் (தே₃வகீ இத்யாதி₃ வாக்யத்₃வயத்தாலே) q (அதுதான் அவத்₃யம்) என்றது—ஸௌஶீல்யா₃திகளுக்கு அது பூர்த்திகரமல்லாமையாலே என்று கருத்து. r பிறப்புக்குக் கர்மம் அடியாகையாலே அதில்லாதவனுக்குப் பிறப்பு சொல்லக்கூடுமோ? என்னும் ஶங்கையைப் பரிஹரியாநின்றுகொண்டு ஸௌஶீல்யம் தோற்றும்படியை உபபாதி₃க்கிறார் (நம்முடைய இத்யாதி₃) தம்முடைய கர்மத்தாலே நாம் ஸம்ஸரிக்கையாலே நம்மை எடுக்கைக்காக அவன் ஸஜாதீயனும் வந்து பிறந்து புரையறக் கலக்கையாலே ஸௌஶீல்யம் விளங்குமென்று கருத்து. s, t இதுக்கு த்₃ருஷ்டாந்தம் அருளிச்செய்கிறார் (அவனுடைய இத்யாதி₃ வாக்யத்₃வயத்தாலே) u 'நம்மோடு ஸஜாதீயனுய்ப் பிறந்தானுகில், அத்தாலே அவனெடுக்கும்படி எங்ஙனே?' என்ன, 4. "ஜந்ம கர்ம ச" இத்யாதி₃ வசநத்தை உட்கொண்டு அருளிச்செய்கிறார் (அவன் பிறவி இத்யாதி₃) u₂ (நமக்கென்றுகோல) என்றது—நமக்காக வந்தானென்று அறிய என்றபடி. v, w உக்தார்த்த₂த்தை வைத₄ர்ம்யத்₃ருஷ்டாந்த பூர்வகம் விவரிக்கிறார் (நம்பிறவி இத்யாதி₃ வாக்யத்₃வயத்தாலே)

தி. அ. தாத்பர்யம் (பிறந்தபோதேஇத்யாதி₃) h, i அவன் செய்ததென்? என்ன அருளிச் செய்கிறார் (சக்ரவர்த்தித்திருமகனுரித்யாதி₃) p,q 2. "ஆவிர்ப்பூ₄தம்" என்னுநிற்க "பிறந்து" என்னலாமோ? என்ன, அருளிச்செய்கிறார் (தே₃வகீ இத்யாதி₃) r,s "அவனுடையபிறவிக்கும் நம்முடைய

A பெரியாழ் திரு 3-2-8.

x (ஓரிரவில்) y அவ்விரவிலே யசோதைப்பிராட்டிக்கும் y_2 பிள்ளையாக வேண்டுமெகையாலே திருவாய்ப்பாடியிலே புக்கு. z நாய்க்குடலுக்கு நறுநெய் தொங்காதாப்போலே, கம்ஸாதிகள் தண்மை · ஸுதிகாக்ருஹத்திலே ஓரிராத் தங்கவொட்டிற்றில்லை என்கை. (ஓரிரவு) a அவ்விரவை ஒக்கும் இரவு முன்பும் இல்லை, பின்பும் இல்லை. (ஓரிரவில்) b காலக்ருதபரிணாமமில்லாத தேஹத்தில் வஸ்து காலாதீநமான தேஹத்திலே பிறப்பதே! c அவர்கள் தங்களோபாதியும் பெற்றிலனென்கை. d (ஒருத்திமகனுய்) e ஒருத்தி "இவனை மகனுகப் பெறவேணும்" என்று ஆஸ்ரயிக்க, அவளுக்கு அவதாரரஸத்தைக் கொடுத்து, இவளுக்கு லீலாரஸத்தை அநுபவிப்பித்தபடி; ஓரவதாரத்திலே யாதவஸஜாதீயனுமாய் கோபஜாதீயனுமானபடி; 1. "அம்ஸாவதாரோ ப்ரஹ்மர்ஷே யோऽயம் யதுகுலோத்பவ:" என்ற ரிஷிதானே, 2. "கோபாலோ யாதவம் வம்ஸம் மக்நமப்யுத்தரிஷ்யதி" என்றுனிறே. f (மகனுய்) g பிறப்பில் புரையில்லாதாப்போலே, இவள் மகனனவிடத்திலும் புரையற்றிருக்கை. h (ஒளித்து வளர) i கம்ஸனுடைய விஷத்ருஷ்டி படாமே வளர்ந்தபடி.

பெ. அ. x,y ஓரிரவிலே—ஒருத்திமகனுப் பிறந்து ஆய்ப்பாடியிலேபுக்கு, ஒருத்தி மகனுய் என்று அந்வயாத்யாஹாரங்களைத் திருவுள்ளம்பற்றி, அவ்விரவில் தானே அங்குப்போகைக்கு ஹேதுவைக்காட்டாநின்றுகொண்டு, தாத்பர்யம் அருளிச்செய்கிறார் (அவ்விரவிலே இத்யாதி) y_2 (பிள்ளையாகவேண்டுகையாலே) என்றது—அவ்விரவில்தானே பிள்ளையாக வேண்டும்படி தபஸ்ஸைப்பண்ணுகையாலே என்றபடி. z திருவாய்ப்பாடியில் புகுகைக்கு யசோதாதிகளுடைய பாக்யத்தை ஹேதுவாகக் கீழ் அருளிச்செய்து, கம்ஸாதிகளுடைய தெளர்பாக்யம் ஹேதுவென்று அருளிச்செய்கிறார் (நாய் இத்யாதி) a, b, c "ஓர்" என்றத்துக்கு — ஏகத்வஸங்க்யாபரமாகக் கீழ் அருளிச்செய்து, அத்விதீயத்வவிவக்ஷயா அவதார ஹேதுவாகையாலே அதிஸ்லாக்யமென்றும், பிறந்தவிடத்திலிருக்கவொட்டாதபடியாலே அதிக்ரூரமானதென்றும், இரண்டு தாத்பர்யம் அருளிச்செய்கிறார் (அவ்விரவை இத்யாதி வாக்யத்ரயத்தாலே) இப்போது, "ஓர்" என்றதுக்கு க்ரமேண அந்வயமென்று கண்டு கொள்வது. d, e 'இரண்டு தாய்மார்க்கு ஒருவன் பிள்ளையாம்படி எங்ஙனே சேருவது?' என்ன. அருளிச்செய்கிறார் (ஒருத்தி இத்யாதி) பிள்ளையாகையால் வந்த ரஸம் இருவர்க்கும் துல்யமாகையாலே பிள்ளையாகைக்குத் தட்டில்லை யென்று கருத்து. h, i ஒளித்து வளரு

சி. அ. பிறவிக்கும் வாசி ஏது?" என்) னநம்முடைய கர்மம் இத்யாதி) x, y, z, a "ஓரிரவில்" என்கிற இடத்தில் 'ஓர்' என்ற ஶப்தத்துக்கு இரண்டு பொருள்; இவர்களுடைய பாபாதிக்யம் ஒருராத்ரியாகிலும் தங்கவொட்டிற்றில்லை என்னுதல்; அன்றிக்கே ஈஶ்வரேச்சையா அத்விதீயமானராத்ரியென்னுதல், y,z ஒரு ராத்ரியிலே போகைக்கு ஹேது இரண்டு — பிள்ளையாகைக்காதல், தண்மையாலேயாதல்; இதை அருளிச்செய்கிறார் (அவ்விரவில் இத்யாதி வாக்யத்வயத்தாலே) c (அவர்கள்) ஸம்ஸாரிகள்; (அவர்கள் தங்களோபாதியும் பெற்றிலன் என்கை) என்றதுக்குத் தாத்பர்யம்—ஸுதகம் பத்துநாளாகிலும் பிறந்த க்ருஹத்திலே கிடப்பார்கள் லௌகிகஶுத்ரர்கள் என்றபடி. f, g 'ஆய்' என்றதுக்குத் தாத்பர்யம்

j நாட்டார் செய்வன செய்யப்பெருதே கள்ளர்பட்டது படுவதே! k திருவவத ரித்திருக்கச் செய்தே அந்தர்யாமிபட்டது படுவதே! l உள்ளேயிருக்கச்செய் தேயும் இவனில்லை என்று l₂ எழுத்திடுமவன், முகங்காண ஸம்மதிக்குமோ? என்கை. m அந்தர்யாமியாய் மறையநிற்கிறது — பிச்சேறின ப்ரஜை தாய் முன்னேநிற்கில் தாயைக் கொல்லும்;— அவள் பேரநிற்கில் தன்னே முடித்துக் கொள்ளும் ;— அதுக்காக முகந்தோற்றுதே நின்று, இரண்டுதலையையும் நோக்கும் மாதாவைப்போலே, இசைந்து 'அம்மே!' என்றுல் ஏன் என்கைக்குக் கிட்டவிருக்கிறபடி என்றுமாம். n பேர்சொல்லாதே ''ஒருத்தி'' என்றது— n₂ A ''அத்தத்தின் பத்தாநாள்'' என்றவர்மகளாகையாலே ப₄யத்தாலே ஒளிக்கிருள். n₃ அபி₄சரிக்கிலும் அதுவோ இதுவோ என்று ஸந்தே₃ஹிக்கைக்காக.

o (தரிக்கிலானுகி) p 'க்ருஷ்ணன் வ்ளராநின்ருன்' என்று கேட்ட பின்பு அவன் த₄ரிக்கமாட்டிற்றிலன். q ஈஶ்வரஸத்தையையும் பொருத ஆஶ்ரயமிறே. r (தான் தீங்கு நினைந்த) s ப₄யத்தாலே பரிந்து மங்க₃ளாஶாஸநம் பண்ணும் விஷயத்திலே தீங்கு நினைத்தது, து₃ஷ்ப்ரக்ருதியாகையாலே. (தான்) t உத்தரக்ஷணத்திலே படப் புகுகிற பாடறியாத தான். (தீங்கு நினைந்த) தங்கள் வாயாலே சொல்லமாட்டாமையாலே'' தீங்கு'' என்கிருர்கள். அதாவது— பூதனையுள்ளிட்டாரை வரக்காட்டியும், வில்விழவுக்கு என்று அழைத்தும்

பெ.அ. கைக்கு ஹேது அருளிச்செய்கிருர் (கம்ஸன் இத்யாதி₃) j, k இவன் அவதரிக்குமிடத்தில் விஷத்₃ருஷ்டி ப்ரஸக்தமாய் ஒளிக்கவேண்டிற்றே என்று கோபிமாருடைய ஈடுபாடாகத் தாத்பர்யம் அருளிச்செய்கிருர் (நாட்டார் இத்யாதி₃ வாக்யத்₃வயத்தாலே) h, l, m ''ஒளித்து வளர'' என்றதுக்கு ஸ்வாபதே₃ஶம் அருளிச்செய்கிருர் (உள்ளே இத்யாதி₃ வாக்யத்₃வயத் தாலே) n கீழே ''ஒருத்தி'' என்றதுக்கு அஸத்₃ருஶையென்று ஒரு தாத்பர்யம் அருளிச் செய்து, நாமக்₃ரஹணம் பண்ணுதே, ''ஒருத்தி'' என்று ஸாமாந்ய ஶப்₃த₃ம் ப்ரயோகி₃க் கிருர்களென்று அதுக்கு ஹேதுபூர்வகம் தாத்பர்யம் அருளிச்செய்கிருர் (பேர்சொல்லாதே இத்யாதி₃) தே₃வகிமகனுயென்றும் யசோதைமகனுயென்றும் சொல்லுமிடத்தில், இவனு டைய ஏற்றமெல்லாம் அறிந்து உகவாதார் ஏதேனும் தீங்கு நிணைப்பரென்னும் ப்ரேமாதிஶ யத்தாலே அஞ்சி மறைத்து அநாத₃ரம் தோற்றச் சொன்னுர்கள் என்று கருத்து.

o, p 'திருவாய்ப்பாடியிலே ஒளித்துவளர, இவன் த₄ரியாதிருக்கை எங்ஙனே?' என்ன, அருளிச்செய்கிருர் (க்ருஷ்ணன் இத்யாதி₃) q ஸ்வாபதே₃ஶத்திலே தாத்பர்யம் அருளிச்செய்கிருர் (ஈஶ்வரஸத்தை இத்யாதி₃) உன் ஹ்ருத₃யத்தில் அந்தர்யாமியிருக்கிரு னென்றுல் 1. ''ஈஶ்வரோSஹம்'' என்திருக்குமவன் ஸஹியானென்று ஒரு தாத்பர்யம். r, s, t ''தான்'' என்றதுக்கு — து₃ஷ்ப்ரக்ருதியென்று ஒரு தாத்பர்யம் அருளிச்செய்து,

சி.அ. (பிறப்பில் புகரயித்யாதி₃) l₂ (எழுத்திடுமவன்)க்குமிகண்ட₂ாதி₃கள். n₂ A ''அத்தத்தின் பத்தாநாள்'' என்ற பாசுரத்துக்குத் தாத்பர்யம் ஹஸ்தநக்ஷத்ரத்துக்குப் பத்தாவதுநாள் என்றபடி. n₃ பரிவராகையாலே, கீழுக்குப்பத்தாநாளோ, மேலுக்குப்பத்தாநாளோ என்று ஸந்தே₃ஹிக்க அருளிச்செய்தாரென்கிருர் (அபி₄சரிக்கிலுமித்யாதி₃) நாள்-நக்ஷத்திரம், r, s, t ''தான்'' என்றதுக்கு இரண்டு பொருள் ஆஸுரப்ரக்ருதியான தான் என்னுதல்;

A பெரியாழ் திரு 1-2-6.

நலியத் தேடினபடி. u (கருத்தைப் பிழைப்பித்து) v பூதநை முதலானுர் நலிவுகளைப் பண்ணப்புக, அத்தைத் தப்பித் தன்னை நமக்குத் தந்தபடி; w அவன் நினைவை அவன்தன்னேடே போம்படி பண்ணி என்றுமாம். (கஞ்சன் இத்யாதி3) கம்ஸன் அநாதி3காலம் ஸஞ்சிதமான பாபமித்தனையும் கண்ட காட்சியிலே அநுப4வித்து அறும்படி நின்றவன். x ஆஶ்ரிதர் வயிற்றில் நெருப்பைக் கம்ஸன்வயிற்றில் கொளுத்தினவனென்கை. அதாவது — ப4யாக்3நி கொளுத்துகை. y (நெடுமாலே) z இதெல்லாம் படவேண்டிற்று ஆஶ்ரிதர்பக்கல் வ்யாமோஹத்தாலே யென்கை. a அப்போது ஶ்ரீவஸுதே3வர்பக்கலிலும் ஶ்ரீதே3வகியார்பக்கலிலும் திருவுள்ளம் மண்டினபடி என்றுமாம்.

(உன்னை) b அர்த்தி2த்வத்தில் நிரபேக்ஷனை உன்னை; c ஶ்ரீவைகுண்ட2த்தில் நின்றும் இரப்பாளனுய் இவ்வளவும் வந்தது ஆர் அபேக்ஷித்து? d (நெடுமாலே உன்னை அருத்தித்து வந்தோம்) e பண்டே வ்யாமுக்3த4னை உன்னை e2 அர்த்தி2க்கையாலே பிச்சின்மேலே பிச்சேற்ற வந்தோம். f அர்த்தி2த்வத்தின் f2 அளவு f3 எங்கள் வடிவைப் பார்க்க அமையும்.

(பறை தருதியாகில்) எங்களுக்கு உத்3தே3ஶ்யம் செய்குதியாகில். "ஆகில்" என்றது — நம்முடைய அர்த்தி2த்வாதி3கள் அப்ரயோஜகம்; அவன் நினைவாலே ப2லமென்கை. g உன்னழகாலே பிழைப்பியாதே செய்தருளப் பார்ப்பாயாகில் என்னவுமாம்.

பெ. அ. தாத்பர்யாந்தரம் அருளிச்செய்கிறார் (உத்தரேத்யாதி3) u, v, w "கருத்தை—மநஸ்ஸை, பிழைப்பித்து — பிழையாக்கி — பொய்யாக்கி" என்று ஶப்3த3ார்த்த2மாய், இரண்டுவித4மாகத் தாத்பர்யம் அருளிச்செய்கிறார் (பூதநை இத்யாதி3 வாக்யத்3வயத்தாலே) w (அவன் நினைவை அவனேடே போக்கினபடி) என்றது — அவன் நினைவு அவனிடத்தில் ப2லத்தைக் கொடுக்கும்படி தான் ஸங்கல்பித்து என்றபடி.

b, c அர்த்தி2த்வ நிரபேக்ஷனுகையை உபபாதி3க்கிறார் (ஶ்ரீவைகுண்டே2த்யாதி3) d, e, f "நெடுமாலே வந்தோம்" என்று சொல்லவே, இவர்களாசை எத்3த4மாயிருக்கவும் "அருத்தித்து" என்று சொன்னது — பேராசையாக வந்தோமென்று விவக்ஷித்து, ஆசையினுடைய பெருமை எவ்வளவு என்னும் ஸங்கையை அருளிச்செய்கிறார் (அர்த்தி2த்வத்தின் இத்யாதி3)

சி. அ. அர்த்தி2னை தான் என்னுதல். u, v, w "கருத்தைப்பிழைப்பித்து" என்றதுக்கு இரண்டு பொருள் – பூதநை முதலானுர் தன்னை நலிகைக்கு நினைத்த நினைவில்நின்று தன்னைத் தப்புவித்து என்னுதல்; அன்றிக்கே, கம்ஸனுடைய நினைவை மாறுடப்பண்ணி என்னுதல். x (ஆஶ்ரிதர் வயிற்றில்) என்றது தே3வகீவஸுதே3வாதி3கள், y. z, a "நெடுமாலே" என்றது பூர்வப4ாவியாதல். அபரப4ாவியாதல். e2, f "அர்த்தி2க்கையாலே" என்றதுக்கு உங்களுக்கு அர்த்தி2த்வமுண்டென்கிறது நானறியும்படியென்? என்ன அருளிச் செய்கிறார் (அர்த்தி2த்வத்தின் அளவு இத்யாதி3) f2 அளவு-ப்ரகாரம். f3 (எங்கள் வடிவை) என்றதுக்குத் தாத்பர்யம் 1. "ஏஹி பஶ்ய" என்னுமாபோலே அபேக்ஷையின் மிகுதி வடிவிலே தொடக்கொள்ளும்படியிருக்கை, g அழகாலே பிழைப்பிக்கையாவது – ஸௌந்த3ர்யமும்

h (திருத்தக்கசெல்வமும்) i 1. "யஸ்ய ஸா ஜநகாத்மஜா—அப்ரமேயம் ஹி தத்தேஜ:" என்று ஸ்ரீய:பதித்வத்தால் வந்த ஸம்பத்தையும்; j பிராட்டி ஆசைப்படும் ஸம்பத்தென்னவுமாம். (சேவகமும்) அத்தைக் k காத்தூட்ட வல்ல வீர்யம். (யாம்பாடி) உன் பேர் சொல்லப்பெறுத நாங்கள் உகப்போடே அத்தைச்சொல்லி. l (வருத்தமும் தீர்ந்து) m உன்னைப்பிரிந்து படும் து3:க்க2மும் தீர்ந்து; n பிரிந்தார்படும் பாடறிய உன்னை நீ பிரிந்தறியாயே? o (மகிழ்ந்து) p கைவல்யம்போலே து3:க்க2நிவ்ருத்திமாத்ரமேயன்று, ப்ரீதிக்குப் போக்கு விடும்படியாகவேணும். 25.

பெ. அ. h, i 'திருவாலே தக்க செல்வத்தை' என்று ஸப்3த3ார்த்த2ம் திருவுள்ளம்பற்றி, தாத்பர்யம் அருளிச்செய்கிறார் (யஸ்யேத்யாதி3) 'தத்தேஜ:' என்றது — ஸமஸ்தமாய், தஸ்ய தேஜ: என்று சொல்வது. h, j 'திருவுக்குத் தக்க செல்வம்' என்று விவக்ஷித்துத் தாத்பர்யம் அருளிச்செய்கிறார் (பிராட்டி இத்யாதி3) k 'காத்தூட்ட' என்றது — ரக்ஷித்து அநுப4விப்பிக்க என்றபடி.

l, m, n "வருத்தமும்" என்ற சகாரத்தால் — மிகவும் து:ஸ்ஸஹதை தோற்றுகையால் அதின்படி எங்ஙனே? என்னும் ப்ரஸ்நத்திலே, அது சொல்லத்தரமன்று, அநுப4வித்தே அறியவேணும்; அது உன்னால் அறியப்போகாதென்று உத்தரம் திருவுள்ளம்பற்றி அருளிச்செய்கிறார் (பிரிந்தார் இத்யாதி3) 25.

சி. அ. அந்தராயம் என்கை. h, i திருத்தக்கசெல்வம்—திருவாலேதக்கது—உள்ளதென்னுதல்; ஸ்ரிய:பதித்வத்தால் வந்த ஸம்பத் என்றபடி. h, j திருவுக்குத் தகுதி என்னுதல்; A "திருவுக்கும் திருவாகிய", 2. "க: ஸ்ரீ: ஸ்ரிய:" இத்யாதி3ப்படியே. m, n நம்முடைய விஸ்லேஷத்தில் து3:க்க2ம் அதிசயித்திருக்குமோ? என்ன அருளிச்செய்கிறார் (பிரிந்தார்படும்பாடித்யாதி3) o, p ஆனால் கேவலனைப்போலே 3. 'ஜராமரண மோக்ஷாய" என்று து3:க்க2நிவ்ருத்தி மாத்ரம் போருமோ? என்ன, அருளிச்செய்கிறார் (மகிழ்ந்து—கைவல்யம்போலே இத்யாதி3) "பறைதருதியாகில், அருத்தித்துவந்தோம்—மகிழும்படி பண்ணவேணும்"என்று அந்வயம். 25.

ஆறுயிரப்படி — இருபத்தைந்தாம்பாட்டு

அவ:— இருபத்தஞ்சாம்பாட்டு. "பெண்காள்! உங்களுக்குப் பிறப்பாலே நம் விஷயத்துக்கு மங்க3ளாசாஸநம் பண்ணுகை ஸ்வரூபமிறே; இக்குளிரிலே உங்களைப்பேணாதே க்லேஸித்து வந்திகோளே; உங்கள் நெஞ்சிலோடுகிறது வெறும்பறையேயோ, வேறேதேனுமுண்டோ?" என்ன; "உன்னுடைய கு3ண கீர்த்தநம் பண்ணிக்கொண்டு வருகையாலே ஒரு க்லேஸங்களும் படாதே ஸுக2மே வந்தோம்; 'பறை' என்று ஒரு வ்யாஜத்தையிட்டு நாங்கள் உன்னையிறே அர்த்தி2த்து வந்தது என்கிறார்கள். "'பறைகொள்ளவந்தோம் இரங்கு' என்று நம்மை வடிம்பிடாநின்றிகோள்; நீங்கள் சொன்னபோதாகச் செய்யப்போமோ? ப்ரதிப4ந்த4கங்கள் உண்டாயிருக்குமே" என்ன; "ப்ரதிப4ந்த4கங்களைப் போக்கி அரியது செய்த உனக்கு எளியது செய்யத் தட்டுண்டோ? எங்களோடு ஸஜாதியரிலே சிலர் நோற்றுப் பெற்றது (எங்கள் நோன்பு) ப2லித்தபடியன்றே" என்கிறார்கள்.

A பெரிய திரு 7-7-1.

வ்யா :— (ஒருத்திமகனுய்) ஒருவன் ஸாதுநாநுஷ்டாநம் பண்ணி மாணிக்கப்போலே நாலுபிள்ளைகளைப் பெற்றுற்போலே, நால்வருங்கூட தபஸ்ஸு பண்ணி ஒருவனைப் பெருநிற்கச்செய்தே, பேறு ஒருத்தியதாகையாலே 'ஒருத்தி' என்கிறார்கள். காரணவாக்யங்கள் A "ஊழிமுதல்வன் ஒருவனே" என்கிற வஸ்துவை, யயிற்றிலே அடக்கப்பெற்றாள் ஒருத்தியிறே. (ஒருத்தி மகனுய்) ஸர்வலோகங்களுக்கும் ஸர்வபூதங்களுக்கும், B முந்நைத்தாய்தந்தையாயிருப்பா னொருவனைத் தனக்குப் பிள்ளையாகப் பெறுகைக்கு நோன்பு நோற்க, ஜகத்துக்கு ஸேஷிபுமாய், ஸர்வவ்யாபகனுமாய், நித்யனுமாயிருக்கிற C மகனொருவர்க்கல்லாத மாமேனிமாயன், சிலர் அபேக்ஷித்ததுக்காக மகனுனென்னுமளவன்றிக்கே, "தேவகி புத்ரன்" என்றே தன்னை நினைக்தும்படி (அவ்வருகு தனக்கொரு ஏற்றமுண்டென்று அறியாதபடி பிள்ளையானுன்.

பிறந்து) சிலர் "மகனுகவேணும்" என்று ஆசைப்பட்டால் தூணிலே தோற்றி முற்போலேயாதல், ஆனைக்குதவினுற்போலேயாதல் வந்து உதவ அனைத்திருக்க ஈச்வரனே வந்து பிறக்கவேணுமென்று நோற்றபடியாலே, பூர்வ நத்தாதுஸந்தாநமின்றியே கர்ப்பவாஸம் பண்ணிப் பிறந்து; 'உம்முடைய வயிற்றினின்றும் நாம் பிறந்தோமே' என்று ஸோபநஞ் சொல்லிக்கொண்டு பிறந்தான். (பிறந்து) கர்மவஸ்யர் படுவதெல்லாம்—க்ருபாபரதந்த்ரனுய்ப் படுவதே! என்று, தீமதாம் அக்ரேஸரர், D "பிறந்தவாறும்!" என்று — ஆழங்கால் படும்படியாய்த்துப் பிறந்தது. "ஆவிர்ப்பவித்தான்" என்கிறது கர்ப்பத்தில் தேஹஸ்பர்ஸமில்லை என்கைக்காக. நித்யஸூரிகள் ஸேவிக்கவிருக்கிறவன் ஸம்ஸாரத்திலே பிறந்த இக்குணம் இழக்கவொண்ணுதென்று ரிஷிகளெப்போதே ஆவிர்ப்பவித்தானென்று அவத்யஞ்சொல்லாதே 'நிறம்பெறும்படி பிறந்தான்' என்பர்கள் ஆழ்வார்கள். (மகனுய்ப்பிறந்து) மகனுகையாவது — மாதாபித்ருபர தந்த்ரனுகையிறே. பெருமாள் பக்வரானபின்பு மாதாபித்ருவசநபரிபாலநம் பண்ணினார்; இவன், பிறந்தபோதே, "ஆழ்வார்களையும் திருத்தோள்களையும் மறைக்கவேணும்" என்ன, உபஸம்ஹரித்தான்.

(ஓரிரவில்) பிறந்தவிடத்தில் ஓரிரவும் வஸிக்கப்பெற்றதில்லையிதே ஸம்ஸாரிகள் கீழ். நாய்க்குடலுக்கு நறுநெய் தொங்காதாற்போலே, ஸம்ஸாரிகள் தன்மை கர்ப்பக்ருஹத்தில் ஓராத் தங்கவொட்டிற்றில்லை. ஸம்ஸாரிகள் பிறந்தால் பெறுவதும் பெறப்பெற்றதில்லை. நால்வர் இருவர் அறிந்து ஸோபநஞ் சொல்லித் தூரியங்கொட்டி, கண்கண்டு நெய்யாடல் போற்றப்பெற்றதில்லை. ஸர்வேச்வரன் இங்கே வந்தால், நம்முடைய கர்மம் நம்மோடு அவனுக்கு

A திருவாய் 10-7-9 B திருவாய் 5-7-7 C மூன். திருவ. 92 D திருவாய் 5-10-1

ஸாம்யத்தைக் கொடுக்கும்; நாம் அங்கே சென்ருல் அவனுடைய க்ருபை அவனேடு பரமஸாம்யத்தைத் தரும். A "இணைவனு மெப்பெருட்கும்" B "தம்மையே ஒக்க அருள்செய்வர்". நம்பிறவி அவனை அகற்றும்; அவன் பிறவி அனுகுகைக்கு உடலாம். அவன் பிறவி நமக்கென்றுகோல, நம்பிறவி அவனைப் பெற்றவர்கள் காலில் விலங்கு பட்டது படும். (ஓரிரவில்) காலக்ருத பரிணமமில்லாத தேஃஹத்தில் வஸ்து காலாதீநமான தேஃஹத்திலே பிறந்து ஓரிரவிற்பட்டபாடு என்தான்! C [வீங்கிருள் வாய் பூண்டு] — அவ்விரவோடொத்த இரவு முன்புமில்லை, பின்புமில்லை. (ஒருத்திமகனுய்) அங்கேபிறந்து இங்கே வளர்ந்தானுயிருக்கையன்றிக்கே, இங்கே பிறந்தானுயிருக்கிறபடி. (ஓரிரவில் ஒருத்தி மகனுய்) அவ்விரவிலே யஶோதைஃப்பிராட்டிக்குப் பிள்ளையாக வேண்டுகையாலே, ஒருத்திக்கு அவதாரரஸத்தைக் கொடுத்து, ஒருத்திக்கு லீலாரஸத்தை அநுபவிப்பித்தான். (ஒருத்திமகனுய்) அவ்விடத்தில் முலைச்சுவடறியாமல் போந்த படியாலே, அழுது முலைப்பால் குடித்தவிடமிறே பிறந்தவிடமாவது. திருப்பர்திஷ்டை பண்ணினவர்களிலுங் காட்டில் ஜீர்ணோத்தாரணம் பண்ணினவர்களிறே முக்யர். யாதவத்வத்தையும் கோபத்வத்தையும் ஏககாலத்திலே ஆக்கினுன். 1. "யதுகுலோத்பவ"னென்ற ரிஷிதானே, 2. "கோபாலன்—யாதவ குலத்தை எடுக்கக்கடவன்" என்றுமிறே. "அவளுக்கு முலைசுரவாநின்றதாகில் இவன் அழுது முலையுண்ணுநின்றுனுகில் உமக்குச் சேதமென்?" என்று பட்டர். யஶோதைஃப்பிராட்டியாக பூதனை பாவித்து, இவனுண்ணுதபோது மூலைவிரியும்படியான தஃஶையையுடையளாய், பிள்ளையாகக்கொண்டெடுத்து முலை கொடுக்க, அதுபெறுவிடில் வயிறுராதபடியாய் இவனும் முலையுண்ண, இவனை "பிள்ளை" என்று அவள் விஶ்வஸிக்க வொண்ணுதே துணுக்குத் துணுக்கென்னும்படி இவளாக பாவித்து அவள்பக்கல் பரிமாறுமவன் இவள்பக்கல் பிள்ளைத்தனத்தில் தப்ப நில்லானே. D "மகனைக் கொண்டெடுத்தாள்" இத்யாதி. (ஒருத்திமகனுய்) அவள் இங்கேற நியமித்துப்போகவிட்டமாத்ரம்; இவள் "காடேறப்போ" என்னலாம்படியிருக்கை. E "கன்றின்பின் எற்றுக்கென் பிள்ளையைப் போக்கினேன்". அஶேஷஜகத்துக்கும் மாஸிதாவான—வஸ்து இவள் கட்டவுமடிக்கவுமாம்படி நியமிக்கலாய்த்திறே.

(மகனுய்) அங்கு பிள்ளையாகப் பெற்றவளுக்காய்த்து இழவுள்ளது. F [நந்தன் பெற்றனன்] யஶோதைஃப்பிராட்டி கைப்பிடித்த பாக்யாதிகர் பெற்ருர்; என்னைக் கைப்பிடித்த முஹூர்த்தத்தாலே ஶ்ரீவஸுதேவர் இழந்தார். G [மருவுநின் திருநெற்றி] திருப்பவளத்திலே முலையைக் கொடுக்கப் புக்கவாறே. திருநெற்றியில் சாத்தின சுட்டியிலசைவையும் முறுவலையுங் கண்டு

A திருவாய் 2-8-1, B பெரிய திரு 11-3-5, C திருவாய் 6-4-5, D இர-திருவ 29. E பெரியாழ்-திரு 3-2-2. F பெரு-திரு 7-3. G பெரு-திரு 7-5.

தமப்பனுரைக் கொண்டானென்று அகவாய் பணைக்கும்; அந்த ப்ரீதியாலே தனக்கும் வாசி தெரிக்கவொண்ணுத விரலே வாயிலே இட்டுக்கொண்டு ஒரு வார்த்தை சொல்லும்போது பெரிய ஏற்றத்தோடே தொடங்கின மழலைச் சொல்லும் பாக்யஹீனையான நானிழந்தேன்; பாக்யவதியான அவள் பெற்றுப் பூணையானுள். (ஒருத்திமகனுய்) கம்ஸன் முடிந்து பழைநாள் பட்டிருக்கச் செய்தேயும், 'இன்னுள்' என்னுதே மறைத்துப் போருகிறார்கள் பொல்லாங்கு விளையுமென்னும் அச்சத்தாலே. A "பத்தாநாள்" என்னுமாபோலே. (ஒருத்தி) B "என்னநோன்பு நோற்றுள் கொலோ இவனைப் பெற்ற வயிறுடையாள்" C "ஞாலத்தில் புத்திரனைப் பெற்றார் நங்கைமீர் நானே மற்றருமில்லே".

(ஒளித்துவளர) பிறந்தவிடத்திலே தோன்றப்பெறுவிட்டால் போந்தவிடத்திலே வெளியிலே வளரப்பெற்றதோ? விஷத்ருஷ்டிகளான பூதநாதிகள் கண்பட வொண்ணுதென்று நாட்டார் செய்வன செய்யப்பெறுதே, நிலவறைகளிலேயிறே வளர்ந்தது. D 'வானிடைத் தெய்வங்கள் காண" என்று — அநுகூலர்கண்ணுட் படப் படவொட்டாதவள் ப்ரதிகூலர் கண்படவொட்டுவளோ? E "கன்றின் பின் போகேல்" என்று புறப்படவொட்டாள். (ஒளித்துவளர) உகப்பார் ஸதாதர்ஶநம் பண்ணி அநுபவிக்கக்கடவ வஸ்து, கண்ணுக்குத்தோற்றுதபடி மறைக்க வேண்டும்படி கள்ளர்பட்டது படுவதே! அவதரித்திருக்கச்செய்தே அந்தர்யாமி பட்டது பட்டான். (ஒளித்துவளர) உள்ளேயிருக்கச்செய்தேயும் "இவனில்லே" என்று எழுதி எழுத்திடுமவன் முகங்காட்ட ஸம்வதிக்குமோ? பிச்சேறின ப்ரஜை முன்னே தாய் நிற்கிலும் கொல்லும்; இவள் பேரநிற்கில் தன்னே முடித்துக் கொள்ளும்; அப்படியே அவதரிக்கில் எதிரிடுவார்கள். பரமபதத்தி லிருக்கில் அஸத்கல்பராவர்கள், அந்தர்யாமியாய் முகந்தோற்றுதே நின்று இரண்டுதலையையும் நோக்கித் தெளிவுபிறந்து, "அம்மே!" என்றுல் "ஏன்" என்கைக்குப் பகிக்கிடை கிடக்கிறபடி.

(ஒளித்துவளரத்தரிக்கிலானுகி) நாரதாதிகள் சென்று உன்னுடைய ஶத்ரு திருவாய்ப்பாடியில் வளராநின்றுனென்று சொல்லக் கேட்ட மாத்ரத்திலே "நம் கண்வட்டத்திலில்லையாகில் அவன் என்செய்யிலென்?" என்றிராதே, 'சதுரங்க பலோபேதனுய் ஐஶ்வர்யத்துக்கு ஹானியின்றிக்கேயிருந்தோமாகில் வந்தவன்று பொருகிறேம்' என்று ஆறியிராதே தரிக்கமாட்டிற்றிலன், அஸஹ்யாபசாரமாவது— பகவத்பாகவத விஷயமாக அவர்கள்ஸத்தையும் பொருதொழிகையிறே.

A பெரியாழ் திரு 1-2-6, B பெரியாழ் திரு 2-2-6, C பெரியாழ் திரு 3-3-1,
D பெரிய திரு 10-4-8, E பெரியாழ் திரு 3-3-9.

கப்ஸவதத்தளவும் அநுஸந்தித்தவர்களாகையாலே மேலே படப்புகுற மாட்டை அநுஸந்தித்து---கூத்தரனுன பையல்தானே ஸிம்ஹத்தோடே நரி எதிரிடுமாபோலே எதிரிட்டவன் சிறுமையைச் சொல்லுகிறார்கள் – (நீங்கு) பரியவேண்டிய விஷயத்திலே பொல்லாங்கை நினைப்பதே! என்ன துஷ்ப்ரக்ருதிதான்! இன்னதென்று தன்வாயால் சொல்லமாட்டாமையாலே "நீங்கு" என்கிறார்கள். அதாவது—பூதனைபுள்ளிட்டாரை வரக்காட்டியும், '(வில்விழவுக்கு)' என்றழைத்தும் நலியத்தேடினவை எல்லாவற்றையும் நினைத்து. (நினைந்த) இதுக்கு மநஸ்ஸஹகாரமுண்டாவதே! A "சிந்துதியினுலிகழ்ந்த" என்கிறபடியே உக்திமாத்ரமானவளவில் தலியாதே நெஞ்சில் பொல்லாங்கு ஸோதித்தாலாய்த்துக் கைவிடுவது. கைக்கொள்ளுமிடத்தில் கழுத்துக்கு மேலும்அமையும்; கைவிடுமிடத்தில் அகவாயிலுண்டென்றறிந்தாலல்லது விடான். (நீங்கு நினைந்த) B இயபுந்திக்கஞ்சனிறே. (கருத்தை) அம்மானுய், கண்ணைநீர் விழவிட்டிருக்க நினைத்த அபிப்ராயத்தை. (பிழைபபித்து) அவன் நினைவை அவன்றன்னேடே போம்படிபண்ணி.

(கஞ்சன் வயிற்றில் நெருப்பென்ன நின்ற) "க்ருஷ்ணன்" என்றுல் மயிறெரித்தலோடேயிருக்கக்கடவ பெண்களுடைய பயத்தையெல்லாம் அவன் வயிற்றிலேயாக்கினபடி. (கஞ்சன் வயிற்றில்) கப்ஸனுடைய தப்புக்களை நினைத்து, C "என்செய்யவென்னை வயிறு மறுக்கினுய்" – B "வாழகில்லேன் வாசுதேவா" D "ஊடுறவென்னுடையாவி வேமால்" என்கிற — ஆஸ்ரிதருடைய பயாதிகளையெல்லாம் கப்ஸன் வயிற்றில் கொளுத்தினன். (கஞ்சன்வயிற்றில்) தேவகியார் வயிற்றில் பிள்ளை,—கப்ஸன் வயிற்றில் நெருப்பு. (நெருப்பென்ன) E [கஞ்சன் தான்கவர் கருமுகிலெந்தாய்] — தேவகியார் வயிற்றில் நீரைச்சொரிகிறவன் காணும், கம்ஸன் வயிற்றில் நெருப்பைச் சொரிகிறன். (நெருப்பென்னநின்ற) F "கஞ்சனைக்காய்ந்த காளமேகத்திருவுருவன்". (நெருப்பென்னநின்ற) கம்ஸன் அநாதிகாலம் ஸஞ்சிதமான பாபமித்தனையும் கண்ட காட்சியிலே அநுபவித்தறுதிபடி நின்ற நிலை. (நெடுமாலே) இதெல்லாம் படவேண்டிற்று ஆஸ்ரிதர் பக்கல் வ்யாமோஹத்தாலே. (நெடுமாலே) அப்போது ஸ்ரீவஸுதேவர்பக்கலிலும் ஸ்ரீதேவகியார்பக்கலிலும் திருவுள்ளம் மண்டி, G "ஒன்றுங் கண்டிடப் பெற்றிலேன் — காணுமாறினி யுண்டெனிலருளே") என்று — அவள்பட்ட இழவுகளெல்லாம் தீர முலைப்பால் திருமேனியிலே பாய அவளுக்கு நின்று பாலசேஷ்டிதங்களைக் காட்டின வ்யாமோஹத்தை அவள்தான் காண்பதற்கு முன்னே மஞ்சங்களில் பெண்கள் கண்டு வாழும்படி பண்ணின வ்யாமோஹாதிஸயத்தை "நெடுமாலே" என்கிறது. H "கஞ்சனைஞ்சமன் கால் விரைத்த காளையராவர் — அச்சோவொருவாழகிலவா" என்றிறே பெண்கள் பார்த்துக்கொடு நின்றது.

A திருவாய் 2-6-6 B பெரியாழ்-திரு 2-2-5 C பெரியாழ்-திரு 3-3-6 D திருவாய் 10-3-10 E பெரு-திரு 7-10 F பெரிய திரு 4-10-4 G பெரு-திரு 7-9 H பெரியதிரு 9-2-6.

"நாம் அவ்விடத்தில் அப்படி செய்த நிமையுண்டு, உங்களுக்குச் செய்ய வேண்டுவதென்?" என்ன — (உன்னையருத்தித்து) எங்களுக்குப் பிறந்து காட்டவும் வேண்டா, வளர்ந்து காட்டவும் வேண்டா, கொன்று காட்டவும் வேண்டா. உன்னைக் காட்டவமையும். (உன்னையருத்தித்து) உன் பக்கலிலே ஒன்று வேண்டி வந்தோமல்லோம், உன்னை வேண்டி வந்தோம். (உன்னையருத்தித்து) A "என்னையாக்கிக் கொண்டெனக்கே தன்னைத்தந்த") என்று அர்த்தித்வ நிரபேக்ஷமாக அர்த்திகளையுமுண்டாக்கி உன்னையுங் கொடுப்புதியிறே; உன்னுடைய ஔதார்யமெல்லாம் அஸத்கல்பமாக்கி ஸ்ரீ வைகுண்டத்தில் நின்றும் இரப்பாளனுய் வந்தது ஆரபேக்ஷித்து? (நெடுமாலே உன்னையருத்தித்து) பண்டே வ்யாமுக்தனுனவுன்னை அர்த்திக்கையாலே பெரும்பிச்சின் மேலே பிச்சேற்ற வந்தோம். (வந்தோம்) எங்கள் மிகைச்செயல் கண்டாயே, உன் வ்யாமோஹமெல்லாம் அத்யவேஷமென்னும்படிக்கீடாய் நாங்கள் வந்தது. (வந்தோம்) B "எதிர் சூழல்புக்கு", C "ஆள்பார்த்துழிதந்து", D "ஆயர்குலத்தினில்" தோன்றின உன் வ்யாமோஹமெல்லாம் நாலடியிட்டு அஸத்கல்பமாக்கினேனும்.

"பறைகொள்வான் இன்று யாம் வந்தோம்" என்று சொல்லுவது, "உன்னை அருத்தித்து வந்தோம்" என்பதாய் வ்யாஹதமாக வார்த்தை சொல்லுகிறோமென்ன; (பறை தருதியாகில்) எங்களுக்கு உத்தேச்யம் செய்ய நினைவாகில். (உன்னை யருத்தித்து வந்தோம்) பறைக்குப் பொருள் மேலே சொல்லப்போறே யிருக்கிறது. (தருதியாகில்) அவர்கள் அர்த்தித்வம் அப்ரயோஜகம், அவன் நினைவாலே படலமென்கைக்காக "ஆகில்" என்கிறது. இவன் எல்லாஞ் செய்தாலும் அவன் "அல்லேன்" என்றவன்று ஸ்வதந்த்ரனே வகுப்பிடவொண்ணாதே. இவர்களர்த்தித்வம் அவன் ஸ்வாதந்த்ர்யத்தைப் போக்கமாட்டாதே. ஆகையாலே "தருதியாகில்" என்கிறார்கள். எத்தனையேனும் மேலானவர்களை எத்தனையேனுந் தாழ்ந்தவர்கள் "திருவுள்ளமாகில் செய்தருள வேணும்" என்றிறே சொல்லுவது.

"ஆகிறது; நினைவுகருக்கமொழிய அறிந்தோம்; வந்தபடிதான் என்? வருகிறபோது க்லேசித்திகோளே" என்ன; "ஒரு க்லேசமுமின்றியிலே உகப்போடே வந்தோம்" என்ன; "பிரிந்திருக்கிற நீங்கள் உகப்போடே வந்தபடியெங்ஙனே" என்ன — (திருத்தக்க) ஸ்ரீய: பதித்வத்தால் வந்த ஸம்பத்தையும். பிராட்டியை எனக்கு என்னும் பெருமையுண்டாம்போது அவளாசைப்பட்டு மேல் விழுப்பு அதுக்கீடான ஸம்பத்துண்டாக வேணுமிறே. (திருத்தக்க செல்வமும்) "செல்வச்சிறுமி" (1)ரான இவர்களுக்குச் செல்வு தக்காப்போலே, E "போதமர்

A திருவாய் 2-7-11, B திருவாய் 2-7-6, C நான்-திருவ 60, D பெரியாழ் திரு 1-7-11
E பெரியாழ் திரு 2-8-10.

செல்வக்கொழுந்தான'' பெரியபிராட்டியாருக்குத் தகுதியாயிருக்கும் A செல்வத் தினில் வளர்பிள்ளையுடைய செல்வு. (சேவகமும்) அவ்வைஶ்வர்யத்தைக் காத்தூட்டவல்ல ஆண்பிள்ளைத்தனமும். பிராட்டியுடைய விரோதிகளையும், பெண் களுடைய விரோதிகளையும் போக்கி, உபயவிபூதியைஶ்வர்யத்தையும் காத்தூட்ட வல்ல வீர்யம். ''என்றென்றும் சேவகமே யேத்தி'' (24) என்கிறவிடத்தில் இரண்டு முண்டிறே. (செல்வமும் சேவகமும்) ''ஆற்றப்படைத்தான்மகனே'' (21) என்றதுவும், ''கப்பந்தவிர்க்கும் கலியே'' (20) என்றதுவும்.

(ப்ராப்பாடி) உன்பேர் சொல்லப்பெறுத நாங்கள் உன் பேர் சொல்ல வொட்டாதார் முன்னே உகப்போடே பாடி. ''புள்ளின்வாய்கீண்டானை'' (13) என்று — ஊரெல்லாம் பாடிக் கொண்டு திரிகிறோர்களிறே. (வருத்தமும் தீர்ந்து) உன்னைப் பிரிந்து நெடுநாள்பட்ட க்லேஶமெல்லாம் தீர்ந்து. (மகிழ்ந்து) கேவலரைப் போலே துஃக்கநிவ்ருத்திமாத்ரமேயன்றே இவர்களுக்கு ப்ரயோஜநம்; பாடுகிறபோது ப்ரீதிக்குப் போக்குவீடாகையாலே அநுபவகாலத்தில் ஆநந்தஃம்போலே அநுஸந் தாநஸமயத்தில் ஹர்ஷம் கனக்கவுடையோமாய். (வருத்தமும் தீர்ந்து மகிழ்ந்து) B ''நினைந்திருந்தே சிரமந்தீர்ந்தேன்'', C ''உகந்தேயுன்னை யுள்ளுமென்னுள்ளம்'' என்கிறபடியே — அநுஸந்தாந காலத்தில் அநுபவகாலம் போலேயிறேயிருப்பது. D [தூயவமுதைப் பருகிப்பருகி] க்ருஷ்ணநுஸந்தாநம் தித்திக்குமிறே. ''வருத்தம்'' தீருகைக்குச் சேவகம் பாடினார்கள். மகிழ்ச்சி பிறக்கைக்குச் செல்வம் பாடினார்கள். ஸௌர்யவீர்யாதிகள் க்லேஶநிவ்ருத்திக்குடல்; ஐஶ்வர்யம் ஆநந்தஃஹேது. (பாடி வருத்தமுந் தீர்ந்து மகிழ்ந்து) E ''இசைமாலைகளேத்தி மேவப்பெற்றேன்—வெய்ய நோய்கள் முழுதும் வியன்ஞாலத்துவீய'', F ''வீவிலின்பம் மிகவெல்லை நிகழ்ந்த''. நம் விரோதி நிவ்ருத்தியுமுண்டாய்த்து; அபிமதலாபமுமுண்டாய்த்து. ''பாடி வருத்தமுந் தீர்ந்து மகிழ்ந்து. தருதியாகில், உன்னை யருத்தித்து வந்தோம்'' 25.

ஈராயிரப்படி — இருபத்தைந்தாம் பாட்டு

அவ:— இருபத்தஞ்சாம்பாட்டு. ''பெண்காள்! நோன்பொழிய உங்கள் நெஞ்சிலே ஒன்றுண்டு போலே'' என்ன, ''நாங்கள் உன்னை அர்த்தித்து வந்தோம்'' என்ன, ''என்னை அர்த்தித்துப் பெற்றருண்டோ?'' என்ன; ''எங்க ளோட்டையார் பெற்றருண்டு'' என்கிறார்கள்.

வ்யா:— (ஒருத்தி மகனுய்) ஸர்வலோகத்துக்கும் பிதாவானவன் ஒருத்தி மகனுகப் பெறுவதே! G ''மகனெருவர்க்கல்லாத மாமேனி மாயனிறே''. 1.''ஸ்து தோऽஹம் யத் த்வயா பூர்வம் புத்ரார்த்திந்யா ததஃத்ய தே। ஸப்லம் தேஃவி ஸஞ் ஜாதம் ஜாதோऽஹம் யத்தவோதஃராத்॥''. பித்ருவசன பரிபாலனம்போலே திருவாய்ப் பாடிக்கு வருகை. நம் பிறவி — நம்மையுமவனையும் அற்றுகைக்குடலா

A பெரியாழ் திரு 2-8-8 B பெரியாழ் திரு 5-4-8 C திருவாய் 9-4-7 D திருவாய் 1-7-3 E திருவாய் 4-5-2, F திருவாய் 4-5-3, G மூன்-திருவ 92.

யிருக்கும்; அவன் பிறவி இருவரையும் அணுகவைக்கைக்குடலாயிருக்கும். A "ஆதியஞ்சோதியுருவை அங்குவைத்திங்குப் பிறந்த"வனிறே. (பிறந்து) 1. "தேவகீ பூர்வஸந்த்யாயாம் ஆவிர்பூதம் மஹாத்மநா" B "பிறந்தவாறும்". C(ஓரிரவில்) ஸம்ஸாரிகளின் பொல்லாங்கு ஓரிராத் தங்கவொட்டிற்றில்லையென்கை. அவ்விரவையொத்த இரவுமில்லை. மாதா பிதாக்கள் கைவிட்ட வளவிலே காத்த ராத்ரியிறே. (ஒருத்தி மகனுயித்யாதி) இருவரும் அவனைப்பெறவேணுமென்று அபேக்ஷித்ததுக்கு அவளுக்கு அவதாரரஸத்தைக் கொடுத்து, இவளுக்கு லீலா ரஸத்தை அனுபவிப்பிக்கிறபடி.. (ஒளித்து வளர) விஷத்ருஷ்டிகள் படாமே, நாட்டார் செய்வன செய்யப் பெருதேகள்ளர் பட்டது படுவதே! அந்தர்யாமி பட்டது படுவதே! (ஒளித்து வளரத்தரிக்கிலானுகி) ஈச்வரஸத்தையும் பொருதொழிகை. (தான் தீங்கு நினைந்த) C "அத்திறம்" என்று மோஹிக்க வேண்டும் விஷயத்திலேயிறே தீங்கு நினைத்தது, துஷ்ப்ரக்ருதியாகையாலே.

(கருத்தைப் பிழைப்பித்து) அவன் நினைத்ததைப் பிழைக்கும்படி பண்ணி. அவன் நினைவை அவனுக்கே போம்படி பண்ணினுன். (கஞ்சன் வயிற்றில் நெருப்பென்ன நின்ற) ஆய்ர்பாடி வயிற்றில் நெருப்பை, கம்ஸன் வயிற்றிலே புகும்படி பண்ணி. (நெடுமாலே) இதெல்லாம் படவேண்டிற்று ஆய்ர்பாடி பக்கல் வ்யாமோஹாதிசயத்தாலே என்கை. (உன்னையருத்தித்து வந்தோம்; அர்த்தித்வாதி நிரபேக்ஷனுன உன்னை, பிச்சின் மேலே பிச்சேற்ற வந்தோம். ஸ்ரீவைகுண்டத்தில் நின்றும் வந்தவனிறே. எங்கள் வடிவைப் பாராய். (பறை தருதியாகில்) உன் அழகாலே எங்களை மயக்காதே செய்தருளப் பார்த்தாயாகில்: செருக்கடியாதே செய்தருளப் பார்த்தாயாகில்.

(திருத்தக்க செல்வமும்) 2 "யஸ்ய ஸா ஜநகாத்மஜா". (சேவகமும்) இத்தைக் காத்தூட்டவல்ல வீர்யம். (வருத்தமும் தீர்ந்து) உன்னை நீ கண்டறியாயே; பிரிந்தார் படும்பாடு அறியாயே. (பாடி வருத்தமும் தீர்ந்து) சொல்லப் பெருத நம் வருத்தமும் தீர்ந்து. (மகிழ்ந்து) கைவல்யம் போலே துஃக்கநிவ்ருத்தி யன்று தேட்டம். ப்ரீதிக்குப் போக்குவிட வேண்டும்படியாகை. 25.

நாலாயிரப்படி—இருபத்தைந்தாம்பாட்டு

அவ:- இருபத்தஞ்சாம்பாட்டு. "பெண்காள்! நோன்பொழிய உங்கள் நெஞ்சிலே ஒன்றுண்டிறே" என்ன; "'பறை' என்றொரு பேர்; நாங்கள் உன்னை அர்த்தித்துவந்தோம்" என்ன, "என்னை அர்த்தித்துப் பெற்றருண்டோ?" என்ன, "எங்களோட்டையார் பெற்றருண்டு" என்கிறார்கள்.

வ்யா:— (ஒருத்தி மகனுய்) ஸர்வலோகத்துக்கும் பிதாவான உன்னை ஒருத்தி மகனுகப் பெறுவதே! D"மகனெருவர்க்கல்லாத மாமேனிமாயன்" (ஒருத்தி). 3. "அந்த: ப்ரவிஷ்டஶ்சாஸ்தா ஜநாநாம் ஸர்வாத்மா" என்கிறபடியே ஸர்வலோகங்களுக்

A திருவாய் 3-5-5, B திருவாய் 5-10-1, C திருவாய் 1-3-1, D மூன்-திருவ 92.

கும் நியாமகனுனவனையுங்கூட நியமிக்குமவளென்கையாலே, நாட்டில் தனக்கு ஒப்பின்றிக்கேயிருக்குமவள். (மகனுய்) பிறந்தபோதே சொல்லிற்றுச்செய்கை 1. "ஸ்துதோ ஹி யத்₃வயா பூர்வம் புத்ரார்த்தி₂ங்யா ததா₃த்₃ய தே| ஸப₃லம் தே₃வி ஸஞ் ஜாதம் ஜாதோSஹம் யத்தவோதா₃ராத் ॥" சக்ரவர்த்தித் திருமகன் வளர்ந்தபின்பு பித்ருகார்யம் பரிபாலநம் பண்ணினுன். இவன், பிறந்தபோதே தோள்களை மறைத்துத் திருவாய்ப்பாடியில் போகச்சொல்லப்போனுன். மோப₄நம் கூறுகைக்கும் வேறுளில்லை; தானே. (பிறந்து) கர்மவஸ்யர் படுமவற்றை அகர்மவஸ்யன் க்ருபாவஸ்யனுய்ப் பிறந்து படுவதே! 2. "உபஸம்ஹர இத்யாதி₃" 3. "அஜோSபி ஸந்நவ்யயாத்மா" கர்மவஸ்யர் கூறுன ஜந்மாதி₃ தோ₃ஷங்களின்றிக்கே யிருக்கை. என் பிறவாமைக்குத் தட்டு வராதபடியும், எனக்கு நிறமுண்டாம்படியுங்காண் நான் பிறப்பது. 4. "ஸ உ ஸ்ரேயாந் ப₄வதி ஜாயமாந:" 3. [பூ₄தா நாமீஸ்வரோSபி ஸந்] பிறக்கையும் பிறவாமையும் கிடக்கப் பிறக்கும் பிறப்பு நித்யர்க்குமுண்டாகையாலே அவ்வளவேயல்ல; அல்லாதார் பிறப்பையும் நீக்கவல்ல ஸ்வதந்த்ரன் பிறப்பன்றே என்கை. சிறையர் சிறைக்கூட்டத்தில் பிணையுண்கைக்குப்புகும்; நியாமகன் சிறைக்கூட்டத்தை விடுவிக்கப்புகும். புகுகையிலே இத்தனை நெடுவாசியுண்டு. அவன் பிறந்தால் இவன் பிறவி தனக்குத் தட்டாமையல்ல. நம்பிறவியைப் போக்கி நம்மைத் தன்போலேயாக்க வல்லனுயிருக்கும். 5. "ஜந்ம கர்ம ச மே தி₃வ்யம் இத்யாதி₃" — நம்பிறவி நம்மையும் அவனையும் உறவறுக்கைக்கு உடலாயிருக்கும்; இப்படியல்லனுகைக்கடி சாவுதல் பிறத்தல் செய்யவேண்டாத நித்யமான உடம்புடையனுகை. A "ஆதியஞ் சோதியுருவை அங்குவைத்திங்குப்பிறந்த. 6. "யத்ராவதீர்ணம் க்ருஷ்ணாக்₃யம் பரம் ப்₃ரஹ்ம நராக்ருதி". அவனுக்குப் பிறக்கையாகிறது—அத்தை நாம் பிறவாதபடி ஸஜாதீயமாக்கிக்கொண்டு தோன்றுகை. 7. "புந்நாம்நோ நரகாத் த்ராயத இதி புத்ர:" என்கிறபடியே இவர்கள் தாளில் B தலைகழலப்பிறந்தபடி, என்றும் பிறவி நமக்கென்றுகோல நம்பிறவியாக விலக்கப்படும். C "அறுவர்தம் பிறவி அஞ்சிறையே". அவன் பிறப்புகூட்டும்; நீங்க நம்பிறப்பு. ப்ரபத்தியாவது இந்த ஜ்ஞாநமே. நம்முடைய கர்மம் அவனை நம்மோடே ஸஜாதீயனுக்கும்; அவனுடைய க்ருபை நம்மை அவனுடனே 8. "பரமம் ஸாம்ய முபைதி" என்று ஸஜாதீயராக்கும்; D "பிறந்தவாறும்". (மகனுய் பிறந்து) பிறக்கை தவிராதாகில் தமப்பனுனுலோவென்னில்; தன்னுடைய பிறவி விஸஜாதீயத்துக்குப் போராதபின்பு ஆராய்ப் பிறக்கிலென்என்றுமாம்.

(ஒருத்தி) இன்னுளென்றுதே தங்கள் ப₄யத்தாலே மறைத்துச் சொல்லுகிறார்கள். E "அத்தத்தின் பத்தாநாள்" என்னுமவர்மகளிற்ற. (பிறந்து) ஆவிர்ப்ப₄வித்தாலாகாதோ? பன்னிரண்டுமாஸம் வயிற்றிலேயிருந்து பிறக்கவேணுமோ? 9. "தே₃வகீ பூர்வஸந்த₄யாயாமாவிர்ப்பூ₄தம் மஹாத்மநா" என்று, பிறந்தானென்கை அவத்₃யமென்று பரிஹரித்தான் ருஷி. அதுதான் அவத்₃யமென்று D "பிறந்தவாறும்" என்று "பிறக்கவல்லன்" என்று சொல்லுகிறார்கள். (ஒரிரவில்) நாய்க்குட லுக்கு

A திருவாய் 3-5-5, B பெரிய திரு 11-5-2, C திருவாய் 1-3-11, D திருவாய் 5-10-1, E பெரியாழ் திரு 1-2-6.

கறுகெய் வகுக்குமோ? லெம்ஸாரிகள் பொல்லாங்கு அவனை ஓரிராத் தங்கிப் போக வொட்டிற்றில்லையென்கை. அவ்விரவோடொக்குமிரவுமில்லை, பகலுமில்லை. மாதா பிதாக்கள் கைவிட்டவளவிலே கைதந்த ராத்ரி. பிறவாகின்றுல் கண்காணவந்து பிறந்து தார்யம் கொட்டப்பெறுதொழிவதே! (இரவு) காலக்ருத பரிணுமமில்லாத தேசுத்திலே வர்த்திக்க இவன் காலக்ருதபரிணுமமான தேசுத்திலே பிறந்தால் பெறுவதும் பெருதொழியவேணுமோ?

(ஒருத்திமகனுய்) இருவருமிவனைப் பெறவேணுமென்று ஆஸ்ரயிக்க, அவளுக்கு அவதாரஸ்தைக் காட்டிக்கொடுத்து, இவளுக்கு லீலாரஸத்தை அனுபவிப்பிக்கிறபடி. 1. "அப்ராவதாரோ ப்ரஹ்மர்ஷே யோSயம் யதுகுலோத்பவ:" என்றருஷிதானே 2. "கோபாலோ யாதவம் வம்சம் மக்நமப்யுத்தரிஷ்யதி". அவள் கருப்பின் கேழைக்கொண்டவோபாதி, இவளும் கருப்பின் நடுவைக் கொண்டாற்போலேயிருக்கிறது. A "ஆப்புண்டு" B "தீங்கருட்பு". அங்கு ஈஸ்வரத்வலக்ஷணத்தோடே பிறந்தது பிறப்பில் புரையற்றுற்போலே, இவள் மகனுனவளவிலும் பிறப்பில் புரையற்றிருக்கை. (ஒளித்துவளர) கம்ஸாதிகளுடைய விஷத்ருஷ்டிகள் படாமே. நாட்டார் செய்வன செய்யப்பெறுதே கள்ளர்பட்டது படுவதே! அந்தர்யாமியாய்ப் பட்டது பட்டான். உள்ளேயிருக்கச்செய்தே இவனில்லையென்று எழுதி எழுத்திடுமவன் முகங்காண ஸம்மதிக்குமோ? பிச்சேறின ப்ரஜை தாய்முன்பே நிற்கில் தாயைக்கொல்லும்; அவள் பேரநிற்கில் தன்னை முடித்துக்கொள்ளும். அதுக்காக முகம் தோற்றுதே நின்று நோக்குமாபோலே இவனும் முகம் தோற்றுதே நின்று இரண்டு தலையையும் நோக்குகிறுன். இசைந்து 'அம்மே' என்றுல் 'அடியேன்' என்கைக்குக் கிட்டவிருக்கிறுன்.

(தரிக்கிலானுகி) நாரதாதிகள் 'க்ருஷ்ணன் வளரா நின்றுன்' என்று சொல்லக் கேட்ட பின்பு தரிக்கமாட்டிற்றிலன். C "திண்கொளசுரரைத்தேயவளர்கின்றுன்" ஈஸ்வரஸத்தையும் பொருதொழிகை. (தான் தீங்கு நினைந்த) D "எத்திறம்" என்று அங்குத்தைக்குப் பரியவேண்டும் விஷயத்திலே தீங்கு நினைத்தது துஷ்ப்ரக்ருதியாகையிறே' (தான் தீங்கு நினைந்த) உத்தரக்ஷணத்திலே படப்புகுகிற தான்; 'தீங்கு' என்கிறது அப்பொல்லாங்கு தன்வாயால் சொல்லமாட்டாமை. 3. "அஸ்மாந் ஹந்தும் ந ஸம்ஸய:" E "மாய்த்தலெண்ணி" தங்களை நலிந்ததாயிருக்கை. பூதனையுள்ளிட்டாரை வரக்காட்டியும் விள்விழவுக்கென்றழைத்தும் நலியத்தேடினபடியும்.

(கருத்தைப் பிழைப்பித்த) அவன் நினைத்ததைப் பிழைக்கப்பண்ணுவித்து அங்நினைவை அவனுடனே போக்கினபடி. (கஞ்சன்வயிற்றில் நெருப்பென்ன நின்ற) ஆஸ்ரிதர் வயிற்றில் நெருப்பை அவன் வயிற்றில் புகவிட்டபடி. (நெடுமாலே) இதெல்லாம் படவேண்டிற்று ஆஸ்ரிதர் பக்கல் வ்யாமோஹத்தாலேயென்கை. வஸுதேவதேவகிப் பிராட்டிகள் பக்கல் திருவுள்ளமன்றே. தாயார்க்கும் தமப்பனுர்க்கும் செய்தன இவை. அவர்களையுமொளித்துச் செய்யுமவர்களன்றே நாங்கள் என்கை.

A பெரிய திரு 10-6-1, B பெரிய திரு 2-5-1, C பெரியாழ் திரு 1-2-16
D திருவாய் 1-3-1, E திருவாய் 4-3-4.

(உன்னை) அர்த்தி₄த்வத்தால் நிரபேக்ஷனை உன்னை. (உன்னை அருத்தித்து வந்தோம்) உன்னைப் பெறவிருக்கிறோம். பிச்சின் மேலே பிச்சேற்ற வந்தோம். ஸ்ரீவை குண்ட₄த்தில்நின்றும் இரப்பாளனுய் இவ்வளவும் வந்தவனிறே. எங்கள்வடிவைப் பாராய். A "மாசுடையுடம்பித்யாதி₃". (பறை தருதியாகில்) தாழ்ந்தார் உயர்ந்தாரை 'திருவுள்ளமாகில் செய்' என்னுமாபோலே, 'உன் அழகாலே எங்களை மயக்கத்தைப் பண்ணுதே செய்தருளப்பார்த்தாயாகில்' என்றுமாம்.

(திருத்தக்க செல்வமும்) திருவுக்குத்தக்க செல்வம். 1. "யஸ்ய ஸா ஜநகாத்மஜா அப்ரமேயம் ஹி தத்தேஜ:" என்கிறபடியே. (திருத்தக்க செல்வமும்) பிராட்டி ஆசைப்படும் ஸம்பத்து. B "திருவுக்கும் திருவாகிய". 2. "ஸ்ரிய: ஸ்ரியம்" (சேவகமும்) இத்தைக்காத்தூட்டவல்ல வீர்யம். (பாடி வருத்தமும் தீர்ந்து) வருத்தம் உன்னை நீ கண்டறியாயே. பிரிந்தார் படும்பாடு பாராயென்கை. (பாடி வருத்தமும் தீர்ந்து) கைவல்யம் போலே து₃:க்க₂நிவ்ருத்தியன்று தேட்டம், ப்ரீதிக்குப் போக்குவிடும்படி யாகை. "பறை தருதியாகில் உன்னையருத்தித்து வந்தோம்". 25.

ஸ்வாபதே₃ஸவ்யாக்₄யாநம்—இருபத்தைந்தாம்பாட்டு

அவ:— இருபத்தைந்தாம்பாட்டு. (ஒருத்திமகனுய் இத்யாதி₃) இப்பாட்டில்—கீழ்ப்பாட்டில் "ஏத்திப் பறைகொள்வான் இன்று யாம் வந்தோம் இரங்கு" (24) என்று இவர்கள் அபேக்ஷிக்கையாலே, 'உங்களுக்குச் செய்யவேண்டுவது என்?' என்ன,—"நெடுமாலே! நீ புருஷார்த்த₄த்தைக் கொடுத்தாயாகில், நாமும் உன்னையும் உன் கு₃ணங்களையும் ப்ரீதிக்குப் போக்குவீடாகப் பாடி, பட்ட வ்யஸநமெல்லாம் தீர்ந்து மகிழக்கடவோம் என்கிறார்கள்.

வ்யா:—(ஒருத்தி இத்யாதி₃) அஷ்டாக்ஷரீ ப்ரதிபாத்₃யனுய், கு₃ணவிக்₃ரஹ விபூ₄திவிஶிஷ்டனுய் அவதரித்து. (ஓரிரவு இத்யாதி₃) லௌகிகர் அறியாத அத்₃ விதீயகாலத்திலே வாஸுதே₃வ த்₃வாத₃ஶாக்ஷரீ ப்ரதிபாத்₃யனுய். (ஒளித்து வளர) கு₃ணவிக்₃ரஹவிபூ₄திகளாலே ஸங்குசித்து ஸ்வரூபமாத்ரேண வளராநிற்க.

(தரிக்கிலானுகி) ஸ்வரூபமாத்ரேண ஈஶ்வரஸத்தையையும் பொருதவனுய். (தானித்யாதி₃) அநவரதம் மங்₃களாஶாஸநம்பண்ணக்கடவ விஷயத்திலே அவனுல் ஒரு உபத்₃ரவமுண்டாய்ப் பொல்லாமையை நினைக்கையன்றிக்கே, தானே த்₃வேஷத்தை நினைந்த அபி₄ப்ராயத்தை வ்யர்த்த₂மாக்கி, அஹங்காரத்தினுடைய வயிற்றிலே நெருப்பைக் கொளுத்தினற்போலே ஜ்வலித்து, அதனருகே நின்ற ஸ்வஶேஷபூ₄த சேதநவிஷய வ்யாமோஹாதிஶயத்தையுடையவனே! (உன்னை அருத்தித்து வந்தோம்) உன்னை அபேக்ஷித்துவந்தோம்.

(பறை தருதியாகில்) நீ புருஷார்த்த₄த்தைக் கொடுப்புதியாகில். (திருத்தக்க செல்வமும் சேவகமும்) பெரிய பிராட்டியாருக்குத் தகுதியான ஸ்வரூப ரூபகு₃ணவிக்₃ரஹ விபூ₄தி விஶிஷ்டனுயிருக்கிற செல்வத்தையும், வீரசரிதத்தை யும். (யாம்பாடி) அதுவே தா₄ரகமான நாம் பாடி. (வருத்தம் இத்யாதி₃) உன்னைப் பிரிந்து பட்ட வ்யஸநமெல்லாம் நிஶ்ஶேஷமாகத் தீர்ந்து ஆநந்தி₃க்கக் கடவோம். 25.

A நாச்-திரு 1-8, B பெரிய திரு 7-7-1.

இருபத்தாரும் பாட்டு

மாலே மணிவண்ணு மார்கழிநீ ராடுவான்
மேலையார் செய்வனகள் வேண்டுவன கேட்டியேல்
ஞாலத்தை யெல்லாம் நடுங்க முரல்வன
பாலன்ன வண்ணத்துன் பாஞ்ச சன்னியமே
போல்வன சங்கங்கள் போய்ப்பா டுடையனவே
சாலப் பெரும்பறையே பல்லாண் டிசைப்பாரே
கோல விளக்கே கொடியே விதானமே
ஆலி னிலையா யருளேலோ ரெம்பாவாய்.

பதவுரை:— மாலே — (அடியாரிடத்தில்) அன்புடையவனே! மணி வண்ணு — நீல ரத்னம் போன்ற வடிவையுடையவனே! ஆலின் இலையாய் — (ப்ரளயகாலத்தில்) ஆலந் தளிரில் கண்வளர்ந்தவனே! மார்கழி நீராடுவான் — மார்கழி நீராட்டத்திற்காக, மேலையார் — முன்னோர்கள், செய்வனகள் — செய்யும் கிரியைகளுக்கு, வேண்டுவன — வேண்டும் உபகரணங்களை, கேட்டியேல் — கேட்டாயாகில், (அவற்றைச் சொல்லுகிறோம்;) ஞாலத்தை எல்லாம் — பூமி முழுவதும், நடுங்க — நடுக்குப்படி, முரல்வன — ஒலிக்கக்கூடிய, பால் அன்ன வண்ணத்து உன் பாஞ்சசன்னியமே போல்வன — பால் போன்ற நிறமுடையதான உன்னுடைய ஸ்ரீபாஞ்சஜந்யம் போன்ற, சங்கங்கள் — சங்கங்களையும், போய் பாடு உடையன — மிகவும் இடமுடையனவாய், சால பெரு — மிகவும் பெரியனவான, பறை — பறைகளையும், பல்லாண்டு இசைப்பார் — திருப்பல்லாண்டு பாடுமவர்களையும், கோலம் விளக்கு — மங்களதீபங்களையும், கொடி — த்வஜங்களையும், விதானம் — மேற்கட்டிகளையும், அருள் — அளித்தருள வேண்டும்.

மூவாயிரப்படி — இருபத்தாரும்பாட்டு

அவ:— இருபத்தாரும்பாட்டு. a 'உங்களுக்கு அபேக்ஷிதம் என்?' என்ன; நோன்புக்கு வேண்டும் உபகரணங்களையும் அபேக்ஷிக்கிறார்கள்; 'க்ருஷ்ண ஸம்ஸ்லேஷைகரான இவர்கள் இவற்றை அபேக்ஷிக்கைக்கு அடியென்?' என்னில்:— அந்த ஸம்ஸ்லேஷத்துக்கு ஏகாந்தமான நோன்பை a_2 ப்ரஸ்தாவிக்கையாலும், க்ருஷ்ணன் முகத்தை a_3 வெளியிலே காண்கைக்கு ஹேதுவாகையாலும், அவனுடைய திருநாமங்களை வாயாரச் சொல்லுகைக்கு ஹேதுவாகையாலும், இடையர் பக்கல் உபகாரஸ்ம்ருதியாலும் நோன்புக்கு அங்கங்களை வேண்டிக் கொள்ளுகிறார்கள்.

பெ. அ. இருபத்தாரும்பாட்டு. (மாலே இத்யாதி) a கீழ்ப்பாட்டில் — உங்களுக்கு வேண்டுவதென்னென்று அவன் கேட்க, அதுக்கு, "பறைதருதியாகில்" (25) என்று தங்களுக்கு உத்தேச்யத்தைச் சொல்லியிருக்கவும், அவன், முகிலுமுதலானவற்றிலே ஸக்தனாகையாலே மறந்து மீளவும் கேட்கிறானென்று திருவுள்ளம் பற்றி அவதாரிகை அருளிச்செய்கிறார் (உங்களுக்கு இத்யாதி) a_2 (ப்ரஸ்தாவிக்கையாலும்) என்றது — கோபவ்ருத்தர் "நீங்கள் நோன்பு நோலுங்கள்" என்று அநுமதி பண்ணியிடுகையாலும் என்றபடி. a_3 (வெளியிலே காண்கைக்கு ஹேதுவாகையாலும்) என்றது — நிலவறையிலே கிடந்த தங்களை நோன்புக்காக க்ருஷ்ணனுடனே சேரவிடுகையாலும் என்று கருத்து.

சீ. அ. இருபத்தாரும் பாட்டு. (மாலே) b, c அறுதியிடுகிறவிடத்திலே "நாராயணனே" (1) என்று சொல்லிவைத்து அபேக்ஷிக்கிறவிடத்திலே "மாலே" என்பானென்?

வ்யா:— b (மாலே) c முன்பு "நாராயணனே - நமக்கே பறை தருவான்"(1) என்று c_2 அபரிச்சே₂த்₃யமான c_3 மேன்மையையும் நினைத்திருந்தார்கள்; இப்போது இத்தலைக்கு வாத்ஸல்யமே ஸ்வரூபம் என்று நிலையிட்டார்கள். d 1. "ஶரணாகத வத்ஸல:" என்று — ஶ்ரீராமாயணத்துக்கு உள்ளீடான ப்ரதா₄நகு₃ணத்தைப் பிராட்டி நிலையிட்டாள்; e மஹாபா₄ரதத்துக்கு உள்ளீடான வ்யாமோஹ கு₃ணத்தை "மாலே" என்கிற ஸம்பே₃தா₄நத்தாலே இவர்கள் நிலையிட்டார் கள். f இவர்கள் f_2 பேச்சுக்கேட்டபின்பு பண்டையிலும் f_3 பெரும்பித்தனைபடி. g (மணிவண்ணு) h அபரிச்சே₂த்₃யனுயிருக்கச்செய்தேயும் முன்தானையிலே முடிந்து ஆளலாம்படியிருக்கை. i கீழ்ச்சொன்ன வ்யாமோஹம் வடிவிலே நிழலிடுகை.

பெ அ. b, c ப்ராப்ய ப்ராபகங்களை நிஷ்கர்ஷிக்கும்போது, "நாராயணனே நமக்கே பறை தருவான்" (1) என்று — நாராயணத்வத்தைப் புரஸ்கரித்திருக்கையால் அபேக்ஷித்த விடத்திலும், "நாராயணு! மணிவண்ணு" என்ன வேண்டியிருக்க, "மாலே" என்று வ்யாமோஹகு₃ணத்தையிட்டு ஸம்பே₃தி₄க்கிறது எங்ஙனே கூடும்? என்ன, அருளிச் செய்கிறார் (முன்பு இத்யாதி₃) c_3 (மேன்மையையும்) என்ற சகாரத்தாலே — "காமேனிச் செங்கண்" (1) என்று — வாத்ஸல்யத்தையும் நினைத்தார்களென்கை. இவர்கள் "யாம் வந்தகாரியம் ஆராய்ந்தருள்" (28) என்று சொன்னபோதே திருமுகத்தில் அலர்த்தியையும், வாயென்றவாறே ஸ்மிதா₄ஸநத்தோற வருகையையும் கண்டு, வ்யாமோஹமே இவனுக்கு ஸ்வரூபமென்று நிஶ்சயித்தார்களென்று கருத்து. d, e இவனுக்கு வாத்ஸல்யமே நிரூப கமென்னுமதுக்கு த்₃ருஷ்டாந்தபூர்வகம் ப்ரமாணம் காட்டுகிறார் (ஶரணாக₃தேத்யாதி₃ வாக்யத்₃வயத்தாலே) e (மஹாபா₄ரதத்துக்கு உள்ளீடான) என்றது — அதுக்கு உப நிஷத்தான ஶ்ரீகீ₃தையில் சரமத்தில், 2. "மாம்" என்றதற்குத் தாத்பர்யமான என்றபடி. இதிலே வாத்ஸல்ய ஸ்வாமித்வ ஸௌஶீல்ய ஸௌலப்₄யங்களாகிற கு₃ணவிஶேஷங்கள் நேராக ப்ரகாஶிக்கிறதென்னக்கடவதிறே. f இப்போது மாலாகைக்கு ஹேது ஏது? என்ன; அருளிச்செய்கிறார் (இவர்கள் இத்யாதி₃) f_2 (பேச்சு) என்றது — "யாம் வந்த காரியமாராய்ந்தருள்" (28) என்ற பேச்சு என்றபடி. f_3 'மாலுடையவன்' என்னுதே "மாலே" என்று அத்தையே நிரூபகமாகச் சொல்லுகையாலே (பெரும்பித்தன்) என்றது. g, h "மாலே" என்றதுக்கு — ஸர்வாதி₄கனுயென்று அர்த்தா₂ந்தரம் திருவுள்ளம் பற்றி, 'மணியினுடைய வண்ணம்போலேயிருக்கும் வண்ணத்தை — ஸ்வபா₄வத்தையுடைய வனே!' என்று ஸப்₃தா₃ர்த்த₂மாய், அதிஸௌலப்₄ய ஸ்வபா₄வத்தை விவக்ஷித்து அருளிச் செய்கிறார் (அபரிச்சே₂த்₃யனுய் இத்யாதி₃) i, j "மால்" என்றதன் முந்தின அர்த்த₂த்தையே

கி. வி. என்னில் (முன்பு நாராயணனித்யாதி₃) b "மாலே" என்று வாத்ஸல்யம் சொல்லுகிறது. அன்றிக்கே வ்யாமோஹமாகவுமாம். அன்றிக்கே ஸர்வாதி₄க்யமென்னவுமாம். c_2 அதுக்கு ஸஜாதீயம் (அபரிச்சே₂த்₃யமான) என்றதும், c_3 (மேன்மையையும்) என்கையாலே வாத்ஸல்யமும் ப₃ஹுவ்ரீஹி ஸமாஸத்தாலே ஸித்₃த₄ம். f மாலாகைக்கு ஹேதுவென்? என்ன அருளிச்செய்கிறார் (இவர்கள் இத்யாதி₃) f_3 மாலுடையவன் என்னுமல் "மாலே" என்று நிரூபிக்கையாலே (பெரும்பித்தன்) என்கிறது. g "மணிவண்ணு" என்றதுக்கு நாலு தாத்பர்யம் — ஸௌலப்₄யமாதல், வ்யாமோஹாதி₃கு₃ணப்ரகாஶமாதல், வடிவழகாதல், பெண்களுடைய வ்யாமோஹத்துக்கு நிதா₃னமாதல். h, i "மாலே" என்றதுக்கும் பெருமையை விவக்ஷித்து மணியினுடைய ஸௌலப்₄யத்தையும் ப்ரகாஶத்தையும் பற்ற

j இந்நீர்மையின்றிக்கே கூதுகனுனுலும் விடவொண்ணுத வடிவழகு. k பெண்கள் பிச்சுக்கு நிதா₃நமான வடிவென்னவுமாம்; lA ''மாலாய்ப்பிறந்த நம்பியை மாலே செய்யும் மணுளனே'' என்னக்கடவதிறே.

(உன்றன்னைப்பாடி) ஹிரண்யபுரம்போலே இவன்பேர் சொல்லவொட்டுவாரில்லைபோலே காணும் பண்டு; அநந்தரத்திலே இவர்கள் கோபிப்பார்களென்று தவிர்ந்த இழவெல்லாம் ஸந்நிதியிலே பாடப்பெறுகையாலே தீரப்பெற்றது. (உன்றன்னைப்பாடி) வகுத்த 'உன்னுடைய பேரை ஸ்வயம்ப்ரயோஜநமாகப் பாடப்பெறுகையாலே "வாயினல்பாடி" (5) என்று உபக்ரமித்தபடியே நாப்படைத்த ப்ரயோஜநம் கொள்ளப்பெற்றோம். "உன்னைப்பாடி" என்னுதே, "உன்றன்னைப்பாடி" என்கிறது—அத்தலை இத்தலையாவதே! உன்பணியை நாங்களேறிட்டுக்கொள்வதே! (கோவிந்தா வுன்றன்னைப்பாடி) J "கோவிந்தன் குழல்கொடுதினபோது" என்று-நீ பாடும்போது K "கேயத்திங்குழலூதிற்றும்" என்னும்படி பெண்கள் புணர்ப்பைக் குழலிலேயிட்டுப் பாடி எங்களைத் தோற்பிக்கையன்றிக்கே, எங்கள் வாசல்களிலே பாடி L ஆவிகாத்திராதே உன்வாசலிலேவந்து "கோவிந்தா" என்றுபாடும்படியாவதே!(பறைகொண்டு)

A திருவாய் 8-1-8. B திருவாய் 10-3-1. C திருவாய் 1-1-1. D திருவாய் 1-3-1. E நாச்-திரு 14-1. F திருவாய் 10-3-10. G திருநெடு 16. H திருவாய் 6-2-4. I பெரிய திரு 2-5-3. J பெரியாழ்திரு 3-6-2. K திருவாய் 6-4-2. L நாச்-திரு 8-3.

''பாடிப்பறைகொண்டு'' (8) என்று அடியிற்சொன்னபடியே ஊராரிசைந்த பறையைக் கொண்டு. ப்ராப்யத்திலே ப்ராபக வ்யவஹாரம் பண்ணுகிறார்கள் ஆற்றுமையாலே, ஊருக்கிறே பறை; தங்களுக்கு ப்ராப்யமிறே.

(யாம்) தேஹபுத்ர ரத்நமான உன்வாசி அறிந்து பற்றி, ''உன்னை ஆஸ்ரயித்தார்க்குப் பேறுதப்பாது'' என்கிற வ்யவஸாயமுடையோமான நாங்கள். (பெறு சம்மானம்) வெறும் ஊரார்கார்யமேயாகவொண்ணாது; எங்களுடைய அபிமதமும் பெறவேணும். (யாம் பெறு சம்மானம்) பெருமாள் பிராட்டிக்குப் பண்ணின ஸம்மானம்போலே 1. ''ஆத்மாரம்'' தொடர்ந்தேத்தின பிராட்டிக்குத் தன்தோளில் மாலையை வாங்கி இட்டுக் காலைப்பிடித்து, ''நில்'' என்று போன ஸத்காரமிறே இவர்களுக்குப் பண்ணப் புகுகிறது. அவள் இவர் திருவடிகளைப் பிடிப்பது - கைப்பிடித்த முறைபாலே; இவர் அவள் காலைப் பிடிப்பது ப்ரணயித்வத்தாலே. அவனுக்குச் சொல்லுமேற்றமெல்லாம் ஸ்வரூப நிபந்தநம்; இவளுக்குச் சொல்லுமேற்றமெல்லாம் ப்ரணயித்வ நிபந்தநம். அவனுடைய வ்யாபாரம் வைதம்; இது ராகப்ராப்தம். ஸ்வயம்ப்ரவ்ருத்தனுமிடத்தில் விதிவிஷயமாகமாட்டாதே; அவ்விடத்தில் விதி நுழையுமாகில் போகமாட்டாதே. வெளித்திருமுற்றத்திலே ப்ரஸாதம் அவ்வளவிலே வர, ''யாம் பெறு சம்மானம் வந்தது'' என்றார்பட்டர்.

(நாடுபுகழும் பரிசினால்) அநாதிகாலம் எல்லாராலும் பட்ட அவமாநம் மறக்கும்படியாக; 'ஒருவன் கொடுத்தபடியே! சிலர் பெறும்படியே!' என்று நாட்டார் கொண்டாடும்படியாகவேணும். ''பாரோர்புகழ'' (1) என்னும்படியே தலைக்கட்டவேணும். க்ருஷ்ணனும் ஸ்ரீஸத்யபாமைப் பிராட்டியும், அர்ஜுநனும் த்ரௌபதியுமாகக் கால்மேல் காலேறிட்டுக்கொண்டிருக்க, ஸஞ்ஜயன் திருவாசலிலே வந்தானென்றறிவிக்க, க்ருஷ்ணன் அருளிச்செய்கிறான்;—''நம்முடைய இருப்புக்கண்டால் உகப்பானும், உகவாதார் மண்ணுண்ணும்படி இவ்விருப்பைச் சொல்லவல்லானுமொருவன்! புகுர விடுங்கோள்'' என்ன; அவனும் புகுந்து கண்டு அப்படியேபோய் துர்யோதநனுக்கு, ''கெடுவாய்; அவர்களிருப்புக் கண்டேனுக்கு உன் காரியங் கெட்டதுகிடாய்'' என்றாளிறே; ஸுகஸாரணர்கள் சென்று ராவணனுக்கு, ''அவருடைய ஔக்கத்தில் மதிப்பும் அவருடைய வீரப்பாடும் கண்டோமுக்கு உனக்கு ஒரு குடியிருப்புத் தேடிக்கொள்ளவேண்டியிருந்தது; ஊற்றுமாறாதே நித்யமாய் நடக்கிற ஐஸ்வர்யத்தையுடையராய், உனக்கு வரம் தந்து உன்கையாலே தகர்ப்புண்ணுமவர்களைப்போலன்றிக்கே, உனக்கு முடிதந்தார்க்கும் முடிகொடுத்த ராஜா உன்தம்பிக்கு லங்கையைக்கொடுத்தான், வாநரங்களும் ஆர்த்துக்கொண்டது'' என்று சொன்னார்களிறே. இப்படி ஆஸ்ரயித்தாரை நாடு புகழும்படியிறே வாழ்விப்பது; A ''வாழ்வர் வாழ்வெய்தி ஞாலம்புகழ'' என்கிறபடியே. நாடு புகழவென்று யஸ:பரராய்ச் சொல்லுகிறார்களன்று, புகழ்ந்து நாட்டார் உஜ்ஜீவிக்கை ஸ்வலாபமாக நினைக்கையாலே,

---

A திருவாய் 3-3-11.

கூத்₃ரனை ஒளித்துவேண்டிப் பெறுமதிறே லோகமிகழ்வது; ஸர்வ ஸமாஶ்ரயனீயன்றனை மேல்விழுந்து ஸத்காரபூர்வகமாகக் கொடுக்கிறதாகையாலே புகழுமிறே.

(நன்றுக) இவனையொழிந்தாரைப் பாடவேண்டிப் பெறுமது பரிமித பூலமாகையாலே படிவைக்க உண்பார்பாடே பிச்சை புக்குண்ணும் மாத்ரம்; காலன் கொண்ட பொன்னிட்டு ஆப₄ரணம் பண்ணிப் பூண்பார் மாத்ரம்; நாடு புகழுமளவன்றிக்கே அவன்தானும் ஸத்தை பெற்று நாமும் ஸத்தை பெறவேணும். இவர்களை ஒப்பிக்கை - அவனுக்கு ஸ்வரூபம்; அவன் ஒப்பிக்க இசைகை - இவர்களுக்கு ஸ்வரூபம். (நன்றுக) இந்த்₃ரன் வரக்காட்டின ஹாரத்தைப் பெருமாள் பிராட்டிக்குக் கொடுத்தருள, திருக்கையில் பிடித்துக்கொண்டிருந்து, பெருமாளை ஒருகண்ணாலும் திருவடியை ஒருகண்ணாலும் பார்க்க, பெருமாள் பிராட்டி திருவுள்ளத்திலோடுகிறத்தை அறிந்து, 'அடியார்தரமறிந்துகொண்டாடும் வீறுடைமைக்குப் பர்யவஸாநபூ₄மியான நிதி கொடு' என்ன, திருவடியை ஒப்பித்தாற்போலே, க்ருஷ்ணன் நப்பின்னைப் பிராட்டியையிடுவித்து ஒப்பிக்கையாய்த்து நன்றுக ஒப்பிக்கையாவது.

இவர்கள் "நோக்குதியேல்" என்னப்பண்ணிற்றெரு பூர்ணகடாக்ஷமுண்டிறே. அப்பார்வைபட்ட இடமிருக்கும்படியை மேலே சொல்லுகிறார்கள்—(சூடகமே) A "அணிமிகுதாமரைக்கையை" என்று தன் கையை இவர்களாசைப்படுமாபோலே இவர்களாப₄ரணம் பூண்ட கையை அவன் மார்விலும் தோளிலும் தலையிலும் வைத்துக்கொள்ளவிறே அவனுமாசைப்படுவது. அக்கைக்கு இடக்கடவ ஆப₄ரணம் சூடகம். B "வெள்ளிவளைக் கைபற்ற" என்கிறபடியே-அநந்யார்ஹைகளாகப் பிடித்த கைகளையிறே முதல் ஆப₄ரணம் பூட்டுவது. (தோள்வளையே) கையைப்பிடித்த அநந்தரம் அணைக்குந்தோள்களிலே கிடந்து அவன் கழுத்திலே உறுத்துமாப₄ரணம். அவன் நாண்தழும்பின் சரஸ்ப்பு முலைகளுக்கு உத்₃தே₃ஶ்யமானவோபாதி, இவர்களுடைப வளைத்தழும்பும் அவன்தோளுக்கு ஆசையாயிருக்குமிறே. C "வேயிருந்தடந்தோளினர்" என்று D "சுந்தரத்தோளுடையான்" தோற்கும்படி தோள் படைத்த தோளுக்கிடுமாப₄ரணம். E "வேய்மருதோளிணை" மெலியுங் காலத்திலிறே வளைபொருதொழிவது; இப்போது அணைக்கிற காலமிறே.

(தோடே) தங்கள் கைக்கும் தங்கள் தோளுக்குமாப₄ரணம் போலன்றே; அவன் தோளுக்குப் பூணுமாப₄ரணமும் பூணவேணும். இவர்களுடைய காதுப்பணியும் செவிப்பூவும் பட்ட விமர்த்த₃த்தாலே வந்த ஶோபை₄யைக் கோட்சொல்லுமிறே அவன் தோள்கள். F "கண்டேன் கனமகரக் குழையிரண்டும் நான்குதோளும்" என்று-அவனுடைய கர்ணபூ₄ஷணம் அவன் தோள்களுக்கு அலங்காரமாலேற்போலே, இவர்களுடைய காதுப்பணியும் செவிப்பூவும் தோள்களுக்கு அலங்காரமாயிறேயிருப்பது. (தோடே) G "பொற்றேடு பெய்து"

A திருவாய் 10-3-5. B பெரியதிரு 3-7-1. C திருவாய் 6-2-3. D நாச்₃திரு 9-1. E திருவாய் 10-3-1. F திருநெடு 22. G பெரியாழ்திரு 3-7-6.

என்று பண்டே தோடிட்டாலும் இவன் இட்டாற் போலேயிராதே. (செவிப்பூவே) அணைத்தலநந்தரம் ஆக்ராணத்துக்கு விஷயமானவிடம். (பாடகம்) அணைத்துத் தோற்றவர்கள் விழுந்து பிடிக்கும் காலுக்கு ஆபரணம். (சூடகமே இத்யாதி3) பிடித்த கைக்கும் அணைத்த தோளுக்கும் அணைத்தவிடத்தே உறுத்துமதுக்கும் ஸ்பர்சத்துக்குத் தோற்றுவிழும் துறைக்கும். (சூடகமே-பாடகமே) A "கைத்தலம்பற்ற" B "திருக்கையால் தாள்பற்றி". கையைக் காலைப் பிடித்திறே நடுவுள்ளதெல்லாம் நடத்துவது.

(என்றனைய பல்கலனும்) இவ்வளவிலிருந்தெண்ணுமதன்றே. பருப்பருத்தன சிலவற்றைச் சொன்னேம். நீயறியுமனையையெல்லாம் என்கிறார்கள். C "பலபலவே யாபரணம்" என்னக்கடவதிறே அவன்றனக்குட்பட. (யாமணிவோம்) ஆபரணங்களுக்கு அழகு கொடுக்கவல்ல அவயவங்களிலே கிடந்து தானும் நிறம் பெற்று, பூட்டின தானும் நிறம்பெற்றுப் போம்படி வடிவுபடைத்த நாங்கள். இவ்வெல்லை வருமளவிறே "மலரிட்டு நாம்முடியோம்" (2) என்றது. "நாம்முடியோம்" (2) என்றுள் பூட்டமாட்டான்; "அணிவோம்" என்றுள் பூட்டாதிருக்கமாட்டான்; அவன் அலங்காரக்கைக்கு இவர்களநுமதியேயமையும். (யாமணிவோம்) ஒருவரை யொருவர் மாறி மாறி ஒப்பிக்கக் கணிசிக்கிறார்கள். (நாடு புகழும் பரிசினுல் — யாமணிவோம்) D "நிறைபுகழாய்ச்சியர்" E "அணியிழையாய்ச்சியர்" என்கிற இரண்டும் பெறவேணும்.

(ஆடையுடுப்போம்) F "பூணியிழைகளணிவும்" என்றுள் F "ஆடையுடையும்" என்று அடைவு. G "காறைபூணும் கண்ணுடிகாணும் தன்கையில் வளைகுலுக்கும்" என்றுள் பின்னை G கூறையுடுக்கையிறே அடைவு.

(நாடுபுகழும் பரிசினுல் — ஆடையுடுப்போம்) G "கூறையுடுக்குமயர்க்கும்" என்று வசைசொல்லாதபடி அரையிலே தொங்கும்படி உடுக்கை. (கோவிந்தா உன்றன்னைப்பாடி — ஆடையுடுப்போம்) இவன் தூரவாஹியானபோது "கோவிந்தன்" என்று புடவை பெறுகிறவள், இவன் ஸந்நிதியிலே சொன்னுல் புடவை பெறக் கேட்கவேணுமோ? (ஆடையுடுப்போம்) முன்பு உடாதேயிருந்து இப்போது உடுப்போமென்கிறார்களன்று: அவனுடுத்த உடுக்குமதிறே — உடையாவது இவர்களுடுக்கவுபக்ரமிக்க 'உடுத்தபடிபொல்லாது' என்று அவன் அழிக்கை

A நாச்-திரு 6 — 6. B நாச்-திரு 6 - 8. C திருவாய் 2 — 5 — 6.
D நாச்-திரு 4—11. E திருவாய் 9—10—11. F திருவாய் 8—9—5.
G பெரியாழ் திரு 3—7—8.

யிறே நன்றுக உடுக்கையாவது. (நன்றுக — ஆடையுடுப்போம்) A ''அரையில்பீதக வண்ணவாடைகொண்டு'' என்கிறபடியே அவனைப்போலே வெளுப்போடேவாங்கி உடுத்ததன்றிக்கே, உடுத்து முசித்து வேர்ப்புமணத்தோடே கூடின கூறைமாருடப் பட்ட உடையாயிருக்கை. (அணிவோம் — உடுப்போம்) பிரிந்திருக்கிலிறே. B ''வரி வளையால் குறைவிலமே'' C ''மேகலையால் குறைவிலமே'' என்னவேண்டுவது. (பல்கலனும் யாமணிவோம் ஆடையுடுப்போம்) D ''எண்ணில் பல்கலன்களும் ஏலு மாடையும்'' என்னக்கடவதிறே.

(அதன்பின்னே) E ''பீதகவாடை''யுடுத்தால் E கலத்ததுண்ணுமத்தனையிறே. (அதன்பின்னே) புறம்பேயொன்றைப்பற்றினால் அவையுமில்லை, அவனையுங்கிடையாது; அவனைப்பற்றினார்க்கு ஸர்வலாப₄முமுண்டு. (பாற்சோறுமூட நெய்பெய்து) ''நெய் யுண்ணேம் பாலுண்ணேம்'' (2) என்கிற வ்ரதங்கள் ஸமாபித்து; இவர்கள் வ்ரதத்துக்காகத் தவிர்ந்து, இவர்கள் தவிருகையாலே அவன்தவிர்ந்து ஊரில் நெய்க்கும் பாலுக்கும் போக்கில்லையே. நெய்ப்பெருமையாலும் பால்பெருமை யாலும் நீரிலாக்காதே பாலிலேயாக்கி நெய்யை நிரம்பவிட்டு, நெய்யிடையிலே சோறுண்டோ' என்று தடவி எடுக்கவேண்டும்படியிருக்கை. (முழங்கைவழிவார) க்ருஷ்ணன் ஸந்நிதி₃யில் த்ருப்தைகளாயிருக்கிறவர்களுக்கு உள்ளுத்தொங்குகிற தன்றே; கைவழியே வழிய.

(கூடியிருந்து) பரிகெடவுண்கிறார்களன்றே; எல்லாருங்கூடத்தொட்டுக்கொண்டி ருக்கையிறே உத்₃தே₃ஶ்யம். (கூடி) பிரிந்துபட்ட வ்யஸநமெல்லாந் தீரக் கூடி F ''எந்நாள் வந்து கூடுவன்'' என்ற இழவும் தீர்ந்தபடி. (இருந்து) வாசல்கள் தோறும் அலமந்து எழுப்பிக்கொண்டு திரிந்த க்லேஶமெல்லாம் தீர இருந்து. (குளிர்ந்து) பிரிந்து கமர்பிளந்த நெஞ்சுகள் வவ்வலிடும்படி குளிர்ந்து.

(கோவிந்தா உன்றன்னைப்பாடி — கூடியிருந்து குளிர்ந்து) G ''கோவிந்தன் குணம்பாடி ஆவிகாத்து'' H ''காமத்தியுள் புகுந்து - கதுவாநிற்க'' இராதே, I ''குளிர்ந்துறைகின்ற கோவிந்தனே'' ஸாம்யாபந்நைகளாயிருக்கை. ஆக, இந்த இரண்டு பாட்டாலும் — ஸாம்யாபத்தியும் கு₃ணநு₃பு₄வமுமென்கிற இரண்டு அர்த்த₃முஞ் சொல்லப்பட்டது. விரஜாஸ்நாநத்திலே உத்₃யுக்தனாய்ப்போருமவனுக்கு J ''கானங்கள் வலம்புரிகள், தூர்யகோ₄ஷம்'', J ''ஆண்மின்கள் வானகம்'' என்கிற மங்க₃ளாஶாஸநம், K ''நிறைகுடவிளக்கம்'', L ''கொடியணி நெடுமதில்'' என்னும்படி கட்டின கொடியும் மேல்கட்டியுமாய் ஆதிவாஹிகர் தொடக்கமான வர்கள் ஸத்கரிக்கப்போய், விரஜாஸ்நாநம் பண்ணினவநந்தரம் ஶ்ரீவைகுண்ட.

A நாச்-திரு 13-1. B திருவாய் 4-8-7. C திருவாய் 4-8-8. D திருவாய் 4-3-5.
E திருப்பல் 9. F திருவாய் 10-10-9. G நாச்-திரு 8-3. H நாச்-திரு 8-2.
I பெரியாழ்திரு 4-4-8. J திருவாய் 10-9-6. K திருவாய் 10-9-10. L திருவாய் 10-9-8.

நாதனை ஒப்பிக்கக் கடவராயிருக்கும் திவ்யாப்ஸரஸ்ஸுக்கள் பலஹஸ்தைகளுமாய் வாலோஹஸ்தைகளுமாய் வந்து ப்ரஹ்மாலங்காரம்பண்ண ஸ்ரீவைகுண்டநாதனோடே கூடி ஸகிகளோடே சேர்ந்திருந்து ஸம்ஸாரதாப ஸ்பர்ஶமின்றிக்கே நிரதிஶய போக்யமாய், A ''உண்ணுஞ்சோறு'' என்று சொல்லப்பட்ட போக்ய விஷயத்தை B ''பாலேபோல்சீர்'' என்கிற குணங்களோடே கைகழியப் போருகிற ஸ்நேஹத்தோடே புணர்த்துக் களிக்கக்கடவ பரிமாற்றத்தை ஒருமுகத்தாலே ஸூசிப்பிக்கிறார்கள். முக்தரானவர்களுக்கு இஸ்ஸத்காரமும் இவ்வநுபவமும் ஸித்திக்கிறது— C ''கோவிந்தன்றனக்குக் குடியடியார்'' என்றிறே. (கோவிந்தாவுன்றன்னைப்பாடி) தேஹாந்தரே தேஶாந்தரே பெறக்கடவ பேற்றை எங்களுக்கு நீ ஸம்மானமாகப் பண்ணித்தரவேணுமென்று ஸாம்யாபத்தியையும் குணானுபவத்தையும் அபேக்ஷித்தார்களாயிருக்கிறது. திருவடி, திருவநந்தாழ்வான், திவ்யாயுதாழ்வார்கள் தொடக்கமான ஸூரிவர்க்கம், திவ்யமஹிஷிகள், முமுக்ஷுக்கள், அஸாதாரணமான நாடு, ஈஶ்வரன்தானே எல்லாரும் ஸம்மானம் பண்ணும்படியான விஷயம், முமுக்ஷுவாய் முக்தனும் என்கிற ஸ்ருத்யர்த்தமும் ஸூசிதமாகிறது.

(கூடியிருந்து குளிர்ந்து — பல்கலனும் யாமணிவோம்) பிரிந்தபோது பரியட்டங்களையும் ஆபரணங்களையும் கட்டி எங்கேனும் போகட்டு, 'ராக்ஷஸிகள் நடுவிருக்கிற எனக்கு என்செய்ய?' என்றிருந்த பிராட்டியைப்போலே இருந்தார்களிவர்கள்; ''ஸ்நானமும் வஸ்த்ரங்களும் ஆபரணங்களும் பரதனையொழிய நமக்கென்றிய?'' என்றிருந்த பெருமாளைப் போலேயிருந்தான் — க்ருஷ்ணன். D நீராட்டமைத்துக் குளிக்க அழைத்தாலும் வாராதே, E ''நப்பின்னை காணிற் சிரிக்கும்'' என்றுலுமிசையாதே, இவன் குளியாதிருக்கிறமை அவர்களும் அறிகையாலே ''உன்மணாளனை எம்மை நீராட்டு'' (20) என்றது. இவர்கள் இவர்களோடே கூடின பின்பு, விஸ்மிதராஜடராய் ஸ்நானம் பண்ணி; சித்ரமால்யாநுலேபநராய், மஹார்ஹ வஸநமுமுடுத்து விளங்கி நின்றாற்போலே, இவனும் இவர்களோடே கூடிக்குளித்து ஒப்பித்து விளங்கவேண்டுகையாலே, கூடியிருந்து இப்படி செய்யக் கடவோமென்கிறார்கள். (நன்றாக — கூடியிருந்து குளிர்ந்து) இனி விஶ்லேஷவ்யஸநம் பிறவாத கூட்டரவாகவேணும். நன்னாளிலே வருகிற கூட்டரவாகையாலே நன்றாகக் கூட வேணுமிறே. ''உன்றன்னைப்பாடி — கூடி — குளிர்ந்து வாய் பாட, உடம்புகூட, நெஞ்சுகுளிர. கூடி — குளிர்ந்து குள்ளக்குளிர நீரிலே தோயாதே நீர்வண்ணன் மார்வத்திலே தோயவேணும்''. 27.

A திருவாய் 6-7-1, B பெரியதிருவ 58, C திருவாய் 10-9-8, D பெரியாழ்திரு 3-3-3. E பெரியாழ் திரு 2-4-9.

ஈ₃ராயிரப்படி — இருபத்தேழாம் பாட்டு

அவ:— இருபத்தேழாம் பாட்டு. கீழில் தன் ஸ்வரூபஸித்₃தி₄ சொல்லிற்று; இப்போது அவர்களை அலங்கரிக்கிறபடி சொல்லுகிறது.

வ்யா:— (கூடாரை வெல்லும்) "எங்களைத் தோற்பித்த நீ யாரை வெல்ல மாட்டாய்?" என்கிறார்கள். அதாவது — நாங்கள் முன்னே வந்து நின்று வார்த்தை சொல்லும்படி பண்ணினாயே; ஆந்தனையும் பார்த்தால் கூடாரை வெல்லுமித்தனை; கூடினால் தான் தோற்குமித்தனை; (சீர்) எல்லாரையும் வெல்லுவது கு₃ணத்தாலே; அஜ்ஞரை ஸர்வஜ்ஞராக்கும்; ஸர்வஜ்ஞரை A "எத்திறம்" என்னப்பண்ணும். 1. "ஸத்யேந லோகாம்ஜயதி" இத்யாதி₃வத். (கோவிந்தா) பசுக்களுக்கும் தோற்குமவனே!

(உன்தன்னைப்பாடி) விலக்கினவது பெற்றபடி. "ஹிரண்யாய" என்கை தவிர்ந்து உன்னைச் சொல்லப் பெறுவதே என்கை. (பாடியுன்தன்னை) பெண்கள் புணர்ப்பே தா₄ரகமாகப் பாடித் திரியுமென்கை. பாடுகையே ப்ரயோஜன மென்றுமாம். (சீர்) சிலவத்தையின் மிகுதியே என்னவுமாம். (பறைகொண்டு) ப்ரா₄ப்யத்தில் ப்ராபக வ்யவஹாரம்; ஊருக்குப் பறையென்கிறது. (யாம் பெறு சம்மானம்) தங்கள் பேறு. அநாதி₃காலம் எல்லாராலும் பட்ட பரிபூ₄வம் மறக்கும்படி அவள் கொண்டாடும்படி சொல்லுகிறது.

(நாடு புகழும் பரிசு) "பாரோர் புகழ" (1) என்னும்படியே 'ஒருவர் கொடுக்கும்படியே! சிலர் பெறும்படியே!' என்று கொண்டாடவேணும். (நன்ருக) நாடு சிரிக்கும்படியன்றிக்கே. 2. "ப்ரதே₃ஹி ஸ்ப்₄ரு₄ஹாரம் யஸ்ய துஷ்டாஸி பூ₄மிந்" என்று இந்த்₃ரன் வரக்காட்டின ஹாரத்தைக் கையிலே பிடித்துப் பிராட்டியும் தானும் திருவடியை அலங்கரிப்பித்தாற் போலே. (நன்ருக) 3. "தம் ப்₃ரஹ்மாலங்காரேண அலங்குர்வந்தி" போலே. (சூடகமே)" B "அடிச்சியோம் தலைமிசை நீ அணியாய்" என்னுமாபோல அவன் சொல்லி மார்விலும், தலையிலும் வைத்துக்கொள்ளும் கைக்கு இடும் சூடகம். 4. "தம் மணிம் ஹ்ருத₃யே க்ருத்வா" இத்யாதி₃வத். முந்துறக் காணுமிடம். (தோள் வளையே) அத்தலையில் ஸ்பர்ஶம் அணைக்க வேண்டியிருக்கையாலே, அணைத்த தோளுக்குத் தோள்வளையுமென்கை. (தோடே) அணைத்தாலும் உறுத்துமவை. C "கண்டேன் கனமகரக்குழையிரண்டும் நான்கு தோளும்" என்னுமாபோலே. (செவிப்பூவே) ஆக்₄ராணம் பண்ணுமிடம். கண்ணுகவுமாம். (பாடகம்) அணைத்தால் துவண்டு விழுமிடம். (அணைய பல்கலனும்) பருப் பருத்தன சில சொன்னவித்தனை. நீயறியுமவையெல்லாமென்கை. D "பலபல வேயாபரணம்" இத்யாதி₃ இத்த₃சையிலே எண்ணப்போமோ? (யாமணிவோம்) "மலரிட்டு நரம் முடியோம்" (2) என்ற இவர்கள் அனுமதிபண்ண அமையுமென்கை.

(ஆடையுடுப்போம்) "பண்டு உடார்களோ?" என்னில்: அவனுடுத்தது உடை; உடாதது உடையன்றென்கை. அதாவது — கூறைமாறுகை. E "புனை

A திருவாய் 1-3-1. B திருவாய் 10-3-5. C திருநெடு 22. D திருவாய் 2-5-6. E திருவாய் 8-9-5.

யிழை" இத்யாதி3. A "அப்பன் திருவருள் மூழ்கினள்" என்கிறபடியே அவளுட்டை ஸம்ப3ந்த4மே இவர்கள் நன்மைக்கெல்லாம் அடி என்கை. A புதுக்கணிப்பும் — அவனுகப்பொழிய, தங்களுகப்பு பொகட்டபடி. (அதன் பின்னே பாற்சோறு இத்யாதி3) ப4க3வத் ஸம்ப3ந்த4முண்டான திருவாய்ப்பாடியில் ஸம்ருத்3தி4களெல்லாம் இவளுக்கு ப்ரியமாயிருக்கிறபடி. (கூடியிருந்து) பு4ஜிக்கக் கடவதன்று; பிரிந்து பட்ட க்லேஶம் தீர, கூடித் தொட்டுக் கொண்டிருக்கை ப்ரயோஜநம். 1. "அஹமந்நம்" இத்யாதி3ப்படியே ஒருவர்க்கொருவர் போ4க்3யமென்கை. (குளிர்ந்து) பிரிந்து கமர் பிளந்த நெஞ்சங்கள் வவ்வலிடும்படி. 27.

நாலாயிரப்படி — இருபத்தேழாம் பாட்டு

அவ:— இருபத்தேழாம் பாட்டு. கீழ் தன் ஸ்வரூபஸித்3தி4யைச் சொல்லிற்று; இப்போது அவர்களை அலங்கரிக்கும்படி சொல்லுகிறது.

வ்யா:— (கூடாரை வெல்லும்) தாங்கள் பட்ட இடரை அறிவித்து அத்தலையைத் தோற்பிக்க நினைத்தார்கள். அவன் தன் தோல்வியைக் காட்டி அவர்களைத் தோற்பித்தபடியைச் சொல்லுகிறது. 'எங்களைத் தோற்பித்த நீ யாரை வெல்லமாட்டாய்?' என்கிறார்கள்; அதாவது — நாங்கள்வந்து உன் முன்னே நின்று வார்த்தை சொல்லும்படி பண்ணினாய். ஆந்தனையும் பார்த்தால் 1. "ந நமேயம்" என்ற கூடாரை வெல்லுமத்தனை; கூடினார்க்குத் தான் தோற்குமித்தனை. (சீர்) எல்லாரையும் வெல்லுவது குணத்தாலே. கூடுவாரை ஶீலத்தாலே வெல்லும்; கூடாதாரை ஸௌலப்யத்தாலே வெல்லும். அழகுக்கும் அம்புக்கும் இலக்காக்கும்; அஜ்ஞரை ஸர்வஜ்ஞராக்கும். ஸர்வஜ்ஞரை B 'எத்திறம்' என்னப் பண்ணும். 2. "ஸத்யேந லோகாந் ஜயதி" இத்யாதி3. அம்பு வாய் மருந்தூட்டித் தீர்க்கலாம். இதுக்குப் பரிஹாரமில்லை. நீர் கொன்றூற்போலே. C "நீர்மையால் நெஞ்சம் வஞ்சித்துப் புகுந்து" என்னக்கடவதிறே. ஸத்ருக்களை வில்லைக்காட்டிக் கொல்லுமத்தனை. 3. "சசால சாபம் ச முமோச வீர:" என்று விற்பிடித்த பிடியைக்கண்டு வில்லை ராவணன் பொகட்டான். பின்னை வில்லெடாதேயொழிந்தாலுகில் பெருமாளை வென்றே போகலாயிற்று. 'விற்கைவீரன் பெருமாள்; வெறுங்கைவீரன் ராவணன்' என்றன் ருஷி. (கோவிந்தா) பசுக்களுக்கும் தோற்குமவன்; கூடுவோமென்னும் அபி4ஸந்தி4 இல்லாதாரையும் ரக்ஷித்தபடி.

(உன்தன்னைப் பாடி) விலக்கினவது பெற்றபடி. "ஹிரண்யாய நம:" என்கை தவிர்ந்து உன்பேர் சொல்லப்பெறுவதே! என்கை. (உன்தன்னைப்பாடி) பெண்கள் புணர்ப்பே தா3ரகமாகப் பாடித்திரியும் உன்னைப் பாடுகையே ப்ரயோஜநம் போரும் என்றுமாம். (சீர்) ஶீலவத்தையின் மிகுதியாகவுமாம். (பறைகொண்டு) ப்ராப்யத்திலே ப்ராப்கவ்யவஹ்ஹாரம்; உங்களுக்குப் பறையென்கிறது. (யாம் பெறு சம்மானம்) தங்கள் பேறு. இவ்வளவிலே வெளித்திருமுற்றத்தில் நின்றும்

A திருவாய் 8-9-5, B திருவாய் 1-3-1 C திருவாய் 9-6-3.

ப்ரஸாத₃ம் கொண்டு ஒருவன்வர, 'இது யாம்பெறு சம்மானம் வந்தது' என்று பூட்டர் அருளிச்செய்தார். 1. "பதிஸம்மாநிதா ஸீதா" என்று 'தோளில் மாலையை வாங்கியிட்டார்' என்று ஆழ்வான் பணிக்கும். பூட்டர் 'ப்ரணயித்வத்தாலே காலைப் பிடித்து நில் என்றார்' என்பர். 2. "தாம் ஸ்ரீரிதி த்வது₃ஸம்ஸ்ரயணந் நிராஹ:" என்று கொடுத்தால் தட்டென் என்கை. (யாம் பெறு சம்மானம்) அநாதி₃காலம் எல்லாராலும் பட்ட பரிப₄வம் மறக்கும்படி அவன் கொண்டாடும்படி சொல்லுகிறது.

(நாடு புகழும் பரிசு) "பாரோர் புகழ" (1) என்னும்படியே 'ஒருவன் கொடுக்கும் படியே! சிலர் பெறும்படியே!' என்று கொண்டாட; ஸஞ்ஜயனும் ரூகஸாரணர்களும் இவனுடைய ஆஸ்ரிதபக்ஷபாதத்தைப் புகழ்ந்து போனற்போலே. (நன்றாக) நாடு சிரிக்கும்படி காலன் கொண்ட பொன்னையிட்டு ஆப₄ரணம் பூண்கையன்றிக்கே, 3. "ப்ரதே₃ஹி ஸுப₄கே₃ ஹாரம் யஸ்ய துஷ்டாஸி ப₄ாமிநி" என்று இந்த்₃ரன் வரக்காடடின ஹாரத்தைப் பெருமாள் பிராட்டிக்குக் கொடுக்க, அத்தை ஒருகையிலே பிடித்து, பெருமானே ஒரு கண்ணாலும் 'இத்தை இவனுக்குக் கொடுப்பது' என்று திருவடியை ஒரு கண்ணாலும் பார்க்க, பெருமாள் அத்தையறிந்தருளி, 'ஆஸ்ரிதரை யறிவாய் நீயன்றே; கொடுக்கலாகாதோ' என்றருளிச்செய்யக் கொடுத்தாற்போலே இருவரும் கூடிக்கொடுக்கும் ஆப₄ரணமென்கை. 4. "தம் ப்₃ரஹ்மாலங்காரேண அலங்குர்வந்தி" என்று விரஜைக்கு அக்கரைப்பட்டாரை எம்பெருமான் தன்னை ஒப்பிப்பாரையிட்டு ஒப்பிக்கக்கடவது. இங்கு அங்ஙனன்றியே தானும் பிராட்டியுங்கூட ஒப்பித்த தன்னேற்றம் சொல்லுகிறது. (நன்றாக) ஆப₄ரணத்தைப்பூண்டு அவர் வரவு பார்த்திராதொழிகை என்றுமாம்.

(கூடகமே) A "வெள்ளி வளைக்கைபறற" என்கிறபடியே அங்யார்ஹைகளாகப் பிடித்த கைகளிலேயிறே முதலாப₄ரணம் பூட்டுவது. B "அடிச்சியோம் தலைமிசை நீயணியாய்" என்னும்போலே அவனும் சொல்லி மார்பிலும் தலையிலும் வைத்துக் கொள்ளும் கைக்கு இடும் கூடகம். முந்துறத்தான் உறவுபண்ணுமிடம். C "கைத்தலம் பற்ற". (தோள்வளையே) அத்தலையில் ஸ்பர்ஶமே அணைக்கவேண்டியிருக்கையாலே அணைத்த தோளுக்குத் தோள்வளையுமென்கை. (தோடே) அணைத்தாலுறுத்துமவை. 5. "ப்ரியாவதம்ஸோத்பல" D "கண்டேன் கனமகரக் குழையிரண்டும் நான்கு தோளும்" என்னும்படியே. (தோள் வளையே தோடே செவிப்பூவே) செவிப்பூ — ஆக்₄ராணம் பண்ணுமிடம்; கண்ணுகவுமாம்.

(பாடகமே) அணைத்தால் துவண்டுவிழுமிடம். 6. "அஸிதேக்ஷணே"யாகையாலே, 7. "ஜிதம் தே புண்ட₃ரீகாக்ஷ" என்று அவன் தோற்று விழுமிடம். (அனைய பல்கலன்) பருப்பருத்தன சிலசொன்னவித்தனை. நீ அறியுமவையெல்லாம் வேணுமென்கை. E "பலபலவேயாபரண"மிறே. இத்த₃சையிலேயிருந்து எண்ணப்போமோ? (யாமணிவோம்) "மலரிட்டுநாம்முடியோம்" (2) என்னுமிவர்கள் அநுமதி பண்ணவும் அமையுமென்கை.

A பெரிய திரு 3-7-1, B திருவாய் 10-3-5, C நாச்-திரு 6-6, D திருநெடு 22.
E திருவாய் 2-5-6.

(ஆடையுடுப்போம்) 'பண்டு உடார்களோ?' என்னில்: (கோவிந்தா உன் தன்னைப் பாடி ஆடையுடுப்போம்) ஒருத்திக்குப் புடவை கொடுத்தது இவர்களுக்குச் செய்யச் சொல்லவேணுமோ? அவன் உடுத்த உடாதது உடையன்றென்றிருக்கை. அதாவது கூறைமாருடுகை. A "புனையிழைகளணிவுமாடையுடையும் புதுக்கணிப்பும் நினையும் நீர்மையதன்று" A "அப்பன் திருவருள் சூழ்கின்ள்" என்னும்படியே அவனுக்கட்டை ஸம்பந்தமே இவர்கள் நன்மைக்கெல்லாம் அடி. A [புதுக்கணிப்பும்] அவனுகப்பொழிய, தங்களுகப்புப் பொகடடபடி. நோன்பு முடிக்கையாலே நல்ல பரியட்டமுடுக்க என்றுமாம். B "உடுத்துக்களைந்த" என்னுமவர்களிறே. (அதன் பின்னே பாற்சோறு மூட நெய் பெய்து முழங்கை வழிவார) பகவத்ஸம்பந்த முண்டான திருவாய்ப்பாடியில் ஸம்ருத்திகளெல்லாம் இவர்களுக்கு ப்ரியமாயிருக்கிறபடி. நம்பிதிருவழுதிவளநாடுதாஸர், "நெய்வாயில் படாதோ?" என்ன, 'ஒரு விழ் வாயில் தொங்கிலன்றே நெய் வாயில்படுவது" என்று பட்டர் அருளிச் செய்தார். க்ருஷ்ணஸந்நிதியாலே த்ருப்தைகளாயிருக்கிறார்கள். பால்தொங்கி லன்றே நெய்தொங்குவது. 'நெய்யுண்ணும் பாலுண்ணும்' (2) என்றது தனியாகை.

(கூடியிருந்து) தனியே புஜிக்கக்கடவதன்று. உண்கை உத்தேச்யமன்று. பிரிந்துபட்ட க்லேசம்தீரக் கூடத் தொட்டுக் கொண்டிருக்கையே ப்ரயோஜனம். 'நம்பெருமாள் திருநாள்' என்று ஒருபேரையிட்டு ஸ்ரீவைஷ்ணவர்களையடையத் திரட்டிக் காணுமாபோலே. 1. "ஸோஶ்நுதே ஸர்வான் காமான் ஸஹ ப்ரஹ்மணா விபஶ்சிதா" 2. "அஹமந்ந"மித்யாதி. ஒருவர்க்கொருவர் போக்யமாகை. (குளிர்ந்து) பிரிந்து கமர் பிளந்த நெஞ்சுகள் வவ்வலிடும்படி. 27.

ஸ்வாபதேஶவ்யாக்யானம் — இருபத்தேழாம்பாட்டு

அவ,— இருபத்தேழாம்பாட்டு. (கூடாரை இத்யாதி) இப்பாட்டில், நோற்ற ருல், அவன்பக்கல் பெறுமவற்றைச் சொல்லுகிறார்கள்.

வ்யா:— (கூடாரை வெல்லுஞ் சீர்) கரணகளேபரப்ரதானம் முதலாக ஸாங்கஶாஸ்த்ரப்ரதானம் பண்ணின இடத்திலும் 3 "ந நமேயம்" என்றிருப்பாரைத் தன்னுடைய ஔதார்யாதி குணங்களாலும் ஶீலாதி குணங்களாலும் வெல்லுமித்தனை. விற்பிடியைக் காட்டி ராவணனை ஜயித்தான்; இது ப்ரதமயுத்த தத்திலே; 4 "கூச்சாநுஜாநாமி" என்று இவனும் அதுக்கு எதிர்பார்த்துப் போனவன்; தோலாமை இல்லையிறே. 'ஆனால் மறுபடியும் யுத்தமுண்டானபடி எங்ஙனே?' என்னில்:—பெருமாளுடைய நிரதிஶயஔதார்யத்தை ப்ரகாஶிப்பிக்கைக்காக மறுபடியும் யுத்தம்பண்ணினனித்தனை. 5. "ஶத்ரோ: ப்ரக்ருதவீர்யஸ்ய ரஞ்ஜநீயஸ்ய விக்ரமை:" 6."ஸ்வவிக்ரமை: ரஞ்ஜநீயஸ்ய" என்னக்கடவதிறே என்று நம்முடைய ஆசார்யர் அருளிச்செய்வர். தன்னுடைய வடிவழகைக்காட்டி கோபி மார்களை ஜயித்தான்; ஸ்வரூப ரூப குண விபூதிகளாலே ஸர்வஸ்மாத்பரனை

A திருவாய் 8-9-5. B திருப்பல் 9.

தன்னுடைய வைலக்ஷண்யத்தைக் காட்டி ஆழ்வார்களை ஜயித்தான்; இவை ஒன்றிலும் ஈடுபடாத நம்போல்வாரை ஆழ்வார் ஸம்ப₃ந்த₄த்தை வ்யாஜீகரித்து ஜயிக்குமித்தனை. (கோவிந்தா) ஸர்வ ஸுலப₄னவனே! (உன்தன்னைப்பாடி) ஸர்வஸ்மாத்பரனுய் ஸர்வஸுலப₄னை உன்னை த்வத₃நுப₄வ ஜநித ப்ரீதிக்குப் போக்கு வீடாகப் பாடி. (பறை கொண்டு) புருஷார்த்த₃த்தை லபி₄த்து. (யாம் பெறு சம்மானம் நாடு புகழும் பரிசினுல் நன்ருக) நாடு ஸ்வாபி₄ப்ராயமாகக் கொண்டாடும் ப்ரகாரத்தாலே உன்பக்கல் ஸகப்ரார்த்திருக்கும் நாங்கள் லபி₄க்கிற ப₃ஹுமாநம்; உன்பக்கல் நன்ருக யாம் பெறுசம்மாநமென்றுமாம். (கூடகமே) காப்பே. (தோள்வளையே) திருவிலச்சினையே. (தோடே) திருமந்த்ரமே. (செவிப்பூவே) த்₃வயமே. (பாடகமே) சரமஸ்லோகமே. இவை ஸ்வரூபஜ்ஞனுய் முமுக்ஷுவான அதி₄காரிக்கு அவஸ்யாபேக்ஷிதங்களாய் ப₄க₃வத்ஸம்ப₃ந்த₄த்₃யோதகங்களாயிருப்பன. இதில் தோடு, மண்ட₃லாகாரமாய் மந்த்ரஸ்வரூபவிவரணியான ப்ரணவாகாரத்துக்கு த்₃யோதகமாயிருக்கையாலே திருமந்த்ரத்தைச் சொல்லுகிறது. (செவிப்பூ) ஸ்வயம் போ₄க₃ரூபமாகையாலே போ₄க₃ப்ரதா₄னமான த்₃வயத்தைச் சொல்லுகிறது. (பாடகம்) பாடகம் ப₃த்₃த₄ரூபமாகையாலே, உபாயாந்தரநிவ்ருத்திபரமான சரமஸ்லோகத்தைச் சொல்லுகிறது. இம்மூன்றும் ரஹஸ்யத்தாலும் ஜ்ஞாநப₄க்திவைராக்₃யங்களைச் சொல்லுகிறது. அது எங்ஙனே? என்னில்:— திருமந்த்ரம் — ஆத்ம ஸ்வரூப யாதா₂ம்யஜ்ஞாநபரமாகையாலும், த்₃வயம் உத்தரக₂ண்ட₃த்திற் சொல்லுகிற கைங்கர்யத்துக்குப் பூர்வபா₄வியான ப₄க்தி ப்ரதா₄நமாகையாலும், சரமஸ்லோகம் — த்யாஜ்யாம்ஸத்தில் வைராக்₃ய ப்ரதா₄நமாகையாலும், ஜ்ஞாந ப₄க்தி வைராக்₃யங்களைச் சொல்லுகிறது. (என்று அனைய) என்று சொல்லப்படுகிற, (பல்கலனும்)—ஜ்ஞாந ப₄க்தி வைராக்₃யங்கள் மூன்றும்; ஒரொன்றே விஷயபே₄த₃த்தாலே அநேகமாயிருக்குமிறே; ஆகையாலே 'பல்கலனும்' என்கிருர்கள். (யாம் அணிவோம்) உனக்கே கூடாத அன்று இவையொனறும் வேண்டாத நாம் இன்று அணியக்கடவோம். ப₄க₃வத்ஸம்ப₃ந்த₄மின்றியிலே ஜ்ஞாநப₄க்திவைராக்₃யங்களுண்டானலும் அபாயமேயிறே ப₂லிப்பது. பெ₃ளத்₃த₄னுக்கும் ஜ்ஞாந ப₄க்தி வைராக்₃யங்கள் உண்டிறே.

(ஆடையுடுப்போம்) மோக்ஷத்வஜ்ஞாநமாகிற வஸ்த்ரத்தை உடுப்போம். (அதன் பின்னே) அதுக்குமேலே. (பாற்சோறு) கைங்கர்யமானது. (மூடநெய் பெய்து) மறையும்படி பாரதந்த்ர்யத்தை வெளியிட்டு. (கூடியிருந்து குளிர்ந்து) போ₄க்த்ருவான உன்னோடு போ₄க்₃யரான நாம் ஸம்ப₃ந்தி₄த்திருந்து விஸ்லேஷவ்யஸநமெல்லாம் தீரப்பெற்ருரும். இதுவன்ருே நாம் உன்பக்கல் பெறும் ஸம்மாநம்.

இருபத்தெட்டாம் பாட்டு

கறவைகள் பின்சென்று கானம்சேர்ந் துண்போம்
அறிவொன்று மில்லாத ஆய்க்குலத் துன்றன்னைப்
பிறவி பெறுந்தனைப் புண்ணியம் யாமுடையோம்
குறைவொன்று மில்லாத கோவிந்தா வுன்றன்னை
நிறமேல் நமக்கிங் கொழிக்க வொழியா(து)
அறியாத பிள்ளைகளோ மன்பினு லுன்றன்னைச்
சிறுபே ரழைத்தனவுஞ் சீறி யருளாதே
இறைவாநீ தாராய் பறையேலோ ரெம்பாவாய்.

பதவுரை:— குறை ஒன்றும் இல்லாத கோவிந்தா — ஒருகுறையும் இல்லாதவனான கோவிந்தனே! யாம் — நாங்கள், கறவைகள் பின்சென்று — பசுக்களின் பின்னே போய், கானம் சேர்ந்து — காடு சேர்ந்து, உண்போம் — உண்டு திரிவோம்; அறிவு ஒன்றும் இல்லாத — சிறிதும் அறிவற்ற, ஆய்க் குலத்து — இடைக் குலத்தில், உன் தன்னை — உன்னை, பிறவி பெறும் தனை புண்ணியம் உடையோம் — பிறக்கப் பெறுவதற்குத்தக்க புண்ணியமுடையவர்களாய் இராநின்றோம்; இறைவா — எம்பிரானே! உன்தன்னோடு உறவு — உன்னோடு (எங்களுக்குள்ள) உறவானது, இங்கு நமக்கு ஒழிக்க ஒழியாது— இங்கு உன்னாலும் எங்களாலும் ஒழிக்க ஒழியமாட்டாது; அறியாத பிள்ளைகளோம் — (உலக வழக்கொன்றும்) அறியாத சிறுபெண்களான நாங்கள், உன்றன்னை — உன்னை அன்பினால் — பிரீதியினாலே, சிறுபேர் அழைத்தனவும் — சிறிய பேராலே அழைத்ததைக் குறித்தும், நீ — (ஆஸ்ரிதவத்ஸலனான)நீ, சீறி அருளாதே — கோபித்தருளாமல், பறை தாராய் — (நாங்கள் விரும்பும்) ப்ரயோஜனத்தைத் தரவேணும்.

மூவாயிரப்படி — இருபத்தெட்டாம்பாட்டு

அவ:— இருபத்தெட்டாம்பாட்டு. 8 முதற்பாட்டில் "நாராயணனே நமக்கே பறை தருவான்" (1) என்று ஸங்க்ரஹேண சொன்ன ப்ராப்ய ப்ராபகங்களை,

---

பெ. அ. இருபத்தெட்டாம் பாட்டு. (கறவைகள் இத்யாதி) 8 முதல் பாட்டில் "நாராயணனே" (1) என்றதால் — ப்ராபகத்தையும், "பறை" (1) என்றதால் — ப்ராப்யத்தையும் சொல்லியிருக்க, "இறைவா நீதாராய்" என்று இப்பாட்டில் சொல்லுமளவில் பௌநருக்த்யமும், 'இற்றைப்பறைகொள்வான் அன்றுகாண்' (29) என்று மேற்பாட்டிலே பறையை நிஷேதிக்கையால் அந்தப்பறை ப்ராப்யமென்று சொல்லுமளவில் விரோதமும் ப்ரஸங்கிக்குமென்றும் ஸங்கையிலே அருளிச்செய்கிறார் (முதற்பாட்டில் இத்யாதி) "நாராயணனே நமக்கே பறை தருவான்" (1) என்றது— அபராதமாய், அதுக்கு ஷமணத்தையும், கங்களாகிஞ்சந்யம் முதலான உபயுக்தார்த்தத்தையும் சொல்லுகையால் இது விவரணமாய்த்து; மேலிற் பாட்டில் அந்யாபதேஶமான அர்த்தத்தை நிஷேதித்து, "பறை" என்றதின் உட்கருத்தான அர்த்தத்தை விவரிக்கையால்

இந்த இரண்டுபாட்டாலே விவரிக்கிறது. b அதில் இப்பாட்டிலே b_2 'நாட்டார் இசைகைக்காக "நோன்பு" என்று ஒருவ்யாஜத்தையிட்டுப் புகுந்தோமித்தனே; எங்களுக்கு உத்₃தே₃ஶ்யம் அதுவன்று; உன்திருவடிகளில் கைங்கர்யமே' என்று தங்களுக்கு உத்₃தே₃ஶ்யமான புருஷார்த்த₃ ஸித்₃தி₄க்குத் தங்கள் ஆகிஞ்சந்யத்தையும் ப்ர₃ப்தியையும் முன்னிட்டு, 'நீயே உபாயமாகவேணும்' என்று அபேக்ஷித்து, இதுக்கு க்ஷாமணம் பண்ணிக்கொண்டு, ப்ராப்ய ப்ரார்த்த₂நம் பண்ணித் தலைக் கட்டுகிறது. c மேலிற்பாட்டிலே — ப்ராப்ய ப்ரார்த்த₂நம் பண்ணுநின்றதாகில், இங்குப் பண்ணுகிற தென்னென்னில்: — c_2 ப்ராபகம் ப்ராப்யஸாபேக்ஷம் ஆகையாலே சொல்லுகிறார்கள்.

வ்யா:— d (கறவைகள்) e 1. "ஜ்ஞாநேந ஹீந: பஶூபி₄: ஸமாந:" என்று— அறிவுகேட்டுக்கு நித₃ர்ஶநமான பசுக்கள். f (பின்சென்று) g நாங்கள் தேவரைப் பெறுகைக்கு கு₃ருகுலவாஸம்பண்ணினபடி—இவற்றை அநுவர்த்தித்தோமித்தனே. h எங்களைப் பார்த்தால், பசுக்கள் வஸிஷ்ட₂ாதி₃களுக்கு ஸத்₃ருஶமாகப் போரும். i 2, "க்ருதாநுகாராநிவ கோ₃பி₄ரார்ஜவே" என்று—பசுக்கள் i_2 அசுக்காட்டும்

பெ.அ. அதுவும் விவரணமென்று கருத்து. b விவரணரூபத்வத்தை உபபாதி₃க்கிறார் (அதில் இத்யாதி₃) b_2 "இற்றைப் பறைகொள்வானன்று காண்" இத்யாதி₃யைக் கடாக்ஷித்து, இப்பாட்டில் "பறை" என்றதின் அர்த்த₂த்தை உபாயரூபமாக அருளிச்செய்கிறார் (நாட்டார் இத்யாதி₃) c_2 ப்ராபகம் ப்ராப்ய ஸாபேக்ஷமாகையாவது — "இறைவா நீ தாராய்" என்று இவர்கள் ப்ராபகத்தைக் குறித்து அர்த்தி₂க்கும்போது "எத்தைத்தர?" என்று கர்மகாங்க்ஷையுண்டாயிருக்கை.

d, f, e ஆகிஞ்சந்யத்தைச் சொல்லவேண்டித் தங்கள் நிகர்ஷத்தைச் சொல்லும்போது கறவைகளைப் பின்செல்லுகை நிகர்ஷமென்று தோற்றும்படி ஸம்வாத₃ பூர்வகம் தாத்பர்யம் அருளிச்செய்கிறார் (ஜ்ஞாநேந இத்யாதி₃) f, g "சென்று" என்று சொல்ல அமைந்திருக்க "பின்" என்றதால் — ஆசார்யாநுவர்த்தநம் போலே இதுவேயொழிய வேறொன்றுமில்லையென்று தாத்பர்யம் அருளிச்செய்கிறார் (நாங்கள் இத்யாதி₃) h, i ஜ்ஞாந ஹீநர்க்கு நித₃ர்ஶநமாகை ப்ரஸித்₃த₄மேயாகிலும் பசுக்கள் மநுஷ்யரில் ஜ்ஞாநாதி₄க்யம் தோற்றும்படி உங்களுக்கு கு₃ருஸ்தா₂நமாகத் தோற்றிச் சொல்லுகை எங்ஙனேயென்ன, அருளிச்செய்கிறார் (எங்களை இத்யாதி₃ வாக்யத்₃வயத்தாலே) i_2 அசுக்காட்டுகை —

சி. அ. இருபத்தெட்டாம் பாட்டு. (கறவைகள்) c ("மேலிற் பாட்டில் ப்ராப்ய ப்ரார்த்த₂னம் பண்ணுகிறதாகில் இங்குப் பண்ணுகிறது என்?" என்னில்) என்றது, இப்பாட்டில் "இறைவாநீதாராய்பறை" என்கிறதென்? என்னில் என்றபடி. e 1. "ஆஹார நித்₃ராப₄யமைதுநாநி ஸாமாந்யமேதத் பஶுபி₄ர் நராணாம் । ஜ்ஞாநம் நராணாமதி₄கோ விஶேஷ: ஜ்ஞாநேந ஹீந: பஶுபி₄ஸ்ஸமாந:॥"; i 2 "கு₃தாந் பஶூநாம் ஸஹஜந்மப₃ந்து₄-தாம் க்₃ருஹாஶ்ரயம் ப்ரேம வதேஷு பி₃ப்₄ரத: । த₃த₃ர்ஶ கோ₃பாந் உபதே₃ஶ பாண்டு₃வ: க்ருதாநுகாராநிவ கோ₃பி₄ரார்ஜவே ॥". f, h "பின்சென்று" என்கிற பத₃த்துக்குத் தாத்பர்யம் (எங்களைப்பார்த்தால் இத்யாதி₃) i_2 (அசுக்காட்டும்) ஹாஸ்யத்தைப்பண்ணும்

i3 ஆர்ஜவம். j (கானம் சேர்ந்து) kதந்தாமுடைய வ்ருத்திகளாலே ஒரு நன்மைக்கு உடலாம் மநுஷ்யர் திரியும் நாட்டிலே வர்த்தித்திலோம்; புல்லுள்ள காட்டிலே வர்த்தித்தோமித்தனே ;l இருப்பாலே நன்மையை விளைக்கும் தேஶத்திலே வர்த்தித்திலோம்; காட்டிலே வர்த்தித்தோமென்றுமாம். (சேர்ந்து) ஊரில் கால் பொருந்தாதபடியிறே காட்டிலே பொருந்தினபடி. m (உண்போம்) வைஶ்யருக்கு கோரக்ஷணம் தர்மமானுல் ததநுரூபமாகக் காட்டிலே வர்த்திக்கையும் வாநப்ரஸ்தாஶ்ரமிகளோபாதி n தர்மஹேதுவாகிறதென்ன; காட்டில் வர்த்தித்தாலும் வீதராகராய் வாநப்ரஸ்தாஶ்ரமிகளோபாதி ஶரீரத்தை nஅ ஒறுத்துஅவ்வருகே ஒரு பலத்துக்காக வர்த்தித்தோமல்லோம்; கேவலம் ஶரீரபோஷணபரராய் வர்த்தித்தோமித்தனே. இத்தால்—வ்ருத்தியில் குறை சொல்லிற்று. o இதிறே உன்னைப் பெறுகைக்கு நாங்கள் அநுஷ்டித்த கர்மயோகமென்கிறார்கள்.

p (அறிவொன்றும் இல்லாத) இப்போதில்லையாகில் விடுங்கோள்; q விதுராதிகளைப்போலே ஜந்மாந்தர ஸுக்ருதத்தாலே பிறந்த ஜ்ஞாநந்தானுண்டோ? என்னில்:— அதுவுமில்லை. r (ஒன்றும்) s பகவத்ஜ்ஞாநத்துக்கு அடியான ஆத்மஜ்ஞாநமுமில்லை; t தத்ஸாத்யமான பக்தியுமில்லை என்கை; u பக்தியில்லை எ
கிறது — 1. "பக்திஶ்ச ஜ்ஞாநவிஶேஷ:" என்று பக்தியாவது

பெ.அ. அநுகரிக்கை; அதாவது—நாப்புக்காட்டுகை. i3 'ஆர்ஜவம்'என்றது—இடையருடைய வ்யாபாரம் என்றபடி. n (தர்ம ஹேது) என்றது — கோவதா ப்ரஸாதஶ்ஹேது என்றபடி. n2 ஒறுத்து — க்லேஶப்படுத்தி. j, m, o "கானம் சேர்ந்துண்போம்" என்றத்தால் — ஆகிஞ்சந்யம் பலித்த ப்ரகாரத்தை அருளிச்செய்கிறார் (இதிறே இத்யாதி3)

p, q "கறவைகள் பின்சென்று" இத்யாதி3யாலே — ஜ்ஞாநஹீநதை சொல்லியிருக்கவும், "அறிவொன்றுமில்லை" என்ன ப்ரஸக்தியுண்டோ? என்னும் ஶங்கையிலே அருளிச்செய்கிறார் (விது3ராதி3களைப்போலே இத்யாதி3) இந்த ஜந்மத்திலே ஸம்பாதி3த்த ஜ்ஞாநம் இல்லாவிட்டாலும் ஜந்மாந்தரார்ஜித ஜ்ஞாநம் உண்டாகலாமே, அதுவுமில்லை என்று கருத்து. r, s, t "ஒன்றும்" என்கைக்கு அநேகமுண்டோவென்ன அருளிச்செய்கிறார் (பகவத்ஜ்ஞாநம் இத்யாதி3 வாக்யத்3வயத்தாலே) v 'பக்தியன்றே' என்றது—

பி.அ i3 (ஆர்ஜவம்) இடையருடைய வ்யாபாரம். j, k, l "கானம் சேர்ந்து"என்ற பத3த்துக்கு இரண்டு தாத்பர்யம்:— k க்3ராமங்களிலே வர்த்தித்தால் அவர்கள் ஸுக்ருதம் பண்ணினால் அவர்களுக்கு கண்டாகிலும் ஸுக்ருதம் பண்ண யோக்3யதையுண்டு; அதுவுமில்லை என்னுதல்; l இரண்டாவது (இருப்பாலே நன்மை இத்யாதி3) அதாவது — காடானாலும் த3ண்ட3காரண்யம் முதலான இடங்களிலே வர்த்தித்திலோம் என்றபடி. q கர்மயோகமில்லையென்றபோதே ஜ்ஞாநயோகமுமில்லையென்று ஸித்34மன்றே; தனித்துச் சொல்ல வேணுமோ? என்ன அருளிச்செய்கிறார் (விது3ராதி3களித்யாதி3) d, f, m 'கோரக்ஷணம் ஜாத்யுசிதத4ர்மமன்றே; அது ஸாத4நமாகாதோ?' என்ன ஸாமாந்யேந அநுஷ்டி3தா3தி3 கோரக்ஷணம் பண்ணுகையன்றியே ஸ்வதே3ஹ போஷணார்த்த2மாகக் கேவலம் கறவைகளைப் பின்சென்றுகை பாலே ஸாத4நமாகாதென்று க்3ரந்த2காத்3பி3ஹிர்ஶங்காபரிஹாரங்கள் கண்டுகொள்வது. p "அறிவொன்றும்" என்கிற 'ச' ஶப்34த்தாலே பக்தியைக்காட்டுகிறது. "கர்மத்தைப்போலே ஜ்ஞாநம் ஜந்மாந்தரத்தேயுண்டாய், இப்போது பக்தியுண்டாகக் கூடாதோ? பக்தியில்லை என்பானென்? என்ன அருளிச்செய்கிறார் (பக்தியில்லையித்யாதி3)

ஜ்ஞாநவிமோஷமாகையாலே. இவர்களல்மாப்பு v ப₄க்தியன்றே? என்னில்:— அது ஸ்வரூபமாகையாலே உபாயமாக நினையார்கள். ஆக, இத்தால்—கர்ம ஜ்ஞாந ப₄க்திகளில்லை என்கை. w 1. 'அஹமஸ்மியபராத₄ாநாமாலய:" A "நோற்ற நோன்பிலேன்" இத்யாதி₃. B "குளித்து மூன்று" 2. "ந த₄ர்மநிஷ்டோ₄Sஸ்மி" இத்யாதி₃. இவையன்றே அறிவுடையார் வார்த்தை; அவர்களோடு ஒத்திருந்திகோ ளென்ன — x (ஆய்க்குலம்) y அறிவுண்டென்று ஶங்கிக்கவொண்ணுத குலம். z கீழ்ச் சொன்ன உபாயஹா₄நி தோ₃ஷமாகாதே கு₃ணமாம்படியான ஜந்மம்; a எங்கள் ஜந்மத்தைக் கண்டுவைத்து அறிவுண்டு என்று சொல்லுகிற நீ அறிவுகேடனித்தனை.

b 'ஆனுல் b₂ விடுமத்தனையோ?' என்ன, c (உன்தன்னை இத்யாதி₃) d 'பேற்றுக்கு உடலான புண்யமில்லாதார் இழக்குமத்தனையன்றே?' என்ன, e அங்ஙன் சொல்லலாமோ எங்களை? f புண்யத்துக்குச் f₂ சோறிட்டு வளர்க்கிறவர்களன்றே. g (உன்தன்னை) h 3. "க்ருஷ்ணம் த₄ர்மம் h₂ ஸநாதநம்" இறே; i 4. "உபாயோபேயத்வே ததி₃ஹ தவ தத்த்வம்" என்னும்படியான உன்னை. j (பிறவி பெறுந்தனை)

பெ.அ. ப₄க்திகார்யமன்றே என்றபடி. w, x மேலுக்கு அவதாரிகை அருளிச்செய்கிறார் (அஹமஸ்மி இத்யாதி₃) z தாத்பர்யாந்தரம் அருளிச்செய்கிறார் (கீழ்ச்சொன்ன இத்யாதி₃) y, a "பூர்வ தாத்பர்ய விவரணம் (எங்கள் இத்யாதி₃) இத்தால் — நாங்கள் சொன்னது ஸ்வாப₄விகம்: 1. "அஹமஸ்மி" இத்யாதி₃யால் பெரியோர்கள்சொன்னது நைச்யாநுஸந்த₄ாநமாத்ரமென்றபடி.

b 'ஆனுல்' என்றது—த₄ர்மார்ஜநாதி₃களில்லாமே ஸ்வாப₄ாவிகமானுலென்றபடி. b₂ விடுமத்தனை — ப்ராப்யத்தில் ஆசை விடுமத்தனை. b, d "ஆனுல்" இத்யாதி₃யை விவரிக்கிறார் (பேற்றுக்கு இத்யாதி₃) பேற்றுக்கடியான ஸாத₄நம் ஒன்றுமில்லாதார் ப்ராப்யத்தை இழக்குமித்தனையன்றே? என்றபடி, c, e, f இந்த ப்ரஶ்நத்துக்கு உத்தரமாம்படி ப்ரதீகத்துக்கு ப₄ாவம் அருளிச்செய்கிறார் (அங்ஙன் இத்யாதி₃ வாக்யத₄்வயத்தாலே) f 'புண்யத்துக்கு' என்றது ஸித்₃த₄த₄ர்மமான உனக்கு என்றபடி. f₂ "சோறு" என்று—இங்கு ரக்ஷ்யாபேக்ஷையைச் சொல்லுகிறது. அதாவது:— ரக்ஷ்யனுன சேதநனுடைய அபேக்ஷையில்லாதபோது தன் ரக்ஷகத்வஸ்வரூபஹா₄நி வருமென்று அவன் ரக்ஷகனுடைய அபேக்ஷையைப் பார்த்து அது பெற்றபோது திருப்தனுகையாலே த₄ாரகமென்கை; இது ஸ்வாப₄ாவிகார்த்த₄ம். உன்க்கு நாங்கள் புண்யத்துக்குச் சோறிட்டுவளர்க்க எங்களை இங்ஙன் சொல்லலாமோ? என்னும் சாட்வர்த்த₄ம் கண்டுகொள்வது. g, h, i "தன்னை" என்றத்தால் தோற்றும் தானுன தன்மை ஸநாதநத₄ர்மத்வமாய், இதுக்கு ஸம்வாத₄ம் காட்டுகிறார் (உபாயோபேயேத்யாதி₃)

சி.அ. கர்மமுண்டாய் ஜ்ஞானமுண்டாகவேணும் என்கிற நியாயமின்றியே ஜ்ஞானமுண்டான போதே ப₄க்தியும் ஸித்₃த₄மென்று தாத்பர்யம். w, x "ஆயிக்குலம்" என்றதுக்கு அவதாரிகை (அஹமஸ்மி இத்யாதி₃) x, y, z "ஆய்க்குலம்" என்றதுக்கு இரண்டு தாத்பர்யம். z இரண்டாவது (கீழ்ச்சொன்ன இத்யாதி₃) y, a முந்தினதினுடைய விவரணம் (எங்கள் ஜன்மத்தை இத்யாதி₃) b, d "ஆனுல் விடுமத்தனையோவென்ன" என்கிற வாக்யத்தை விவரிக்கிறார் (பேற்றுக்குடலான இத்யாதி₃) f (புண்யத்துக்குச் சோறிட்டு) என்கையாலே, அசேதனமானுல் சோறு தேவையில்லையே; ஆகையால் இவர்கள் புண்யம் ஒரு பரமசேதனமென்கை. h₂, i "ஸநாதனம்" என்னுமத்தைக் காட்டுகிறார் (உபாயோபேயத்வே இத்யாதி₃) g, j, l "உன்றன்னைப் பிறவி பெறுந்தனைப் புண்ணியம்

A திருவாய் 5-7-1. B திருமாலை 25.

k நாட்டார் ஆஶ்ரயணீயர் இருந்தவிடத்தே போய் ஆஶ்ரயிப்பர்கள்; அவர்களோட் போலேயோ நாங்கள்? ஆஶ்ரயணீயனை நீதான் நாங்களிருந்தவிடத்தே எங்களோடே ஸஜாதீயனுய் வந்து அவதரிக்கும்படியன்றே k_1 எங்களுடைய ஏற்றம்? l (புண்ணியம் நாமுடையோம்) m 1. "க்ருஷ்ணம் தர்மம் ஸநாதநம்" 2. "புண்யா நாமபி புண்யோऽஸௌ" 3. "ராமோ விக்₃ரஹவாந் தர்ம:" என்கிற புண்யத்தைப் பற்றினவர்களன்றே. n (நாம் n_1 உடையோம்) o ஸித்₃த₄ஸாத₄நத்தைப் பற்றினவர்களிலுங் காட்டில் இருந்தவிடத்தே சென்று ஆஶ்ரயிக்கவேண்டாதபடியான ஏற்றத்தையுடையவர்கள் நாங்கள். p நினைத்தபடி விநியோக₃ங் கொள்ளலாம்படி கைப்புகுந்த உன்னை உடையோமன்றே?

q "அறிவொன்றுமில்லை" என்பது "புண்ணியம்நாமுடையோம்" என்பதாய்க் கொண்டு q_1 வ்யாஹதபா₄ஷணம் பண்ணுகின்றிகோளீ? என்ன, q_3 'கண்டிலேயோ?

பெ. அ. g, j, k, l உன்தன்னைப் பிறவி பிறப்பிக்கத்தக்க புண்ணியத்தை நாமுடையோம் என்று ஏப்₃த₃ர்த்த₂மாய், இப்படி புண்யத்தை விரோஷித்ததுக்கு பா₄வம் அருளிச்செய்கிறார் (நாட்டார் இத்யாதி₃) k_1 (எங்களுடைய ஏற்றம்) என்றது—எங்கள்பக்கல் உனக்கு உண்டான வாத்ஸல்யமென்றபடி; l, m "புண்ணியம்" என்றது — அலௌகிக ஶ்ரேயஸ் ஸாத₄நமென்று சொல்லப்பட்டதாய், க்ருஷ்ணனைத்தவிர வேறேயொன்றென்று தோன்றுமைக்காக ஸத்வாத₃பூர்வகம் தாத்பர்யம் அருளிச்செய்கிறார் (க்ருஷ்ணம் இத்யாதி₃) இது வேறொன்றுகில் கர்மாதி₃களொன்றுமில்லையென்றத்தோடு சேராதென்று கருத்து. n, o "நாம்" என்றதுக்கு வ்யாவர்த்ய பூர்வகம் தாத்பர்யம் அருளிச்செய்கிறார் (ஸித்₃தே₄த்யாதி₃) o இங்கு (ஸித்₃த₄ஸாத₄நத்தைப்பற்றினவர்கள்) என்றது — ஸ்வச₃தஸ்வீகார நிஷ்ட₂ரை. n_2, p "உடையோம்" என்று அவன் இவர்கள்ஸ்வம்மாகத் தோன்றுகையை விவரிக்கிறார் (நினைத்தபடி இத்யாதி₃)

q_2 'வ்யாஹதபா₄ஷணம்' என்றதுக்குக் கருத்து — கர்மஜ்ஞாநாதி₃களில்லையென்று சொல்லிவைத்து, ஸித்₃தே₄பாயமாகிற புண்ணியம் நாமுடையோமென்று சொல்லுகை. q_2, q_3 கைம்முதலில்லாவிடில் அது கார்யகரமல்லாமையாலே புண்ணியமல்லாமையால் விருத்₃த₄மென்று வ்யாஹதபா₄ஷணம் பண்ணினிகோளென்ற க்ருஷ்ணனைக்குறித்துத் தாத்விகார்த்த₂த்தை நெஞ்சில் வைத்துக்கொண்டு வ்யாஹதபா₄ஷணத்துக்கு அடியான அறிவுகேட்டைத் தங்கள்மேலே ஆரோபித்துக்கொள்ளுகிறார்களென்று அருளிச்செய்கிறார் (கண்டிலேயோ இத்யாதி₃) q_4 இவர்களுட்கருத்தை அறியாமல் நீங்கள் அறிவுகேடரானீர்

சி. அ. நாமுடையோம்" உன்னுடைய ஜன்மத்தைப் பெறும்படியான புண்யத்தை நாங்கள் உடையோம் என்றபடி. o இங்கு (ஸித்₃த₄ஸாத₄னத்தைப்பற்றினவர்கள்) என்றது ஸ்வகத ஸ்வீகார நிஷ்ட₂ரை. g, h, m, p "உன்றன்னை" என்றது உபாயபூ₄தனான உன்னை என்னுதல்; "கோவிந்த" என்றத்தைக் கடாக்ஷித்து (நினைத்தபடி விநியோக₃ம் கொள்ளும்படி கைப்புகுந்த உன்னை) என்னுதல்.

q, r "குறைவொன்றுமில்லாத" என்றது ஸாகாங்க்ஷமாய், உத்தரப்ரத்யுத்தரமாக அருளிச்செய்கிறார் (அறிவொன்றுமில்லை என்பது இத்யாதி₃) 479 p, r, w "அறிவொன்றுமில்லாத" "குறைவொன்றுமில்லாத" என்ற பத₃த்₃வயத்தையும் கடாக்ஷித்துத் தாத்பர்யம் (இப்பாதா₃னத்துக்கு இத்யாதி₃)

இது தானேயன்றே அறிவுகேடு'; q₄ 'ஆனால் விடுமத்தனேயன்றே' என்ன; r (குறை வொன்றுமில்லாத r₂கோவிந்தா) s எங்களுக்குக் குற்றம்சொன்னேமித்தனேபோக்கி உன்னுடைய பூர்த்திக்குக் குற்றஞ் சொன்னேமோ? t ஸர்வநிரபேக்ஷனென்கை. u எங்களுடைய அறிவொன்றுமில்லாமைக்குப் போராதோ உன்னுடைய குறை வொன்றுமில்லாமை? v எங்கள் குறையாலே எங்களுக்கு இழக்கவேண்டுவது — உன்னுடைய பூர்த்தியால் ஏதேனும் குறையுண்டாகிலன்றே? என்கிறார்கள். w 'இப்பா₁ளத்துக்கு அம்மேடு நிரப்பப்போராதோ? w₂ இப்பாதாளத்துக்கு அப்பர் வதம் நேர்' என்கை. x எங்கள்பக்கல் ஜ்ஞாநவ்ருத்தாதி₃கள் ஏதேனுமுண்டோ நாங்களிழக்கைக்கு? என்று கருத்து. இத்தால் — உபாயனைரபேக்ஷ்யம் சொல்லிற்று. y (கோவிந்தா) z நீங்கள் என்னைப் பூர்ணனாகப் பேசினபடியாலே வேண்டியிருந்தோமாகில் செய்தல், இல்லையாகில் தவிர்தலன்றே? என்ன, a நிரபேக்ஷமான ப₁ரமபத₃த்திலே வந்தோமோ? b எங்களையொழியச் செல்லாமையாலே வந்து அவதரித்து எங்களுக்குக் கையாளாயிருக்கிற இடத்தேயன்றே நாங்கள் அபேக்ஷிக்கிறது? c இத்தால் - ஸௌலப்₄யம் சொல்லுகிறது.

d 'குறைவாளர்க்குநிறைவாளர் கொடுக்கக்கடவர்களென்று ஒன்று உண்டாகிலன்றே என் பூர்த்தியும் உங்கள் அபூர்த்தியும் சொல்லுவது?' என்ன, அதுவோ? (உன்தன்னேடு உறவு) 'நீ எங்களுக்கு உறவன்றே? எங்கள் கார்யம் செய்ய வேண்டாவோ?' என்ன, — e 'அதுகொண்டோ? ஆனால், ஒரு குடநீரோடே போகி

பெ.அ. ப்ராப்யத்திலாசையை விடுங்கோளென்னும்₁க்ருஷ்ணப்ரா₄ப்ரா₄யத்தை அருளிச்செய்கிறார் (ஆனால் இத்யாதி₃) r, s, t தான் கார்யம் செய்யும்போது ஸஹாயஸாபேக்ஷனும்படி ஜ்ஞாநசக்த்யாதி₃களில் குறையில்லாதவனென்று ஸப்₃த₃ார்த்த₂ம் திருவுள்ளம்பற்றி, இத்தால் — உபாயாந்தர நைரபேக்ஷ்யம் ப₂லிக்கையால் வ்யாஹதமென்னும் ஸங்கை பரிஹ்ருதமென்று தாத்பர்யம் அருளிச்செய்கிறார் (எங்களுக்கு இத்யாதி₃ வாக்ய₃த்₃வயத்தாலே) நாங்கள் எங்கள்பக்கல் அறிவொன்றுமில்லாமையையும் சொல்லி உன்தன்னே ஸஹாயஸாபேக்ஷமான புண்ணியமென்று சொல்லிலன்றே இரண்டு வார்த்தையும் வ்யாஹதமாவது; நீதானேயன்றே உங்கள்பக்கல் கைம்முதலில்லாமையாலே ஸித்₃தோ₄பாயம் கார்யகரமன்றென்று புண்யமாநாமையால் வ்யாஹதமென்றுயித்தனை; நாங்களானால் ஸர்வநிரபேக்ஷனென்றே சொன்னேமாகையாலே வ்யாஹதமன்றென்று கருத்து. u, v, w நான் பூர்ணனுய் எத்தனையேனும் நிரபேக்ஷனேயாகிலும் என்பக்கல் நின்று பேற்றுக்கு இழவில்லாமையை எத்தால் அத்₄யவஸித்திகோள் என்ன அருளிச்செய்கிறார் (எங்களுடைய இத்யாதி₃ வாக்யத்₃ரயத்தாலே) x பூர்த்தியில் குறையில்லாதாப்போலே தங்கள்பக்கல் அறிவில்லாமையிலும் குறையில்லையென்கிறார்கள் (எங்கள் இத்யாதி₃) y... c "கோவிந்தா" என்றதுக்கு ப₂ங்கபரிஹாரமுகேந தாத்பர்யாந்தரம் அருளிச்செய்கிறார் (நீங்கள் இத்யாதி₃ வாக்யசதுஷ்டயத்தாலே)

d நான் ஸௌலப்₄யத்தால் உங்களுக்குக் கையாளாயிருந்தேனேயாகிலும் பூர்த்தியையும் அபூர்த்தியையுமிட்டு என்னுடனே வழக்குப்பேச நிமித்தமேதென்னும் ஸங்கையை அநுவதி₃க்கிறார் (குறைவாளர்க்கு இத்யாதி₃) e, f "ஒழிக்க ஒழியாது" என்றதுக்கு ப்ரஸக்தியைக் காட்டாநின்றுகொண்டு ப்ரபந்நப்ரதிவசநரூபேண தாத்பர்யம் அருளிச்செய்கிறார் (அது

றது' என்ன, — f (உன்தன்னோடு f_1 உறவேல் f_2 நமக்கு இங்கு ஒழிக்க ஒழியாது) உன்னோடு உண்டான ஸம்பந்தமும் உன்னாலும் விடவொண்ணாது, எங்களாலும் விடவொண்ணாது, f_4 இருவருங்கூட க்ருதஸங்கேதரானாலும் விடவொண்ணாது. g 'இப்படி சொல்லுகிறது என்ன உரப்பு?' என்ன; h 'A "நானுன்னையன்றி யிலேன் கண்டாய் நாரணனே! நீ என்னையன்றியிலை" என்ற ப்ரமாணத்தைக் கொண்டு' என்ன; i 'அவர்கள் உங்களைப் பெற்றவர்களன்றே?' என்ன; 'ஆனால் i_1 நீ எங்கள் கையில் தந்த i_3 மூலப்ரமாணத்தில் i_4 முதலெழுத்தைப் பார்த்துக்கொள்ளாய்' என்கிறார்கள்; அதாவது - "நாராயணனே நமக்கே பறைதருவான்" (1) என்று அடியிலே சொன்னோம் என்றபடி. நீ ஸர்வப்ரகார பரிபூர்ணனாகையாலே நாங்கள் நித்யஸாந்நித்யஸாபேக்ஷராயிருக்கிற உறவு என்றுமாம். j தயாபூர்ணனான உன்னோடு தயநீயதயா பூர்ணைகளான எங்களுக்கு உண்டான உறவு என்றுமாம்.

(அறியாத இத்யாதி$_3$) k கீழ்த் தாங்கள் k_2 நெருக்கின அதுக்கு க்ஷாமணம் பண்ணுகிறார்கள். l (அறியாத) m அநவதானத்தாலே வந்த அஜ்ஞானம். n (பிள்ளைகள்) o பால்யத்தாலே வந்த அஜ்ஞானம். p (அன்பு) q ப்ரேமத்தாலே வந்த அஜ்ஞானம். இந்த ஹேதுக்களால் வந்த r அறியாத்தனம் பொறுக்கவேணும்.

பெ.அ கொண்டோ இத்யாதி$_3$) f_2,g 'உறவு" என்ற ஸாமாந்யேந சொன்னத்தை,விசேஷித்து ப்ரமாணமுகேந நிர்த்தாரிக்கைக்காக ப்ரஸ்நத்தைக் கிளப்புகிறார் (இப்படி இத்யாதி$_3$) h அப்ருதக்ஸித்தத ப்ரகாரப்ரகாரிபாவத்தைத்திருவுள்ளம்பற்றி ப்ரமாணமுகேந உத்தரம் காட்டுகிறார் (நானுன்னை இத்யாதி$_3$) i_2 (நீ எங்கள் கையில் தந்த) என்றது - ஆசார்ய ரூபனுய்த் தந்த என்றபடி. j ரக்ஷ்யரக்ஷகபாவ ஸம்பந்தாந்தரத்தையிட்டுத் தாத்பர்யாந்தரம் அருளிச்செய்கிறார் (தயேத்யாதி$_3$) k_2 (நெருக்கின அதுக்கு) என்றதுக்கு— "உறவேல் நமக்கிங் கொழிக்கவொழியாது" என்று அவிநாபூதஸம்பந்தமும் சொல்லுகையாலும் அதுக்கு வாசகமான திருநாமம் ஸ்மிருதமாய், அத்தாலே பரத்வத்தைச் சொன்னதுக்கு என்று கருத்து. r (அறியாத்தனம்) என்றது — அத்தால் வந்த சிறுபேரழைக்கையைச் சொல்லுகிறது.

கி. அ. h (நானுன்னையன்றியிலேன்) ஸரீரம் ஸரீரியை விடாது; ஸரீரஸரீரிபாவஸம்பந்தமாதல், ரக்ஷ்யரக்ஷகபாவஸம்பந்தமாதல். j இத்தைப் பலிதமாக அருளிச்செய்கிறார் மேலே (தயாபூர்ணேத்யாதி$_3$) f_3, f_4 "நமக்கு" என்ற த்விவசனத்துக்குத் தாத்பர்யம் (இருவரும் கூட க்ருதஸங்கேதிகளானாலுமித்யாதி$_3$) f_4. g. h இத்தால் ஹார்த்தபாவத்தை அருளிச்செய்கிறார் (இப்படி சொல்லுகிறதித்யாதி$_3$) i (அவர்கள் உங்களைப்பெற்றவர்களன்றே) என்றது — சூடிக்கொடுத்த நாச்சியார் ஆழ்வார்கள் என்றிவர்களைப்பற்ற. i_3 (மூலப்ரமாணம்) திருமந்த்ரம். திருமந்த்ரமென்றது "உத்தமன் பேர் பாடி" (8) என்ற இடத்தில் ஸ்புடம். i_4 (முதலெழுத்து) ப்ரணவம். k (கீழ்த் தாங்கள் நெருக்கினதுக்கு க்ஷாமணம் பண்ணுகிறார்கள்) என்றது — "பிறவிபெறுந்தனை" என்று கீழ் தாங்கள் பண்ணின ப்ரபத்திக்கு க்ஷாமணம் பண்ணுகிறார்கள் என்றபடி. 1. "த்வமேவ மாதாச பிதா த்வமேவ" என்று எம்பெருமானார் க்ஷாமணம் பண்ணினாப்போலே.

s 1. "மயா ப்ரமாத₃ாத் ப்ரணயேந வாபி" என்னக்கட வதிறே. ப்ரேமாந்த₄ரைக் குற்றங்கொள்ளுகையாவது — ஒருபடுக்கையிலேயிருந்து கால்தாக்கிற்று கைதாக்கிற்று என்கையிறே. t (உன்தன்னை இத்யாதி₃) u கே₃ாவிந்த₃ாபி₄ஷேகம் பண்ணின பின்பு முதல்திருநாமஞ் சொல்லுகை குற்றமிறே. "நாராயணன்" (1) என்ருர்கள் கீழ்; நீர்மைஸம்பாதி₃க்கப் போந்தவிடத்தே மேன்மைசொல்லுகை குற்றமிறே.

r (இறைவா) w தன்கைகால் தப்புச்செய்ததென்று பொடிய விரகு உண்டோ? x உடைமையையிழக்கை உடையவனிழவன்ரே? (இறைவா) y A "பிழைப்பராகிலும் தம்மடியார் சொற்பொறுப்பது பெரியோர் கடனன்றே". z ஐயர் தடுக்கின் கீழேயிருந்து கேட்டறியாயே? a நீ இறைவனுகைக்கும் சீறுகைக்கும் என்ன சேர்த்தியுண்டு? b (நீதாராய் பறை) c விலக்காமை பார்த்திருக்கும் நீ எங்கள் அபேக்ஷிதம் செய்யாய். 28.

இ. அ. v "இறைவா" என்றத்துக்கு இரண்டு அர்த்த₂ம்—ஸ்வாமியென்றும் பெரியோனென்றும்; w, x முந்தினது—(தன்கை இத்யாதி₃ வாக்யத்₃வயம்.) y, z, a இரண்டாவது—(பிழைப்பர் இத்யாதி₃ வாக்யத்ரயம்) y பினழ — தப்பு. z 'ஐயர்தடுக்கு' என்றது—பள்ளிக்கூடத்தில் வாத்யாரிருக்கும் தடுக்கு என்றபடி. இத்தால்—பெரியோர்கள் ஸஹவாஸமில்லையோ? என்று கருத்து. a இவ்வர்த்த₂த்₃வயத்துக்கும் சேரப் ப₂லித்த தாத்பர்யம் அருளிச்செய்கிறர் (நீ இறைவனுகைக்கும் இத்யாதி₃) 482 y, b, c "கோவிந்தா" என்ற பத₃த்தைக் கடாக்ஷித்து "நீ" என்றதுக்கு ப₄ாவம் அருளிச்செய்கிறர் (விலக்காமை இத்யாதி₃) இத்தால் — அத்₃வேஷமே வ்யாஜமாக ரக்ஷிக்கும் நீ எங்களாபி₄மூக்₂யத்தை வ்யாஜமாக்கிக்கொண்டு தர வேணுமென்று கருத்து. 28.

ஸ. அ. l, n, p, s "அறியாத பிள்ளைகளோம் அன்பினுல்" என்ற மூன்றுக்கும் ப்ரமாணம் "மயா-ப₃ாலேந ப்ரமாத₃ாத் ப்ரணயேந" என்று. u இடைச்சிருள் என்ற அந்யாபதே₃ஶத்துக்குச் சேர (கே₃ாவிந்த₃ாபி₄ஷேகம் இத்யாதி₃) t "சிறு பேரழைத்தனவும்" என்கிற 'ச' ஶப்₃த₃த்தாலே தாங்கள் அவனை வெறுத்த வெறுப்புகளும் தோற்றுகிறது. அவைகளுக்கும் க்ஷாமணம் பண்ணுகிறர்கள் என்று கண்டுகொள்வது.

v, w, y "இறைவா" — ஸ்வாமி என்னுதல்; பெரியோன் என்னுதல்; ஆக "இறைவா" என்றதுக்கு இரண்டு தாத்பர்யம். w ஶரீர ஶரீரி ப₄ாவத்தைப்பற்ற (தன்கைகாலித்யாதி₃) x ஸ்வஸ்வாமி ப₄ாவத்தைப்பற்ற (உடைமையையிழக்கையித்யாதி₃) z (ஐயர் தடுக்கின் கீழே) என்றது பெரியாழ்வார் தடுக்கின்கீழிருந்து என்றபடி. y, z இது A "பிழைப்பராகிலும்" என்றதுக்குத் தாத்பர்யம். பெரியாழ்வார் உன்கையிலே எழுந்தருளியிருக்க அவர் ஸன்னிதி₄யிலே கேட்டறியாயோ? என்கிறர்கள். 28.

A பெரியாழ் திரு 5-1-2

ஆருயிரப்படி — இருபத்தெட்டாம் பாட்டு

அவ: — இருபத்தெட்டாம்பாட்டு. ''மார்கழி நீராடுவான்'' (26) என்று நோன்பை ப்ரஸங்கித்து அதுக்கு உபகரணங்களாயிருப்பன ஸங்கஙகள் முதலானவற்றையும், ''சூடகமே தோள்வளையே'' (27) என்று வ்ரதம் தலைக்கட்டினால் அலங்கரிக்கைக்கும் உடுக்கைக்கும் உண்கைக்கும் வேண்டுவனவாயிருப்பன சில உபகரணங்களையும், அவனுக்கும் தங்களுக்கும் அகவாயிலே சில நிழலெழாநிற்க, நாட்டுக்கு மேலெழுந்தன சில அபேக்ஷித்தார்களாய் நின்றார்கள் — கீழிரண்டு பாட்டிலும். A ''அணியாய்ச்சியர் சிந்தையுள் குழகனர்'' என்று இவர்கள் நெஞ்சிலே கலக்கு மவஞ்கையாலே, அவன் ''உங்கள் அபிஸந்தி இவ்வளவென்று தோற்றியிருந்த தில்லை; நீங்கள் சொன்னவையும் இன்னம் மேல் சொல்லுமவையுமுண்டாகிலும் நாம தருமிடத்தில் நீங்கள் நின்ற நிலைதன்னை அறிந்துகொள்ளவேணும்; பேறு உங்களதான பின்பு நீங்களும் சிறிது யத்நித்துவைக்கவேணும்; அதுக்குடலாக நீங்களநுஷ்டிக்கத் தகாயமேதேனுமுண்டோ?'' என்ன; ''எங்களளவு கண்டாய்க்கு 'சில ஸாதனங்களுண்டோ' என்று சொல்லும்படி இருந்ததோ?'' என்று தங்கள் ஸ்வரூபமிருந்தபடியை அறிவித்து, கேவலம் தயாவிஷயமென்னுமிடத்தைத் திருவுள்ளம்பற்றி, நீ எங்கள் காரியஞ்செய்யவேண்டுமென்று தங்கள் உபாயஸமர்ப்பணத்தையே விண்ணப்பஞ்செய்கிறார்கள் இப்பாட்டில். ''போற்றியாம்வந்தோம்'' (21) ''எம்மேல்விழியாவோ'' (22) ''உன்னையருத்தித்து வந்தோம்'' (25) என்று தொடங்கி ப்ராப்யருசியை ஆவிஷ்கரித்தார்கள் - கீழ்; அந்த ப்ராப்யத்தைப் பெறுகைக்குடலாகத் தங்களுடைய ஆகிஞ்சந்யத்தையும் அவனுடைய உபாயபாவத்தையும் சொல்லுகிறார்கள்-இதில். ''யாம் வந்த காரியமாராய்ந்தருள்'' (23) என்றவாறே, வந்த வருத்தங்களை ஆராயாதே, அகவாயில் ஏதேனும் ஸாதநாம்ஸங்களாய்க் கிடப்பன சிலவுண்டோ? என்று ஆராய இழிந்தான்; B நின்னருளே புரிந்திருக்கிற எங்களுக்கு எடுத்துக் காட்டிக்கலாம்படியும் சிலவுண்டென்றிருந்தாயோ? 'இரங்கு'' (24) என்றும், ''அருள்'' (26) என்றும் நாங்கள் அபேக்ஷித்த அருளுக்கு ப்ரதிபந்தகமாய்க் கிடப்பன ஒன்றுமில்லையே என்று ஸர்வஜ்ஞனறிய ஒன்றில்லாமையை யாதார்த்யேந அறிவிக்கிறார்கள்.

ஸித்தோபாயவ்யவஸாயம் பண்ணுமதிகாரிகளுக்குப் பேற்றுக்குக் கைம்முதலாயிருப்பதொரு ஸத்கர்மமில்லையென்கையும், மேலும் யோக்யதையில்லை என்கைக்காகத் தங்களுடைய நிகர்ஷாநுஸந்தாநமும், மூலஸாகரமான ஈச்வரனுடைய க்ருபாபூர்த்தியை அநுஸந்திக்கையும், ஸம்பந்தஜ்ஞாநமும், பூர்வாபராதங்களுக்கு க்ஷாமணம் பண்ணுகையும், உபாயபூதனான ஈச்வரன்பக்கலிலே ப்ராப்பத்தை அபேக்ஷிக்கையும், இவை ஆறும் அதிகாராங்கங்களாகையாலே,

A நாச்-திரு 4-10, B பெரியாழ் திரு 5-4-1.

A "நோற்றநோன்பிலேன்" B "குறிகொளந்தணமை தன்னை யெளித்திட்டேன்" C "குலங்களாய ஈரிரண்டிலொன்றிலும் பிறந்திலேன்" D "நலந்தானெனறு மிலேன் நல்லதோரறஞ் செய்துமிலேன்" "த₄ர்மநிஷ்டை₃யில்லை" என்று ஸத்கர்ம ராஹித்யத்தைச் சொல்லுவார்: 1 "ராவணை நாம"—"ஜக₃த்திலே பேர்படைக்கும் படி பரஹிம்ஸையிலே அதிரநடத்துவதொரு பேர்மாத்ரமாய்ப் போகாமே, ஸர்வ விஷயமாக வழிகெட நடந்து பரஹிம்ஸையே யாத்ரையாயிருப்பதொரு ஜந்மமாய், மேலும் திருத்தவொண்ணாதபடி நியாம்யனன்றிக்கேயிருப்பானொரு தண்ணியனுக்கு ஸுஷ்பூ₃தனுய், அவனுலே தூ₃ஷிதமான உத₃ரத்திலே சிரகாலம் வாஸனை பண்ணிப் பிறந்து முறுகல்தனத்தில் அவன் என்னைக்கொண்டு நடத்த அநீதிகளில் நடந்து, அதில் அவனிலுங் காட்டில் ப்ரகாமுடையனுயிருப்பானொருவன் என்று நிகர்ஷஞ் சொல்லுவார்; E "பொறுத்தேன் புன்சொல் நெஞ்சில்" என்றும், F "எப்பாவம் பலவுமிவையேசெய்து" என்றும், G "மனத்திலோர் தூய்மையில்லை" என்றும் நிந்தி₃த கர்மபூ₃யஸ்தைசொல்லி, மேலும் யோக்₃யதை இல்லையென்பார்; A "அரவினணையம் மானே" B "நம்பீ கடல்வண்ணு" H "மாயனே எங்கள் மாதவனே" என்றும் - 2. "ஸரண்ய" என்பாராய்க்கொண்டு ஈஸ்வரகு₃ணபூர்த்தியை அநுஸந்தி₄ப்பார்; I "உன்னடியனேனும் வந்து" என்றும், J "புகலொன்றில்லா அடியேன்" என்றும் - ஸம்ப₃ந்த₄ானுஸந்தா₄நம் பண்ணுவார்; K "நாயினேன் செய்த குற்றம் நற்றமாகவேகொள்" என்றும், 3. "மத்₃வ்ருத்தமசிந்தயித்வா ப்ரஸீத₃" 4. "ஸர்வாந ஸுஷ்தः க்ஷமஸ்வ" என்றும் - பூர்வாபராத₄த்துக்கு க்ஷாமணம் பண்ணுவார்; L "சன்மம் கூயாய்" M "உன்னடிசேர் வண்ணமருளாய்" என்று - ப்ராப்யத்தை உபாயபூ₄தனை நீயே தரவேணுமென்று அபேக்ஷிப்பாராயிறே அதி₄காரிகளிருப்பது. ஆகையாலே இவர்களும் தங்களுடைய ஆகிஞ்சந்யத்தையும் அயோக்₃யதையையும் ஆவிஷ்கரித்து, உபாயபூர்த்தியையும் தங்கள் ப்ராப்தியையும் முன்னிட்டு, கீழ்ச் சொன்னவற்றுக்கெல்லாம் அநுதபித்து க்ஷமைகொண்டு, எங்கள் ப்ராப்யஹித₃ திக்கு நீயே உபாயமாகவேணும் என்று அபேக்ஷிக்கிறார்கள். கார்ய நிர்ணயவேளை பாகையாலும் ஸர்வஜ்ஞன் ஸந்நிதி₄யாகையாலும் உள்ளபடி சொல்லித் தீர விட்டுக்கொள்ளாதபோது புரையருதிறே.

நித்₃யாநுஜ்ஞனை பி₄ஷக்கின் முன்பு வ்யாதி₄க்₃ரஸ்தன் தான் பண்ணின அபத₃யங்களைச் சொல்லி அந்த வ்யாதி₄யைத் தீர்த்துக்கொள்ளுமாபோலே, ஸ்வதோ₃ஷத்தை ஆவிஷ்கரித்து க்ஷாமணம் பண்ணவேண்டியிறே ப்ரபந்நர்க்கிருப்பது. புறம்பு, அந்த வ்யாதி₄க்கு நிமித்தமும், பரிஹாரமும், பரிஹாரம் பண்ணும் பி₄ஷக்கும், பே₄ஷ

A திருவாய் 5-7-1, B திருமாலை 25, C திருச்சந்த 90, D பெரிய திரு 1-9-4 E பெரிய திரு 6-2-1, F பெரிய திரு 1-9-5, G திருமாலை 30, H பெரிய திரு 1-9-9 I பெரிய திரு 5-8-3, J திருவாய் 6-10-10, K திருச்சந்த 111, L திருவாய் 5-8-7 M திருவாய் 6-10-2.

ஜமும், பத்யமும், வ்யாதி ஸமித்தால் புஜிக்கும் போகமும் பேதித்திருக்கும்; இங்கு வந்தால் அப்படியன்று; A "வேவாரா வேட்கைநோய்" என்று — ப்ரேம வ்யாதிக்கு நிமித்தமும் தானும், "மாலே மணிவண்ணா" (26) என்கிற க்ருஷ்ணன் தான் பரிஹாரம் பண்ணும் மருத்துவனுமாய், B "ஆயர் கொழுந்து மருந்தாம்" என்று போஷஜமும் தானும், கொழுந்தில் கிழங்கு பத்யமுமாய், நோய்விட்டால் புஜிக்குமதுவும் C "எங்களமுது" என்கிறபடியே க்ருஷ்ணன் தானுமிறே இருப்பது. D "மருந்தும் — அமுதமும்தானே" என்று — அம்ருதம் ஔஷதமாம் படி இருக்கிறதிறே. வ்யாதிக்ரஸ்தர் "மருந்து" என்றிருப்பர்கள்; வ்யாதி ரஹிதர் "அமுதம்" என்றிருப்பர்கள்; இங்குள்ளார் E "நோய்களறுக்கும் மருந்து" என்றிருப்பர்கள்; அங்குள்ளார் F "போக மகிழ்ச்சிக்கு மருந்து" என்றிருப்பர்கள். நோயில்லாதானொருவனுமே தன்னை மருந்து என்று அறியான்; G "தேனிலினிய பிரானே - அருமருந்தாவதறியாய்" என்னக்கடவதிறே. இப்படி ப்ரபலமாயிருப்பதொரு ஔஷதமும் பெற்றால் கடுகப் பரிக்ரஹித்துக்கொள்ள வேண்டு மாகையாலே, "மருத்துப்போவராய் உன்னலல்லது செல்லாதாரைப்போலே எங்களை நிரூபியாதே திருமுன்பே நின்று சொன்ன வார்த்தையைப் பொறுத்தருள வேணும்" என்று க்ஷமாமணங் கொள்ளுகிறார்கள். உபசாரபூர்த்யா பண்ணும் அபசாரங் களையும் க்ஷமிப்பானொருவனுகையாலேயிறே அபத்யஸஹௌஷதமென்றது. H நச்சுமாமருந்தமிறே.

"இப்போதேயெம்மை நீராட்டு" (20) என்று — ஆஸுகாரியான ஔஷத மாகையாலே அப்போதே குளித்து உண்ணப்பண்ணுமிறே. ஆகையாலே கண் ணழிவற்ற ப்ராபகஸ்வீகாரம் பண்ணுகிறார்கள். ப்ராபகஸ்வீகாரந்தான் ததீதரஸர் வோபாயத்யாகு பூர்வகமாயாய்த்திருப்பது; அவை நின்றநின்ற அளவுகளுக்கீடா யிருக்கும். அவற்றில் அதிகரிக்கைக்கு அசக்தனுனவன் "மாட்டேன்" என்னும்; அதிகரித்தே அப்ராப்தியை உணர்ந்தவன் "விட்டேன்" என்னும்; அறிந்து அதி கரியாதவன் "அவை எனக்கில்லே" என்னும்; அவை அறியாதவன் ருசிவாஸனை களும் இல்லாதவனுகையாலே தான் பூர்ணதிகாரி என்னுமிடத்தைக் காட்டினு னுகிறான். 1. "ந ச ஸாமர்த்யவான்" என்பாருமுண்டு. 2. "ஸந்த்யஜ்ய" என்பா முண்டு. I "நோற்றநோன்பிலேன்" என்பாருமுண்டு. J "மற்றே லொன்றறியேன்" என்பாருமுண்டு. ஆகையாலிறே உபாயம் ஸர்வாதிகாரமா கிறது உபாயாந்தரமுடையவனுக்கு அவற்றை விடவேண்டுவானென்னென்னில்; பகுவத்யதிரிக்தமாயிருப்பதொன்று உபாயமாகமாட்டாமையாலே. அவையுண் டானாலும் இவன்தை பார்த்திருக்கவேணுமிறே; அவை அசக்யக்ரியையென்று மீளுதல், ஸ்வரூபத்தை உணர்ந்து மீளுதலித்தனே; அவை உடையவர்கள் விடுவதும். இல்லாதவர்கள் இல்லையென்று அறிவிக்கையுமாயிறேயிருப்பது. அதில்

A திருவாய் 2-1-10, B திருவாய் 1-7-2, C பெரியாழ் திரு 2-3-11, D மூன் திருவ 4 E திருவாய் 9-3-3, F திருவாய் 9-3-4, G பெரியாழ் திரு 2-7-1, H திருவாய் 3-4-5 I திருவாய் 5-7-1, J பெரிய திரு 1-9-9.

இவர்கள்தான் எங்களுக்கு (த்யாஜ்யாந்தரமில்லை) என்கிறார்கள். (‘மஞ்சனக் கொட்டும், மேல் சங்கும், போற்றவும் புகழவும் பகல்விளக்குப்பிடிக்கையும், கொடியெடுக்கையும் மேற்கட்டிகட்டுகையும், ஆபரணங்கள் பூண்கையும், உடுக்கை உடுக்கையும் அடுகுவளமெடுக்கையும் இவையெல்லாம் அதிரயித புண்யருடைய வரிசையிறே; க்ஷுத்₃ரமான ராஜபோ₄க₃மன்றே நீங்கள் நினைக்கிறது; A “வானிளவரசு” நம்மோடே கூடியிருந்து குளிர்ந்து உப₄யவிபூ₄த்யைஸ்வர்யத்தையும் புஜிக்கும்போது ஐந்மாந்தர ஸஹஸ்ரங்களிலே தபோஜ்ஞாநஸமாதி₄களாலே விளைந்த புண்யப₂லமாய் வரவேணும். அப்படிக்கு நீங்கள் ஏதேனும் செய்தது ண்டோ?’ என்ன; சொல்லுகிறார்கள்.

வ்யா:— (கறவைகள் பின்சென்று) ஸாங்க₃த்₄யயோக₃ம் புண்ணி, அர்த்த₃ஜ்ஞாநம் பிறந்து, விஹிதகர்மங்களை அநுஷ்டி₂த்து, விரோதி₄பாபக்ஷயம் பிறந்து ஸுத்த₃ஸ்வபா₄வனுய், ஜிதேந்த்₃ரியனுய், விஷயங்களினின்றும் ப்ரத்யாஹ்ருதமான மநஸ்ஸை ஆத்மப்ரவணமாக்கி, ஆத்மயோக₃ம் கைவந்து, அந்தர்யாமியளவும் சென்று, அவனுடைய ஸ்வரூபாதி₃களை ச்ரவணமநநங்கள் பண்ணி, அர்ச்சந ப்ரணமாதி₃ பூர்வகமான நிரந்தரத்₄யாநத்தைப் பண்ணி, இப்படி திரண்ட ஸுக்ருததாலே உன்னைப் பெறும் அந்த யோக₃த்தில் அந்வயிப்பதாகவிறே வேதா₃ந்தங்களில் சொல்லுகிறது; இந்த தை₃ர்கநஸமாநாகாரமான நிரந்தர ஸ்ம்ருதிக்கு விஷயமான பக₃வத்ஸ்வரூபஜ்ஞாநத்துக்குக் காரணமான ஆத்மாவலோகந ஹேதுவான ஜிதேந்த்₃ரியத்வத்துக்கு மூலமான பாபக்ஷயஹேதுவான விஹிதகர்மாநுஷ்டா₂நத்துக்கு நிமித்தமான அர்த்த₂ஜ்ஞாநத்துக்கு ஸாத₄நமான ஸாங்க₃த்₄யயோக₃ம் கு₃ருகுலவாஸ ஸாபேக்ஷமாயிறே இருப்பது. அதுக்கடியாக நாங்கள் கு₃ருகுலவாஸம் பண்ணினபடியைக் கேட்டருளலாகாதோ? என்கிறார்கள் — (கறவைகள் பின்சென்று) இவர்கள் ஸேவித்த ஆசார்யர்களிருக்கிறபடி. அபி₄ஜந வித்₃யா வ்ருத்தங்கள் மூன்றும் அவத₃ாதமாயிருப்பாரையிறே ஸேவ்யராகச் சொல்லுகிறது. திர்யக்₃ஜந்மமானபடியாலே பிறவியும் விபரீதமாய், ஜ்ஞாநஹீநரை பரமப்ராயரென்னும்படி ஜ்ஞாநமுமின்றிக்கே, து₃ராசாரரை நிருபசரக்களென்னும்படியாகவும், பரமஸமரென்னும்படியாகவும் வ்ருத்தஹீநங்களுமானவற்றையிறே நாங்கள் ஆசார்யர்களாக ப்ரதிபத்தி பண்ணுவது. பு₃ஹ₃ச்ருதராகையாலே ஜ்ஞாநவ்ருத்₃த₄ருமாய், ஜ்ஞாநவ்ருத்₃த₄ர் பலர் நெடுங்காலம் ஸேவிக்கைக்கும் வீதராக₃ராகைக்கும் வயோவ்ருத்₃த₄ரூபமாப், ஜ்ஞாநாநுரூபமான ஶீலத்தாலும் பழுத்து ப்₃ரஹ்மவாதி₃களாம்படி தத்வதர்ஶிகளுமாய், விபரீதஞ்சொல்லும் பா₃ஹ்யகுத்₃ருஷ்டிகளாகிற பரரை ப்ரமாணசரதங்களாலே வென்று பக₃வந்மநநபரராய், கர்த்தவ்யங்கள் சோராமல் அநுஷ்டி₂த்து ஒரு ப்₃ரஹ்ம நிஷ்டை₂யாயிருப்பாரை ஆசார்யாநுவர்த்தநத்தைச் சொல்லுகிற ஶாஸ்த்ரங்களில் சொன்ன ப்ரணிபாதாபி₄வாத₃ந பரிப்ரஶ்ந ஸேவைகளில் ஒன்றும்

A பெரியாழ் திரு 3-6-3

குறையாதபடி அநுஷ்டிஃத்துக் கொண்டிறே அறிவுடையார் போருவது;—நாங்கள் கறவைகளே அநுவர்த்தித்தோம்; அதுக்குறுப்பாக A உண்ணும் நாளுமின்றிக்கே உறக்கமுமின்றிக்கே பயாநாமபஹாரியை அண்டைகொண்டு அபயங்கூதராய் B இளையவர் கலஹியின் திறத்தை நாணினவர்களேயிறே அநுவர்த்தநீயராக ஶாஸ்த்ரம் சொல்லுவது; ஆஹார நித்3ரா பய மைது3நங்களில் அநியதங்களாயிருக்கும் பதா3ர்த்த3ங்களே ஆசார்யர்களாக வரித்தோம்; இது எங்களுடைய வ்ருத்த்3யலேவையிருந்தபடி. (கறவைகள் பின்சென்று) அறிவுகேட்டுக்குத் தலையான கன்றுகாலிகள் முன்னே போக, அவற்றின் பின்னே சென்றுய்த்து இத்தனைகாலமும் திரிந்தது. எங்களைப் பார்த்தால் பசுக்களும் வஹிஷ்ட2பராஶராதி3கள் கோடியிலேயாய், எங்கள் இளிம்பு கண்டு சிரித்து, எங்களார்ஜவத்தை அநுகரித்து அவை வழிகாட்ட அவற்றின் பின்னே திரிந்தோம் சிலர். "காலிகள்பின்சென்று" என்னுதே, "கறவைகள் பின்சென்று" என்றது — த்3ர்மபு3த்3த்4யா ரக்ஷித்ததன்று, ப்ரயோஜந பு3த்3த்4யா செய்தது என்கைக்காக. எருதுகள், வத(ற)டுகள், ஈற்றுமறுத்தனவை ரக்ஷித்தறியோம். (பின்சென்று) ப்ராப்ய ருசியுடையார் அது கைபுகுருமளவும், பெருவிடாயர் நீர்நசையுள்ளவிடமெங்கும் தட்டித்திரியுமோபாதி ருசிக்குவர்த்த3கராக இருப்பார்பின்னே, 1. "கலஶம் பூர்ணமாத3ாய ப்ருஷ்ட2தோ(3)நுஜக்3ாம ஹ" என்கிறபடியே—பூர்ண கலஶாதி3களுங்கொண்டு ஸமித்பாணிகளாய்த்திரிதல், ப்ராப்யம் கைபுகுந்தால், 2. "ப்ருஷ்ட2தஸ்து த்3ருஷ்பாணி:" என்னும்படி C "தாய்நாடுகன்றேபோல்" பிரியில் நாக்கு ஒட்டும்படி D "வாளும் வில்லுங்கொண்டு" பின்தொடர்ந்து அநுவர்த்தித்துத் திரியக்கடவதாயிறேயிருப்பது; அதுக்குட்டலாக நாங்கள் உறியும் மழுவும் தடியுங்கொண்டு ஜ்ஞாநப்ரத3ராகவும் ப்ராப்யவஸ்துவாகவும் நினைத்துப் பின்சென்றது பசுக்களே.

(2) "கறவைகள் பின்சென்று பசுக்களே மேய்த்துப் பின்னே திரிந்தாலும், போய்த்தங்குவது ஸத்துக்களிருக்கும் புண்யக்ஷேத்ராதி3களாகிவ் அழகியதிறே: கோவலூர், ஸாளக்3ராமாதி3கள், அயோத்4யை, மது4ரை, கோயில் தொடக்கமான ஊர்கள், க்3ராமங்கள், ஆஶ்ரமங்கள் தொடக்கமான இவற்றிலே இராத்தங்கிலும் அழகியதிறே" என்ன, (கானம் சேர்ந்து) என்கிறார்கள். வஸ்துபூ4தர் வர்த்திதல், நீ அபி4மாநித்தல் செய்யும் ப்ரதே3ஶங்களிலும் மழைக்கொதுங்கி ஓரிராத்தங்கியும் அறியோம். ஒரு கோபாலரபி4மாநத்திலே மழைக்கொதுங்கில் வாயிற்பிடியாக அகப்படுமிறே. (கானம்சேர்ந்து) பசுக்களுக்குப் புல்லும் நீருமுள்ள இடந்தேடி அவ்விடத்தே நெருங்கிப் போந்தோமித்தனே. (கானம்) "காடுகளிலே, த3ண்ட3காரண்யம், நைமிஶாரண்யம், ப3த3ரிகாஶ்ரமம் தொடக்கமானவற்றிலே நம்முடைய அபி4மாநமுண்டாய் ஸத்துக்களும் ஒதுங்கிப் போருவர்களே" என்ன;

A பெரிய திரு 8-2-4, B பெரிய திரு 1-6-1, C முதல் திருவ 30, D திருவாய் 8-3-3

ஒருஷோஷணமிடாதே வெறும் (கானம்) என்கிறார்கள். இவர்கள் வர்த்திக்கும் காடு A "எவ்வுஞ்சிலீயுடை வேடர்" காடிறே; அடியிடுவார்காலிலே அருவும் ப்₃ருந்த₃ாவநமாகையாலே ஸத்துக்கள் சேருமிடமன்றே. (சென்று — சேர்ந்து) B "பரவிச்சென்மின்கள்" C "சென்று வணங்குமினே" என்னுமிடங்களில் சென்றறியோம், D "சேர்மினீரே" E "மணிமாடம் சேர்மின்கள்" என்கிறவிடங்களில் சேர்ந்துமறியோம்; F "பரன்சென்றுசேர்" என்று—உனக்கும் க₃ந்தவ்யமுமாய் ப்ராப்யமுமாயன்றே அவையிருப்பது; அவற்றில் சென்றுமறியோம், சேர்ந்துமறியோம்; "சென்று, சேர்ந்து" என்கையாலே — அவற்றிலே பொருந்தியிருக்கை.

"ஸத்துக்கள் அநுவர்த்தநமும் புண்யக்ஷேத்ர வாஸமும் பெற்றிலோமென்கிற இழவுமில்லை; நீங்களவ்வையராகையாலே கோ₃ர்க்ஷணத்தை வர்ணத₄ர்மத்திலே சில எழுதலாம்; காட்டில் தங்குகையை வாநப்ரஸ்த்த₃ாஶ்ரமத்திலே முதலிட்டு, ஆஶ்ரமத₄ர்மமாக்கலாம்; ஆசார்யார்த்த₂மாகப் பசுக்களை மேய்த்துக் காடுகளிலே தங்குகையும் த₄ர்மமாகச் சொல்லாநிற்கும்; தப:பரரான ரிஷிகளும் அரண்யவாஸம்பண்ணியன்றே த₄ர்மார்ஜநம் பண்ணுவது; ஆகையாலே கர்மயோக₃த்திலே அடைக்கலாயிருப்பதொரு புடையுண்டே அவற்றுக்கு" என்ன—(உண்போம்) என்கிறார்கள். வர்ணாஶ்ரமங்கள் நடத்துகைக்காகவும் ஆசார்யார்த்த₂மாகவும் வீதராக₃ரைப் போலே அத்₃ருஷ்டார்த்த₂மாகவும் செய்ததல்ல; காயக்லேஶத்தைப் பிறப்பித்து அத்தாலே ஒரு புண்யமுண்டாகைக்காக த₄ர்மபு₃த்₃த்₄யா செய்தோமுமல்லோம்; உத₃ரபோஷணபரராய்ச்செய்தோமத்தனை. (உண்போம்) வயிறு வளர்க்கையே புருஷார்த்தம்.) (கானம் சேர்ந்துண்போம்) காட்டில் போலே புழுதியும் வேர்ப்பும் போகக் குளித்து உண்டறியோம், குளித்து உண்ணில் 1. "ஸ்நாத்வா புஞ்ஜீத" என்கிற விதியை அநுவர்த்தித்தார்களென்று அவன் த₄ர்மம் ஏறிடுமே. (உண்போம்) அருகிருந்தார்கையிலே ஒருபிடி இட்டறியோம். அப்போது ஆதித்₃யம் பண்ணினார்களென்று த₄ர்மமெழுதும். (கானம் சேர்ந்துண்போம்) ஒருவந(ர்)வாஸபூ₄மியிலே புக்கு உண்ணில், அங்கே தே₃வதைகளிருக்கையாலே 'யஜ்ஞஸிஷ்டாஶநம் பண்ணினிகோளே' என்று பிடிக்கும். (பின்சென்றுண்போம்) ப்ராங்முக₂த்வாதி₃நியமமில்லை. (சென்று உண்போம்) இருந்துண்ணவேணுமென்கிற நிர்ப்ப₃ந்த₄மில்லை. (உண்போம்) பசுக்கள் அசையிடாதிருக்கிலும் நாங்கள் பு₄ஜியாதிருப்பதில்லை. (உண்போம்) உச்சிஷ்டம், அபோ₄ஜ்யம், பர்யுஷிதம் தொடக்கமானவற்றில் ஒரு வரம்பில்லை; இது எங்களுடைய கர்மயோக₃த்தின் நிலையிருந்தபடி என்கிறார்கள்.

"நாய்₃கோலிப்பின்னேபோகிறிலோமோ? நாம் Hகாடுவாழ்சாதியாகிறிலோமோ? I வெண்டடிசிலுண்ணும்போதிதென்று பகித்திருந்து சோறுபெற்றால் J நின்றூர்

A பெரியாழ் திரு 3-2-5. B திருவாய் 4-10-2. C நான் திருவ 42, D பெரியதிரு 3-4. E பெரிய திரு 6-6. F திருவாய் 3-3-8, G பெரியாழ்திரு 3-3-1, H நாச்-திரு 12-8 I நாச்-திரு 12-6, J பெரிய திரு 10-6-10.

முகப்புச்சிறிதும் நினையாதே. A 'ஆடியமுதுசெய்' என்றாலும் குளியாதே B மந்திரவிதியில் பூசனைகளையும் விலக்கித்திரியாநின்றோம். நமக்கேதேனும் தோஷமுண்டாகாநின்றதோ?" என்ன, 'C "உங்களுக்கேச்சுக் கொலோ" என்று நாங்கள் செவி புதைக்கும்படி நிந்திதமான வார்த்தையைச் சொன்னாயீ' என்ன; 'ஆகில், 1. "தேஹோவிமோக்ஷேண பரத்யவாயோ ந வித்யதே" அன்றே? ஜ்ஞாநாதிகரான உங்களுக்கு இவை தோஷாவஹமாகப் புகுகிறதோ?' என்ன; "கேவலம் உதரபோஷணபரராயிருக்கிற எங்களை 'ஜ்ஞாநமுடையவர்களன்றே' என்னலாமோ" என்றார்கள்; "இப்போது இலையில்லையாகிலும் ஐந்மாந்தரங்களிலே ஸத்கர்மங்களுண்டாப், அத்தாலே பாபக்ஷயம் பிறந்து மநோநைர்மல்யமுண்டாய், இப்போது ஜ்ஞாநம் பிறக்கவுமாமே; உங்களைப்போலே கோரக்ஷணம் பண்ணுகையுமின்றிக்கே கோவதம் பண்ணுகையே ப்ரயோஜநமாய், அது க்ரயித்து ஜீவியாநிற்கச் செய்தே தர்மஸந்தேஹ நிவர்த்தகனாயிருந்தான் வ்யாதனன்றே; உங்களைப் போலே அரண்யவாஸம்பண்ணுதே நகரவாஸம் பண்ணுநிற்கச்செய்தே விதுரன் ஜ்ஞாநாதிகனென்று ப்ரஸித்தனாயிருந்தான்; யதேஷ்டாந்நபரனாய்த் திரியாநிற்கச் செய்தே ஆதிபரதன் அத்யாத்மோபதேஷ்டாவாயிருந்தான்; இவர்களெல்லாங் கிடக்க உங்களோட்டைப் பெண்டாட்டி தான் ஸ்ரமணியன்றே தர்மநிபுணையாயிராநின்றாள்; கர்மயோகமில்லையாகிலொழிகிறது; மோக்ஷஹேதுவான ஜ்ஞாநபக்தியுண்டாகில் குறையில்லையே; அவை, வளரவளர 2. 'க்ஷிப்ரம் பவதி தர்மாத்மா' என்கிறபடியே அவை தன்னடையே குலைந்துவிடும்; பஹுமந்தவ்யைகளான உங்களை நாம் எளிதாக நினைத்திரோமே" என்ன; (அறிவொன்றுமில்லாத) என்கிறார்கள். "எங்களை அப்படியோ நினைத்திருக்கிறது. நீ நினைத்திருக்கிற ஜ்ஞாநத்தில் ப்ரஸங்கத்தில் ப்ரதிஷேதமுமில்லைகாண்" (அறிவில்லை) (அறிவொன்றில்லை) அறிவொன்றுமில்லை) "கர்மயோகத்திலுண்டான ஆத்மயாதாத்ம்யஜ்ஞாநமில்லை; பக்தியாகிறது ஜ்ஞாநவிமோக்ஷமாகையாலே அந்த ஆத்மஜ்ஞாநமடியாக உன் பக்கலிலே ஜ்ஞாநம் பிறந்து, நீ உத்தேச்யனென்று புத்தி பண்ணி, உன் பக்கலிலே உண்டான அநவரதபாவநாரூபமாய் வரும் பக்திரூபாபந்நஜ்ஞாநமில்லை; இவையிரண்டுக்குமடியான ப்ரக்ருத்யாத்மவிவேகாதிகள் ஸமதமாதி ஸாதநஸம்பத்தி தொடக்கமானவை உண்டாய், முமுக்ஷுவாகைக்கு யோக்யமாயிருக்கும் அவற்றிலும் ஒரந்வயமில்லை; கர்மயோகந்தானும் ஜீவபராயாதாத்ம்யஜ்ஞாநபூர்வகமாக இருப்பதன்றே" என்னில்; தேஹாதிரிக்த ஆத்மஜ்ஞாநமும் ஈச்வரஜ்ஞாநமும் கர்மாங்கமாயிருக்கும்; இவ்வளவே அங்குள்ளது. இப்போது தனித்து உபயமாய் நிற்கும் ஜ்ஞாநயோகத்தையும் பக்தியோகத்தையும் இல்லையென்று சொல்லுகிறது. அறிவில்லையென்கிறதும் ஓரறிவின் கார்யமிறே. பேற்றுக்குடலாகத் தங்கள் தலையால் வரும் அறிவை இவர்களில்லையென்கிறது. (அறிவொன்றுமில்லாத) ஜ்ஞாதவ்யங்களாயிருக்குமவை ஒன்றிலுமறிவில்லையென்று தந்

A பெரியாழ் திரு 3-3-3, B பெரிய திரு 2-3-4, C நாச்-திரு 12-8.

த்ரேண உபாத₃₁நம் பண்ணுகிறார்கள். (உண்போமறிவொன்றுமில்லாத) ஆஹார ஸுத்₃தி₄யுண்டானாலன்றே ஜ்ஞாநம் பிறப்பது; ஊணர்க்குமுண்டோ அறிவு?

"ஜ்ஞாநமுண்டாய்க்கழிந்ததாகவுங்கூடுமே; மேல் உண்டாகைக்கும் யோக்₃யதையுண்டே" என்ன:— (ஆய்க்குலம்) அறிவில்லாமை ஜந்மஸித்₃த₄ம். எங்கள் பிறப்புக் கண்டாய்க்கு, கர்ம ஜ்ஞாந ப₄க்திகளுண்டோவென்று கேட்க வேண்டியிருந்ததோ? கீழ் "இல்லே" என்றவை உபேக்ஷையால் வந்ததன்று; யோக்₃யதையில்லாமையால் குலைந்ததென்கிறார்கள். (ஆய்க்குலம்) "ராவணன் து₃ர்வ்ருத்தன்" என்கைக்கு அடியென்? என்ன; "ராக்ஷஸன்" என்றற்போலே, A "ஏழை ஏதலன்" என்கைக்கு அடியென்னென்ன; A "கீழ்மகன்" என்றற்போலே, அறிவில்லாமைக்கு "ஆய்க்குலம்" என்கிறார்கள். B "ஒன்றுமறிவொன்றில்லாத உருவறைக் கோபாலர்" என்னக்கடவதிறே. வ்ருத்தஹாநியை உணர்ந்து திரியவிடுவிக்கவொண்ணாதபடியாய்த்திருப்பது ஜந்மம். "யஜ்ஞ தா₃ந தபஸ்ஸுக்களுடைய பரிகரங்களுக்கு விபரீதங்களிலே நடந்தபடியாலே கர்மயோக₄மில்லையென்றிகோள்; ஆத்மரதியாய் ஆத்மதருப்தனுய் ஆத்மஸந்துஷ்டனுய்க்ருதக்ருத்யனுயிருக்குமவனுடைய ஜ்ஞாநயோக₄மும், அநந்யப₄க்தனுடைய ப₄க்தியுமில்லையென்றிகோள்; ஆக, இருபடியாலே பேற்றுக்கடியாயிருப்பதொரு புண்யலேசமுமில்லையென்றிகோள்; உங்களுக்கு உள்ளதென்?" என்ன; (ஆய்க்குலத்துன்றன்னைப் பிறவி பெறுந்தனைப் புண்ணியம் யாமுடையோம்) எங்களை என் சொன்னையே! ஸாக்ஷாதீ புண்யத்துக்குப் பாலும் சோறுமிட்டன்றே வளர்க்கிறோம்; ஆர்ஜிதஸுக்ருதமில்லையென்றேமத்தனை போக்கி அயத்நஸித்₃த₄ஸுக்ருதமில்லையென்றேமோ? ஸாத்₄யஸுக்ருதமில்லையென்னுங்காட்டில் ஸித்₃த₄ஸுக்ருதமில்லையென்றிருந்தாயோ? உன்னுலே ஸ்த₂பிக்கப்படுகிற கர்மங்களில்லையென்றேமத்தனையொழிய தூர்மஸ்த₂பகனுய் ஸாக்ஷாத்₃தூர்மமான உன்னை இல்லையென்னலாமோ? (ஆய்க்குலத்து உன்றன்னை) நீ எங்கள் குடியிலே விரும்பிவந்து பிறக்கும்படியன்றே எங்களைச்வர்யம். (ஆய்க்குலத்து) நாங்கள் எத்தனையேனும் கைகழியச் செய்தேயும் நீ அவ்வளவெல்லாம் வந்து கிட்டினபின்பு எங்களுக்கு அதி₄காரத்தில் குறையுண்டோ? எங்களுடைய இடைக்குலத்திலே நீ வந்து பிறக்கைக்கடியான புண்யத்தை நாங்களுடையோம்; எங்கள் பேற்றுக்கு உபாயமும் நீயே; அதுக்கடியான ஸுக்ருதமும் நீயேயாகப் பெற்றேம்.

(ஆய்க்குலத்துன்றன்னை) இதிலே நீக்கி முகக்கவோ நீ பிறந்தது? C இவ்வாய்க்குலத்தை வீடுய்யத் தோன்றிற்று; D "உய்யவிவ்வாயர்குலத்தினில் தோன்றிய வொண்சுடரானாய் நீ பிழைத்தே" என்னக்கடவதிறே. நீ ஸுக்ருதமாய் நின்று இக்குலத்தை எடுக்கைக்கு ஆண் பெண் சட்டி பானை என்றுண்டோ? (உன்றன்னை)

A பெரிய திரு 5-8-1. B பெரியாழ்திரு 3-8-2. C திருவாய் 6-2-10. D பெரியாழ்திரு 2-3-3.

ஸரிகள் 1. "அநுஸஞ்சரந்"களாய்த் தொடர்ந்து குற்றேவல் செய்கிற உன்னை, கறவைகள் பின்செல்லுகிற குலத்திலே பெற்றேம். A தடங்கடல் சேர்ந்த உன்னை கானஞ்சேர்ந்த குலத்திலே பெற்றேம். (ஆய்க்குலத்து உன்றன்னை) 2. "அநந்நந்" என்னும்படி ஒட்டறுத்து உண்ணுதே நிற்கும் உன்னை "உண்போம்" என்கிற எங்கள் குலத்திலே பெற்றேம். திவ்யஜ்ஞாநோபபந்நர்க்கு முகங் கொடுக்கிற உன்னை அறிவொன்று மில்லாத குலத்தில் பெற்றேம். (ஆய்க்குலத்து உன்றன்னை) B இமையோர்தங் குலமுதலான உன்னை C ஆயர்குலமுதலாகப் பெற்றேம். (ஆய்க் குலத்து உன்றன்னை) D வெங்கதிரோன் குலத்திற்காட்டில் இக்குலத்துக் குண்டான வாசியாராய். நீ பகல்விளக்கான குலமும், நீ அணிவிளக்கான (5) குலமும் ஒக்குமோ?

(பிறவி) E "செந்நாள் தோற்றி" என்னும்படி நீ ஆவிர்ப்பவித்த யாதவகுலமோ இது? F "நந்தன் பெற்ற ஆனயன்" என்னுமிடமன்றே இது. (பெறுந்தனைப் புண்ணியம்) பெறுகைக்குத் தக்க பாக்யம். புண்யத்தை உன்னுலே தேடலாம். 3. "புண்யாநாமபி புண்யோஸௌ" என்கிற உன்னைப் பெறுகைக்குத் தக்க புண்ணியம் வேணுமிறே. புறம்புண்டான புண்யங்களை உன்னுலே பெறலாம், உன்னைத் தரவல்லது உன்னில் விஞ்சினதில்லையே. 4. "க்ருஷ்ணம் தர்மம் ஸநாதநம்' என்கிற ஸநாதநதர்மம் நீயேயிறே. இத்தை "புண்ணியம்" என்றுமுண்டென்று என்பாரார்? வேதவித்துக்கள் சொல்லவோ, அத்யாத்ம வித்துக்கள் சொல்லவோ? கர்மபாகம் நிஷ்டரும் அன்று என்னுர்கள்; ஜ்ஞாந பாகம் நிஷ்டரும் அன்று என்னுர்கள். (பெறுந்தனை புண்ணியம்) பறைதரும் புண்ணியனேயிறே தன்னையுந் தருவது. பிறக்கைக்கு ஹேதுவேயிறே தருகைக்கும் ஹேது. H "வேண்டி—வந்து பிறந்ததும்". 'நம்மைப் பெறும்படியான புண்ணியம் I "என்ன நோன்பு நோற்றுள் கொலோ" என்கிற யசோதையொருத்தி யன்றே?' என்ன; (யாமுடையோம்) அவள் பெற்று உடையளானுள், நாங்கள் பிறந்து உடையோமானேம். 5. "அஹோபாக்யம் அஹோபாக்யம் நந்தகோ பவ்ரஜௌகஸாம்" என்று ஊர்க்காகப் பலித்ததிறே. 'J "இருந்தவூரிலிருக்கும் மானிடர்" என்கிறபடியே உங்களுடைய தபःபலமாகப் பெற்றிகோளாகிறிகோள்; நாம் பிறந்த ஊரிலிருக்கைக்குப் புண்ணியம் பண்ணினிகோளாகிறிகோள்' என்றுன்; — (உடையோம்) நாங்கள் ஒன்று செய்து ஆர்ஜித்தோமல்லோம், இந்த ஸுக்ருதம் ஸத்தாநிபந்தநம். (உடையோம்) நாங்கள் செய்ததுமல்ல, ஸ்வீகரித்ததுமல்ல, இப்புண்யத்துக்குச் செய்யுமவையும் ஸ்வீகரிக்குமவையும் ப்ரதிபந்தகங்களிறே. புறப்பகையுங் கழிக்கவேண்டா, உட்பகையுங் கழிக்கவேண்டா. (யாமுடையோம்) எங்கள் ஸுக்ருதத்தில் பாதக ஸ்பர்ஶமுமில்லை, மஹாபாதக ஸ்பர்ஶமுமில்லை. (புண்ணியம் நாமுடையோம்) நாட்டில் புண்ணியங்கள் அநேகங்களுமாய், ப்ரதிநியதங்களுமாயிருக்கும்; எங்கள் புண்ணியம் ஒன்றுய்,

---

A திருவாய் 3-5-6. B திருவாய் 7-1-8. C திருவாய் 1-5-6. D பெருதிரு 10-1. E திருப்பல் 10. F பெரியதிரு 5-5-3. G நான்-திருவ 72. H திருவாய் 6-4-5. I பெரியதிரு 2-2-6. J பெரியாழ்திரு 4-4-7.

அது எல்லார்க்கும் பொதுவாயிருக்கும். A "யாவர்க்கும் புண்ணியம்" என்னக் கடவதிறே.

'அறிவொன்றுமில்லை என்பது, புண்ணியம் நாமுடையோமென்பதாய்க் கொண்டு வ்யாஹதப₃ாஷணம் பண்ணினிகோளே' என்ன; "ஓராஶ்ரயத்திலே உண்மைபுமில்லாமையுஞ் சொல்லிலன்றே வ்யாஹதியுள்ளது; அப்ரயோஜகங்களே யன்றே நாங்கள் இல்லையென்கிறது; எங்களுடைய அபி₄மதவஸ்து₃₄ யாதொன்றுலே அத்தை இல்லையென்றேமோ? — (குறைவொன்றுமில்லாத) எங்களுக்கு அறிவொன்று மில்லை என்றேமத்தனேபோக்கி, எங்கள் புண்ணியத்துக்கு ஏதேனும் குறை சொல்லிற்றுண்டோ? உண்டானாலும் கழுத்துக்கட்டியாமவற்றினுடைய இல்லாமை சொல்லுகை உன்னுடைய அநுக்₃ரஹத்துக்கு ஹேதுவாமத்தனையன்றே; (எங்கள் தலையால்) வருமத்தை இல்லையன்றேமத்தனேபோக்கி உன்தலையால் வருமத்தை இல்லையென்றேமோ?

(குறைவு — இல்லை) (குறைவொன்று — இல்லை) (குறைவொன்றுமில்லை) எங்கள் புண்யம் ஸாபேக்ஷமுமன்று; ஸாவதி₄யுமன்று; ப்ரப₃லபாப நிருத்₃த₄மு மாகாது. உத்பத்தியில் சேதநனை அபேக்ஷிக்கும் என்னவேண்டா, ஸாத்₄யமல் லாமையாலே; பூலங்கொடுத்தால் குறையும் என்னவொண்ணாது பரமசேதந மாகையாலே; ப்ரப₃ல கர்மத்தாலே தகைப்படுமென்னவொண்ணாது, ஸர்வஶக்தி யாகையாலே. "நிரபேக்ஷனைப்பற்றும், பூர்ணனைப் பற்றும், ப்ரப₃லபாபங்களை நான் போக்குகிறேன்" என்றது வெறுமனேயோ? (குறைவொன்றுமில்லாத) ராஜாக்கள் வழிபோம்போது மேடுபள்ளம் ஒக்கவிட்டன்றே போவது. பெருமாள் கடலைத் தூர்த்து வாநரஸேனையை நடத்தினாற்போலே, உன் குறைவில்லாமையை எங்கள் குறைவிலேயிட்டு நிரவி ஒக்கவிட்டுக்கொள்ளுமித்தனை. எங்களறிவொன் றில்லாமையாகிற பாழ்ந்தாறு நிரப்புகைக்கு வேண்டும் பௌஷ்கலயம் போராதோ உனக்கு? உன் குறைவில்லாமை, எங்களறிவில்லாமையை அபேக்ஷித்தன்றே இருப்பது. குறைவாளரையொழிய நீ நிறைவாளனும்படியெங்ஙனே? ஒரு மேட்டுக்கு ஒருபள்ளம் நேரன்றே. 'ஆகில் ஒன்றுமில்லையென்று சொன்னவிடம் உங்களுக்கு ஸ்வரூபஜ்ஞாநமில்லாமையிறே' என்ன; — (கோவிந்தா) நீயோதான் சால அறிவுடையையாயிருக்கிறாய். உனக்கு ஸ்வரூபஜ்ஞாநமுண்டாகில் ஸ₃ரிகள் நடுவேயிராயோ? அவனுடைய அறியாமையிறே நமக்குப் பற்றாசு. நீ B "அயர் வறுமமரர்களதிபதி" என்று உன்னையறிந்தாயாகில் நீ பசுக்களின்பின்னே போகப் பெறுவுதியோ? அவன்தன்னையறிந்தாலும் பெறவிரகில்லை, நம்மையறிந்தாலும் விரகில்லை; அவன் ஸ்வாதந்த்ர்யத்தையும் மறந்து, நம்முடைய அபராத₃த்தையும் மறக்கையிறே நமக்குப் பெறலாவது. (குறைவொன்றுமில்லாத கோவிந்தா) இக்குறைவொன்றுமில்லாமை பரத்வத்திலன்று; தாழநின்ற நிலத்திலே. ஸாம்யா

A திருவாய் 6-3-3. B திருவாய் 1-1-1.

பந்நர்க்கும், அவர்களிலும் சிறியவர்களுக்கும், அவர்களோடொத்தவர்களுக்கும் முகங்கொடுக்குமென்கிற குறை அங்கு. குறையுண்டென்னவும் அறியாதாரோடே பொருந்தித்திரிந்தவனன்றே. உன்க்கு இற்றைக்கு விசேஷமென்? எங்கள் குறையால் எங்களுக்கிழக்கவேண்டுவது உன்னுடைய பூர்த்தியில் ஏதேனும் குறையுண்டாகிலன்றே? கன்றுகள் மேய்த்து கோவிந்தாபிஷேகம் பண்ணி கோபகுலத்திலே கலந்து பரிமாறி, A காலிப்பின்னே வருகின்ற, வேடத்தை எல்லார்க்குங்காட்டி, ஏற்கவே அறிந்து கோவர்த்தநத்தையெடுத்து ரக்ஷித்துப் போருகையாலே வாத்ஸல்யாதிகளாலும் ஜ்ஞாநசக்த்யாதிகளாலும் பூர்ணனனவனன்றே? எங்களுக்கு ஜ்ஞாநவ்ருத்தங்கள் கைபுகுந்ததில்லே; உனக்கு ஜ்ஞாநசக்திகள் குறைந்ததில்லே. (கோவிந்தா) 1. ''ஸாமேகம்'' என்றவன் பாசுரமன்றே; B கடையாவும், கழிகோலும் கையிலே பிடித்த கண்ணிக்கயிறும், C கற்றுத்தூளியாலே தூஸரிதமான திருக்குழலும், மறித்துத் திரிகிறபோது திருவடிகளிலே கிடந்து ஆரவாரிக்கிற கழல்கள் சதங்கைகளும், A குளிர்முத்தின் கோடாலமுமாய் நிற்கிற உபாயவேஷத்தை ''கோவிந்தா'' என்கிறார்கள்.

''பெண்காள்! உங்கள் பேற்றுக்குடலாக நம் நைரபேக்ஷ்யம் சொல்லா நின்றிகோள்; குறைவாளர்க்கு நிறைவாளர் கொடுக்கக்கடவர்கள் என்றுண்டோ? நிரபேக்ஷராயிருப்பார் ஸ்வதந்த்ரரிறே; நீங்கள் சொன்னதுதானே இழவுக்குடலாயிருந்தது; நாம் அல்லோம் என்றபோது கைவிடுகைக்குடலாயன்றே இருப்பது'' என்ன; (உன்றன்னோடுறவு) உன் பூர்த்தி குலையிலும் பந்தம் குலையவொட்டுவதியோ? நீ எங்களுக்கு உறவன்றே; நீ எங்கள் காரியம் செய்யவேண்டாவோ? குடற்றுடக்குண்டானவிடத்தில் ஸ்வாதந்த்ரியம் ஜீவிக்குமோ?''அதுகொண்டோ? ஆனல் அது ஒரு குடநீரோடே போகிறது'' என்றன்; (உறவேல் — ஒழிக்கவொழியாது) ப்ரகாரியையொழிய ப்ரகாரத்துக்கு ஸ்திதியுண்டோ? பருதகஸதித்யாதிகளில்லாத வஸ்துவை சக்திமான் என்ன உன்னுலே பிரிக்கலாமோ? (ஒழிக்கவொழியாது) D ''நானுன்னையன்றியிலேன் — நீ என்னையன்றியிலை'' என்கிற ப்ரமாணம் கேட்டறியாயோ? நீ எங்கள் கையில் தந்த மூலப்ரமாணத்தில் முதல்வரியில் முதலெழுத்தை வெட்டுதல், எங்கள் காரியம் தலைக்கட்டுதல் செய்யவேண்டாவோ? ''இவையெல்லாம் அறிவொன்றுமில்லாத உங்களுக்கும் வார்த்தைகளல்ல, E உறவு சுற்றமென்றென்றிலா நமக்குத் தெரியாது'' என்றன். (நமக்கு—ஒழிக்கவொழியாது) உன்னுடைய ஜ்ஞாநவான்களுடைய பந்தமல்லகாண் நாங்கள் சொல்லுகிறது; இடையிலே வந்த உறவுகாண் எங்களது. அறிவில்லாதார்க்கு மறக்கலாம் அந்த உறவு; அறிவில்லாதார் இட்டீடு கொள்ளும் உறவுகாண் இவ்வுறவு.

A பெரியாழ் 3-3-1, B திருவாய் 4-8-4, C பெரியாழ் திரு 3-3-3, D நான்-திருவ 7
E பெரிய திரு 2-1-2.

நீ A மைத்துனனம்பி; நாங்கள் B மாமிமார் மக்கள்; எங்ஙனே ஒழிக்கும்படி? "இதென்னன்புது? நமக்கு ஸ்ரீ ஶ்ரீ பா ல ன் மைத்துனனன்றே" என்றுன்; உன்னுடைய கோ₃விந்த₃த்வத்துக்குப் பழிப்புச் சொன்னவனுகையாலே அவனை விடாய்; கோ₃விந்த₃பி₂ஷேகம் பண்ணினவன்று உன்காலிலே குனிந்த மைத்துனன் காரியமெல்லாம் உன் தலையிலே ஏறிட்டுக்கொண்டு முன் நடந்து செப்திலையோ? அந்தவுறவு காண். C "தாழ்ந்த தனஞ்சயற்காகி" D "பாலப் பிராயத்தே பார்த்தற்கருள் செய்த" என்னக்கிடவதிறே. "யுத்₃த₄ார்த்த₃மாக ஒரு நிமித்தத்தை கூட்டிக்கொண்டு, அந்தக் காரியம் செய்த அநந்தரத்திலே விட்டிலோமோ அதுவும்?" என்றுன். (இங்கொழிக்கவொழியாது) அங்கு ஒழிக்கலாம்; இங்கு ஒழிக்கவொண்ணுதுகாண். ஸ்வதந்த்ரன் தாழ்ந்தவிடத்தில் பண்ணின வுறவுபோலேயோ பரதந்த்ரரைத் தாழ நின்று கையைக் காலைப் பிடித்துப் பண்ணின உறவு? (கோவிந்தா உன்றன்னோடுறவேல் — ஒழிக்கவொழியாது) உன்னுடைய நாராயணத்வத்திலுறவு பழங்கிணறு கண்வாரவேணுமோ? எங்களுக்கு இவ்வுறவு போராதோ? E அளிக்கின்ற ஆனையனுகையாலே ரக்ஷ்ய ரக்ஷகப₃ந்த₄மும் உன்னோடே. F "குன்றுகுடையாவெடுத்த அடிகள்" என்று — கோ₃விந்த₃பி₂ஷேகம் பண்ணுகையாலே ஸோஷ்மோஷ்மிபா₄வமும் உன்னோடே. G "ஏசும்படி அன்னசெய்யும் எம்மீசர்" ஆகையாலே நியந்த்ருநியாம்யபா₄வமும் உன்னோடே. H "தம்மனையானவனே" I "ஆனயர்த₃யவனே" என்று கார்ய காரண ப₃ந்த₄மும் உன்னோடே. J "என்னுயிர்க்கண்ணபிரான்" என்று — நீ உயிராய், நீவிட்டகன்றபின் என்னுயிர் ஆற்றமாட்டாது; நாங்கள் துடிக்கும்படி யிருக்கையாலே தா₃ர்யதா₃ரக ப₃ந்த₄மும் உன்னோடே. K "எண்ணத்துளென்று மிருந்து தித்திக்கும்" என்று வ்யாப்யவ்யாபகஸம்ப₃ந்த₄மும் உன்னோடே. இப்படி உன்னோடே உண்டான ப₃ந்த₄த்துக்கு எல்லையுண்டோ? (கோவிந்தா — ஒழிக்க ஒழியாது) நீ கோவர்த்த₄நமெடுத்தவாறே வேறெருவனே என்று ஸங்கிக்க, "நான் ப₃ந்து₄வாய்ப் பிறந்தேன் உங்களுக்கு; வேறென்று நினையாதே கொள்ளுங்கோள்" என்ற வார்த்தை அமோக₄மன்றே? (ஒழிக்க ஒழியாது) உன்னை விடவொண்ணுது; எங்களால் விடவொண்ணுது; உன்னுடைய ப₃ந்து₄க்களால் விடுவிக்க வொண்ணுது; எங்கள் ப₃ந்து₄க்களால் விடுவிக்கவொண்ணுது; ஊராசு ஸங்கேதித்தாலும் விடுவிக்கவொண்ணுது. நீ L துறந்தெம்மைவிட்டகன்ற விடத்திலும் போய்த்தில்லை; நாங்கள் M "புள்ளுவம் பேசாதே" N "கழகமேறேல்" என்றவிடத்தில் குலைந்ததில்லை. O "ஊனமுடையன செய்யப்பெறுய்" என்ற விடத்தில் போய்த்தில்லை. P "இவ்வூரொன்று புணர்க்கின்றதே" என்று திரள

A நாச்-திரு 6-6. B நாச்-திரு 3-8. C பெரியாழ்திரு 1-9-4. D பெரியாழ் திரு 2-6-6. E திருவாய் 9-9-2, F பெரியதிரு 6-10-7. G திருவிருத்தம் 54 H பெரியாழ் திரு 1-5-3. I திருவாய் 3-8-3. J திருவாய் 9:5-1. K பெரியாழ் திரு 2-3-11. L திருவாய் 10-3-4, M பெரு திரு 6-7. N திருவாய் 6-2-6. O பெரியதிரு 10-7-1. Pபெரியாழ்திரு 3-4-3.

அவத்₃யம் சொன்னவிடத்தில் ஒழிந்ததில்லே. அறிவொன்றுமில்லாத எங்களுக்கு, குறைவொன்றுமில்லாத உன் உறவு; த₃யாபூர்த்₃தி₄ த₃யநீயதாபூர்த்தியுண்டானை உறவுக்கு அந்யதா₂ஸித்₃தி₄ சொல்லவொண்ணுதே.

''இப்படி நம்மோடே உறவுசொல்லாநின்றிகோள்! உங்களே கோபிகைகளாகவும், நம்மை கோவிந்த₃னுகவுஞ் சொல்லிற்று இப்போதன்றே; நம்மை அடியிலே மர்மத்திலே தொட்டுவைத்து மேலும் அதிலே நடந்துவைத்து, கார்யகால மானவாறே வாலிக்குமைத்து 'கோவிந்தா' என்னுநின்றிகோளே! என்னுக்கிவிடற்கு?'' என்றன். ''நாங்கள் செய்த தப்பைப் பொறுக்குமத்தனையன்றே'' என்ன, ''சொல்லுகைக்கு ஹேதுசொல்லுங்கோள், பொறுக்கிறோம்'' என்றன்; (அறியாத பிள்ளைகளோம்) என்கிறார்கள். இவையெல்லாம் பொறுக்தைக்கு ஹேதுக்களிருக்கிறபடி;— முதலிலே அஜ்ஞர் செய்தது பொறுக்கவேணும்; பா₃லர் செய்தது பொறுக்கவேணும்: ஸ்நேஹிகள் செய்தது பொறுக்கவேணும்; அநவதா₄நத்தாலே சொல்லுவதறிந்திலோம்; பா₃ல்யத்தாலே சொல்லுவதறிந்திலோம்; ப்ரேமத்தாலே வந்த இருட்சியாலே சொல்லுவதறிந்திலோம்; எங்களாலே அறிவுகெட்டோம்; பிறவியாலே அறிவுகெட்டோம்; உன்னுலே அறிவுகெட்டோம்; A யாதுமொன்றறியாத பிள்ளைகளிறே நாங்கள். அறிவொன்றுமில்லாத ஆய்க்குலத்திலே பிறக்கையாலே அறிவுகெட்டோம்; B ''அழகுகண்டென் மகளயர்க்கின்றது'' என்கிறபடியே உன்னைக்கண்டு மதிகெட்டோம்; C ''அறிவழிந்தனராய்ப்பாடி ஆயர்'' என்று — இடையரை மதிகெடப் பண்ணுமது பெண்களே மதிகெடுக்கச் சொல்லவேணுமோ? D ''பித்தர் சொல்லிற்றும் பேதையர் சொல்லிற்றும், பத்தர் சொல்லிற்றும் பன்னப்பெறுவதோ'' என்று ப்ரஸித்₃த₄மன்றே?

(அன்பிலுல்)—ப்ரேமாந்த₄ரைக் குற்றங்கொள்ளுகையாவது—ஒரு படுக்கையிலேயிருந்து, 'கைதாக்கிற்று, கால்தாக்கிற்று' என்னுகையிறே. (உன்றன்னை) கோவிந்தா₃பி₄ஷேகம் பண்ணியிருக்கிற உன்னை; அநவதா₄நாதி₃களும் அன்புவிளைக்கைக்கு நிமித்தமாயிருக்கிற உன்னை. E ''இளையார் விளையாட்டொடு காதல்வெள்ளம் விளைவித்த'' என்று—தானேயிறே அவற்றுக்கு அடி. ''உன்றன்னைப் பிறவிபெறுந்தனை'' என்றத்தைப் போலன்று இந்த 'உன்றன்னை'. அவ்விடத்தில் பெருமையுடையவன் தாழநின்று நீர்மை ஸம்பாதி₃க்கவந்தவிடத்தில் மேன்மைசொல்லுகை குற்றமிறே.

(சிறுபேர்) கோவிந்தா₃பி₄ஷேகம் பண்ணினபின்பு முதல் திருநாமஞ் சொல்லுகை குற்றமிறே. முடிசூடினவனைத் தட்டியில் பேர் சொல்லுகைக்கு மேற்

A நாச்-திரு 2-7, B பெரியாழ் திரு 3-4-7, C பெரியாழ் திரு 1-1-3, D கம்பராமாயணம் - பா₃லகாண்டம் தொடக்கம், E பெரிய திரு 3-8-8.

படவுண்டோ குற்றம்? இப்போது ''சிறுபேர்'' என்று நினைக்கிறது ''நாராயணன்'' என்றத்தை. தங்களுக்கு அஸாத₄ாரணனுயிருக்கிறவனை ஸாத₄ாரணனென்று சொல்லுகை குற்றமிறே. ஊடினுல் சொல்லுமத்தைப் படுக்கைத் தலத்திலே சொல்லலாமோ? அந்த:புர வாசலிலே படுகாடு கிடப்பாரை நாட்டுக்குக்கடவனென்கிறது ப்ரணயியல்லனென்கையிறே. இவன் உப₄யவிபூ₄திக்கும் முடிகவித்து ஸ்ரீவைகுண்டத்திலேயிருக்குமவனென்று சிறிது ஜ்ஞானமுண்டாயிருக்கச்செய்தேயிறே, இந்த்₃ரன் வந்து, ''பசுக்களை மேய்த்தான்'' என்று முடி சூட்டிற்று. உப₄ய விபூ₄திக்கும் முடிசூடினதுக்கு அவ்வருகே ஒரு ஐஸ்வர்யமிறேயிது. ''நாராயணன்'' என்கிற பேர் நாராயண்பரங்களான ப்ரமாணங்களுக்குச் சொல்லலாம், கே₃விந்த₃ாஸக்தமான நெஞ்சுடையார்க்குச் சொல்லுகை குற்றம். (சிறுபேர்) ஸஹஸ்ராக்ஷரங்கள் த்₃வாத₃ஸாக்ஷரங்கள் தொடக்கமான பெரும்பேர்களெல்லாம் A அவன் பெயரெட்டெழுத்தையுங் கண்டவாறே சிறுகிற்று; அதுதான் B மூன்றெழுத்துடைய பேரைக் கண்டவாறே சிறுகிற்று; — முழுகி மூக்கைப் புதைப்பாக்கு யோக்₃யமான பேர், திட்டத்தோடேகத்திக்கையராயத் திரிவார்க்கும் யோக்₃யமான பேரைக்கண்டவாறே கழிப்பானுய்த்து. வாச்யன் சிறுகநின்று நிறம் பெற்றுல் வாசகமும் அப்படியேயிறே. (சிறுபேர்) ''அஷ்டாக்ஷரமஹாமந்த்ரம்'' என்பார் கலங்கினவர்கள்; தெளிவுடைய இவர்களுக்கு சிறுத்துத் தோற்றுமிறே இது; மூலநாமமுமாய் அதிகு₃ஹ்யமுமாய்ச் செவியிலே சொல்லவேண்டும்படியிறேயிருப்பது. பிறந்து பன்னிரண்டுங் கழிந்தவாறே, பேரிட்டுத் தாலாட்டினதிறே. C ''மன்னு நாரணன் நம்பி பிறந்தமை'' என்றும், D ''நாராயணுவமேல் தாலேலோ'' என்றும், அப்போது E செய்த்தலை நீல நிறத்துச் சிறுப்பிள்ளையாகையாலே சொல்லலாம்; இப்போது F பெருங்கண்ணனிறே.

(அழைத்தன) அதுதன்னை ஒருக்கால் சொல்லிவிடாதே, ''நாராயணனே'' (1) என்றும், ''நாற்றத்துழாய் முடிநாராயணன்'' (10) என்றும், ''நாராயணன் மூர்த்தி'' (7) என்றும் பலகாலும் சொன்னர்களிறே. (அழைத்தனவும்) எங்களில் நாங்கள் முதல்நாமத்தைச் சொல்லிவிட்டவளவேயன்றிக்கே, மூலக்கிழங்கிலே தட்டச் சொன்னவற்றையும்; ''பாழியந்தோளுடைப்பற்பநாபன்'' (4) என்றுர்களிறே. (உன்றன்னை—அழைத்தனவும்) எங்களில் நாங்கள் ப்ரணயித்வத்தாலே ''பேய்ப் பெண்ணே'' (7) ''ஐமையோ! செவிடோ!'' (9) ''நாணுதாய்'' (14) ''பண்டே உன்வாயறிதும்'' (15) என்று தொடங்கிச் செய்தவற்றையும் பொறைகொள்ள நினைத்தார்கள். 1. ''ஸர்வாநமோஷத:'' என்னவேணுமிறே. த்ரிவித₄கரணங்களாலுண்டான த்ரிவித₄ாபசாரத்துக்கும் உபலக்ஷணம். புகுதருவானின்றவற்றில்(5) பூ₃த்₃தி₄ பூர்வத்துக்கு கூமை கொள்ளுகிறார்கள். ப₄க₃வத்ப₄াக₃வத விஷயங்களில் உபசாரபூ₃த்₃த்₄யா பண்ணும் அபசாரங்களுக்கு கூமைகொண்டு விடவேணும்; ஸுலப₄னை ''பரன்'' என்கிறதுதான் அபசாரமாகிற தோ₃ஷமிறே. குளிர்ந்த

A திருச்சந்த 77. B திருமாலை 4. C பெரியாழ்திரு 1—1—10. D கை 1—3—8
E கை 1—2—12. F திருவாய் 9—5—9.

தண்ணீரை விநியோகங்கொள்ளுமவனுக்குக் காய்ச்சின தண்ணீர் பகையிறே. க்ருஷ்ணனுடைய ஆற்றலுக்கு ஈஸ்வரத்வத்தால்வந்த அழல் பகையிறே. "பேற்றுக்கு ப்ரயோஜகமானது புறம்பே கிடக்க, அப்ரயோஜகங்களைக் கிடந்து ஆராய்கிறதென்?" என்று (சிறியருளாதே) என்கிறார்கள்; "செய்வுத்தையெல்லாம் செய்து 'சிறியருளாதே' என்னவமையுமாகாதேதான்? இத்தலையை ஆராயில் சிறவேண்டும்படியாயிறேபிருப்பது. பூர்வவ்ருத்தம் 1. "நக்ஷமாமி"க்கு இலக்கல்லவே, நப்பின்னைப்பிராட்டியை முன்னிட்டவர்களாகையாலே. ஸ்ரீவிஶ்வரூபங்கண்ட அர்ஜுனன், "நீ என்னைவிட மேல்விழுந்து கலசினபடியாலே உன் வைபவமொன்றுமறிந்திலேன்; அநவதாநத்தாலும், ப்ரணயித்வத்தாலும் விஹார ஶய்யாஸந போஜநங்களில் பண்ணின அஸத்காரங்களைப் பொறுத்தருளவேணும்" என்று பொறை கொண்டான்; ஸௌலப்யத்திலே பரிமாறின தப்புக்களைப் பரத்வங்கண்டவாறே பொறை கொண்டான் அவன்; ஸௌலப்யத்தைக் கண்டு பரத்வபுத்திக்கு க்ஷமை கொள்ளுகிறார்கள் இவர்கள். பக்தியில் தலையாக நிற்கவுமாம், அவன்றன்னைப் பற்றவுமாம்; கிட்டினால் சொல்லுவது இதுவாய்த்து.

"நம்மாலே பேறும்படியான ஸம்பந்தமும் நம்மோடேயுண்டானாலும், குற்றத்தைப் பொறுக்கவேணுமென்றாலும், பல போக்தாக்கள் நீங்களானபின்பு உங்கள்தலையிலேயும் ஒன்றுண்டாகவேண்டாவோ? இவர்கள் இன்னது செய்தார்கள், அவன் இன்னது செய்தான் என்று நாட்டார்க்குச் சொல்லலாவதொரு ஆலம்பநம் வேண்டாவோ?" என்ன; (இறைவா) நீ தரும்வோமென்றவன்று விலக்குகைக்கு உரியாருண்டோ? (இறைவா) உன் ஸ்வரூபத்தை உணராய், எங்கள் தலையிலே கிடந்து, நாங்கள் ப்ரதிபத்தி பண்ணுமையாலே அழித்துக் கொண்ட ஶேஷத்வம்போலன்றே உன்தலையிலே கிடக்கையாலே எங்களால் அழிக்கவொண்ணாத ஶேஷித்வம். அத்தை ஆராய்ந்து எங்களுடைய காரியத்தைச் செய்யாய். அத்தலையில் குறையின்றியிலேயொழியவமையுமிறே; பேற்றுக்கு அத்வேஷமேயிறே இத்தலைக்கு வேண்டுவது; பேற்றின் கநத்துக்குக் கீழ்விளைந்ததெல்லாம் அத்வேஷமாத்ரமாயிருக்குமிறே. (இறைவா) A வானேரிறையை நினைத்தன்று; B ஆய்க்குலமாய் வந்து தோன்றின நம்மிறை.

(கோவிந்தா — இறைவா — ஒழிக்கவொழியாது — பறைதாராய்) உன்னைப் பார்த்தாலும் கைவிட விரகில்லை; எங்களைப் பார்த்தாலும் கைவிட விரகில்லை. (நீ) 'நான் ரக்ஷிக்கைக்கு நீங்கள் பண்ணின ஸாதநாநுஷ்டாநமென்?' என்று கேட்டால், 'தேவர் எல்லையிலே வர்த்திக்கிறதுக்குக் குறைசொல்லப்போமோ?' என்கிறார்கள். அறிவுடையார், அறிவொன்றுமில்லாத எங்களுக்கு விஷயவாஸமாத்ரமேபன்றிக்கே குடல்துடக்குண்டானால் ரக்ஷிக்கச் சொல்லவேணுமோ? (குறை

A திருவாய் 1-5-1. B திருவிருத்தம் 61.

வொன்றுமில்லாத கோவிந்தா — இறைவா — பறைதாராய்) 1. ''கு₃ணதுங்க₃தயா தவ ரங்க₃பதே ப்₃ருஶநிம்நமிமம் ஜநமுந்நமய l யது₃பேக்ஷ்யமபேக்ஷிதுரஸ்ய ஹி தத்பரிபூரணமீஶ்துரீஶ்வரதா ll'' என்னக்கடவதிறே. 2. ''நோபேக்ஷணம் மம தவோசிதமீஶ்வரஸ்ய'' — உன்னுடைய ஶேஷித்வம் நிலைநிற்க வேணுமாகில் செய்கிறாய்; சிறுமைக்கும் ஹேது இது. 3. ''ப்ரேஷ்யஸ்ய க்ஷமிதவ்யம் மே'' என்னக்கடவதிறே. A ''செய்த குற்றம் நற்றமாகவே கொள்ளுலநாதனே''. (பறைதா₃ராய்) ஸாது₄பரித்ராணம் பண்ணுகைக்கன்றே இங்கு வந்து பிறந்தருளிற்று. ''பறைதா₃ராய்'' என்றவாறே, ''கோபீஜநத்தினுடைய மிகுதி குறை ஆராய்வாய் நீயன்றே; இவர்கள் சொல்லுகிறவற்றை ஆராய்ந்து கொடு'' என்றன் அருகிருக்கிறவளை — (நீதாராய்) அவள் தருவது தந்தாள்; நீதரும் அத்தைத் தாராய். உபாயநிஷ்டை₃யன்றே அவள் தருவது; மேலுள்ளது உன் பணியன்றே. 4. ''அஸ்துதே'' என்று — அவள் அதுசெய்தால்; 5. ''அஹம் — மோக்ஷயிஷ்யாமி'' என்னக்கடவ நீ பேசாதிருக்கவோ? ஸுலப₄னை நீ தாராய். ஸ்வாமியான நீ தாராய். ஸர்வோபாய ஸாத₄ராணமான ருசியை உபாயத்திலே செலவெழுதாதே, சைதந்யகார்யமான ஸ்வீகாரத்தையும் உபாயத்திலே செலவிடாதே, எங்களால் ஸாத்₄யமன்றிக்கே ஸித்₃த₄ஸ்வரூபனான உன்னையே பார்த்துக் காரியஞ்செய்தருளவேணும்.

(கறவைகளித்யாதி₃) எங்களைப்பார்க்கிலும் நீ கார்யம் செய்யவேணும்; எங்களையும் உன்னையும் பார்க்கிலும் கார்யம் செய்யவேணும்; உன்னைப்பாராதே எங்களைப் பார்த்தாயாகில் இழக்கிறோம்; எங்களைப் பாராதே உன்னைப்பார்த்தாயாகில் பெறுகிறோம். ஆனபின்பு எங்களுடைய ரக்ஷணம் உன்னுலே விடலாமோ? எங்களுக்கு வருத்த ஜ்ஞாந ஜந்மங்களால் நன்மையில்லையென்றோம்; நீ நன்மைக்கு அடியென்றோம்; பூர்ணனென்றோம்; ஸுலப₄னென்றோம்; உன்றேடு எங்களுக்குக் குலையாத ஸம்ப₃ந்த₄முண்டென்றோம்; எங்கள் தப்புக்கு அநுதபித்தோம்; பொறை கொண்டோம்; எங்களுக்கு இனி செய்யவேண்டும் அம்ஶமில்லை; இனி உன்னை இழவாமல் காரியஞ்செய்யப் பாராய். 6. ''தத₃ஹம் த்வத்₃ருதே'' இத்யாதி₃. ''எங்களுக்குப் பரித்யாஜ்யத்வேந விஹிதங்களில் அந்வயமில்லையாய்த்து; ஸ்வீகார்யத்வேந விஹிதோபாயமான நீ ஸ்வீகாரநிரபேக்ஷமாகக் கைப்புகாநின்றாய்; உனக்கு ஜ்ஞாந:க்தியிலுங் குறைவற்றிருந்தது; ப்ராப்தியிலுங் குறைவற்றிருந்தது; எங்களுக்கு அஜ்ஞ(த்வ)?ாதி₃கள் பூர்ணமாயிருந்தது; குற்றங்களைப் பார்த்துச் சிறவொண்ணாதபடி ஸமஸ்த விரோதி₄களையும் போக்குகிறேனென்றபடியிருந்தாய் நீ; ஆனபின்பு 'ப்ராப்யலாப₄நிமித்தமாக ஶோகியாதேகொள்' என்ற நீ எங்களுபேக்ஷிதத்தைச் செய்யலாகாதோ?'' என்று தங்களாகிஞ்சந்யத்தையும், அயோக்₃யதையையும் ஆவிஷ்கரித்து, உபாயபூர்த்தியையும் தங்கள் ப்ராப்தியையும் முன்னிட்டு, ப்ராமாதி₃கமாகப் புகுந்த தப்புக்களுக்குப் பொறை கொண்டு, எங்கள் ப்ராப்யஸித்₃தி₄க்கு நீயே உபாயமாகவேணுமென்று க்ருஷ்ணனை அபேக்ஷிக்கிறார்கள். 28.

A திருச்சந்த 111

ஈராயிரப்படி—இருபத்தெட்டாம் பாட்டு

அவ:— இருபத்தெட்டாம் பாட்டு. "பெண்காள்! நீங்கள் சொன்னவற்றைத் தருகிறோம்; நாடு உங்கள் பாடே; நாமும் சிறிது உங்கள் பாடே பெற்றோமாக வேணும்; அதுக்கு உங்களுக்குள்ளதென்?" என்ன, "உனக்குத் தரலாவது ஒன்று மில்லையே; பண்டு தப்பச்சொன்னதுண்டாகில் பொறுக்கவேணும்" என்று கூடைகொள்ளுகிறார்கள்.

வ்யா:— (கறவைகள்) அறியாமைக்குக் கன்றுகாலியென்கை. 1. ஜ்ஞாநேந ஹீந: பஶுபி:ஸ்ஸமாந:" இறே (பின்சென்று) தாங்கள் குருகுலவாஸம் பண்ணுகிறபடி சொல்லுகிறார்கள். (கானம் சேர்ந்து) விஶிஷ்டரிருந்தவிடத்தே சென்று இக்கோயில் புகுவதே! உள்ளுள்ள காட்டிலே வர்த்திக்குமத்தனை; ஊர் கண்டறியோம். (உண்போம்) ரிஷிகளைப் போலே தபஸ்ஸுக்கல்ல; அங்கும் வயிறு வளர்க்க. (சேர்ந்துண்போம்) நடந்துண்ணுமத்தனை; எங்களைப் பார்க்கப் பசுக்கள் வளிஷ்டாதிகளோடொக்கும்; இத்தால் கர்மமில்லை என்கை.

(அறிவொன்றுமில்லாத) ஜ்ஞானபக்திகளில்லை என்கிறது; 2. "பக்திஶ்ச ஜ்ஞாநவிஶேஷ:" என்றுரிறே. முதல் தான் இல்லை. இது உண்டோமோ? 'இவர்கள் அலமாப்பு பக்தியன்றே' என்னில், அது ஸ்வரூபமாகையாலே உபாயமாக நினையார்கள். (ஆய்க்குலம்) அதிகாரமில்லை. (உன்தன்னைப் பிறவி பெறுந்தனைப் புண்ணியம் யாமுடையோம்) "ஆனால் இப்புண்யமில்லாதார் இழக்கு மத்தனையன்றே?" "என் சொன்னாய்? எங்களுக்கன்றே புண்யமுள்ளது; எங்கள் புண்யம் முதலில்லாதார்க்கு முதலும், பலிசையும் கொடுக்கும் புண்யங்காண்! ஸாத்யதர்மத்தைப் பற்றினேமோ? ஸித்தமாய் வடிவுள்ளதொரு தர்மத்தைப் பற்றினோம். இதுவோ எங்களுக்குக் குற்றம்?" (குறைவொன்றுமில்லாத கோவிந்தா) 'உங்களுக்கொன்றுமில்லையென்றீர்களே' என்ன; 'உன்னையில்லை யென்றோமோ?' என்ன; "உங்கள் வெறுமைக்கு நாம் செய்வதென்?" என்ன; ராஜாக்கள் வழிபோம்போது மேடுபள்ளம் ஒக்கவிடுமாபோலே உன் குறை யில்லாமையை எங்கள் குறையிலேயிட்டு நிரப்புவது.

(உன் தன்னோடுறவேலித்யாதி) நாங்கள் அறிவொன்றுமில்லாத ஆய்க் குலம்; நீ குறையொன்றுமில்லாத கோவிந்தன். ஆனபின்பு இப்பிறவி 3. "விதிநிர்மிதமேதத்வயம்". நாராயணனன்றே. எங்களறிவு கொண்டு கார்யமுண்டோ? "உறவுண்டாயிருக்க துர்யோதநாதிகளை விட்டோமே" என்ன, "உனக்கு விடவொண்ணாத பாண்டவர்களாகக் கொள் எங்களை; எங்கள் வெறுமையும் உன் பூர்த்தியும் உணர்ந்து எங்களை விடவொண்ணுமோ?" என்கை (அறியாத) அநவதானம். (பிள்ளைகள்) அஜ்ஞர். (அன்பிலித்யாதி) தவிரவொண்ணாதாகையால் ப்ரக்ருதி உபாயபூதமாகிலிறே தப்பாவதென்ன; "நாராயணன்" என்று, கோவிந்தாபிஷேகம் பண்ணிப் பூர்ணனாயிருக்கிற என்னை சிறு மோர் சொன்னீர்களென்ன, 'நாராயணனென்கை குற்றமோ?' என்னில்; நீர்மை ஸம்பாதிக்கப் போந்தவிடத்திலே மேன்மை சொல்லுகை குற்றமன்றே?

(இறைவா) உன் ஸ்வரூபம் பெறவேண்டாவோ? (நீதாராய்) ஸ்விகாரத்தால் செய்யுமத்தனையும் நீ செய்து அனுதாபமும் அத்தலையிலேயாகவேணும். 1. "ஏகம்" என்றபடியே செய்தருளாயென்கை. (ஒழிக்கவொழியாது) நன்மை உண்டாகிலன்றே பழியிட்டு விடலாவது. (சீறியருளாதே) உபாயமென்று நினையாதே ப்ரக்ருதியென்று கொள்ளவேணும். இத்தலையால் பற்றும் பற்று சீற்றத்துக்கு விஷயம். இத்தலைக்குக் குறையும் அத்தலைக்கு ரக்ஷியும் ஸ்வரூபப்ரயுக்தம். (நீ தாராய்பறை) விலக்குகைக்கு ஆளில்லை; நீ தருமித்தனை. 28.

நாலாயிரப்படி — இருபத்தெட்டாம் பாட்டு

அவ:— இருபத்தெட்டாம் பாட்டு. "பெண்காள்! நீங்கள் சொன்னவை நாட்டுக்கு; உங்கள் அபிஸந்தி இவ்வளவென்று தோற்றியிருந்ததில்லை. நீங்கள் சொன்னவையும் இன்னும் மேல் சொல்லுமவையும் உண்டாகில், நாம் தருமிடத்தில் உங்கள்பாடே நாமும் சிறிது பெற்றோமாகவேணும்; அதுக்கு உங்களுக்குள்ளதென்?" என்ன; "உனக்கு உதவுவதாவது எங்கள் பக்கல் ஒன்றுமில்லை. நாங்கள் பண்டு தப்பச் சொல்லிற்றினவுண்டாகில் பொறுக்கவேணும்?" என்று க்ஷமை கொள்ளுகிறார்கள். முதற்பாட்டில் 'நாராயணனே நமக்கே பறைதருவான்' (1) என்று ஸங்க்ரஹேண சொன்ன ப்ராப்யப்ராபகங்களை இந்த இரண்டுபாட்டாலே விவரிக்கிறது. இப்பாட்டு உபாய விவரணம்.

வ்யா:— (கறவை) உங்கள் ஸ்வரூபம் ஏதென்ன, இன்னதென்கிறார்கள். பட்டர் அருளிச்செய்யும் பாட்டையும் இங்கே நினைப்பது. (கறவைகள்) அறியாமைக்குக் கன்றுகாலி மேய்க்கை. 2. [ஜ்ஞாநேந ஹீந: பஶுபிஸ்ஸமாந:]— அறிவில்லாதாரைப் பசுக்களோடொப்பரென்னக்கடவது. [பின்சென்று] பின்னென்று தாங்கள் குருகுலவாஸம் பண்ணும்படி சொல்லுகிறார்கள். 3. [ராவணே நாம] பரஹிம்ஸையிலே பேர்படைத்தவன். 3. [துர்வ்ருத்த:] பேர் மாத்ரமேயாய் ஸதாசாரமுண்டோவென்னில், அதிலும் புரையில்லை. 3. [ராக்ஷஸ:] ஜந்மத்தால் வரும் நன்மையுண்டோவென்னில், அதுவுமில்லை. காட்டிலே புக்குநோக்கினாலும் திருத்தப் போகாது. 3. [ராக்ஷஸாதிப:] நியாம்யரானவென்னில், இவன் தனக்கு எல்லாரும் நியாம்யர். (கானம் சேர்ந்து) ஊர் கண்டறியோம். (உண்போம்) ருஷிகளைப்போலே தபஸ்ஸு பண்ணுகைக்கல்ல. (சேர்ந்துண்போம்) நடந்த நடந்து உண்ணுமத்தனை. எங்களைப்பார்க்க, பசுக்கள் வஸிஷ்டாதிகளோடொக்கும். எங்கள் இளிம்புகண்டால் சிரிப்பன பசுக்களாயிற்று. 4. "க்ருதாநுகாராநிவ கோபிராரார்ஜவே" என்று பசுக்கள் அநுக்காட்டும் ஆர்ஜவம் எங்கள்படியென்கை. இத்தால் கர்மயோகத்தில் அதிகாரமில்லை என்றபடி.

(அறிவொன்றுமில்லாத) இஜ்ஜந்மத்தில் ஒரு ஸுக்ருதமில்லையாகிலும் ஜந்மாந்தரத்தில் புண்யத்தைப் பண்ணி அத்தாலே விதுராதிகளைப்போலே இஜ்ஜந்மத்திலே அறிவுண்டாமதுவுண்டோவென்னில், அதுவுமில்லையென்கிறார்கள். (ஒன்றுமில்லாத) ஈச்வரஜ்ஞாநத்துக்கடியான ஆத்ம ஜ்ஞாநமில்லை. இத்தால் ஜ்ஞாநபக்திகளில்லையென்கிறது. 5. "பக்திஶ்ச ஜ்ஞாநவிஶேஷ:" என்று, பக்தியாவது ஒரு ஜ்ஞாந விஶேஷம். அதுவுமில்லையாகையாவது — கீழிலவையுண்டாகவுண்டாமதொன்றுகையால் இதில்லையென்னுமிடம் சொல்லவேண்டாவிறே. 'இவர்கள் அலமாப்பு பக்தியன்றே?' என்னில், அது ஸ்வரூபமாகையால் உபாயமாக நினையார்கள். இத்தால் கர்மஜ்ஞாநபக்திகளில்லையென்கை. 6. "அஹமஸ்ம்யபராதாநாமாலயோऽகிஞ்சந:"

A "நோற்ற நோன்பிலேன்" B "குளித்து மூன்று" 1. "ந தர்மநிஷ்டோSஸ்மி" இவையன்றே அறிவுடையார் வார்த்தை; அவர்களோடொத்திகோளென்ன; (ஆய்க் குலம்) அதிகாரமேயில்லை; எங்களைக் கண்டுவைத்து அறிவுண்டோவென்று கேட்கிற நீயன்றே அறிவுகேடன்.

'முதலில்லாதவன் பலிசையிழக்கும்' என்று சொல்லுகிறபடியே புண்யமில்லாதார் இழக்குமத்தனையன்றேவென்ன — (உன் தன்னைப் பிறவி பெறுந்தனைப் புண்ணியம் யாமுடையோம்) என் சொன்னாய்? எங்களுக்கோ புண்ணியமில்லாதது. 2. "க்ருஷ்ணம் தர்மம் ஸநாதநம்" என்று எங்கள் புண்யத்துக்குப் பாலும் சோறும் இட்டு வளர்க்கிறேம் நாங்களன்றே. 3. "உபாயோபேயத்வே ததிஹ தவ தத்த்வம்" என்னும்படியான உன்னை. (பிறவிபெறுந்தனை) நாட்டார் ஆஶ்ரயணீயர் இருந்தவிடத்தே போய் ஆஶ்ரயிப்பார்கள். நாங்களிருந்தவிடத்தே எங்களோடே ஸஜாதீயனாய் ஆஶ்ரணீயனான நீ வந்து அர்த்திக்கும்படியன்றே எங்களுடைய ஏற்றம். எங்கள் புண்யம் முதலில்லாதார்க்கு முதலும் பலிசையும் பூலிக்கும் புண்யங்காண்! (புண்ணியம் யாமுடையோம்) ஸாத்யதர்மத்தைப் பற்றினேனோ? ஸித்தோபாயமாய் வடிவுள்ளதொரு தர்மத்தைப் பற்றினேன்; இதுவோ எங்களுக்குக் குற்றம்?

(குறைவொன்றுமில்லாத கோவிந்தா) 'உங்களுக்கு ஒன்றுமில்லையென்றிகோளே' என்ன; 'உன்னையுமில்லையென்றேனோ?' என்ன; 'உங்கள் பெருமைக்கு நாம் செய்ய வேண்டுவதென்?' என்ன, ராஜாக்கள் வழிபோம்போது மேடுபள்ளமுமொக்கவிட்டு வழிபோமாபோலே, உன் குறையில்லாமையை எங்கள் குறைவிலே பிட்டு நிரப்புவது; பெருமாள் கடலைத் தூர்த்து வழிபோனாற்போலே. (கோவிந்தா) 'அறிவில்லையென்றிகோளே' என்ன, நீயோ சால அறிவுடையையாயிருக்கிறாய். 4. "அவிஜ்ஞாதா"வன்றே? உன்னை உணரில் பிறக்க விரகுண்டா? கோல்கொண்டு பசுவின் பின்னே திரிய விரகுண்டோ?

(உன் தன்னோடுறவேல் நமக்கிங்கொழிக்கவொழியாது) நாங்கள் அறிவொன்றுமில்லாத ஆய்க்குலம். நீ குறையொன்றுமில்லாத கோவிந்தன். ஆனபின்பு இனி இவ்வுறவு 5. "விதிநிர்மிதமேததந்வயம்" என்கிறபடியே. மேடுபடக்கண்டது பள்ளத்தை நிரப்பவன்றே? நாராயணத்வமொழிய தயாபூர்த்திக்கு தயநீயதாபூர்த்தியுண்டானபடியாகிற உறவு. 'எனக்கறிவுண்டென்று கண்டால் உங்களறியாமை போயிற்றே' என்னில்; 'எங்களறிவு கொண்டு கார்யமுண்டோ உன்னோடு விடவொண்ணுத குடல்துடக்கான உறவுண்டாயிருக்க?' என்ன; 'உறவுண்டாயிருக்கச் செய்தேயன்றே துர்யோதந ஸிஶுபாலனுள்ளிட்டாரை விட்டது' என்ன, "உனக்கு விடவொண்ணுத பாண்டவர்களாகக் கொள் எங்களையும்" என்கிறார்கள். 'தங்கள் கர்மம் தாங்கள் செய்கிறேம்' என்றிருப்பாரையன்றே உனக்கு விடலாவது; 'எங்கள் கர்மம் உன்னுலே' என்றிருப்பாரை உன்னுல் விடவொண்ணுது. அவர்கள் தங்களாலும் விடவொண்ணுதென்கை. எங்கள் வெறுமையும் உன் பூர்த்தியும் உணர்ந்த எங்களை விடவொண்ணுமோ? என்றுமாம்.

(அறியாத) அநவதாநம். (பிள்ளைகள்) அஜ்ஞர். (அன்பு) தவிரவொண்ணுதாசையாய் ப்ரக்ருதி. ப்ரக்ருதி உபாயபூதையாகிலிறே தப்பாவது; இம்மூன்றும் குற்றமாக நினைக்க விரகில்லை. 6. "மயா ப்ரமாதாத் ப்ரணயேந வாபி". (அன்பினு

A திருவாய் 5-7-1, B திருமாலை 25.

லுன்தன்னைச் சிறுபேரழைத்தனவும் சீறியருளாதே) "நாராயணன்" (1) என்று, கோவிந்தாபி₄ஷேகம் பண்ணிப் பூர்ணனுயிருக்கிற என்னை, சிறு பேர் சொன்னீர் கோளேயென்ன; 'நாராயணனென்கை குற்றமோ?' என்னில், நீர்மை ஸம்பாதி₃க்கப் பிறந்தவிடத்திலே மேன்மையைச் சொல்லுகை குற்றமன்றே? அர்ஜுனனப்போலே பொறுத்கொள்ளுகிறார்கள். "ஒரு படுக்கையிலேயிருந்து 'கால்தாக்கிற்று கை தாக்கிற்று' என்று குற்றம் கொள்ளுவாரைப்போலே அன்புடையாரைக் குற்றம் கொள்ளப்போமோ? பொறுத்தருளாய்" என்கிறார்கள்.

(இறைவா) உன் ஸ்வரூபம் பெறவேண்டாவோ? (நீ தாராய்) ஸ்வீகாரத்தில் செய்த்வற்றையும் நீ செய்து, அநுதாபமும் நின்தலையிலே ஆகவேணும். 1. "ஏகம்" என்றபடி செய்தருளாய். (ஒழிக்க ஒழியாது) நன்மையுண்டாகிலன்றே பழியிட்டு விடலாவதென்றுமாம். (சீறியருளாதே) உபாயமென்று நினையாதே ப்ரக்ருதிவ்ருத்தி யென்று கொள்ளவேணும். இத்தலை பற்றும் பற்றடைய சீற்றத்துக்கு விஷயம். இத்தலைக்குக் குறையும் அத்தலைக்கு ரக்ஷையும் ஸ்வரூப்ரயுக்தம். (இறைவா) தன் கைகால் தப்பச்செய்ததென்று பொடிவாருண்டோ? (நீ தாராய்) விலக்குகைக் காளில்லை. நீ தருமித்தனை. 28.

ஸ்வாபதே₂ஸ்வ்யாக்₃யானம் — இருபத்தெட்டாம்பாட்டு

அவ:— இருபத்தெட்டாம் பாட்டு. (கறவைகள் இத்யாதி₃) முதற்பாட்டில் ஸங்க்₃ரஹேண சொன்ன ப்ராப்யப்ராபகங்களிரண்டையும் மேலிரண்டுபாட்டாலே விவரிப்பதாக, இப்பாட்டில் ப்ராபக ஸ்வரூபத்தை விவரிக்கிறார்கள்.

வ்யா:— (கறவைகள் இத்யாதி₃) ஜ்ஞானஹீநரான ஸம்ஸாரிகளை அநுவர்த்தித்து ஸம்ஸாரத்தை ப்ராப்யமாகப்பற்றி தே₃ஹபோஷணைகபரராயிருந்தோம்; இதிறே உன்னை நாங்கள் பற்றுகைக்கு அநுஷ்டி₂த்த கர்மயோக₃ம். (அறிவொன்றுமில்லாத) ஜ்ஞானமும் ஜ்ஞான விஸ்ரஸ்தமான ப₄க்தியோக₃மும் இல்லாத. (ஆய்க்குலம்) உபாயாந்தரங்களில்லாமையால் தே₃ஹபோஷமாகாத குலத்திலே பிறந்தவர்கள் நாங்கள். இத்தால் — ஜந்மவ்ருத்தஜ்ஞானங்களாலுண்டான நிகர்ஷம் சொல்லுகிறது. 'ஆகில், புருஷார்த்த₂த்தை இழக்குமித்தனையன்றே' என்ன; புண்யமில்லாதாரன்றே இழப்பதென்ன; உங்கள் புண்யம் ஏதென்ன, — (உன்தன்னை இத்யாதி₃) எங்கள் குலத்திலே அவதரித்த உன்னையே புண்ணியமாக அநந்யஸாத₄நரான யாம் உடையோம். (குறைவொன்றுமில்லாத) எங்கள் அபூர்த்தி ஆராயும்படியாயோ உன்னுடைய பூர்த்தியிருப்பது? ஸர்வநிரபேக்ஷனன்றே நீ என்று கருத்து. (கறவைகள் இத்யாதி₃) இவ்வளவும் தங்களுடைய ஆகிஞ்சந்யத்தையும் அநந்யக₃தித்வத்தையும் உபாயத்தினுடைய நைரபேக்ஷ்யத்தையும் சொன்னார்களாய்த்து. "குறைவாளர்க்கு நிறைவாளர் குறை தீர்க்கவேணுமென்கிற நிர்ப்ப₃ந்த₄மென்?" என்ன; அதுவோ? (கோவிந்தா உன்தன்னோடு உறவு) எங்கள் குலத்தில் பிறந்த அஸரண்ய ஸரண்யனை உன்தன்னோடு அநந்யஸரணரான எங்களுக்கு உண்டான ஸ்வஸ்வாமிப₄ாவஸம்ப₃ந்த₄ நிர்ப்ப₃ந்த₄மென்ன; அதுவோ? ஒருகுடநீரோடே போகிறதென்ன, (உறவேல் நமக்கு இங்கு ஒழிக்க ஒழியாது) உன்னோடு நமக்கு உண்டான உறவை ஆராய்ந்து பார்த்தால், ஸோபாதி₄

திருப்பாவை — இருபத்தொன்பதாம்பாட்டு

சிற்றஞ் சிறுகாலே வந்துன்னைச் சேவித்துன்
பொற்ற மரையடியே போற்றும் பொருள்கேளாய்
பெற்றம்மேய்த் துண்ணும் குலத்திற் பிறந்த(து)நீ
குற்றேவ லெங்களைக் கொள்ளாமற் போகாது
இற்றைப் பறைகொள்வா னன்றுகாண் கோவிந்தா
எற்றைக்கு மேழேழ் பிறவிக்கு முன்றன்னே
டுற்றோமே யாவோ முனக்கேநா மாட்செய்வோம்
மற்றைநங் காமங்கள் மாற்றேலோ ரெம்பாவாய்.

பதஶுரை— கோவிந்தா—கண்ணபிரானே! சிற்றஞ்சிறுகாலே—உஷ:காலத்திலே வந்து — (இங்கு) வந்து, உன்னை சேவித்து—உன்னை வணங்கி, உன் பொன் தாமரை அடி போற்றும் பொருள்—உனது அழகிய திருவடித்தாமரைகளை மங்களாஶாஸநம் செய்ஞுவதற்குப் பூலனை, கேளாய் — கேட்டருளவேணும்; பெற்றம் மேய்த்து உண்ணும் குலத்தில் பிறந்த நீ — பசுக்களை மேய்த்துண்ணும் இடைக்குலத்தில் பிறந்த நீ, எங்களை — எங்களிடத்தில், குற்றேவல்—அந்தரங்க கைங்கர்யத்தை, கொள்ளாமல் போகாது — திருவுள்ளம் பற்ருதொழியவொண்ணாது; இற்றைப் பறைகொள்வான் அன்றுகாண் — இன்று (கொடுக்கப்படுகிற இப்) பறையைப் பெற்றுக்கொள்வதற்காக நாங்கள் வந்தோமல்லோம்; எற்றைக்கும் — காலமுள்ளவளவும், ஏழ் ஏழ் பிறவிக்கும் — எவ்வளவு பிறவி எடுத்தபோதிலும், உன்தன்னோடு—உன்னோடே, உற்ரோமே ஆவோம் — உறவுடையவர்களாகக்கடவோம்; உனக்கே — உனக்கு மாத்திரமே, நாம் — நாங்கள், ஆள் செய்வோம் — அடிமை செய்யக்கடவோம்; நம்—எங்களுடைய, மற்றை காமங்கள் — இதர விஷய விருப்பங்களை, மாற்று — தவிர்த்தருளவேணும்.

ஸ்வா:-கமன்றிகே, நம்மிருவருடையவும் ஸ்வரூபமாயிருக்கையாலே அதுதானும் நித்யமாகையாலே ஸர்வஶக்தியான உன்னாலும் போக்கவொண்ணாது, ப்ராக்ருதரான நம்மாலும் போக்கவொண்ணாது, க்ருதஸங்கேதிகளான இருவராலும் போக்கவொண்ணாது, A இருள்தரு மாஞாலமான இத்தேஶத்தாலும் போக்கவொண்ணாது. 'ஸம்பந்தஜ்ஞாநரூபமாகையாலே இதுக்கு விஸ்ம்ருதி இங்கே வரக்கூடாதோ?' என்ன; B "பிறந்தபின் மறந்திலேன்" என்கையாலே வரக்கூடாது: 'ஆனாலும் யதேஶாபாஸநமன்ரோ பூலம்? நீங்கள் நம்மைச் சிறுபேரிட்டழைத்திகோலே, உங்கள் சிறுமை தீரும்படி எங்ஙனே?' என்ன, — (அறியாத இத்யாதி) அறியாமையாலும் பால்யத்தாலும் ப்ரேமத்தாலும் உன்னைச் சிறுபேராலே அழைத்தோமேயாகிலும் ஸர்வஜ்ஞனாய், ஸர்வஸ்மாத்பரனாய், ப்ரேமபரவஶனான நீ சீறியருளாதொழிய வேணும். (இறைவா — சீறியருளாதே) சீறினால் வரும் அநர்த்தம் உன்னதன்ரோ? ஆகையால், (நீ தாராய்) அத்தலையில் குறைவின்றியிலேயொழிய அமையுமிறே. பேற்றுக்கு அத்ஶவேஷமேயிறே இத்தலைக்கு வேண்டுவது; பேற்றின் கநத்துக்குக் கீழ் விளைந்ததெல்லாம் அத்ஶவேஷமாத்ரமாயிருக்குமிறே. (இறைவா) C வாளரிறையை நினைத்தன்று, D ஆய்க்குலமாய்வந்து தோன்றின நம்மிறை. 28.

A திருவாய் 10 —6—1. B திருச்சந்த 64 C திருவாய் 1-5-1, D திருவிருத்தம் 61.

மூவாயிரப்படி—இருபத்தொன்பதாம் பாட்டு

அவ:— இருபத்தொன்பதாம்பாட்டு. a கீழ்ப்பாட்டிலே உபாயஸ்வரூபத்தைச் சொல்லி, தங்கள் உத்₃தே₃ஶ்யம் கைங்கர்யமென்று ப்ரப₃ந்த₄தாத்பர்யத்தைச் சொல்லி முடிக்கிறார்கள்—இதில்: b ப்ராப்யருசியையும் b_2 ப்ராப்யந்தான் இன்னதென்னுமிடத்தையும், அத்தை b_3 அவனே தரவேணுமென்னுமிடத்தையும் தங்கள் b_4 ப்ராப்யத்வரையையும் அறிவிக்கிறார்கள். c திருவாய்மொழியில் A எம்மாவீட்டிலே—ப்ராப்யத்தை நிஷ்கர்ஷித்து, அதில் c_2 சரமத₃ஶ்லோகமான அர்த்த₂த்தை B நெடுமாற்கடிமையிலே அநுப₄விக்கையாலே முடித்தது; இதில்—முந்துற சரமத₃ஶ்லோகமான B நெடுமாற்கடிமையில் அர்த்த₂த்தை அனுப₄வித்து, அது நிலைநிற்கைக்காகவும் அத்தைக் c_3 காத்தூட்டுகைக்காகவும் A எம்மாவீட்டில் அர்த்த₂த்தோடே தலைக்கட்டுகிறது.

வ்யா:— d (சிற்றஞ் சிறுகாலே) e சிறு பெண்கள் எழுந்திருக்கவொண்ணாத குளிர்போதிலே; f 1. "ப்₃ராஹ்மே முஹூர்த்தே சோத்த₂ாய சிந்தயேத₃ாத்மநோ ஹிதம்" என்று ஸத்வம் தலையெடுத்த காலத்திலே; g அநாத்₃யஜ்ஞாநாந்த₄காரம் நீங்கி ப₄க₃வத்₃விஷயம் வெளிச்செறித்(ந்)த காலத்திலென்றுமாம். h C "நார

பெ. அ. இருபத்தொன்பதாம் பாட்டு. (சிற்றஞ்சிறுகாலே இத்யாதி₃) a "உனக்கே நாமாட்செய்வோம்" என்றதைக் கடாக்ஷித்து வ்ருத்தவர்த்திஷ்யமாண கத₂நமுகே₂ந கீழ்ப்பாட்டோடே ஸங்க₃தியிடுகிறார் (கீழ் இத்யாதி₃) b ஸ்ரோதாக்களுக்கும் பு₃த்₃தி₄ ஸௌகர்யார்த்த₂மாக ப்ரமேயத்தை அருளிச்செய்கிறார் (ப்ராப்யேத்யாதி₃) b "போற்றும் பொருள்கேளாய்" என்றதைப்பற்ற (ப்ராப்யருசியையும்) என்றது; b_2 "எற்றைக்கும்" இத்யாதி₃யைக் தணிசித்து அருளிச்செய்கிறார் (ப்ராப்யந்தான் இத்யாதி₃) b_3 (அவனேதரவேணும்) என்றது — "குற்றேவலெங்களைக் கொள்ளாமற்போகாது" என்றதைக் கடாக்ஷித்து. b_4 (ப்ராப்யத்வரையையும்) என்றது — "சிற்றம்சிறுகாலேவந்து" என்றதை அவலம்பி₃த்து; தாங்கள் காலமேகருகை த்வரையின்றிக்கே கூடாதிறே யென்று கருத்து. c ஆண்டாள் சரமபர்வத்திலே உற்றிருக்கையாலே இவள் ப்ரப₃ந்த₄த்துக்கும் ஆழ்வார் ப்ரப₃ந்த₄த்துக்குமுள்ள வாசியை அருளிச்செய்கிறார் (திருவாய்மொழியில் இத்யாதி₃) c_3 (காத்தூட்டுகைக்காகவும்) என்றது — பரிபாலித்து மேன்மேலும் ரஸிப்பிக்கைக்காகவும் என்றபடி.

d, e "சிறுகாலே" என்றது — ப்ராத: காலத்திலேயென்றுய், "சிற்றம்" என்றதாலே — அத்யந்தம் ப்ராத: காலமென்றுய், ப₂லிதார்த்த₂த்தை அருளிச்செய்கிறார் (சிறுபெண்கள் இத்யாதி₃) f ஸ்வாபதே₃ஶத்திலே தாத்பர்யாந்தரம் அருளிச்செய்கிறார் (ப்₃ராஹ்மே இத்யாதி₃) g இத்தை விவரிக்கிறார் (அநாதி₃ இத்யாதி₃) h இதுக்கு ஸம்வாத₃ம் அருளிச்செய்கிறார்

சி. அ. இருபத்தொன்பதாம் பாட்டு. (சிற்றஞ்சிறுகாலே) b_2 "உனக்கே நாமாட்செய்வோம்" என்றது ப்ரார்த்த₂னை. b_3 "நங்காமங்கள் மாற்று" என்றது ப்ரார்த்த₂னை. b_4 "சிற்றஞ்சிறுகாலே வந்து" என்கையாலே த்வரை; "கொள்ளாமல் போகாது" என்கையாலே த்வரை சொல்லுகிறது என்றுமாம். c இவள் சரமபர்வத்திலே உற்றிருக்கையாலே இவள் ப்ரப₃ந்த₄த்துக்கும் ஆழ்வார் ப்ரப₃ந்த₄த்துக்குமுள்ள வாசியை அருளிச்செய்கிறார் (திருவாய்மொழியிலித்யாதி₃) c_2 சரமத₃ஶ்லோகமான அர்த்த₂மாவது —பெண்களை எழுப்பின பத்துப்பாட்டில் அர்த்த₂ம். இத்தால் திருவாய்மொழியில் ஏற்றம் சொல்லுகிறது.

A திருவாய் 2-9. B திருவாய் 8-10. C இர—திருவ 81.

ணனைக்கண்டேன்—பகற்கண்டேன்'' என்னக்கடவதிறே. i ''சிற்றஞ் சிறுகாலே'' என்று ஜாதிப்பேச்சு; 'வெட்டவிடியாலே'' என்னுமாபோலே. (வந்து) j சேதநர்க்கு ப₄கா₃வல்லாப₄ம் அவன் வரவாலேயாயிருக்க, ''வந்து'' என்றது j₁ ஆதா₃ராதிஸ்ரயத்தாலே. k இதுதான் அங்குத்தைக்கு மிகையாயிறே யிருப்பது. எங்ஙனே? என்னில் — 1. ''பத்₃ப₄யாமபி₄கா₃மாச் சைவ ஸ்நேஹஸந்த₃ர்ஸநேந ச'' என்று நீ l இருந்த இடத்தே வந்து; 10 ராகா₃ம் க்ரமப்ராப்தி ஸஹியாதிறே. n (உன்னைச் சேவித்து) o பலம் வேண்டாதே ஸாத₄நகாலத்திலே ரஸிக்கும் உன்னைச்சேவித்து. 2. ''ஸ்ரஸ்ரகா₃ம் கர்த்தும்'' என்றும், A ''பலமுந்துசீர்'' என்றுமிறே இருப்பது. p அதுக்குமேலே ஓரஞ்சலியையும் உண்டறுக்கமாட்டாத உன்னைச் சேவித்து. p_3 B எழுதும் என்னும் இது மிகையான உன்னைச் சேவித்து. q ஸேவ்யரான நாங்கள் ஸேவகராம்படி அத்தலை இத்தலையாவதே! 3. ''ஸ்ரக்₃ரீவம் நாத₃மிச்ச₂தி'' என்னக்கடவதிறே.

r (உன் பொற்றுமரை அடியே) மஹார்க்க₄மாய், பே₄க்₃யமுமாய், s ப்ராப்தமுமாயிருந்த திருவடிகளிலே. ''அடியே'' என்கிற அவதா₄ரணத்துக்குக் கருத்து— t 4. ''ஸர்வாத்மநா பர்யநுநீயமாநோ யதா₂ ந ஸௌமித்ரிருபைதி t_4 யோகா₃ம்'' என்

பெ. அ. (நாரணனை இத்யாதி₃) i 'காலத்திலே' என்ன வேண்டியிருக்க, ''காலே'' என்றதுக்கு த்₃ருஷ்டாந்தபூர்வகம் நியாமகம் அருளிச்செய்கிறார் (சிற்றமித்யாதி₃) j_2 'ஆத₃ராதிஸ்ரயத்தாலே' என்றது — திருவேங்கடயாத்ராதி₃களிற்போலே ப்ராப்யமாகையாலே வந்த ஆத₃ராதிஸ்ரயத்தாலே என்றபடி. j, k ப₄கா₃வல்லாப₄ம் அவன் வரவாலேயாயிருக்கை எங்ஙனே? என்ன, அருளிச்செய்கிறார் (இதுதான் இத்யாதி₃) l (இருந்த விடத்தே வந்து) என்ற அநந்தரம் ''என்கை'' என்று ஸேஷம். n, o, p ''உன்னை'' என்றதுக்கு அர்த்த₃ாந்தரம் அருளிச்செய்கிறார் (அதுக்குமேலே இத்யாதி₃) p 'அதுக்குமேலே' என்றது — தாங்கள் வந்ததுக்குமேலே என்றபடி. p, p_2 அஞ்சலியை உண்டறுக்க மாட்டாமையை ஸம்வாத₃பூர்வகம் விவரிக்கிறார் (எழுதும் இத்யாதி₃) இவ்வாக்யத்துக்கு, B ''தொழுதுமாமலர்நீர் சுடர்தூபங்கொண்டு எழுதும்'' என்ற இடத்தில், ''தொழுது'' என்றதிலே நோக்கு. q ''சேவித்து உன்பொற்றுமரை'' என்று—தாங்கள் ஸேவிக்கை அவத்₃யமாகச் சொல்லுகைக்குத் தாத்பர்யம் அருளிச்செய்கிறார் (ஸேவ்யரான இத்யாதி₃)

r, s ''உன்னைச்சேவித்துப் பொற்றுமரையடி'' என்ன அமைந்திருக்க, ''உன்'' என்றதன் ப₄லிதார்த்த₂ம் (ப்ராப்தமுமாயிருந்த) என்றது. t ஸர்வப்ரகாரத்தாலும் பெருமாள், ''யௌவராஜ்யத்தை அடையும்'' என்று இளையபெருமாளைக் குறித்து அருளிச்செய்தாலும் அதுக்கு ஆளாகாதாப்போலே என்று அருளிச்செய்கிறார் (ஸர்வாத்மநா

பெ. அ. i ''சிறுகாலே'' என்னுதே ''சிற்றஞ்சிறுகாலே'' என்றது ஜாதிப்பேச்சென்றபடி. m ō. ''தந்தஸ்ய ஸத்₃ருஸம் ப₄வேத்'' என்றிறாதே வரலாமோ? என்ன அருளிச்செய்கிறார் (ராகா₃ம் க்ரம ப்ராப்தியித்யாதி₃) p (அதுக்குமேலே) வந்ததுக்குமேலே. n, o, p, q ''உன்னை'' என்றதுக்கு மூன்று தாத்பர்யம். t ''ஸர்வாத்மநா'' என்றது — ஸர்வ ப்ரகாரத்தாலும்

A திருவாய் 2-8-4, B திருவாய் 9-3-9.

ஜனாபோலே t_3 வேறெருரு ப்ரயோஜனத்துக்கு ஆளாகாதிருக்கை. u (போற்றும்) ஈ போற்றுகையாவது-ஸ்வாமிக்கு மங்க₃ளாஶாஸநம் பண்ணுகை. w (பொருள் கேளாய்) முன்பே இருக்கிறவனே "கேளாய்" என்பானென்? என்னில்—இவர்களுடைய ஸ்தநாத்₃யவயவங்களிலே அந்யபரனையிருக்கையாலே 'உன் பராக்கை விட்டு நாங்கள் சொல்லுகிற வார்த்தையைக் கேளாய்' என்கிறார்கள்.

x அவனும், இவர்கள் பேச்சன்றே? என்று கேட்டான்; y (பெற்றம் மேய்த்து இத்யாதி₃) z என்றும் ஶாஸ்த்ரத்திலே கேட்டுப்போகக்கடவ நீசசுக்கள் மேய்த்து உண்ணக்கடவதான இடைச்சாதியிலே வந்து பிறந்து, எங்களை ஆட்கொள்ளாதொழியவொண்ணாது, (பெற்றம் மேய்த்துண்ணும் குலம்) a ரக்ஷ்யமான பசுக்கள் வயிறு நிறைந்தாலல்லது தாங்களுண்ணாத குலம்; உன் பிறப்பாலும் எங்கள் கார்யம் தலைக்கட்டவேணுமென்று கருத்து.

b (குற்றேவல்) c அந்தரங்க₃ வ்ருத்தி; d அன்றிக்கே, உசிதமான அடிமை என்றுமாம். e (எங்களை) f பசுக்களுக்கு வேறு ரக்ஷகருண்டானாலும் உன்னையொழிய ரக்ஷகரில்லாத எங்களை. g (கொள்ளாமற் போகாது) உனக்கு விஹிதம். h ஸப்₃த₃ாதி₃ விஷயங்களே தா₄ரகமாயிருக்கிற எங்களை, உன் வடிவழகைக் காட்டி, A " உண்ணுஞ் சோறு பருகு நீர் தின்னும் வெற்றிலையுமெல்லாம் கண்ணன் எம்பெருமான்" என்னும்படிபண்ணி ஸ்வரூபாநுரூபமான கைங்கர்யம் தாராதே போகை உனக்குப் h_3 போருமோ? என்கை. B "உண்டிட்டா னினியுண்டொழியாய்" என்கிறார்கள்.

ஜ. அ. இத்யாதி₃) t_3 யோக₃ம் — அலப்₄யலாப₄மான யௌவராஜ்யத்தை என்றபடி. 1 "அலப்₄யலாபோ₄ யோக₃: ஸ்யாத் க்ஷேமம் தத்பரிரக்ஷணம்" என்று ப்ரஸித்₃த₄ம்.

e, f, g, h "எங்களை" என்றதுக்கு அர்த்த₂ாந்தரம் காட்டாநின்றுகொண்டு "கொள்ளாமல் போகாது" என்றத்தை விவரிக்கிறார் (ஸப்த₃ாதி₃ இத்யாதி₃) h_3 போருமோ — தருமோ?

சி. அ. பெருமாள் ராஜ்யயோக₃த்தையடையுமென்னச் செய்தேயும் இளையபெருமாள் ஐஶ்வர்ய யோக₃த்தையடையாதாப்போலே இவர்களும் என்றபடி. t_3 (வேறெருரு ப்ரயோஜனத்துக்கு ஆளாகாதிருக்கை) என்றது — திருவடிகளில் பே₄க்₃யதையாலே வேறெருரு புருஷார்த்தத்துக்கு ஆளாகாதிருக்கை என்றபடி. u, v, w "போற்றும் பொருள் கேளாய்" "ங்க₃ளாஶாஸனத்தைப் பண்ணி அர்த்தி₂க்கிற ப்ரயோஜனத்தைக் கேட்டருளாய்" என்று ஸப்₃த₃ார்த்த₂ம். x அவயவங்களிலே ஸக்தனானவன் "கேளாய்" என்றால் கேட்குமோ? என்ன, 2. "மது₄ரா மது₄ராலாபா:" என்று இவர்கள் வார்த்தையும் பே₄க்₃யமாகையாலே கேட்குமென்கிறார் (அவனுமிவர்கள் பேச்சித்யாதி₃) y, z, a "பெற்றம் மேய்த்துண்ணும் குலத்தில் பிறந்து" என்றதுக்கு இரண்டு தாத்பர்யம். ஸுலப₄னென்னுதல். ரக்ஷகனானவன் என்னுதல். b, c, d "குற்றேவல்" என்றதுக்கு இரண்டு பொருள். e, f, h "எங்களை" இத்யாதி₃க்கு உன்னையொழிய வேறெருரு ரக்ஷகரில்லாத த₃யநீயரான எங்களை த₃யாளுவான நீ ரக்ஷிக்கை விஹிதமென்னுதல்; அன்றிக்கே ஸப்₃த₃ாதி₃ விஷயங்களே தா₄ரக

---

1 திருவாய் 6-7-1. B திருவாய் 10-10-6.

i இவர்கள் சொன்ன ஸமநந்தரத்திலே, 'நீங்கள் நோன்புக்கு அங்கமான வற்றைக் கொண்டுபோமித்தனையல்லது, வேறு நீங்கள் அடிமையென்று சொல்லுகிறவையெல்லாம் என்?' என்று பறையைக் கொடுக்கப்புக—(இற்றைப் பறைகொள்வானன்றுகாண்) இன்று ஒரு ப்ரயோஜநங் கொண்டுபோக வந்தோ மல்லோங்காண் நாங்கள்; k யதாஶ்ருதக்ராஹியாயிருந்தாய் நீ. l(கோவிந்தா) m டாவஜ்ஞாநமில்லாத ஜன்மமிறே. n அபிதாவ்ருத்தியைப் போக்கி, தாத்பர்யவ்ருத்தி அறியாத ஜன்மமிறே.

"ஆனால், o நீங்கள் சொல்லுகிறது என்?" என்ன, p (எற்றைக்கும் இத்யாதி) q 1. "ந காலஸ்ததர வை ப்ரபு:" என்கிற திருநாட்டிலேயிருக்கவுமாம்; ஆஸ்ரிதஸஹாதீயனுய்க் கொண்டு ஸம்ஸாரத்திலே பிறக்கவுமாம்; q2 அதில் ஒரு நிர்ப்பந்தமில்லை; q3 காட்டிலும் படைவீட்டிலும் ஒக்க இளையபெருமாள் அடிமை செய்தாற்போலேயாகவேணும், r 2. "தேவத்வே தேவதேஹேயம் மநுஷ்யத்வே ச மாநுஷீ" என்னக்கடவதிறே.

s (உன்தன்னோடுற்றோமேயாவோம்) t நீ ஸ்வாமியாகவும் நாங்கள் ஸ்வம் மாகவும், இஸ்ஸம்பந்தம் என்றும் ஸித்திக்குமித்தனையே எங்களுக்கு

பெ. அ. i "பறைகொள்வானன்றுகாண்" என்றதுக்கு ப்ரஸக்தி அருளிச்செய்கிறார் (இவர்கள் இத்யாதி) j, k 'காண்" என்று சொல்லுகையால் தோன்றுகிற வெறுப்பை அருளிச் செய்கிறார் (யதேவத்யாதி) l, m 8. "கோஷ்டாத்யகோஷ்டபி கோவிந்த:" என்ற நிகண்டுவைப்பற்ற இடையனுக்குப் பேராய், அத்தால் பலிதத்தை அருளிச்செய்கிறார் (டாவஜ்ஞாநம் இத்யாதி) n 'அபிதாவ்ருத்தி' என்று—பதாக்தியைச் சொல்லுகிறது.

o (நீங்கள் சொல்லுகிறது என்னென்ன) என்றது — எப்படிப்பட்ட குற்றேவலென்றபடி. p, q "எற்றைக்கும் — என்றைக்கும், ஏழேழ் பிறவிக்கும்—உன்னுடைய எவ்வவதாரத்துக்கும்" என்று ஸப்தார்த்தமும் திருவுள்ளம்பற்றி, பலிதார்த்தமும் அருளிச்செய்கிறார் (நகாலேத்யாதி) q2 (அதில் ஒரு நிர்ப்பந்தமில்லை) என்றது — நீ தேவனும்போது நாங்களும் அப்படி யேயாட், மநுஷ்யனும்போது நாங்களும் மநுஷ்யராக என்றபடி. r இப்படி ஆன பேருண்டோ? என்ன அருளிச்செய்கிறார் (தேவத்வே இத்யாதி)

s, t, u "உற்றோம்" என்றதுக்கு ஸ்வஸ்வாமிபாவ ஸம்பந்தமாகக் கீழருளிச்செய்து, உறவுஞ்ஞாநமாக அர்த்தாந்தரம் அருளிச்செய்கிறார் (ஒருறவை இத்யாதி)

சி. அ. மாயிருக்கிற எங்களை என்னுதல். n (அபிதாநவ்ருத்தியைப் போக்கி) என்றது — இடைச்சாகையாலே ஸாப்தமாக மேலெழத்தோற்றின அர்த்தமொழிய, தாத்பர்யமறியாமை என்றபடி. p "எற்றைக்கும்" என்றது — நித்யமான பரமபதத்தில் செய்கிற ஸர்வவிதகைங்கர்யமும் சொல்லுகிறது. q3, s, t "உன்தன்னோடுற்றோமேயாவோம்" என்றதுக்கு இரண்டு பொருள்:— t உன்னோடு ஸம்பந்தமுடையோமாவோம் என்னுதல். q3 அன்றிக்கே

வேண்டுவது என்கிறார்கள். 1. ''ப₄க்தாநாத்ம ஶரீரவத்'' என்னக்கடவதிறே. u ஓர் உறவைக்குறித்து அதுவாகவேணுமென்னுதொழிந்தது எல்லாவுறவும் நீயேயாக வேணுமென்கைக்காக. 2. ''மாதா பிதா ப்₄ராதா நிவாஸ: ஶரணம் ஸுஹ்ருத்'' 3. ''க்ருஷ்ணஶ்ரயா: க்ருஷ்ணபா₃லா: க்ருஷ்ணநாத்₂ாஶ்ச பாண்ட₃வா:'' A ''சேலேய் கண்ணியரும் பெருஞ்செல்வமும் நன்மக்களும்'' என்னக்கடவதிறே.

'மற்றும் வேண்டுவது என்?' என்ன, v (உனக்கே நாம் ஆட்செய்வோம்) w ஸம்ப₃ந்த₄ம் ஒத்திருக்கச்செய்தே, ஶ்ரீப₄ரதாழ்வானைப்போலே விஶ்லேஷித்திருக்கையன்றியே இளையபெருமானைப்போலே அடிமை செய்யவேணும். ''உனக்கே'' என்கிற அவதா₄ரணத்துக்குக் கருத்து—நீ உகந்த அடிமை செய்வோம்; உனக்கும் எங்களுக்குமாயிருக்கிற இருப்பைத் தவிர்ந்து, B ''தனக்கேயாக எனைக் கொள்ளுமீதே'' என்னுமாபோலே நீ உகந்த அடிமையாகவேணும். அஹங்காரகர்ப்ப₄மான அடிமை புருஷார்த்த₃மாகாது.

x (மற்றை நம் காமங்கள் மாற்று) y நாங்கள் ''எங்களுக்கு'' என்றிருக்குமதுவும், நீயும் ''இவர்களுக்கு'' என்றிருக்குமதுவும், இவை இரண்டும்—விரோதி₄யாகையாலே அத்தைத் தவிர்த்துத் தரவேணும் என்கிறார்கள். 29.

பெ. அ. v, w ''உனக்கே'' என்றவிடத்தில் ஏவகாரார்த்த₃ம் அருளிச்செய்கிறார் (ஸம்ப₃ந்த₄ம் இத்யாதி₃)

x, y ''மற்றை நங்காமங்கள்'' என்றது — மற்றை எங்களுடைய புருஷார்த்த₃ங்களென்றுய், அதுதானும் நீ எங்களுக்கென்று நினைத்திருக்கும் எங்கள் கார்யமென்றுய், தாத்பர்யம் அருளிச்செய்கிறார் (நாங்கள் இத்யாதி₃) 'நாங்கள் எங்களுக்கென்று இருக்குமதுவும்' என்றது — த்₃ருஷ்டாந்தார்த்த₃ம். 29.

சி. அ. உறுதல்—பொருந்துதலாய் விஶ்லேஷியாதே இளையபெருமாளைப்போலே அடிமைசெய்யவேணுமென்னுதல். v, x ''உனக்கே நாமாட்செய்வோம் மற்றை நங்காமங்கள் மாற்று'' என்றது அந்வயவ்யதிரேகங்களாலே ப்ரார்த்த₃னை. அதாவது — 'உனக்கே' என்கையால் உனக்கே ஆட்செய்யவேணுமென்றபடி; ''மற்றைநங்காமங்கள்'' என்றது — அந்தக் கைங்கர்யத்துக்கு விரோதி₄யான ஸ்வார்த்த₃தையைப் போக்கவேணும் என்று ப்ரார்த்தி₃க்கிறது. x, y ''நங்காமங்கள்'' என்று ஈஶ்வரனையும் கூட்டியருளிச்செய்ததுக்குத் தாத்பர்யமருளிச் செய்கிறார் (நாங்கள் எங்களுக்கு இத்யாதி₃) 29.

A திருவாய் 5-1-8, B திருவாய் 2-9-4.

ஆருயிரப்படி — இருபத்தொன்பதாம் பாட்டு

அவ:— இருபத்தொன்பதாம்பாட்டு. ''நமக்கே பறைதருவான் (1) என்று ஸங்க்ரஹண முதல் சொன்ன ப்ராப்யப்ராபகங்களிரண்டையும் இந்த இரண்டு பாட்டாலும் விவரிக்கிறார்களாய், பலந்தருகிற ப்ராபகத்தை நிர்ணயித்து ஸ்வீகரித்தார்கள் கீழிற்பாட்டில்; அதில் ''பறை'' (1) என்று சொன்ன ப்ராப்யத்தை நிஷ்கர்ஷித்து ப்ரார்த்திக்கிறார்கள் — இப்பாட்டில். ''பறை'' (1) என்று ப்ராப்யத்தை முற்படச்சொல்லி, ''தருவான்'' (1) என்றுகொண்டு ஸாதநரூபத்தை அநந்தரம் சொல்லிற்று — ப்ராப்ய ருசியடியாக ப்ராபகாந்வேஷணம் பண்ணவேண்டுகையாலே. அவ்விடத்தில் ப்ராப்யஹித்ஸாதியில் ப்ராபகஸ்வீகாரஸாபேக்ஷதை உண்டாகையாலே உபாயஸ்வீகாரம் பண்ணிப் பல ப்ரார்த்தநம் பண்ணுகிறது இங்கு. ''நமக்கே'' (1) என்கிற அதிகாரிஸ்வரூபம் இரண்டு பாட்டாலும் விஶதமாகிறது. அநந்யபோக்யத்வமும் அநந்யோபாயத்வமும் அநந்யார்ஹத்வமும் ஸ்வரூபமிறே. ''செல்வச் சிறுமீர்காள்'' (1) ''வையத்து வாழ்வீர்காள் நாமும்'' (2) ''நாங்கள் நம்பாவைக்கு''(3) ''நாங்களும் மார்கழி நீராட'' (4) ''எம்மை நீராட்டு'' (20) ''யாம் வந்தோம்'' (24) ''பாம் பெறு சம்மானம்'' (27) ''புண்ணியம் நாமுடையோம்'' (28) — நாங்களென்பது எங்களுடையது என்பதாய்ப் பாட்டுத்தோறும் தங்களையுறைத்துக்காட்டிற்று — ஸ்வரூபத்திலும் உபாயத்திலும் பலத்திலும் தாங்களிருக்குமிருப்பை வெளியிடாநின்றுகொண்டு. ''நமக்கே'' (1) என்ற பதத்தை விவரித்தபடியிறே. ''தூயோமாய் வந்து நாம்'' (5) என்றும், ''தூயோமாய் வந்தோம்'' (16) என்றும் இரண்டு ஶுத்தி புண்டிறே கீழ்ச்சொல்லிற்று; அதில் ஹித்தோபாய பரிக்ரஹம் பண்ணினவர்களுக்கு ஸாத்யோபாயத்தில் ருசிவாஸனையாதல், ஸ்வீகாரத்தில் உபாயபுத்தி பாதல் ஸ்பர்ஶிக்கில் ஶவஸ்பருஷ்டம்போலேயும் நீசஸ்பர்ஶம்போலேயும் இருப்பதொன்றிறே; அவை இரண்டு அஶுத்தியுமில்லையென்னுமிடம் கீழ்ப்பாட்டிலே வெளியிட்டார்கள்; ஸாத்யத்திலும் வந்தால் ப்ரயோஜநாந்தர ஸங்கம் நடப்புதல், அகவாயிலே போக்த்ருத்வபுத்தி நடப்புதல் செய்தால் விஷபோஜநம் போலேயும் உச்சிஷ்டாஶநம்போலேயும் வருவதொரு அஶுத்தியுண்டிறே; அந்த எச்சிலறுத்து போகஶுத்தி பண்ணுகிறார்கள் இப்பாட்டில். A''ஆசற்றார் — மாசற்றார்'' என்கிறது— இரண்டு தோஷமுமற்றவர்களையிறே. 1.''ஸர்வதர்மாந்--ஸர்வகாமாம்ஶ்ச''B''தொழுமின் தூயமனத்தராய்''. உபாயபரிக்ரஹத்தினுடைய அநந்தரத்திலே ருசிகார்யமாய் வருவதொரு பேற்றில் த்வரையும், ஸாத்யத்திலே ஸாதநபுத்தி நடக்கும்படியான கலக்கமும், ஆர்த்தியை ஆவிஷ்கரித்து வலிக்கையும். ப்ராப்யாந்தரஶ்ரத்தை குலைக்கும், புருஷார்த்தத்தில் அவிச்சிந்நமான பாரிப்பும், ப்ராப்யம் ஸபலமாம்படியான அபேக்ஷையும் இவை ஆறும் பரிக்ரஹித்த உபாயபலமாய் விளையுமவையிறே; காலமே கண்ணுறங்காதேவந்து துயிலும்படியான த்வரையும், போற்றுதற்குப் பொருள் தேடும்படியான கலக்கமும், தங்கள்

A திருமாலை 22, B திருவாய் 3-6-7.

வடிவைக்காட்டி வரிக்கும்படியான ஆர்த்தியும், நோன்பை வ்யாஜமாக்கி வேண்டினவற்றில் அபேக்ஷை அற்றபடியும், பரிபூர்ணமாகக் கைங்கர்யத்தை அபேக்ஷிக்கிறபடியையும், அதில் கரையறுத்துத்தரவேணுமென்று சொல்லும்படி ப்ரார்த்தி₃க்கிறபடியையும் காட்டி, "நாமுடையோம்" (28) என்ற புண்யத்தினுடைய ப₂லங்களை வெளியிடுகிறார்கள். கீழ்ச்சொன்ன உபாயத்துக்கு வேறொன்றைப் ப₂லமாக்குகையாவது-மானிக்கத்தையிட்டுத் தவிடு கொள்வாரைப்போலேயிறே. அந்த உபாயத்துக்கு உபாயாந்தர நிவ்ருத்திபோலே ஸகலப₂லஸாத₄ாரணமென்று விரோதி₄யான ப₂லத்தை அபேக்ஷிக்கலாகாதிறே; ஸ்வரூபானுரூபமான ப₂லத்தில் தங்களுடைய அபி₄நிவேஶத்தை அறிவிக்கவேணுமென்று ஶ்ருதிஶதஶிரஸ்ஸித்₃த₄மாய், கருத்தறியும் A "மூதுவர்" கைப்பட்டுக்கிடக்குமதாய், கருந்தறையில் வாஸனையாலே அவர்கள் பிறந்தவிடத்தில் அபேக்ஷிக்குமதாய், அவர்களோடொத்த ப்ராப்தியை உணர்ந்தவர்கள் பாரிக்குமதாய், ப₄க₃வத₃நந்யார்ஹஶேஷமான வேஷத்துக்கு அத்யந்தமநுரூபமாய், ஈஶ்வரனுடைய முக₄விகாஸத்துக்கு ஹேதுவாயிருந்துள்ள பரமப்ராப்யத்தை, ப்ரப₄ந்த₄ நிக₃மநம்பண்ணுகையாலே எல்லார்க்கும் தெரியும்படி வெளியிடவேண்டுகையாலே, "நாட்டார் இசைகைக்கு 'நோன்பு' என்று ஒன்றை வ்யாஜீகரித்துப் புகுந்தோமித்தனை; எங்களுக்கு உத்₃தே₃ஶ்யம் உன்திருவடிகளிலே நித்யகைங்கர்யம்" என்று ப்ராப்ய நிஷ்கர்ஷம் பண்ணுகிறார்கள். B "எம்மாவீட்டி"லர்த்த₂த்தோடே தலைக்கட்டுகிறது. B எம்மாவீட்டிலே ப்ராப்யத்தை நிஷ்கர்ஷித்து, C ஒழிவில் காலத்திலே ப்ரார்த்தி₃த்து, அதுதன்னுடைய எல்லைநிலமான ப₄க₃வதாநுப₄வத்தை D "நாளும் வாய்க்க" என்று E நெடுமாற்கடிமையிலே ப்ரார்த்தி₃த்தார் — ஆழ்வார்; அவரிற்காட்டில் இவர்களுக்குள்ள வாசி;— "நீராடப்போதுவீர்"(1) "எல்லாரும் போந்தாரோ" (15) என்று-புருஷார்த்த₂த்தில் சரமாவதி₄யிலே முதலடியிலே நின்று, அது நிலைநிற்கைக்காக ப்ராப்ய நிஷ்கர்ஷம்பண்ணி அர்த்தி₃க்கிறார்கள். "ஆவாவென்றுராய்ந்தருள்"(8)"எம்மேல்விழியாவோ" (22) என்று பெண்கள், அக்ரூரன் மநோரதி₂த்தாற்போலே மநோரதி₂த்துக்கொண்டுவந்தபடியே, நாமும் பெரிய ஆத₃ரத்தோடே புறப்பட்டிருந்து, வந்த காரியங்களைச் சொல்லுங்கோளென்று கேட்டு, வேண்டுவனவும் கொடுக்க இசைந்து, பறைகொண்ட காலத்துக்குப் பெறும் ஸம்மானம்பண்ணுவதாக இசைந்து வந்தகாரியம் தலைக்கட்டிவிட்டோம்; திரிய "பறைதாராய்" (28) என்று நின்றார்கள்; "பாடிப்பறைகொண்டு" (27) என்றத்துக்கு மேலேயும் ஒரு பறையுண்டாயிருந்தது; நாம் அது அறிந்திலோம்; நமக்கு இதுவே தெரிந்ததில்லை; மேல்விளையும்படி காண்கிறோம்' என்று பேசாதேயிருந்தான். "எங்கள் த்வரையையும் தலைதடுமாறுன பரிமாற்றத்தையுங்கண்டுவைத்து இதுக்கு ஹ்ருத₃யம் கேட்டிலையீ! எங்கள் நினைவைக் கேளாய்" என்று தொடைதட்டுகிறார்கள். "கீழ்ப்பண்ணின ப்ராபக ஸ்வீகாரம் அஸத்ஸமமாம்படியான ப்ராப்யருசியையும், 'உன்னுலேபேறு' என்று அறுதியிட்டால் நீ

A திருவிருத்தம் 2 B திருவாய் 2-9 C திருவாய் 3-3 D திருவாய் 8-10-8 E திருவாய் 8-10.

வரக்கண்டிருக்கவொண்ணுதபடியிருக்கிற த்வரையையும், எங்கள் ஆற்றுமையின் ஸ்வபாவத்தையுங் கேளாய்'' என்கிறார்கள்.

வ்பா: (சிற்றஞ் சிறுகாலே வந்து) சிறு பெண்களாகையாலே சூளின் காலத்தில் புறப்படமாட்டாத நாங்கள், அறப்போதோடே புறப்பட்டுவரும்படியன்றே எங்கள் த்வரையிருந்தபடி. இவர்களுக்கு ஆபிமுக்யம் பிறந்தகாலம், ஆத்ம ஹித சிந்தநத்துக்கு ஸத்வோத்தரகாலமாக இருக்கும் ப்ராஹ்ம முஹூர்த்தமாய் வந்து விழுந்தது. மாஸம் மார்கழி மாஸமாய், பக்ஷம் பூர்வபக்ஷமாய், அதிலே பௌர்ணமியாய், அப்படியே ஒரு நன்னாள் வந்து பலித்தாற்போலே அத்திரு ஸத்தில் முஹூர்த்தமும் ப்ராஹ்மமாய் வந்து விழுந்தது. (காலே) (சிறுகாலே) (சிற்றஞ்சிறுகாலே) ''செங்கல்பொடிக்கூறை'' (14) என்று — தாமஸரும் உணரும்படியான அளவு — காலையாவது; ''ஆய்ச்சியர் மத்தினாலோசைபடுத்த'' (7) என்று — இடைச்சிகள் உணர்ந்து ஸ்வக்ருத்யத்திலே அதிகரிக்கும்படியானவளவு — சிறுகாலேபாவது. ''ஆய்ச்சியர்மத்தினாலோசைபடுத்த'' (7) என்றதுதான் விடிவுக்கு அடையாளமாகச் சொல்லும்படி, அதுக்கு முன்னே உணர்ந்தார்களிறே தாங்கள். இவர்களுக்கு, ராத்ரி கழிந்து பகல் வருவதற்கு முன்புத்தை நடுவில்போதையிறே நினைக்கிறது; அஜ்ஞாநதசையை குலைந்து ப்ராப்தி தசையை புகுருவதற்கு முன்புத்தை ஜ்ஞாந தசையைச் சொன்னபடி. ''முனிவர்களும் யோகிகளும்'' (6) உணருங்காலம் — சிற்றஞ் சிறுகாலேயாவது. ஸம்ஸாரியான நிலைகுலைந்து முக்தனுவதுக்கு முன்பு முமுக்ஷுத்வம் அங்குரித்த தசையிறே. இருள் அகன்றவளவாய், வெளிச்செறிப்புள்ளவளவெல்லாம் ப்ரகாசியாத அளவாய்த்து. இதர விஷய ப்ராவண்யத்தால் வரும் அறிவுகேடின்றிக்கே பகவத்விஷயத்தில் ஜ்ஞாநங்கொண்டு நேரான பரிமாற்றமுமின்றிக்கேயிருக்கிறவளவைப் பிடித்தபடி. A ''காலே நன்ஞானத்துறை படிந்தாடி'' என்று ஜ்ஞாநதீர்த்தாவகாஹநத்துக்கு யோக்யமான காலம் பெற்றபடி. B ''தாமரையாள் கேள்வனெருவனையே நோக்கு முணர்வு'' என்று, ஸ்ரீய:பதியை விஷயீகரிக்குமதிறே — நன்ஞானமாவது; துறைபடிகையாவது — ஸதாசார்யோபதேசை மூலமாக, பிராட்டி புருஷகாரமாக, பகவதர்கள் உசாத்துணையாக, எம்பெருமானைப் பற்றுமது. ''உன் மணாளனை எம்மை நீராட்டு'' (20) என்று — துறைதப்பாமலிழிந்தவர்களிறே — இவர்கள். C ''ஓயும் பொழுதின்றி'' விடிவுகாணுதபடி நீண்ட ஸம்ஸாரகாளராத்ரி கழிந்து, D ''பரற்கண்டேன்'' என்று ஒரு பகல் முகஞ்செய்கிற ஸமயமிறே. 1. ''அந்தமம தம இவாஜ்ஞாநம்'' இத்யாதி. காலேமாலே என்று ஒரு நியதியில்லையிறே; அவன் தோற்றும் காலம் விடிவாமத்தனையிறே. திருவாய்ப்பாடிக்கு, நாட்டார் விடிவு அஸ்தமயமாய், ஸர்வபூதங்களினுடைய அஸ்தமயம் விடிவாயிறே நடப்பது. 2. ''ஆவிர்ப்பூதம் மஹாத்மநா'' என்று — அபரராத்ரம் விடிவாய் வந்துவிழுந்ததிறே. E ''விரியுங்கதிரே போல்வா''னிறே.

A திருவிருத்தம் 93, B முதல் திருவ. 67, C திருவாய் 5-4-3, D இர. திருவ. 81
E நாச்-திரு. 14-6.

(சிற்றஞ்சிறுகாலே) சிறுகாலே வரில் உன்னைக்காணவொண்ணுதென்று சிற்றஞ் சிறுகாலே வந்தோம். A ''சிறுகாலே ஊட்டி ஒருப்படுத்தேன்'' என்று மாத்ரு பரதந்த்ரனுய் இளங்கன்று மேய்க்கவேணும்; விடிந்தவாறே B ''காலிப் பின்னேபோம்''; C ''எல்லியம்போதாக வரும்''; D ''நீராட்டமைத்து''வைக்கை யாலே D ''ஆடி அமுதுசெய்''யும்; E ''அல்லுத்தான் வந்தபின்னை'' என்கிற படியே இருளிலே ஆள்பார்த்து ஊரிலே திரியும்; அபி₄மதைகளே வேண்டின விடங்களிலே புணர்ந்து, F ''இராநாழிகை மூவேழுசென்ற''வாறே இங்கே கிடை காட்ட வரும்; அக்காலமறிந்துவந்து கைக்கொண்டார்கள். நாள்தோறும் ஒரு விடிவுண்டாய் நடக்கிறதிறே; ஸுப்ரபா₄தமாய்த்து இந்த தி₃வஸமொன்றுமாய்த்து.

அதுக்கடி என்னென்றால்—(வந்து) வந்த வருத்தத்தை ''வந்து தலைப் பெய்தோம்'' (22) என்று கீழே சொன்னார்களிறே. (வந்து) ஸம்ஸார பத₃வியில் ஓடினவர்கள் மீண்டுவருவதிலும் வருத்தமுண்டு எங்கள் வரத்துக்கு. தே₃ஹாத் மாபி₄மாநம் பண்ணியிருப்பாரை G ''எதிர்சூழல்புக்குத்'' திரிகிறவனுடைய யத்நத்தாலே வருவிக்கலாம்; நிவ்ருத்தி ஸாத்₄யமென்று ஸ்வரூபத்தையுணர்ந்து வாராதாரை வருவிக்கவரிதிறே. உபாயஸ்வீகாரத்தில் உபாயப்ரதிபத்தி பண்ணுத படியான நிலையிலே நிற்கிறவர்களே க்ரியாரூபமானத்தை ஏறிட்டுக் கொண்டு வரும்படி பண்ணுகை அரிதிறே. 1. ''உவாச ச'' என்று பெருமாள் திருவுள் ளத்தைப் புண்படுத்தினுற்போலே சொல்லுகிறார்கள். வரவுக்கு நோவுபடுகிறவனே வார்த்தையாலும் புண்படுத்தினன். தான் ஶரண்யராகப் பற்றிவந்தாரை உண் ணாக்கிக் காரியங்கொள்ளமாட்டிற்றிலனென்றதிறே விபீ₄ஷணனே; அப்படியே 'நாலடியிட்ட நாங்களே வந்தோம்' என்கிறார்கள். 2. ''பத்₃ப்₄யாமபி₄க₃மாத்'' என்று — தாம் வந்த தூரம் பாராதே வாசலளவும் புறப்பட்டது பொறுத் திலரே. (வந்து) H ''இவ்வீதிபோதுமாகில்'' என்று — வந்தால் காரியங்கொள்ள விருக்கும் நாங்கள் வரும்படியன்றே த்வரையிருந்தபடி. (வந்து) பிறந்தவிடத்தில் நின்றும் ஆயர் குலத்திலேவந்து, I ''மழைகொலோ வருகின்றது'' என்னும் படி J ''வீதியூடேவந்து'', K ''நம்தெருவின் நடுவேவந்து'' L ''கதவின்புறமே வந்து'', M''முற்றம் புகுந்து'', N ''நம்மில்லம் புகுந்து'', O நீ ''மலரணை மேல் வைகி மாலே''புகுர ப்ராப்தமாயிருக்க; படுக்கையை விட்டுப் படிகடந்து, P ''காவலுங்கடந்து'' உன் தோரண வாசலிலே (16) வந்து, உட்கட்டிலே புகுந்து,

---

A பெரியாழ்திரு 3-3-2. B பெரியாழ்திரு 3-3-1. C பெரியாழ்திரு 3-4-2. D பெரியாழ்திரு 3-3-3. E பெரியதிரு 10-7-6. F பெரியாழ்திரு 3-1-10. G திருவாய் 2-7-6. H பெரியாழ்திரு 3-4-6. I பெரியாழ்திரு 3-4-1. J பெரி யாழ்திரு 3-4-10. K நாச்திரு 4-5 L பெரியதிரு 10-8-2. M பெரியதிரு 10-8-5. N பெரியதிரு 9-2-4. O பெரியதிரு 7-5-7. P பெரியாழ்திரு 3-6-1.

"பள்ளிக்கட்டிற் கீழே" (22) சிற்றஞ்சிறுகாலே வந்த வருத்தமறியவேண்டாவோ? "கறவைகள் பின்சென்று" (28) என்று அந்தப்போக்கு நிகர்ஷமாகச் சொன்னாற்போலே, இவ்வார்த்தையும் தப்பு என்றிருக்கிறார்கள். ஸ்வரூபத்தை உணராத போது அது ப்ராப்தமாயிருக்கும்; ஸ்வரூபத்தை உணர்ந்தால் இது ப்ராப்தமாயிருக்கும். உபாயாந்தரத்துக்கு நிவ்ருத்தி தோஷம்; இவ்வதிகாரிக்கு ப்ரவ்ருத்தி குற்றம். ப்ராப்யப்ராவண்யம் ஸ்வரூபத்தை மறப்பித்தது. A "பூமருகோல நம் பெண்மை சிந்தித்திராதுபோய்" என்னப்பண்ணுமிறே.

நீங்கள் வந்து செய்த தப்பு என்னென்ன; (உன்னைச் சேவித்து) இதிறே நாங்கள் செய்த தப்பு என்கிறார்கள். எங்கள் ஸ்வரூபத்தை அறியாவிட்டால் உன் ஸ்வரூபத்தைத்தான் உணர்ந்தோமோ? இத்தலையில் மித்ரபாவனையாயிருக்கை-இவனைவிடில் தான் உளனுகாதபடியிருக்குமவனிறே. வரவுதானே மிகையாம்படியிருக்கிறவுன்னை, அதுக்குமேலே துராராதர் பக்கல் செய்வதெல்லாஞ்செய்தோம். பஞ்சாக்நிவித்யையிற் சொல்லுகிற பரிவ்ருத்தியைக் கரையேறி, துஸ்ஸாதமாய்க் கைபுகுந்தாலும் நிஸ்ஸாரமான விஷயங்களிலே துவண்டு, அதுதனக்கு உறுப்பாக இதரஸேவையிலே யிழிந்து, அவர்கள் முகத்தில் விழித்து, அவர்கள் முகத்தில் வெம்மை பொறுத்து, நிசபாஷணங்களைப் பண்ணித்திரிகையாகிற ஸ்வவ்ருத்தியை அநாதிகாலம் பண்ணிற்று; அத்தைத் தவிர்ந்து, விஷயம் வகுத்ததாய், ஸுஶீலனுய், ஸ்வாராதனுய், B "புலங்கொள்வடிவு" படைத்தவனுய், தானே தன்னைத் தருவானுய், தந்தால் பின்னையொருகாலமும் கைவிடாதவனுயிருந்தவனை உசித தாஸ்யம்பண்ணுகை ப்ராப்தமாகச் சொல்லாநிற்க, எதிரே இட்ட நாலடிக்கும் பொருதே உபசாரஞ் சொல்லுமவன் கருத்தறிகையாலே, பின்னே தொடர்ந்து ஸேவித்ததைக் குற்றமாகச் சொல்லுகிறார்கள். (உன்னைச்சேவித்து) 1. "ஸோப்யகூச்சத்" என்று — அபிகந்தாவான உன்னை அபிகமநம்பண்ணி குஶலப்ரச்நத்திலே த்ருப்தனும் உன்னை நாங்கள் ஸேவிக்கை மிகையன்றே. "சென்று நாம் சேவித்தால்" (8) என்கிற இரண்டு மிகையுஞ்செய்தோமிறே. C "பின்னே சென்று" D "சூழவேநின்று" என்று எங்களைத் தொடர்ந்து ஸேவிக்கிறவுன்னை 2. "பேஜுர்முகுந்தபதவீம்" என்கிறபடியே சுவடுபார்த்துத் தொடர்ந்து திரிந்து E "நாரணன் போமிடமெல்லாம் சோதித்துழிதருகின்றுள்" என்னக்கடவதிறே.

ஸேவித்தவளவேயோ, அதுக்கு மேலேயும் சில செய்திலோமோ? — (உன் பொற்றுமரையடியே போற்றும்) சூட்டக்கண்டபூவை விலை மதித்து விற்பாரைப் போலே, கண்டு அநுபவிக்கையே ப்ரயோஜநமாயிருக்கிற திருவடிகளைப் பெற்று வைத்து வேறேயொரு ப்ரயோஜநம் தோற்றும்படியான செயல் செய்த செல்லாமை பாராய். (சேவித்து — போற்றும்) F "தொடர்ந்தேத்தவும்" என்கிறபடியே. (உன் — அடி போற்றும்) ஸ்வரூபகுணாதிகள் போற்றுகிறேமல்லோம்.

A பெரியதிரு 11-2-9. B திருவாய் 8-10-4. C பெரிய திரு 10-7-11. D திருவாய்6-2-4. E பெரியாழ்திரு 3-7-5. F பெரியதிரு 1-9-5.

(அடிபே — போற்றும்) அங்குத்தைக்கு மங்₃களாஶாஸநம் பண்ணி, தனக்கும் ஸகஷ்தேடிக்கொள்ளுகையன்றிக்கே, தன்னே அழியமாறியும் அத்தலைக்கு நன்மைகளே ஆஶாஸிக்கை. புத்ரஶிஷ்யத₃ாஸாதி₃கள் தாங்களும் உண்டுடுத்துப் பித்ராதி₃களுக்கும் ஶேஷமாயிருக்குமாபோலன்றிக்கே, அத்தலைக்கே ஶேஷமாயிருக்குமிருப்பு தனக்கு உஜ்ஜீவநமாயிருக்கை. (உன்னடியே போற்றும்) அடியானுக்கு அடியிலேயிறே ப்ராப்தி. A "அடிச்சியோம்" என்கிறவிவர்கள் B "கூருளும்" துறப்புக்கூட்டில் போகார்களிறே. (உன் — பொன் — அடி) C "உலகமளந்த பொன்னடி" போற்றுகிறவர்களோ, D "காடுறைந்த பொன்னடி" போற்றுகிறவர்களோ நாங்கள்? அவை — E "உலகமெல்லாந் தலைவிளாக்கொள்ளுதல்" D "வானவர்தம் சென்னிமல"ராவுதலாயிறே அந்தப் பொன்னடிகள் இருப்பது; இது—F "மாகமாநிலம் முழுதும் வந்திறைஞ்சும்" என்றிறே இப்பொன்னடியிருப்பது. (உன் — பொன் — அடி) எல்லார்க்கும் பொதுவாயிருக்கையும், ஸ்ப்ருஹணீயமாயிருக்கையும், கண்டால் விடவொண்ணுதிருக்கையும், கிட்டால் பிழைக்கவொண்ணுதிருக்கையும். வெறும் பொன்னடியாயிருக்கிறதோ? "பொற்றுமரை"யடியன்றே. ஸாத₄நத்வமும் ஸாத்₄யத்வமும் பூர்ணமாயிருக்க. G "தாமரையன்ன பொன்னுரடி"யிறே. 1. "த₄நம் மதீ₃யம் தவ பாத₃பங்கஜம்". (உன் பொற்றுமரையடியே) எங்களுக்குப் பொன்னும் பூவும் புறம்பே தேட வேணுமோ? (உன் பொற்றுமரையடி) பெண்களுக்குப் புறம்பு அந்யபரதைகளுண்டானால் க்ருஷ்ணன் அவற்றைக் குலைப்பதும் திருவடிகளாலே. H "அழித்தாயுன் திருவடியால்" I "கற்றினம்மேய்த்த வெந்தை கழலிணை" என்று — ஆஶ்ரயணீயமும் இது; J "அவன் தாளிணைக்கீழ்ப்புகுங்காதல்" என்று ஆசைப்படுவதும் இது. ஆஶாநுகு₃ணமாக K "தாள்கண்டு கொண்டென் தலை மேற்புனந்தேனே"என்று இவர்கள் L"சென்னிக்குக் கோலமாகச்" சூடுவதும் இத்தை. (போற்றும்) "பரமனடிபாடி" (2) "அடிபோற்றி — கழல்போற்றி" (24) என்று மூடியச் சொல்லிக்கொண்டு போந்தார்களிறே, M "கண்ணன்தாள் வாழ்த்து"மதுல்வருபப்ரயுக்தமாயிருக்குமிறே. இதுக்கு மேலே ஒன்று நினைக்கும்படியிறே குசிகார்யமாய் வந்த ஆற்றுமையிருந்தபடி.

(போற்றும் பொருள்) போற்றுகிற ப்ரயோஜநம். இவர்கள் "போற்றும் பொருள்" என்று பாரித்துக்கொண்டு சொல்லத் தொடங்கினவாறே, சிற்றஞ் சிறுகாலே உணர்ந்து வந்த அனந்தலாலே சிவந்த "போதரிக்கண்"களிலும் (13), இவர்கள் N "கோவைக்கனி வாயில்" பழுப்பிலும், பேச்சிலினிமையிலும், வடிவழகிலும், O "பாடகமும் சிலம்பும்" த்₄வனிக்கிற இவர்கள் பொற்றுமரை

A திருவாய் 10-3-6, B திருவாய் 4-8-1, C பெரிய திரு 5-8-9, D பெரிய திரு 11-5-1
E திருமாலை 35, F பெரிய திரு 5-8-5, G பெரியதிரு7-3-5, H திருவாய் 6-2-9
I திருமாலை 9, J திருவாய் 3-9-8, K திருவாய் 10-4-3, L திருவாய் 4-3-9
M பெரிய திருவ 12, N பெரிய திரு 9-6-5, O பெரியாழ் திரு 3-7-6.

யடியிலும் கண்ணை வைத்து, நாம் சொல்லுகிறவிது இவன் ப்ரதிபத்தி பண்ணு கிறிலனென்று தோற்றும்படி அந்யபரனுயிருந்தான்; ''கேளாய்'' என்கிறார்கள். இவர்கள் தாம், தங்களையறிந்தால் பின்னே நின்று வார்த்தை சொல்ல வேண்டாவோ? வார்த்தை சொல்லாநிற்கச் செய்தே ''கேளாய்'' என்னும் போது நடுவே அந்யபரனுகவேணுமிறே. (கேளாய்) எங்கள் ப்ராப்யத்தை அழித்தோ நீ உன் ப்ராப்யம் பெறப்பார்ப்பது என்று அடியையிட்டுத் தொடை யைத்தட்டுகிறார்கள். (கேளாய்) 1. ''அத்3பாபயந்தீ'' என்று ஓதுவிக்க இழிந்த வளரகையாலே 2. ''ஶ்ருயதாம்'' என்று கேட்பிக்கவேணுமிறே. இவன் தனக்கு ஶிஷ்யன் வாய்த்தாற்போலே ஆகவொண்ணுதே இவர்களுக்கு. ''கேளீரோ''(2) என்று—பெண்களுக்கு முதலிலே க்ருத்யாம்ஶம் சொன்னார்கள். இவனுக்குக் கர்த்தவ் யாம்ஶம் சொல்லுகிறார்கள். ''அழகிது, எனக்குத்தான் ஏதானுல் நல்லது, உங்கள் பேச்சேயமையாதோ? இதொருபொருள் கேள்வியாயிருந்தது; விடிவோறே வந்து கைக்கொண்டிகோள், நமக்கு உசித தர்மங்களையும் விட்டு, புறம்புள்ள அந்யபரதை களைபுங்கழித்து, இற்றைக்கு இதுவே கேள்வியாகவிருக்கிறோம், சொல்லலாகாதோ'' என்றன் —(நீ — கேளாய்) ''சீரிய சிங்காசனத்திலே'' (23) யன்றே நீயிருக்கிறது. தர்மாஸநத்திலே இருப்பார்க்குக் கேட்கவேண்டாவோ?

(நீ போற்றும் பொருள் கேளாய்) உனக்கு, க்ரமத்திலே இவர்கள் காரிபஞ் செய்கிறோம் என்று ஆறியிருக்கவொண்ணுது; த்வரிக்கவேணுங்காணென் கிறார்கள். 'பேறு உங்களதாய் நீங்கள் த்வரியாநின்றிகோளே' என்றன்; (பிறந்த நீ) இவ்வளவாக த்வரித்தோம் நாங்களாகிலன்றே மேலும் நாங்கள் த்வரிப்பது, A ''எதிர்சூழல்புக்கு'' இவ்வளவாக க்ருஷிபண்ணின நீ படலவேஷையிலே ஆறி யிருக்கலாகாது காண். எங்கள் ருசிகார்யமான த்வரைக்கு முற்பாடனை நீயே பேற்றுக்கு முற்பாடனுகவேணுங்காண். ''எத்தனைகார்யத்தையிட்டுப் பிறப்போமென்று தெரியாது; இதென்னென்பது?'' என்ன, (பெற்றம் மேய்த்துண்ணும் குலத்தில் பிறந்த நீ) இங்கு வந்து பிறந்தது ஏதுக்காக? ஆர்க்காக? என்று விசாரிக் கலாகாதோ? (பெற்றம் மேய்த்துண்ணும்) நீ பிறப்பிலியாய், பிறவாதார் நடுவே யிருந்து பிறவியற்றார்க்கு முகங்கொடுக்கிற நிலத்திலே வந்தோமோ? பிறவிக்குப் போர படியப்பட்டு உன்னையே கால்கட்டுவாருள்ளவிடத்திலே வந்தோமோ? பிறவாநிற்கச்செய்தே ஆசாரப்ரதானர் புகுந்து நியமிக்கும் ராஜகுலத்திற் பிறவி யிலே வந்தோமோ? வாலால் உழக்குக்குப் பசுமேய்க்க வந்து வயிறு வளர்க்கும் எங்கள் குலத்திலே நீ என்செய்யப் பிறந்தாய் என்று விசாரிக்கலாகாதோ?

(பெற்றம் மேய்த்து) தாழ்ந்தவர்களை ரக்ஷணம்பண்ணும் இக்குலத்திலே பிறக் கச்சொன்னார்? பரரக்ஷணமும் பண்ணுமல் ஸ்வரக்ஷணமும் பண்ணுதார்குலத்திலே உன்னைப்பிறக்கச்சொன்னார்? (பிறந்த நீ) நி ஆசைப்பட்டுப் பிறந்தபிறவியன்றேவிது.

A திருவாய் 2-7-6.

(பெற்றம்மேய்த்துண்ணுங்குலத்தில் பிறந்த) A "எங்கள் பெற்றத்தாயன் வடமதுரைப் பிறந்தான்" என்றல்ல இவர்கள் நினைத்திருப்பது. (குலத்தில் பிறந்த) குலத்துக்குத் தலைவரானவர் வயிற்றிலே பிறந்தபடியாலே எல்லார்க்கும் ஸாத₄ாரணமிறே இப்பிறவி. "நாம் உங்களிலே வந்து பிறந்தோமாகில் நம்மைச் செய்யச் சொல்லுகிறதென்?" என்ன: 'அந்தரங்க₃வ்ருத்தி கொள்ளச்சொல்லுகிறோம்' என்கிறார்கள்: ஆரைத்தான்? என்ருன்: (எங்களை) குலத்தில் பிறந்த நீ B "புலங்கெழு கோவி ய"ரான எங்களைக் கொள்ளவேண்டாவோ? 1. "நீளா குலேந ஸத்₃ருஶீ" எங்களிலே ஒருத்தியை ஆசைப்பட்டன்றே நீ இங்குப்பிறந்தது. (எங்களை) C "திருமாமகள் மண் மகள்" என்கிற ப்ரத₄ாநமஹிஷிகள் உன்னைத்தேடி நிற்க, நீ ஆசைப்பட்டு மேல் விழும்படி உகக்கைப்பாடியான எங்களை. D "ஒசிசெய் நுண்ணிடையிளவாய்ச்சியர் நீயுகக்கு நல்லவர்" என்று நாங்கள் ஆத₃ர விஷயமென்று ப்ரஸித்₃த₄மன்றே. (பிறந்த நீ—எங்களை) பிறவாதாரைப் பிறவாதார் ஏஷிக்கொள்ளவும், பிறந்தாரைப் பிறந்தார் ஏஷிக்கொள்ளுகையும் ப்ராப்தமன்றே. E "இவ்வாய்க் குலத்தாய்ச்சியோ மாய்ப் பிறந்த" எங்களை விரும்பியன்றே நீ ஆயனுய்ப் பிறந்தது. F "ஆயனுகி யாயர்மங்கை வேயதோள் விரும்பினுய்." (எங்களை) பசுக்களுக்கு வேறு ரக்ஷக ருண்டாகிலும் உன்னையொழிய வேறு ரக்ஷிப்பாரில்லாத எங்களை. பசுக்கள், தானும் பறித்துத் தின்னும்; பிறரும் ஐயோ! என்னும்படியிருக்கும்; இரண்டாகார முமில்லாதவெங்களை. (குற்றேவல்) அந்தரங்க₃மாய் ஏஷிக்கொள்ளுமது. G "முகப்மே கூவிப்பணி கொள்ள"வேணுமிறே, H "விடுத்த திசைக்கருமமு"மல்ல, I "கருது மிடத்தில்" வ்யாபாரமுமல்ல; அணுகின வ்ருத்தியும் ஏவின வ்ருத்தியுமாகவேணும். திருத்திரைக்குள்ளில் வ்ருத்தி; — உடைவாளும் அடுக்குருவுமெடுத்தல், கலசப்பானை பிடித்தல், படிக்கம் வைத்தல், J "உமிழும் பொன்வட்டி"லெடுத்தல், திருவடிகள் விளக்குதல், ஒலியன் பணிமாறுதல், சாமரமிரட்டுதல், அடைக்காய்திருத்துதல், அடிவரு டுதல், K "முலைகளிடர்தீர" அணைத்தல் இவை தொடக்கமானவை—K கோவிந்தற்குப் பண்ணும் K குற்றேவலாகிறது. 'இவையெல்லாம் க்ரமத்திலே கொள்ளுகிறோம்' என்ருன்: (எங்களை) தா₃ஸ்யத்தில் சுவடறிந்து அதில் ருசியும் த்வரையும் விளைந்து க்ரமப்ராப்தி பொறுக்கமாட்டாதபடி வந்து மேல்விழுகிற எங்களை. 'அநந்தரக்ஷணத் துக்கு நாங்களிருப்புதோமென்று தோற்றியிருந்ததோ' என்று தங்களாற்றுமையை அணித்துக் காட்டுகிறார்கள். சிறிது விட்டுப்பிடிக்கவறியாத எங்களை; ஒரு படுக்கை யிலே ஒக்கவிருக்கப் பிரிவதற்கிரங்குமெங்களை.

(குற்றேவல்—கொள்ளாமல் போகாது) உனக்கு—விஹிதம். (பிறந்த — நீ கொள்ளாமல்போகாது) முன் தும்பு செய்தார்க்கு வீண்போமோ, புறம்புள்ள ஜீவ

A திருவாய் 9-1-7. B பெரியதிரு 3-3-2. C பெரியதிரு 10-8-9. D திரு வாய் 10-3-8. E திருவாய் 10-?-3. F திருச்சந்த 41. G திருவாய் 8-5-7. H திருப்பல் 9. I திருவாய் 10-6-8. J பெரு திரு. 4-3. K நாச். திரு13-9.

நத்தை மாற்றினுல் நீயும் இடாதொழியவோ? அந்நபாநாதி₃கள் தூரகமான நிலை யைத் தவிர்த்து உன்வடிவழகைக் காட்டி A "எல்லாம் கண்ணன்" என்று தூர காதி₃கள் நீயேயாம்படி பண்ணினுல் ஸ்வரூபாநுரூபமான அடிமைகொள்ளாதே போகப்போமோ? ஒருவனுக்கிடுகிற சோற்றை விலக்கிப் பின்னைத் தானும் பொகட் டுப்போகவோ? நாங்களிசையாதவன்று தப்பினத்தைச் செய்யலாவதில்லை; ஸ்வரூப ஜ்ஞாநமுண்டாய் இசைவுமுண்டான இன்று நழுவவிடுவுதோமோ? B [உண்டிட்டாய் இனிபுண்டொழியாய்] ஆசையை விளைத்த உனக்கு அதின் காரியஞ்செய்யவேண் டாவோ? (கொள்ளாமற் போகாது) நாங்கள் விடநினைத்தால் நீதான் விடவல்லையோ? C "திருவாணை நின்னாணை கண்டாய்" என்று ஆணையிடமாட்டார்களிறே; அபி₄ ப்ராயந்தோற்றச் சொல்லுமித்தனையிறே. D [வளைத்து வைத்தேன் இனிப்போக லொட்டேன்] தடுக்கையும் வளைக்கையும் ஆணையிடுகையும் பரிசிறே. "கொள்ளா மற்போகாது" என்று—அடுகுவளம் தடையானபின்பு கேட்க என்று விடுகையிறே.

"கொள்ளாமற்போகாது" என்று – மீளவொண்ணுதபடி நிர்ப்ப₃ந்தி₄த்தவாறே 'நாம் அந்தரங்க₃மாக வேண்டுமவை ஏவிக்கொள்ளுகிறேம்; உங்களுக்கு நம்பக் கலிலும் சில கொள்ளாமற்போகாதே; நீங்கள் நோன்புக்கு அங்க₃மாகச் சொன்ன வற்றை இப்போது கொண்டுபோமித்தனையிறே; நீங்கள் அனைவருமறிய வேண்டி வந்தத்தைக் கொண்டுபோகவேணும் இப்போது. "பறைதருவான்" (1) என்றும், "பாடிப் பறைகொண்டு" (8) என்றும், "போற்றப்பறைதரும்" (10) என்றும், "அறை பறை" (16) என்றும், "இற்றைப் பறைகொள்வான்" என்றும், "பறைதருதி யாகில்" (25) என்றும், "சாலப்பெரும்பறை" (26) என்றும், "உன்றன்னைப்பாடிப் பறைகொண்டு" (27) என்றும், "நீதாராய்பறை" (28) என்றும்—ஒருக்காற்சொன்னுற் போலே ஒன்பதின்காற்சொன்ன பறையை, இற்றைக்கும் கொள்ளுங்கோள்' என்று பெண்களுக்குக் கொடுக்கும்படி பறையை எடுத்துக்கொண்டு வாருங்கோளென்றன்; (இற்றைப்பறைகொள்வானன்றுகாண் கோவிந்தா) இன்று ஒரு ப்ரயோஜநம் கொண்டுபோமவர்களோ நாங்கள்? உன்னை அங்ஙனே விடுவுதோமோ? கெடுவாய்! யதா₃ர்த்தருதக்₃ராஹியாயிருந்தாய்; தாத்பர்யஜ்ஞாநமில்லையாயிருந்ததே! அபி₄தா₄ந வ்ருத்தியொழியத் தாத்பர்யம் போகாதாயிருந்ததே! லோகலம்வாத₃த்துக்காக ஒன்று சொன்னேமத்தனை என்றிருக்க வேண்டாவோ? அபி₄மதவிஷயமிருந்த விடத்தே சென்று "தண்ணீர்" என்றல், தண்ணீரை வார்ப்பார்களோ? சொல்லுகிற வார்த்தையையும் எங்களையும் அறிந்தன்றே பரிமாறுவது; நாங்கள் "பறை" என்றால் வேறேயொன்று த்₄வனிக்கிறதென்று அறியவேண்டாவோ? (கொள்வா னன்றுகாண்) எங்களை நீ கொள்ளுமத்தனையொழிய, நாங்கள் உன்பக்கலிலே உன்னையொழிபவுங் கொள்வதொன்றுண்டு என்றிருந்தாயோ?

A திருவாய் 6-7-1, B திருவாய் 10-10-6, C திருவாய் 10-10-2, D பெரியாழ் திரு 5-3-2

(கோவிந்தா) பசுக்களின் பின்னே திரிவார்க்கு, பெண்கள் வார்த்தையின் கருத்துத் தெரியாதிறே. பசுக்களின் பின்னேதிரிவார்க்கு அவற்றுக்குள்ள ஜ்ஞாநமிறேயுள்ளது. நாலுநாள் எங்களைவிட்டுக் கெட்டகேடு என்தான்! நீ பசுக்களையே விரும்பி எம்மைத் துறந்தால் இதுவோ படிலம்? (கோவிந்தா) "குறைவொன்றுமில்லாத கோவிந்தா" (29) என்று ஜ்ஞாநபூர்வகமான உபாயஸ்வீகாரம் பண்ணுகிறவிடமாகையாலே கு₃ணபூர்த்தி சொல்லக்குறையில்லை; அவ்விடத்தில் ப்ராப்யருசியாலே கண்ணுஞ்சுழலையிடுகையாலும், படிலாந்தரத்தைக் காட்டி நழுவத்தேடுகையாலுண்டான ரோஷத்தாலும் இவ்வளவும் சொல்லவேணுமிறே இங்கு. (கோவிந்தா) எங்களையும் எங்கள் ப்ராப்யத்தையும் மறந்தாற்போலே, உன்னையும் உன்பிறவியையும் மறந்தாயீ! (பெற்றம் மேய்த்துண்ணுங் குலத்தில் பிறந்த - கோவிந்தா) பூ₄மியை எடுத்து நோக்கின மஹாவராஹமாக நினைக்கிறையோ? பூ₄மியை நீரேற்ற வாமநனாக நினைக்கிறையோ? ஸப்₃த₃ராஶியைப் பிரித்தெடுத்த ஹம்ஸரூபியாக நினைக்கிறையோ? அத்தை ப்ரகாஶிப்பித்த ஹயக்₃ரீவ வேஷமாக நினைக்கிறையோ? ஆதி₃த்யாந்தர்வர்த்தியாக நினைக்கிறையோ? அறிவில்லாத பசுக்களுக்கு நிர்வாஹகனாய் வந்து பிறந்து ஆயர்சிறுமியர்க்கு உதவிற்றில்லை என்றுள் பரவ்யூஹாதி₃களையும் யாத₃வவம்ஶத்தையும்விட்டு, இடைச்சேரியிலே ஸுலப₄னான உன்னுடைய க்ருஷியும் விப₄லமாகாதோ?

"நீங்கள் சொன்ன வார்த்தைக்குப் பலருமறியக் கருத்தாயிருக்குமத்தை நாமும் அறிந்து சொன்னேமாகில் நமக்குத் தாத்பர்யஜ்ஞாநமில்லை என்கிறதென்? நீங்கள் குற்றேவல் என்கிறத்திலே இரண்டுவகையறிந்து சொல்லுங்கோள். இற்றைப் பொழுதை உங்களோடே போக்குகிறேம் அங்ஙனேயாகில்" என்றன்; (எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும்) இற்றையளவில் போகாதுகாண், இப்பிறவியளவில் போகாதுகாண். (எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும்) அகாலகால்யமான A "நலமந்தமில்லதோர் நாட்டிலே" இருக்கவுமாம்; ஆஶ்ரித ஸஜாதியனுய்க்கொண்டு B "நிலைவரம்பிலபலபிறப்பாய்" ஸம்ஸாரமண்ட₃லத்திலே அநேகாவதாரம் பண்ணவுமாம்; அதில் ஒரு நிர்ப்ப₃ந்த₄மில்லை. (உன்றன்னோடு) நீ பிறவாதிருக்குமிடத்திலும், பிறந்து திரியுமிடத்திலும் கூடத்திரியுமித்தனை. (எற்றைக்கும்) 1. "தே₃வத்வே தே₃வதே₃ஹேயம் மநுஷ்யத்வே ச மாநுஷீ" என்கிறபடியே நாங்களும் ஒக்கப்பிறந்து, விடாதே திரியவேணும்; இளையபெருமாள் படைவீட்டிலும் காட்டிலும் ஒக்கத் திரிந்தாற்போலே.

(உன்றன்னோடு) நீ ஶங்கு₂சக்ர₂தா₃த₃ரனுய் ஶ்ரீவைகுண்ட₄த்திலிருக்குமிடத்திலும் எங்களோடே கண்கலந்த உன்னோடும் ஒக்கத்திரியவேணும். (உன்றன்னோடு) அங்கே C "உருவார்சக்கரம் சங்கு சுமந்து" உன்னோடே திரிகையும், D "தெறிவில்லும் செண்டுகோலுங்" கொண்டு இங்கே திரியவும் பெறுவோமாகவேணும். இத்தை

A திருவாய் 2-8-4. B திருவாய் 1-3-2. C திருவாய் 8-3-7. D பெரியாழ்திரு 3-4-3.

நினைத்திறே A ''கச்சொடு பொற்சுரிகை'' அடியிலே இவர்கள்தான் அவனுக்கு வரவிட்டது. (கோவிந்தா எற்றைக்கும்) B ''கோயில் கொள் தெய்வ மெல்லாந் தொழ வைகுந்தங் கோயில்கொண்டு'' நீ இருக்குமிடத்திலும், C ''பின்னும் எம்மாண்பு மானுன்'' என்னும்படி நீ பிறந்து திரியுமிடத்திலும் உன்னேடே திரியவேணும். D ''தேவும் தன்னையும்'' என்கிற இரண்டவஸ்தையும் கோவிந்தனுக்கிறே. (உற்றேமேயாவோம்) ஸர்வவித பந்தவமும் உன்னேடேயாகவேணும். ஒரு உறவைக்குறித்து ''அதுண்டாகவேணும்'' என்னுதொழிந்தது, ஒன்றை விமோஷிக்கில் அல்லாதவையில்லையாமென்று: எல்லாவுறவும் நீயேயாகவேணும். (உற்றேமே யாவோம்) நீ காட்டுக்குப்போக மூச்சடங்கும் உறவு உண்டாகவேணும்; அசலூரில் வளரப் போகப் பூண்டும் புலம்புமுறவுண்டாகவேணும்; நீ அபிமதவஸ்துக்களை விஞ்சி விநியோகங்கொண்டால், 'பொருதொழியில் செய்வதென்!' என்று வயிறுபிடித்துக்கொள்ளுமுறவு உண்டாகவேணும்; நீ 'நில்லுங்கோள்' என்றால் நீர் பிரிந்த ஜந்துக்களைப்போலே துடிக்குமுறவு உண்டாகவேணும்; நீ பாம்பின்வாயிலே விழுந்தாயென்றால் பிணம்படும்படியான பந்தவம் வேணும்; கழிந்த பிழைகளுக்குக் காப்பிடுமுறவுவேணும்; எங்கள் வீட்டிலேயிட்ட ஆஸநத்தை ஊன்றிப் பார்க்குமுறவு வேணும்; விட்டணைக்கத்தேடில் வெளுக்குமுறவுண்டாகவேணும். (கோவிந்தா உன்றன்னேடு)1. ''மாதா பிதா ப்ராதாநிவாஸஶ்ஶரணம் ஸுஹ்ருத்கதிர் நாராயண:'' என்கிறபடியே E ''அவரேயினியாவார்'' என்றிருக்கவொண்ணுது; 2. ''ப்ராதா பர்த்தா சபந்துஶ்ச பிதா சமம ராகவ:'' என்கிறபடியே F ''அவருயிர் செகுத்தவெம்மண்ணல்'' என்றிருக்கவொண்ணுது; அவையுமெல்லாம் உன்னேடேயாகவேணும்; G. ''பெற்றதாய் நீயே பிறப்பித்த தந்தை நீ மற்றையாரானவாரும் நீ'' என்றிருக்கவேணும். (உற்றேமே) ஸம்பந்தமுண்டாயிருக்கச் செய்தே பத்துமாஸம் பிரிந்திருத்தல், பதினலாண்டு பிரிந்திருத்தல், பதினுறாண்டு பிரிந்திருத்தல் செய்யவொண்ணுது.

அத்தனேயோ வேண்டுவது? என்றான்; (ஆட்செய்வோம்) பந்தபலம் பெற வேண்டாவோ? உறவு என்று ஸாதர்ம்யம் பெற்றிருக்கவொண்ணுது; ப்ராப்திபலமான கைங்கர்யத்தைப் பெறவேணும். (ஆட்செய்வோம்) அரசுக்குப் பட்டம்கட்டி அருகிருக்கவொண்ணுது.''ஆகிறது, மற்றென்?'' என்றான்—(உனக்கு—ஆட்செய்வோம்) ஆட்செப்யுமிடத்தில் எங்களுக்கு உறவை அறிவித்து அடிமைகொண்டு ஸாபேக்ஷனுய் நிற்கிற உனக்குச் செய்யவேணும். (உனக்கு-ஆட்செய்வோம்) H ''ஆட்கொள்ளத் தோன்றிய'' உனக்குச் செய்யவேண்டாவோ? ''அத்தனேயோ?'' என்றான்; (உனக்கே) உனக்கும் எங்களுக்குமாயிருக்கிற இருப்பைத்தவிர்ந்து I ''தனக்கேயாக'' என்னுமா

A பெரியாழ்திரு 1-3-8. B திருவாய் 8-6-5. C திருவாய் 1-8-2. D திருவாய் 2-7-4. E திருவாய் 5-1-8. F பெரிய திரு 1—1—6. G பெரிய திருவ 5, H பெரியாழ் திரு-1—6—11. I திருவாய் 2-9-4.

போலே கொள்ளவேணும். எங்கள் அபி₄நிவேஶத்தாலே உன் அபி₄மதம் செய்ய வொண்ணாது, நீயுகந்ததாகவேணும். தே₃ஶகாலாவஸ்தா₂ப்ரகார நியமஶூந்யமாக அபி₄நிவேஶத்தாலே பாரியாநிற்கச்செய்தேயும் ருசிகரமான தே₃ஶத்திலே நிபோ கி₂த்துக்கொள்ளவேணுமென்று அவன் உகந்து ஏவினதைச் செய்யக்கடவராயிறே யிருப்பது. A ''உன்றன் திருவுள்ளமிடர்கெடுந்தோறும்'' என்னக்கடவதிறே. (நாம்) உனக்கு அபி₄மதமானத்தை எங்கள் நிர்ப்ப₃ந்த₄மொழிய நீ ஏவச் செய்தபோ தன்றே எங்களுக்கு ஸ்வரூபஹித்₃தி₄யுண்டாயிற்றுவது.(ஆட்செய்வோம்) B ''உயர்ந் துயர்ந்து அப்பாலவன்'' என்கிறபடியே. உத்துங்க₃விஷயமாகையாலும், '' ஆயர் சிறுமிபரான'' (16) தாங்கள் தாழ்ந்த மனிச்சராகையாலும், ''செய்வோம்'' என்று ப்ரார்த்தி₄க்கிறார்கள். (கோவிந்தா—உனக்கே நாம் ஆட்செய்வோம்) C ''நீள்குடக் கூத்தனுக்காட்செய்வதே'' என்கிறபடியே—உனக்கு ஆட்செய்யுமதன்றே ப்ராப்தமா யிருக்கிறது.

''அப்படியாகிறது; இனி என்?'' என்றான்; (காமம் மாற்று) வேறொரு காம மூண்டாய்ச் சொல்லுகிறதல்லவிறே. D ''தேறேலென்னே'' என்றிருக்குமவர்களா கையாலே, E ''அடிமைசெய்வாரையும் செறுமவை'' ப்ரக்ருதி வாஸனையாலும், மனஸ்ஸு அஸ்தி₂ரமாயிருப்பதொன்றுகையாலும், ஸம்பா₄விதமாக ஶங்கித்து, ''கூடகமே'' (27) என்று தொடங்கி நாட்டார்க்குச் சொன்னவை தொடருகிறதோ என்று, அது நடையாடாதபடி பண்ணவேணுமென்கிறது. ''அத்தனேயோ?'' என் றான்; அவ்வளவுபோராது— (மற்றை— காமம்—மாற்று) நீ ஶ்ரீவைகுண்ட₄த்திலே ஸூரிகளுக்கு முகங்கொடுத்திருக்குமிருப்பிலே க்ரமத்திலே பெறும்படியிருக்கவொண் ணாது; நீயும் 'பெண்காள்!' என்றழைக்க நாங்களும் 'க்ருஷ்ணன்' என்று சொன்ன மிமாற்றமே நடக்கவேணும். 1. ''ந காமலுகஷம் சித்தம்''—அவனுடைய ப்ராப்ய தையும், ப்ராபகத்வத்தையும், ஶரண்யதையையும், இந்நிலத்தின் தண்மையையும், அந்நிலம் உத்₃தே₃ஶ்யமென்னுமிடத்தையும்; மநோரத₂ந்தானே அமையுமென்னுமிடத் தையும் சொன்னவாறே—'ஒரு அபேக்ஷையின்றிக்கே பலவற்றிலே நெஞ்சு தாழ தின்றதே?' என்ன, 1. ''தே பாத₃யோஸ்ஸ்தி₂தம்-மம சித்தம்—ந காமகலுஷம் ''— ப்ராப்யத்வம், ப்ராபகத்வம், ஶரண்யத்வம் இவையெல்லாஞ்சொல்லிற்று நீயாகை யாலே; இவ்விடம் த்யாஜ்யமென்றது—உன்னுடைய அநுப₄வத்துக்கு விரோதி₄யாகை யாலே; அவ்விடத்தில் உத்₃தே₃ஶ்யதாபு₃த்₃தி₄ நடந்தது—அநுப₄வத்துக்கு ஏகாந்த ஸ்த₂லமென்று; அல்லாதவை உத்₃தே₃ஶ்யமென்று சொன்னேனென்று; உன்திரு வடிகளிலே நிலைநின்றவர்கள் நெஞ்சு ஶ்ரீவைகுண்ட₄ாதி₃களால் கலங்காதுகாண்'' என்றதிறே. அப்படியே இவர்களும் (மற்றை-காமம்) என்கிறார்கள். ''மற்று'' என்றது, F ''மற்றொன்றின் திறத்ததல்லா'' G ''மற்றொன்றினைக்காணுவே'' என்கிறவிடங்க ளிற் சொல்லுகிறத்தை. (கோவிந்தா—மற்றை—காமம்—மாற்று) H கண்ணன் வைகுந்தனோடான — நிலையைக் குலைக்கவேணும். I ''இம்மைப் பிறவிசெய்யாதே

A திருவாய் 10-3-9. B திருவாய் 1-7-2. C திருவாய் 4-10-10. D திருவாய் — 2-9-10. E திருவாய் 7-1-6. F திருவாய் 7-10-10. G அமலனாதி 10, H திரு விருத்தம் 30. I நாச்—திரு 13-9-

இனிப்போய்ச் செய்யுந்தவந்தானென்?'' என்னுமவர்களிறே. நாங்கள் சிந்தயந்தி பட்டதுபடாமல்கிடாய். 'அத்தனேயோ வேண்டுவது?' என்றான்; (நங்காமம் மாற்று) ஆட்கொள்ளுமிடத்திலே எங்களுக்கொரு இந்த்ரியசாபல்யம் நடக்கும்; அந்த ஸௌந்தர்ய ரூபமான அந்தராயத்தையும் பரிஹரிக்கவேணும். 'அத்தனேயோ?' என்றான்; (காமங்கள்) என்கிறார்கள். இருவர் கூடப் பரிமாறுநின்றால் அத்தால் பிறக்கும் இனிமை இரண்டு தலைக்கும் ஒத்திருக்குமிறே. விஷயவைலக்ஷண்யத்தாலும் ஆஸ்ரயத்தின் இனிமையாலும் மிகவும் ப்ரீதிரூபமாயிறே பரிமாற்றமிருப்பது. அதில் ஸ்வரூபத்துக்கு விரோதியான அஹங்கார கர்ப்பமான அடிமையும் அபுருஷார்த்தமிறே. நாங்கள் செய்கிற அடிமைகண்டு நீயுகந்தால் அவ்வுகப்புக்கண்டுவரும் உகப்பொழிய போக்த்ருத்வப்ரதிபத்தியும் மதீயத்வ ப்ரதிபத்தியும் போஜநத்துக்கு க்ரிமிகேசங்கள்போலே பொகடவேண்டும்படி விரோதமாயிறேயிருப்பது. அந்தவிரோதிகளையும் தவிர்த்துத் தந்தருளவேணுமென்கிறார்கள். ஸ்வரூபவிரோதியும் ஸாதனவிரோதியும் ப்ராப்திவிரோதியும் ப்ராப்யவிரோதியும் என்று நாலுவகைபாயிறே விரோதிகள் இருப்பது; அதில் ஸாதனவிரோதியும் ப்ராப்திவிரோதியும் கீழிற் பாட்டிலே-கழிந்தமை சொல்லிற்று; மற்றையிரண்டும் இப்பாட்டிலே கழிக்கிறது.

''கறவைகள் பின்சென்று'' (28) என்று — உபாயாந்தரத்தில் அநந்வயம் சொல்லுகையாலும், ப்ராப்திப்ரதிபந்தகத்துக்கு க்ஷாபணம்பண்ணுகையாலும் இரண்டுக்கும் குலைந்ததிறே; ப்ராப்யருசியும் த்வரையும் ஆர்த்தியும் விளைந்து பாஹ்யங்களில் ஸங்கமும் குலைந்தபடி சொல்லுகையாலே ஸ்வரூபவிரோதி கழிந்தபடி சொல்லிற்று இப்பாட்டில் முற்கூற்றால்; ''மற்றை நங்காமங்கள் மாற்று'' என்கிறத்தாலே—பரவிரோதியைக் கழிக்கிறது. ''கோவிந்தா—உனக்கு'' என்று அகாரார்த்தஞ் சொல்லிற்று; ''உனக்கே'' என்று - உகாரார்த்தஞ்சொல்லிற்று; ''நாம்'' என்று — மகாரார்த்தஞ்சொல்லிற்று; ''உன்றன்னோடுற்றோமேயாவோம்'' என்கிறவிடத்தாலே - நாராயணபதத்தில் அர்த்தஞ்சொல்லிற்று; ''எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும்'' என்கையாலே-சதுர்த்யர்த்தம் சொல்லிற்று; ''மற்றைநங்காமங்கள் மாற்று'' என்று - நமஸ்ஸில் அர்த்தஞ்சொல்லிற்று; நடுவே நமஸ்ஸு கிடக்கிறது ஸ்வரூப உபாயங்களிரண்டிலும் கிடக்கிற விரோதி போக்குகைக்கிறே.

ப்ராப்யருசிகார்யமான த்வரையும், அதின் பலமான கலக்கமும், விளைந்த ஆர்த்தியும், இதெல்லாவற்றுக்குமடியான ப்ராப்யாந்தரஸங்கநிவ்ருத்தியும், பேற்றில் அளவிறந்த பாரிப்பும், அதில் ஸ்வப்ரயோஜநத்வ நிவ்ருத்தியும் சொல்லாநின்றுகொண்டு, ப்ரபந்த தாத்பர்யத்தையும் நிகமிக்கிறார்கள். ஸத்வோத்தரகாலத்திலே உணருகையும், பகவத்ஸந்நிதியேற வருகையும், ஸேவிக்கையும், விக்ஞாபநம் பண்ணுகையும், தத்ஸம்ருத்தியை ஆசாஸிக்கையும், தன்பக்கலிலே ஆதிருத்யம் பண்ணுவித்துக்கொள்ளுகையும், அவதார ப்ரயோஜநங்களை விண்ணப்பஞ்செய்கையும், ஆர்த்தியை ப்ரகாசிப்பிக்கையும், திருவுள்ளமறியப் பலாந்தரஸங்கநிவ்ருத்தியைக் காட்டுகையும், ஸகிரிகள் பரிமாற்றத்தை அபேக்ஷிக்கையும், ஸ்வரூபவிரோதிகளை அறுத்துத்தரவேணுமென்று வேண்டிக்கொள்ளுகையும், கைங்கர்யருசிபுடையார்க்கு ஸ்வரூபமிறே. இவை எல்லாம் நிழலெழும்படி க்ருஷ்ணன் திருமுகத்தைப்பார்த்து விண்ணப்பஞ்செய்கிறார்கள். 29.

ஈராயிரப்படி—இருபத்தொன்பதாம் பாட்டு.

அவ:— இருபத்தொன்பதாம் பாட்டு. A எம்மாவீட்டில் ப்ராப்யத்தை நிஷ்கர்ஷிக்கிறது.

வ்யா:— (சிற்றஞ் சிறுகாலே) 1. "ப்₃ராஹ்மே முஹூர்த்தே சோத்தா₂ய" B "காலே நன்ஞானம்" இத்யாதி₃கள்; முன்பு ஒரு போகியாக உறக்கம்; பின்பு ஒரு போகியாக உணர்ச்சி; நடுவில் காலமிதே சிற்றஞ்சிறுகாலையாவது. பெண்களாகையாலே சிற்றஞ்சிறு காலம் என்றபடி. யோகிகளும் உணர்வதுக்கு முன்னே சிறுபெண்களான நாங்கள் உணர்ந்த இத்₃ர்மஹாநியைப் பாராய். C "என்னில் முன்னம் பாரித்து" என்று—நீ உணருங் காலத்திலே நாங்கள் உணர்ந்து வந்தோமென்கை.

(வந்து) இரண்டு ஸ்வரூபத்தையும் அழித்தோம். ஸ்வரூபம் நிலையிட்டவர்களிதே. 2. "பத்₃ப்₃யாமபி₄கா₃மாச்சைவ" என்று சொல்லுகையாலே அவனிருந்தவிடத்தே ஓரடியிட்டுச் செல்ல, இட்டபதந்தோறும் நெஞ்சுளுக்கும்; பொறுக்கமாட்டானென்கை. (உன்னைச் சேவித்து) அத்தலை இத்தலையாயிற்று; ஸேவ்யரான தாங்கள் ஸேவகரானபடி. [3. "ஸுக்₃ரீவம் நாத₂மிச்ச₂தி"—தாமேயிதே பார்த்திருப்பார். ஸ்ரீவிபீ₄ஷணாழ்வானை முடிசூட்டுகைக்காக லங்கைக்கு நடந்தவனன்றோ.

(உன்பொற்றுமரையடியே) ஆற்றுமையும் ஸ்வரூபமாகையாலே அடைவுகெட மேலே விழுந்தபடி. (அடியே போற்றும் பொருள்) கூடவந்த பூவுக்கு விலை விடுவாரைப்போலே. உபாயோபேயங்களிரண்டும் தானே; ஸ்வீகாரமாத்ரத்திலே நிற்கப் போகாமையாலே போற்றுகிறபடி. ருசிக்கவ்வருகுபட்டால் ப₄லத்திலே மூளுமத்தனை. கவிழ்ந்துநிற்கச்செய்தே விண்ணப்பம் செய்கிறது. (கேளாய்) நாங்களும் முன்னே நிற்கில் வார்த்தை கேட்கவொண்ணுதோ? என்கை.

(பெற்றம் மேய்த்துண்ணும் குலத்தில் பிறந்து நீ) நீயன்றே முற்றீமை செய்தாய்; என்றும் கேட்டே போகக் கடவதாயிருக்கிற நீ வந்து இக்குலத்தே பிறந்து இட்டீடுகொண்டு எளியனுனுய் என்கை. நாங்கள் நீயிருந்தவிடத்தே வந்து பிறந்தோமோ? வஸிஷ்ட₂ாதி₃கள் விலக்குமிடத்தே வந்தோமோ? (குற்றேவலெங்களைக் கொள்ளாமல் போகாது) பெரும் பசியராயிருப்பார் சோற்றை வாங்கி எச்சில் படுத்திப் பின்னை உண்ணுதே பொகட்டுப்போமாபோலே, ஸ்₂த₂ாதி₃கள் போ₄க்₃யாதி₃களாக இருக்கிற எங்களை வடிவழகைக்காட்டி D "உண்ணும் சோறு" முதலானவையெல்லாம் நீ என்னப்பண்ணி ஸ்வரூபானுரூபமான அடிமை தாராதே இருக்கலாமோ? என்கை.

(இற்றைப் பறையித்யாதி₃) "இவர்கள் நம்மை விடார்களை இனி" என்று பறையெடுத்துக்கொடுக்க ஒரு கையாலே கும்பிட்டு ஒரு கையாலே ப்ரயோஜனங்

A திருவாய் 2-9 B திருவிருத்தம் 93 C திருவாய் 9-6-10 D திருவாய் 6-7-1

கொண்டு போமவர்களோ நாங்கள்? (கோவிந்தா) பசுக்களின் பின்னே திரிவாற்குப் பெண்கள் ஸ்ரோத்ரியராகப்போமோ?

ஆனால் செய்ய வேண்டுவதென்னென்ன; (எற்றைக்கும்) 1. "நகாலஸ்தத்ரவை" என்கிற பரமபதத்திலேயானாலும், (ஏழேழ் பிறவிக்கும்) இங்கே பிறந்தாலும் ஒக்கப்பிறக்கவேணும். இளையபெருமாள் காட்டிலும் படைவீட்டிலும் அடிமை செய்தாற்போலே 2. "தேவத்வே தேவதேஹேயம்" இத்யாதிப்படியேயாகவேணும் என்கிறார்கள்.

(உன்றன்னோடுற்றேமேயாவோம்) ஒரு உறவைக் குறித்து அதுவாகவேணுமென்னுதொழிந்தது எல்லாஉறவுமுறையும் நீயேயாகவேணுமென்கை. 3. "மாதா பிதா ப்ராதா" இத்யாதியின்படியே. (உனக்கே நாமாட்செய்வோம்) உனக்கும் எங்களுக்கும் பொதுவான அடிமையன்றிக்கே உனக்கேயாகக் கொள்ளவேணும். ஸ்ரீ பரதாழ்வானைப் போலன்று. இளைய பெருமாளைப்போலே அடிமை செய்யவேணும்.

(மற்றை நங்காமங்கள் மாற்று) 4. "பாவோ நாந்யத்ர கச்சதி" போலே பண்ணவேணும்.

29.

நாலாயிரப்படி — இருபத்தொன்பதாம் பாட்டு

அவ:— இருபத்தொன்பதாம் பாட்டு. A எம்மா வீட்டிற்போலே ப்ராப்யத்தை கிஷ்கர்ஷிக்கிறது. திருவாய்மொழியில் இப்ரபந்தத்துக்கு வாசி — முந்துற B கெடுமாற்கடிமையில் அர்த்தத்தை அனுபவித்துக்கொண்டு, அது — நிலைகிற்கைக்காகவும் அத்தைக் காத்தூட்டுகைக்காகவும் பிற்பட A எம்மா வீட்டில் அர்த்தத்தோடே தலைக்கட்டுகிறது.

வ்யா:— (சிற்றம் சிறுகாலே) 5. "ப்ராஹ்மே முஹூர்த்தே சோத்தாய சித்தயேதாத்மநோ ஹிதம்" என்றும், C "காலே நன்ஞானத்துறைபடிந்தாடிக்கண்போது செய்து மாலை நன்னீரில் கொள்ளார் நினையாரவன் மைப்படியே" என்றும் சொல்லுகிறபடியே இவர்கள் அனுஷ்டிக்கிறார்கள். [காலையாவது] ஆத்மாவுக்கு வெளிச்செறிக்குங்காலம் என்றுமாம்; இக்கண்ணுக்கு இவ்வாதித்யன் வெளிச்செறிப்பு பண்ணுமாபோலே அகவாயில் கண்ணுக்கும் வெளிச்செறிப்புப் பண்ணக்கடவ ஆதித்யன் ஸ்ரிய:பதி. 6. "பாஸ்கரேண ப்ரபா யதா". [ஞானமாகிறது] D "ஒண்டாமரையாள் கேள்வனொருவனையே நோக்குமுணர்வு" என்கிறபடியே ஸ்ரிய:பதியே தனக்கு விஷயமாகவுடைய ஜ்ஞானம். [நன்ஞானமாகிறது] ப்ராப்யப்ராபகங்களிரண்டும், ஸஹாயாந்தர நிரபேக்ஷமாக அம்மிதுனமே நமக்குப் பலம் தரக்கடவ தென்று அத்யவஸாயம். [துறைபடிந்தாடுகையாவது] குருபரம்பரையில் சொல்லுகிற க்ரமத்தாலே எம்பெருமானைப் பற்றுகை.

A திருவாய் 2-9 B திருவாய் 8-10 C திருவிருத்தம் 93 D முதல் திருவ 67

பகல் பரஹிம்ஸை பண்ணி, இராவெல்லாம் மறந்து கிடந்து உருகி, விடிந்தால் பரஹிம்ஸையிலே புகும். நடுவே அல்பகாலம் ஸத்வம் தலையெடுத்து வெளிச்செறிப்புள்ள காலம்; மனஸ்ஸு ஸ்தி₂ரமாம் காலம். முன்பு தான் தனக்குக் கடவனுயிருக்கும். பின்பு எம்பெருமானுக்கு ப₄ரமாயிருக்கும். நடுவிலுணர்ச்சியிறே இக்காலம். மாறனேர் நம்பி சரமதி₃சையில் கலக்கங்கண்டு ப₄யப்பட்ட பெரியநம்பிக்கு எம்பெருமானுர் ப₄யந்தீர அருளிச்செய்த ஸ்லோகங்களிவை. 1. "ஸ்தி₂தே மநஸி" இத்யாதி₃. இவை எங்ஙனேயென்ன; ஸ்ரீவராஹ எம்பெருமான் ஸ்ரீபூ₄மிப்பிராட்டிக்கு அருளிச்செய்தாரென்றார். ஸ்ரீ வராஹவெம்பெருமான் உம்மைப்போலே ஆஸ்ரிதபக்ஷபாதி; அவன் வார்த்தையொழிய என்போல்வார் மத்₄யஸ்த₂ர் வார்த்தையுண்டாகில் சொல்லுமென்ன, 2. "நமே ப₄க்த: ப்ரணஸ்யதி" இத்யாதி₃களடைய உம்மைப்போல்வார் வார்த்தையாயிராகின்றதென்ன, "இந்த ஜ்ஞானமுடையவனுக்குப் புநர்ஜன்மமில்லை என்னுமிடத்துக்கு ப்ரமாணமுண்டோ?" என்ன, 3. "த்யக்த்வா தே₃ஹம் புநர்ஜந்ம நைதி மாமேதி ஸோர்ஜுந" என்று உண்டென்றருளிச் செய்தார். இவற்றைக் கொண்டு பெரியநம்பி பரீதரானுர்.

அந்திமஸ்ம்ருதியில்லையென்று அஞ்சவேண்டா, புநர்ஜந்முண்டென்று அஞ்சவேண்டா இந்த ஜ்ஞாநமுடையவனுக்கு. ஆளவந்தார் கோஷ்டி₂யிலே, "ஸம்ஸாரிக்கு எம்பெருமான் ஸந்நிதி₄யில் விண்ணப்பம் செய்யவடுப்பதென்?" என்ன, சில முதலிகள் 4. "மூடோ₄யம்" இத்யாதி₃ க்ஷேத்ரப₃ந்து₄வின் ஸ்லோகத்தை விண்ணப்பம் செய்கை அழகிதென்ன, ஆளவந்தார் 'அதிலே பெருந்தேவையுண்டு; நமக்காவது 5. "ஸோஹம்தே" என்கிற காளியன் ஸ்லோகமே' என்றருளிச்செய்தார். A "பகல் கண்டேன் நாரணனைக் கண்டேன்"—என்னுடைய ஆதி₃த்யனுதி₃த்தான்; அஸ்தமியாத ஆதி₃த்யனையும் கண்டேன்; உறங்காத என்னையும் கண்டேன்; முன்பு ஒரு போகியாக உறக்கம். பின்பு ஒரு போகியாக உணர்ச்சி. பெண்களாகையாலே "சிற்றம் சிறுகாலே" என்றபடி; "வெட்டவெடியாலே" என்னுமாபோலே. யோகிகளும் உணர்வதற்கு முன்னே சிறுபெண்களான நாங்கள் உறங்கக்கடவ போதிலே உணரக்கடவ இத்த₄ர்மஹாநியைப்பாராய். B "என்னில் முன்னம் பாரித்து" என்று நீ உணரும் காலத்திலே நாங்களுணர்ந்து வந்தோமென்கை.

(வந்து) இரண்டு ஸ்வரூபத்தையுமழித்தோம். ஸ்வரூபம் நிலையிட்டவர்களிறே. (வந்து) 6, "பத்₃ப்₄யாமபி₃ஹ்₃மாச்சைவ ஸ்தோ₂ஹஸந்த₃ர்ஶநேந ச" என்று சொல்லுகையால் அவ்விருந்தவிடத்தே நாலடியிட்டுச் செல்லில், இட்டஇட்டவடிதோறும் நெஞ்சுளுக்கும்; பொறுக்கமாட்டானென்கை. (வந்துன்னைச் சேவித்து) உன்னை வேண்டாதே ஸாத₄காலத்திலே ரஸிக்கிற உன்னைச்சேவித்து. 7. "ஸுஸுகம் கர்த்துமவ்யயம்". அதுக்குமேலே ஒரு அஞ்ஜலி உண்டறுக்கமாட்டாத உன்னைச் சேவித்து. (உன்னைச்சேவித்து) அத்தலை இத்தலையாயிற்றே. ஸேவ்யரான நாங்கள் ஸேவகரானபடி. 8 "ஸுக்₃ரீவம் நாதி₃மிச்ச₂தி" என்று காலம் பார்த்திருப்பார்; லங்கையில் சென்று ஸ்ரீவிபீ₄ஷணழ்வானைக் காலம்பார்த்திருந்தவனன்றே.

A இர-திருவ 81. B திருவாய் 9-6-10.

(உன் பொற்றுமரையடியே) ஆற்றுமை ஸ்வரூபமாகையால் அடைவுகெட மேல் விழுந்தபடி. (அடியே போற்றும் பொருள்) சூடவந்த பூவுக்கு விலையிடுவாரைப் போலே; உனதுபாலென்றுமாம். உபாயோபேயங்களிரண்டும் தானே. ஸ்வீகாரமாத்ரத்தில் நிற்கப்போகாமை போற்றுகிறபடி. ருசிக்கவ்வருகுபட்டால் பலத்திலே மூளுமத்தனை. கவிழ்ந்து நிற்கச்செய்தே விண்ணப்பம் செய்கிறது. (கேளாய்) இவர்கள், அடியே போற்றுநிற்க, தான் இவர்கள் காலைப் பிடிக்கக் கணிசியாநின்றுனென்கை. 'நாங்கள் முன்னே நிற்கில் வார்த்தைகேட்கவொண்ணுதோ?' என்கை.

(பெற்றம் மேய்த்துண்ணும் குலத்தில் பிறந்த நீ) 'கேட்கப்புகாநின்றதோ?' என்ன; "நீயன்றே முத்தீமை செய்தாய்" என்ன; "எங்ஙனே?" என்ன; என்றும் கேட்டுப்போகக்கடவதான நீ வந்து இக்குலத்திலே பிறந்து இட்டீடுகொண்டு எளியனானென்கை. நாங்கள் நீயிருந்தவிடத்திலே வந்து பிறந்தோமோ? வஸிஷ்டாதிகள் விலக்குமிடத்தே வந்தோமோ? (குற்றேவலெங்களைக் கொள்ளாமல் போகாது) பெரும்பசியிலே உண்ணப்புக்கவன் கலத்திலே கோலேழுங்கண்டால் பின்னை உண்ணுதே போகட்டுப்போமாபோலே, ஸப்தாதி விஷயங்கள் தாரகமாயிருக்கிற எங்களை வடிவழகைக்காட்டி A "உண்ணும் சோறு பருகு நீர் தின்னும் வெற்றிலையுமெல்லாங் கண்ணனெம்பெருமான்" என்னப்பண்ணி, ஸ்வரூபானுரூபமான அடிமை தாராதே போகைக்கு உன்தரமோ? என்கை. B "உண்டிட்டாயினியுண்டொழியாய்". நீர் விளாவி வைத்தோ போகப்பார்த்தது? 1. "நிவேதயதமாம் கூஷிப்ரம்" 2. "அஹமந்நமஹமந்தமஹமந்நம்". (எங்களை) 3. "வைதர்ம்யம் நேஹ வித்யதே". (போகாது) உன்தரமோ நாங்கள்; நீதான்உனக்குரியையோ? C "என்னை நெகிழ்க்கிலும்" இத்யாதி. நப்பின்னைப் பிராட்டி பரிகரம். ஆணையிட்டவர்கள் பெண்பிள்ளையன்றே?

(இற்றைப்பறைகொள்வானன்றுகாண்) இவர்கள் சொல்லிற்றுக்கேட்டு, 'இவர்கள்நம்மை விடாக்களாயிருந்தார்கள்; நம்மைத்தடுத்தும் வளைத்தும் கொள்வர்கள்" என்று, "பறையை யெடுத்துக்கொள்ளுங்கோள்" என்ன, 4. "தேஹி மே தாதாமி தே" என்று ஒருங்கையாலே கும்பிட்டு ஒருகையாலே ப்ரயோஜனம் கொண்டு போமவர்களோ நாங்கள்? (கோவிந்தா) யதாஸ்ருதக்ராஹியாயிருந்தாய். 'கெடுவாய்! நாங்கள இறைப் பறைகொள்வானன்றுகாண்' என்று பட்டர் அருளிச்செய்த வார்த்தை. இடையனுகையாலே அபிதாவ்ருத்தி போமித்தனை; தாத்பர்யவ்ருத்தி போகாதென்கை. D "போகுமம்பி" என்று சொல்ல, வரநிற்குமவனல்லையோ? என்கை. பசுக்களின் பின்னே திரிவார்க்கு ஸ்ரோத்ரியராகமுடியுமோ?

ஆனால் செய்யவேண்டுவதென்னென்ன:— (எற்றைக்கும்) 5. "ந காலஸ்தத்ர வை ப்ரபு:" என்று சொல்லுகிற பரமபதத்தில் போனாலும், (ஏழேழ் பிறவிக்கும்) இங்கே பிறந்தாலும் ஒக்கப்பிறக்கவேணும். க்ருஷ்ணனும் பெண்களுமாய், புறப்படில் அமையுமென்கை. அவனும் E "எதிர்சூழல்" என்று இவர்களைப் பெறவேணுமென்று முற்கோலிப் பிறவாநிற்கும் என்றுமாம். இளையபெருமாள் படைவீட்டிலும் காட்டிலுமொக்க அடிமைசெய்தாற்போலே, 6. தேவத்வே தேவதேஹேயம் மனுஷ்யத்வே ச மாநுஷீ" ஆகவேணுமென்கிறார்கள்.

A திருவாய் 6—7—1. B திருவாய் 10-10-6. C திருவாய் 1-7-8. D திருவாய் 6-2-2. E திருவாய் 2-7-6.

(உன்தன்னோடுற்றோமேயாவோம்) ஒருறவைக்குறித்து அதுவாகவேணு மென்னுதொழிந்தது-எல்லாவுறவும் நீயேயாகவேணுமென்கை. 1. "மாதா பிதா ப்₄ராதா நிவாஸஸ்ஸரணம் ஸுஹ்ருத்₃க₃திர்நாராயண: " என்றும், 2. "க்ருஷ்ணஸ்ரயா: க்ருஷ்ணபா₃லா: க்ருஷ்ண நாத₂ாஸ்ச பாண்ட₃வா:"என்றும் A "சேலேய்கண்ணியரும்" இத்யாத்₃யுப்படியே. (உற்றோமேயாவோம்) உதா₃ரத்தெறிப்புண்டாகவேணும். 3. "நாராயணஸ்த்வம்". 4. "ப₄க்தாநாத்மஸரீரவத்". இடையபெருமாள் வேலேற்றபோது நீபட்டாட்டபோலே உனக்கொன்றுவந்தால் நாங்கள் முடியும் ப்ரக்ருதிகளாகவேணும். (உனக்கே) உனக்குமெனக்கும் பொதுவான அடிமையன்று. B "எனக்கேயாட்செய்" என்னுமாபோலே ஆட்செய்யவேணும். ஸ்ரீப₄ரதாழ்வானப்போலே கிடவென்றவிடத்திலே கிடக்குமவர்களன்று. இடையபெருமானைப் போலே 5. "அஹம் ஸர்வம் கரிஷ்யாமி" என்று அடிமைசெய்து உஜ்ஜீவிக்கவேணுமென்கை.

(எற்றைநங்காமங்கள் மாற்று) கையும் திருவாழியுமாய் நாங்கள்தொழ, மேன்மைகாட்டியிருக்கவொண்ணாது. நீ 'பெண்காள்' என்ன, நாங்கள் 'க்ருஷ்ணனே' என்றுஊடினால் சிறுமுற்றத்திலே உன்னை ஒரு பாச்சல் பாயவேணும். 6. "ப₄வோநாந்யத்ர கச்ச₂தி" என்றவனை இசைவித்தாருண்டோ? எங்கள் வாஸனையாலும் உன் தோள்தடிப்பாலுமாகவேண்டா; உன் தரமாகாமலிருக்கிற இருப்பைத்தவிர்க்கவேணும்.

29.

ஸ்வாபதே₃ஸ்வ்யாக்₂யாநம்—இருபத்தொன்பதாம்பாட்டு

அ—இருபத்தொன்பதாம்பாட்டு. (சிற்றம்இத்யாதி₃) இப்பாட்டில், உபேயஸ்வரூபத்தை விவரிக்கிறார்கள்.

வ்யா—(சிற்றம்இத்யாதி₃) ஸத்வோத்தரமான காலத்திலே ஆற்றுமையாலே வந்து, வருகை மிகை என்று இருக்கும் உன்னைச்சேவித்து. (உன் பொற்றாமரை இத்யாதி₃) ப்ராப்தமாய், ஸ்ப்ருஹணீயமாய், ஸௌக₃ந்த்₄யஸௌகுமார்யலாவண்யங்களாலே பரமபோ₄க்₃யமான உன் திருவடிகளையே மங்க₃ளாஶாஸநம்பண்ணுகைக்கு ப்ரயோஜநத்தைக் கேளாய். (பெற்றம் இத்யாதி₃) ஸ்வரக்ஷ்யரக்ஷணம்பண்ணித் தான் ஜீவிக்கிற குலத்தில் பிறந்த நீ. ரக்ஷகனை நீ ரக்ஷ்யரானஎங்களைக் கைங்கர்யம் கொள்ளாமலிருக்கவொண்ணாது; ரக்ஷணரூபகார்யமில்லாதபோது ரக்ஷ்யரக்ஷகபா₄வம் ஜீவியாதிறே. இப்படி அபேக்ஷிக்க, "கைங்கர்யமாவது என்? நீங்கள் முதலில் சொன்னபடியே, பறையைக் கொள்ளுங்கோள்" என்று பறையைக்கொடுக்க; (இற்றைப்பறைகொள்வானன்றுகாண் கோவிந்தா) இந்தப்பறையைக் கொள்ளுகிற பேர்களன்று நாங்கள்: நீ தாத்பர்யக்₃ராஹியன்றியே யதா₂ஶ்ருதக்₃ராஹியாயிருந்தாய். 'ஆனால், உங்களுக்கு அத்தால் ஏது?' என்ன; (எற்றைக்கும் இத்யாதி₃) ஸர்வதே₃ஶ ஸர்வகால ஸர்வாவஸ்தை₂களிலும் உன்னேடே ஏகதா₄ர்மியென்னலாம்படி ஸம்ப₃ந்தி₄த்திருக்கக்கடவோம். (உனக்கே இத்யாதி₃) ஸம்ப₃ந்தி₄த்திருந்து எங்கள் ரஸத்துக்கு உறுப்பாகையுமன்றிக்கே, உனக்கும் எங்களுக்கும் பிறக்கும் ரஸத்துக்கே உறுப்பாகையுமன்றிக்கே, உன்னுடைய ரஸத்துக்கே உறுப்பாக (அநந்யார்ஹஶேஷபூ₄தரான) நாம்

A திருவாய் 5—1—8., B திருவாய் 2—9—4.

முப்பதாம் பாட்டு

வங்கக் கடல்கடைந்த மாதவனைக் கேசவனைத்
திங்கள் திருமுகத்துச் சேயிழையார் சென்றிறைஞ்சி
அங்கப் பறைகொண்ட வாற்றை யணிபுதுவைப்
பைங்கமலத் தண்டெரியற் பட்டர்பிரான் கோதைசொன்ன
சங்கத் தமிழ்மாலை முப்பதுந் தப்பாமே
இங்கிப் பரிசுரைப்பா ரீரிரண்டு மால்வரைத்தோள்
செங்கண் திருமுகத்துச் செல்வத் திருமாலால்
எங்குந் திருவருள்பெற் றின்புறுவ ரெம்பாவாய்.

ஆண்டாள் திருவடிகளே சரணம்

பதவுரை :— வங்கம் கடல்—கப்பல்களோடுகூடிய திருப்பாற்கடலில், கடைந்த—(தேவர்களுக்காகக்) கடைந்த, மாதவனை — ஸ்ரீயஃபதியான, கேசவனை—கண்ணபிரானை, திங்கள் திரு முகத்து சே இழையார்—சந்திரன் போன்ற அழகிய முகத்தையும் செவ்விய ஆபரணங்களோடுகூடிய ஆய்ச்சிகள், சென்று — அடைந்து, இறைஞ்சி — வணங்கி, அங்கு—அத்திருவாய்ப்பாடியில், அப் பறை கொண்ட ஆற்றை — பிரஸித்தமான (தங்கள்) புருஷார்த்தத்தைப்பெற்ற வ்ருத்தாந்தத்தை, அணி புதுவை — அழகிய ஸ்ரீவில்லிபுத்தூரில் உதித்த, பைங்கமலம் தண் தெரியல் பட்டர்பிரான் — பசுமை பொருந்திய தாமரை மலர்களினுலான குளிர்ந்த மாலையையுடைய பெரியாழ்வாருடைய (திருமகளான), கோதை — ஆண்டாள், சொன்ன — அருளிச்செய்த, சங்கம் தமிழ் மாலை முப்பதும் — திரள்திரளாக அநுபவிக்கவேண்டிய தமிழ்மாலையாகிய இம்முப்பது பாசுரங்களையும், தப்பாமே — தப்பாமல், இங்கு—இத்திலத்தில், இ பரிசு—இவ்விதமாக, உரைப்பார்—ஓதுமவர்கள், ஈர் இரண்டு மால் வரை தோள்—பெரிய மலைபோன்ற நான்கு திருத்தோள்களையுடையவனும், செம் கண் திருமுகத்து—சிவந்த கண்களையுடைய திருமுகத்தையுடையவனும், செல்வம்—ஐச்வர்யத்தையுடையவனும், திருமாலால்—ஸ்ரீமானுமான எம்பெருமானுலே, எங்கும்—எல்லாவிடத்தும், திரு அருள் பெற்று—(அவனுடைய) க்ருபையைப்பெற்று, இன்புறுவர் — ஆனந்தமுறுவர்.

ஸ்வா:— தாஸவ்ருத்தியைப் பண்ணக்கடவோம் (மற்றைஇத்யாதி) இதுக்குப் புறம்பான நம்முடைய அபிமாநக்ராஸ்தமான ப்ரயோஜநங்களைப் போக்கு.

கீழ் "பறை" என்று மறைத்துச்சொன்ன அர்த்தத்தை, இப்பாட்டில், அவனுக்கு உகப்புக்காகப் புகராகப்பண்ணும் அடிமையென்று விஸ்தீகரித்துச் சொல்லுகிறார்கள். "பெற்றம்மேய்த்துண்ணும் குலம்" என்று-ஜ்ஞாநஜந்மத்தைச் சொல்லுகிறது—ஜ்ஞாதாக்கள் ஆந்ருசம்ஸ்ய ப்ரதாநராய்ப் பராநர்த்தமும் பொறுக்கமாட்டாதே பிறர் உஜ்ஜீவிக்கும்படி ஹிதப்ரவர்த்தநம் பண்ணுகையைப் பற்ற. "பொற்றுமரையடியே போற்றும் பொருள் கேளாய்" என்றவர்கள் தாங்களே "குற்றேவல் எங்களைக் கொள்ளாமற்போகாது" என்று கைங்கர்யத்தை ப்ரார்த்திக்கையாலே கைங்கர்யந்தானும் மங்களாசாஸநரூபமானபடியாலே மங்களாசாஸநத்துக்குப் பலமாக அவன் கொடுக்கவேண்டியதும் இவர்கள் கொள்ள வேண்டியதும் மங்களாசாஸநமே என்றதாய்த்து.

"சிற்றம் சிறுகாலே-போற்றும்பொருள் கேளாய்" என்கையாலே - ரஜஸ் தமஸ்ஸுக்களாலே கலங்கி தேஹாநுபந்திகளான த்ருஷ்ட பலங்களை அடியோங்கள் அபேக்ஷித்தாலும் ஹிதபரனை நீ கேள்விகொள்ளவும் கடவையல்லை, கொடுக்கக்கடவையுமல்லை என்றதாய்த்து.

மூவாயிரப்படி — முப்பதாம் பாட்டு

அவ:— a நிக₃₄த்தில், இப்ரப₃ந்த₄ம் கற்ருர், பிராட்டியாலும் எம் பெருமானலும் ஸர்வகாலமும் விஷயீகரிக்கப்படுவர்கள் என்கிருர்கள். b கற்ரு ருக்கு b_1 அநுஷ்டி₂த்தாரோபாதியும், b_3 அநுகரித்தாரோபாதியும் ப₄லம் ஸித்₄தி₃க்கு மென்கை. c "கன்றிழந்த தலைநாகு தோற்கன்றுக்கும் இரங்குமாபோலே இப் பாசுரங் கொண்டு புக நமக்கும் ப₄லிக்கும்" என்று ப₄ட்டர் அருளிச்செய்வர்.

வ்யா:— d (வங்கக்கடல்) e கடல் கடையாநிற்க, மரக்கலம் அலையாத படி ஸடைந்த e_2 நொய்ப்பம். f கடைந்தபோது சுழன்று வருகையாலே கடல டைய மரக்கலமாய் நின்றபடி என்றுமாம். g ப்ரயோஜநாந்தரபரருக்கும் உடம்பு நோவக் கடல்கடைந்து அபேக்ஷிதஸம்வித₃தா₄நம் பண்ணும் ஶீலவா னென்கை. b க்ருஷ்ணனேயாகில் கவிபாடிற்று, க்ஷீராப்₃தி₄மத₂நம் பண்ணி னவனைச் சொல்லுகை பின்னைச் சேருமோ? என்னில்: — A "விண்ணவரமுதுண அமுதல்வரும் பெண்ணமுதுண்டவெம்பெருமானே" என்று — தே₃வகார்யமென்று

பெ. அ. முப்பதாம் பாட்டு. (வங்கக்கடல் இத்யாதி₃) a "திருமாலால் எங்கும் திரு வருள் பெற்றின்புறுவர்" என்றத்தைக் கடாக்ஷித்து அவதாரிகை அருளிச்செய்கிருர் (நிக₃மத் தில் இத்யாதி₃) b திருவருள் பெற்றின்புறுகையை த்₃ருஷ்டாந்த பூர்வகம் விவரிக்கிருர் (கற்ருர் இத்யாதி₃) b_2 "சேயிழையார் சென்றிறைஞ்சி" என்றத்தைப் பற்ற (அநுஷ்டி₂த்தார்) என்றது. b_3 "கோதை சொன்ன" என்றத்தைப் பற்ற (அநுகரித்தார்) என்றது. c அநுஷ்டி₂த்தார்க்கும் அநுகரித்தார்க்குமுள்ள ப₂லம் இத்தைச் சொன்ன மாத்ரத்திலே ஸித்₃தி₄க்குமோவென்ன' அருளிச்செய்கிருர் (கன்றிழந்த இத்யாதி₃).

d, e, f ' 'கடல்கடைந்த" என்னுமல், "வங்கக்கடல்" என்று விஶேஷித்ததுக்கு இரண்டு தாத்பர்யம் அருளிச்செய்கிருர் (கடல் இத்யாதி₃ வாக்ய த்₃வயத்தாலே) e_2 நொய்ப் பம் - ஸாமர்த்₂யம். d திருப்பாற்கடலுக்கு வங்கஸம்ப₃ந்த₄ம் சொல்லுகிறது - இந்தக்கட

சி. அ. முப்பதாம் பாட்டு. (வங்கக்கடல்) b_2 (அனுஷ்டி₂த்தார்) கோ₃பிமார் b_3 (அனுகரித்தார்) ஆண்டாள். c பரமப₄க்தியுண்டான நாய்ச்சியார்க்குண்டானது ஸப்₃த₃ மாத்ரமுண்டானுர்க்கு வருமோ? என்ன அருளிச்செய்கிருர் (கன்றிழந்த தகூநாகித்யாதி₃) d, e, f "கடல் கடைந்த" என்னுமல் "வங்கக்கடல்" என்று விஶேஷிக்கிறதுக்கு இரண்டு தாத்பர்யம். கடல் கடையாநிற்கச்செய்தே அதுக்குள்ளே இருக்கிற மரக்கலம் அலை யாதபடி கடைந்த நொய்ப்பமென்னுதல்; கடைந்தபோது ஸமுத்₃ரம் சுழன்று வருகை யாலே அதுக்குள்ளே இருக்கிற மரக்கலங்கள் சுழன்று வருமாகையாலே கடலடைய மரக்கலமாய் நின்றபடி என்னவுமாம். e_2 (நொய்ப்பம்) — ஸாமர்த்₂யம். d வங்கம் — மரக் கலம்; திருப்பாற்கடலுக்கு வங்க ஸம்ப₃ந்த₄ம் சொல்லுகிறது இந்தக் கடல் ஸாம் யத்தைப் பற்ற. g "வங்கக்கடல் கடைந்த" என்று க்ஷீராப்₃தி₄மத₂நம் பண்ணின வனைச் சொல்லுவானென்? என்ற ஶங்கைக்கு ஒரு பரிஹாரமருளிச்செய்கிருர் (ப்ரயோஜ

A பெரிய திரு 6-1-2

ஒரு வ்யாஜத்தையிட்டுப் பெரியபிராட்டியாகிற பெண்ணமுதத்தைப் பெறுகைக் காகக் கடல்கடைந்தபடி — ஊரார் கார்யத்தை ஒரு வ்யாஜமாக்கிப் பெண்களைப் பெறுகைக்காக நோன்பிலே அந்வயிப்பித்த க்ருஷ்ணனுடைய ஸ்வபாவத்தோடு ஸத்₃ருஶமாயிருக்கையாலே சொல்லுகிறார்கள். i (மாதவனை) j ஆஶ்ரயணீயமுமாய், போ₄க்₃யமுமாயிருக்கும் தத்வம் லக்ஷ்மீஸநாத₂மாயிருக்கும் என்கை. k ஆஶ்ரயித்தார் குற்றத்தைப் பொறுப்பித்து அபேக்ஷிதங்களைச் செய்விப்பார் அருகே உண்டென்கை. (கடல்கடைந்த மாதவனை) கடல்கடைந்து பிராட்டியை லபி₄த்தவனை. l (கேசவனை) m விரோதி₄நிரஸநஸ்வபா₄வனை. n ஸ்த்ரீத்வப்ரயுக்தமான ஸ்வாதந்த்ர்யத்தையும் அந்யஶேஷத்வத்தையும் போக்கினவனை. "(மாதவனைக் கேசவனை) o A 'அலைகடல் கடைந்து அதனுட் கண்ணுதல் நஞ்சுண்ணக் கண்டவனே, விண்ணவர்முதுல அமுதில் வரும் பெண்ணமுதுண்ட எம்பெரு மானே' என்கிறபடியே — தான் ஸாக்ஷாத் அம்ருதத்தையுண்டு ப்₃ரஹ்மாதி₃ களுக்குக் கோதைக் கொடுத்தான்" என்று பட்டர் அருளிச்செய்வர்.

p (திங்கள் p_2 திருமுகம்) q க்ருஷ்ண ஸம்ஶ்லேஷத்தாலே குளிர்ந்து q_2 மலர்ந்த முகம். r "கதிர்மதியம்போல் முகத்தான்" (1) என்று அநபி₄பவ நீயத்வமும் உண்டு — அங்கு; அநுகூலர்க்கேயான முகமாகையாலே "திங்கள் திருமுகம்" என்கிறார்கள் — இங்கு; இவனை அநுப₄விப்பார் முகமும் இப்படியே யிறே யிருப்பது. B மதிமுக மடந்தையரிறை. s (கேயிழையார்) t "சூடகமே" (27)

பெ.அ. லோட்டை ஸாம்யத்தைப் பற்ற. o 1. "க இதிப்₃ரஹ்மணே நாம"என்றதைப்பற்ற "கேசவன்" என்றதுக்கு அர்த்தா₂ந்தரம் அருளிச்செய்கிறார் (அலைகடல் இத்யாதி₃).

p_2, q_2 "திரு" என்று - விகாஸத்தாலுண்டான காந்தியைச் சொல்லுகிறதாய் அருளிச்செய்கிறார் (மலர்ந்த என்று) s, t, u, v "சே" என்று - அழகாய், "இழை" என்று - ஆப₄ரணமாய், "சூடகம்" (27) இத்யாதி₃யில் சொன்ன ஆப₄ரணங்களாதல், க்ருஷ்ணவிஷயீ

சி.அ. நாந்தரேத்யாதி₃) h ஶங்காபூர்வகமாக இரண்டாவது (க்ருஷ்ணனை இத்யாதி₃) i "மாதவனை" என்றதுக்கு மூன்று தாத்பர்யம். j முந்தினது "கடல் கடைந்த" என்றதைக் கட்டாக்ஷித்து அருளிச்செய்கிறார் (ஆஶ்ரயணீயமுமித்யாதி₃) k இரண்டாவது (ஆஶ்ரயித்தாரித்யாதி₃) o (கடல் கடைந்த மாதவனைக் கேசவனை) என்று பிராட்டிக்காகக் கடல் கடைந்து தான் பிராட்டியை லபி₄த்து ப்₃ரஹ்மாதி₃களுக்குக் கோதைக் கொடுத்தான் என்னுதல். l, m, n "கேசவனை" என்றது கேஶிஹந்தாவென்று விரோதி₄ நிரஸனம் சொன்னதுக்கு ஹார்த₃மான தாத்பர்யம் (ஸ்த்ரீத்வப்ரயுக்தமித்யாதி₃) o அன்றிக்கே "கேசவனை" என்றதை "மாதவனை" என்றத்தோடே கூட்டி 1. "க இதி ப்₃ரஹ்மண:" இதி குத்₃ருவசனக்ரமேண ப்₃ரஹ்மருத்₃ராதி₃களுக்கு நியாமகன் என்றபடியாய், தாத்பர்யாந்தரமருளிச் செய்கிறார் .(அலைகடல் கடைந்தித்யாதி₃) p, q, r "திங்கள் திருமுகம்" என்றதுக்கு இரண்டு பொருள். s சேய் — அழகு; இழை — ஆப₄ரணம். s, t, u, v சேயிழைக்கு மூன்று பொருள் — (சூடகமித்யாதி₃யும்) (க்ருஷ்ணவிஷயீகார இத்யாதி₃யும்) (க்ருஷ்ண

A பெரிய திரு 6—1—2. B திருவாய் 10—9—10.

இத்யாதி₃யில் தாங்கள் அபேக்ஷித்தபடியே அவனும் அவளும் கூட இருந்து பூட்டின ஆப₄ரணத்தையுடையவர்கள். u க்ருஷ்ண விஷயீகாரயோக்₃யதையாகிற ஆப₄ரணத்தை உடையவர்கள். v க்ருஷ்ண விஷயீகாரத்தால் பிறந்த புகராலே v₂ ஒருபடி ஆப₄ரணம் பூண்டாற்போலேயிருக்கிறவர்கள். (சென்று) இவ் வொப்பனையோடே வரப் பார்த்திருக்குமளவல்லாத த்வரையைச் சொல்லு கிறது. (இறைஞ்சி) "அன்றிவ்வுலக மளந்தாய் அடி போற்றி" (24) என்கிற படியே அவனுக்கு மங்க₃ளாஶாஸநம்பண்ணி.

(அங்கு) திருவாய்ப்பாடியிலே. (அப்பறைகொண்ட w ஆற்றை) நாட்டுக்குப் "பறை" என்று ஒரு வ்யாஜத்தையிட்டு அடிமைகொண்டபடியை.

x (அணிபுதுவை) ஸம்ஸாரத்துக்கு நாயகக்கல்லான ஶ்ரீவில்லிபுத்தூர். y (பைங்கமலத்தண் y₂ தெரியல்) z ப்₃ராஹ்மணர்க்குத் தாமரைத்தாராகையாலே சொல்லுகிறது. (பட்டர்பிரான் கோதை சொன்ன) ஆண்டாள் அநுகார ப்ரகாரத் தாலே அநுப₄விக்கச் சொன்ன. 1. "ஸ ஹோவாச வ்யாஸ: பாராஶர்ய:" என்று பராஶரபுத்ரனென்று ஆப்திக்குச் சொன்னாற்போலே, பெரியாழ்வார் மகளாகை யாலே சொன்ன அர்த்த₃த்தில் அர்த்த₃வாத₃மில்லை.

a (சங்கத் தமிழ்மாலை) A "குழாங்களாய்" என்னுமாபோலே திரள் திரளாக அநுப₄விக்கவேண்டும் ப்ரப₃ந்த₄ம். பஞ்சலக்ஷங் குடியிற் பெண்கள் திரள் திரளாக அநுப₄வித்த ப்ரப₃ந்த₄மிறே. (தமிழ்மாலை) பிராட்டி ஆண்டாளானாற்போலே, b உபநிஷத்து தமிழானபடி. c (மாலை) d பாவநமான அளவன்றிக்கே பே₄த₃ யமுமாயிருக்கையும், d_2 தலையாலே சுமக்கவேண்டியிருக்கையும். e (முப்பதும்

பெ.அ. காரமாகிற ஆப₄ரணமாதல், அத்தால் வந்த புகராதல் என்று மூன்றுவித₄மாக அருளிச்செய்கிறார் (சூடகம் இத்யாதி₃) v_2 (ஒருபடி) என்றது - முத்துப்படி, பவளப்படி என்றாற்போலே சில ஆப₄ரணங்களென்றபடி.

y, z பை - பசுமையாய், கமலம் - கமலத்தினுடைய, தண் - குளிர்ந்த, தெரியல் - மாலை என்று ஸப்₃த₃ார்த்த₃ம் திருவுள்ளம்பற்றி, பெரியாழ்வார்க்கு அத்தை நிருபகமாகச் சொன்ன துக்கு பூர்வம் அருளிச்செய்கிறார் (ப்₃ராஹ்மணர்க்கு இத்யாதி₃)

c, d மாலை - புஷ்பமாலிகையாய், அத்தாலே - இப்ரப₃ந்த₄த்தைச் சொல்லுகைக்கு அதுக்கும் இதுக்குமுண்டான ஸாத்₃ருஶ்யத்தைக் காட்டுகிறார் (பாவநமான இத்யாதி₃) d_2 தலையாலே சுமக்கவேண்டியிருக்கையாவது — ஶ்ரீர:கம்பநேந அநுஸந்தி₄க்கவேண்டி யிருக்கை, இப்படி ஶ்ரீர:கம்பதம்பண்ணும்போது பிறர் கொண்டாடும்படியிருக்கை ஶ்ரீரூ பூ₄ஷணமாயிருக்கை என்றபடி. f_2 'ஏகாவலி' என்றது - ஒற்றைவடமான ரத்நமாலிகை.

சி. அ. விஷயீகாரத்தால் பிறந்த இத்யாதி₃யும்) v_2 (ஒருபடி) ஓராப₄ரண ஸமுதா₃யம். w ஆறு — மார்க்கம். x அணி — அழகு. y_2 தெரியல் — மாலை. y "பைங்கமலத்தண்டெரியல் பட்டர்பிரான்" — "பைந்தண் — கமலத்தெரியல்" என்றந்வயமாய், அடிதோயக் குளிர்ந்த தாமரை மாலையையுடைய ப்₃ராஹ்மணோத்தமரான பெரியாழ்வார். a சங்கம்—திரள்; தமிழ் மாலை — ஸமூஹமாக அனுப₄விக்கவேண்டும் ப்ரப₃ந்த₄ம். b, d உபநிஷத்து தமிழாகையாலே பாவ நத்வம். e, f "முப்பதும் தப்பாமே" என்கிற தேகைபோலே ஒன்று தப்பினாலும் ப₂ல

A திருவாய் 2-3-11

தப்பாமே) இதில் ஒரு பாட்டும் குறையாமே. f விலையில்லாத ரத்நங்களாலே செய்த f_1 ஏகாவலியிலே ஒரு ரத்நம் குறைந்தாலும் நெடும்பாழா(டா)யிருக்குமிறே; அப்படியே ஒருபாட்டுக் குறையிலும் பேரிழவாயிருக்குமென்கை.

(இங்கு) பிற்பட்ட காலத்திலே என்னுதல், ஸம்ஸாரத்திலே என்னுதல். g (இப்பரிசு உரைப்பார்) h இப்பாசுரமாத்ரத்தைச் சொல்லுவார். i திருவாய்ப்பாடியிற் பெண்கள் தாங்கள் க்ருஷ்ணநுபவம் பண்ணிப் பெற்றார்கள்; ஆண்டாள் அநுகாரத்தாலே பெற்றாள். ஆகையாலே, இப்ரபந்தம் கற்றார்க்கும் i_1 இந்தப் படியும் கிடைக்கும்.

j (ஈரிரண்டு j_1 மால்வரைத்தோள்) k இவர்களளவு—பாராதே—k_2 பண்டு பாடினவர்கள் சொல்வழியாலே அநுஸந்தி,க்கையாலே தோள்கள் பணைக்கும்; k_3 உகவாதார்க்குத் தோள்கள் இரண்டாய்த் தோற்றும்; k_4 இவர்களுக்குத் தோள்கள் நாலாய்த் தோற்றுமிறே. (செங்கண் திருமுகத்து) அலப்யலாபத்தாலே சிவந்த கண்கள். l (செல்வத் l_1 திருமாலால்) உபயவிபூதியுக்தனான ஸ்ரிய:பதியாலே. m இப்பாட்டில் — m_1 உபக்ரமத்திலே, பிராட்டி ஸம்பந்தம் சொல்லி, முடிவிலும் சொல்லுகையாலே, த்ரயத்திற் சொன்னபடியிலே இங்கும் சொல்லிற்றென்கை.

பெ. அ. g, h இப்பரிசு – இந்த ப்ரகாரமான பாசுரத்தையென்று திருவுள்ளம்பற்றி அருளிச்செய்கிறார் (இப்பாசுரம் இத்யாதி$_3$) i இப்படி விசேஷித்ததுக்கு ப்ரயோஜனம் அருளிச்செய்கிறார் (திருவாய்ப்பாடியில் இத்யாதி$_3$) i_2 "இந்தப்பலம்" என்றது – இன்புறுகையைச் சொல்லுகிறது.

g, j, k ஈரிரண்டு - நாலாய், மால் - பெருத்த வரைபோலேயிருக்கிற தோள்களென்று ஸம்தர்சித்தபடியாய், அதுக்கு "இப்பரிசுரைப்பார்" என்றதைக் கடாக்ஷித்துத் தாத்பர்யம் அருளிச்செய்கிறார் (இவர்கள் இத்யாதி$_3$) k இவர்கள்-கற்றார், k_2 பண்டுபாடினவர்கள் – கோபிமார். k_4 இவர்களுக்கு — கோபிமார்க்கு. m_1 'உபக்ரமத்திலே' என்றது – "மாதவன்" என்றதைப்பற்ற.

சி. அ. மில்லையோ? என்ன அருளிச்செய்கிறார் (விலையில்லாதஇத்யாதி$_3$) g பரிசு — ப்ரகாரம். j_1 மால் — பெருமை. k_2 பண்டுபாடினவர்கள் சொல்வழியாலே அனுஸந்தி,க்கையாவது — திருப்பாவையை அனுஸந்தி,க்கையாலே திருப்பாவை பாடின ஆண்டாளை நினைக்கை. j ஈரிரண்டுமால்வரைத் தோள் — நாலாய், பெரியமலை போன்ற தோள்களையுடையவன். k_3 க்ருஷ்ணனுக்கு நாலு திருத்தோள் உண்டோ? என்ன அருளிச்செய்கிறார் (உகவாதார்க்கித்யாதி$_3$) l செல்வம் — உபய விபூ,த்யைஸ்வர்யம். m (இப்பாட்டில் உபக்ரமத்திலும்) என்றது "மாதவனை" என்றதைப் பற்ற. l_2 "திருமாலால்" என்கையால் ஆஸ்ரயித்தார்

(எங்கும் திருவருள்பெற்று)ந த்₃ருஷ்ட அத்₃ருஷ்டங்களிரண்டிலும் பிராட்டியும் தானும் ஸந்நிஹிதமாம்படி ப்ரஸாத₃த்தைப் பெற்று. (இன்புறுவர்)——ப₄க₃வத் ஸம்ஶ்லேஷத்தால் வந்த ஆநந்த₃ம் பெறுவர். o "விடிவோரை எழுந்திருந்து முப்பதுபாட்டையும் அநுஸந்தி₄த்தல், மாட்டிற்றிலனுகில் 'சிற்றஞ்சிறுகாலே' (29) என்கிற பாட்டை அநுஸந்தி₄த்தல், அதுவும் மாட்டிற்றிலனுகில் o₁ நாம் இருந்த இருப்பை நினைப்பது" என்று ப₄ட்டர் அருளிச்செய்வர். 30.

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே ஶரணம்.

பெ.அ. ந த்₃ருஷ்டஅத்₃ருஷ்டங்கள்- இஹலோகபரலோகங்கள். o 1. "ஆத்மதா₃ஸ்யம் ஹரேः ஸ்வரூம்யம் ஸ்வப₄ாவம் ச ஸதா₃ ஸ்மர" என்கிறபடியே ஶேஷத்வாநுஸந்த₄ாநம் அவஶ்யம் கர்த்தவ்யமாகையாலே, அந்த ஶேஷத்வத்தை ப்ரதிபாதி₃க்கிற இந்த ப்ரப₃ந்த₄ம் நித்யாநுஸந்தே₄யமென்னுமத்தை அபி₄யுக்தோக்திமுகே₂ந அருளிச் செய்கிறார் (விடிவோரை இத்யாதி₃) o₂ 'நாமிருந்தவிருப்பை' என்றது - இந்த ப்ரப₃ந்த₄த்தை அநுஸந்தி₄த்து ஈடு பட்டிருந்த இருப்பை என்றபடி. 30.

சீயர் திருவடிகளே ஶரணம்.

சி அ. குற்றம் பொறுப்பித்து அபேக்ஷிதம் செய்விப்பாரும் அருகே உண்டென்கை. o₂ (நாமிருந்த இருப்பு) திருப்பாவை ப்ரஸாதி₃த்தருளும்போது எழுந்தருளியிருக்குமிருப்பு. 30.

ஜீயர் திருவடிகளே ஶரணம்.

ஆருயிரப்படி — முப்பதாம் பாட்டு

அவ:— முப்பதாம்பாட்டு. காலத்தையும், அதி₄கரிக்கிற மனிச்சரையும், விஷய பூ₄தனுய்நின்று காரியம் தலைக்கட்டுகிற க்ருஷ்ணனையுங்கொண்டாடிக்கொண்டு, ஸங்கல்ப பூர்வகமாக நோன்பிலே உத்₃யோகி₃த்து(1); நோன்புக்கு அங்க₃மாகச் செய்யவேண்டு வனவும் தவிரவேண்டுவனவும் இன்னவென்று கர்த்தவ்யாகர்த்தவ்யவிவேகம் பண்ணி (2); நாம் நமக்கினிதாக நோற்க, இதுக்கு அனுமதிபண்ணி ப்ரீதராயிருக்கிற நாட்டார்க்கு ஆநுஷங்கி₃கமாக அபி₄மத ஸித்₃தி₄ யுண்டாம் என்று சொல்லி (3); த்₃ருஷ்டப₂லங்களுக்கு ஹேது வ்ருஷ்டியாகையாலே, வர்ஷார்த்த₃மாக தே₃வதையை அழைத்து நியமித்து, அத்தால் தாங்கள் கொள்ளும் ப்ரயோஜந முஞ்சொல்லி (4); தாங்கள் உபக்ரமிக்கிற நோன்புக்கு ப்ரதிப₃ந்த₄கமான து₃ஷ்கர் மம் இதிலே உபக்ரமிக்கவே நஶிக்குமென்று பூர்ணமநோரதை₂களாய்ப் புறப் பட்டு (5); ப்ராதிகூல்யநிவ்ருத்தி தொடங்கி ப₄க₃வத ஸஹவாஸமொழியச் செல் லாத தன்மையையுடையராநூரளவுஞ்செல்ல, நடுவு பட்டாரடையக் கூட்டிக்கொள்ள வேண்டுகையாலே (6—15), அநுப₄வரஸத்தில் அபி₄நவையாயிருப்பாளொருத்தியை எழுப்பி (6); ரஸத்தையறிந்துவைத்தே இவர்கள் பேச்சிலினிமையாலே வித்₃தை₄ யாய், பாரவஶ்யதையாலே காற்கடைக்கொண்டு கிடக்கிறளொருத்தியை எழுப்பி (7); எல்லாரும் திரண்டு தன் வாசலிலே வரவேண்டும்படி க்ருஷ்ணனுலேயுண்டான

கொண்டாட்டத்தாலே சால வேண்டப்பாடுடையளாயிருப்பாளொருத்தியை எழுப்பி (8); கூணவித்தையாய்க் கிடக்கச்செய்தேயும் ரஸாந்தரங்கள் செல்லலாம்படியான முறையையுடையாளொருத்தியை எழுப்பி (9); க்ருஷ்ணநுபவத்திலே எப்போதும் இச்சை நடக்கும்படி எல்லாரிலும் அவன் நோக்குடையாளொருத்தியை எழுப்பி (10); ஊர் ஒரு தட்டும், தான் ஒரு தட்டுமாம்படியான ஆபிஜாத்யமுடையாளொருத்தியைஎழுப்பி (11); க்ருஷ்ணனைப் பிரியாமையாலுண்டான ஸம்பத்தையுடையாளெருவனேடே ஸம்பந்தமுடையாளொருத்தியை எழுப்பி(12); தன் அவயவசோபையை அநுஸந்தித்துக்கிடக்கிறாளொருத்தியை எழுப்பி (13); தான் எல்லாரையும் எழுப்புவதாகச் சொல்லிவைத்து ப்ரதிஜ்ஞையைப்பண்ணி மறந்து கலங்கிக்கிடக்கிறாளொருத்தியை எழுப்பி (14); பின்பு எல்லாருடையவும் திரள்காணவேண்டியிருப்பாளொருத்தியை எழுப்பி (15); எல்லாரும் திரண்டு திருவாசல் காக்கும் முதலியை எழுப்பி (16); ஸ்ரீநந்தகோபர், யசோதைப்பிராட்டி, நம்பிமூத்தபிரான், இவர்களைச் சொல்லும் க்ரமங்கள் குறையாமல் சொல்லி எழுப்பி (17); நப்பின்னைப் பிராட்டியுடைய செருக்கையும், லீலாரஸங்களையும், போகவைபவத்தையும், ஸௌகுமார்யத்தையும், ரூபஸௌந்தர்யத்தையும், பர்த்ருவால்லப்யத்தையும், புருஷ்கார வைபவத்தையும் சொல்லி எழுப்பி (18,19,20); க்ருஷ்ணனுடைய ஆபிஜாத்யாதி குணங்களைச் சொல்லிக்கொண்டு (21); தாங்கள் குணஜிதைகளாய் வந்தபடியையும், பக்நாபி மாநைகளாய், கடாக்ஷகதாரகைகளாய் வந்தபடியையும் அறிவித்து (22); எங்களுக்காகப் புறப்பட்டு ஓரிருப்பிருக்கவேணும் என்று (23); புறப்பட்டிருந்த வநந்தரர், அவ்விருப்புக்கு மங்களாசாஸநம்பண்ணி (24); 'போந்ததென்?' என்று அவன் கேட்க, உன் பக்கலிலே அர்த்திகளாய் வந்தோமென்ன (25); அபேக்ஷிதம் ஏதென்ன, நோன்புக்கு உபகரணங்கள் வேண்டிக்கொண்டு (26); நோற்றுல் பெறும் ஸம்மாநங்களையும் அபேக்ஷித்து (27); தங்கள் நினைவிலுள்ளனவையும் பலிக்கும்படி தங்கள் சிறுமையையும், அவன் பெருமையையும், அவனேடுள்ள வுறவையுஞ் சொல்லிக்கொண்டு தப்புக்களுக்குப் பொறைகொண்டு (28); தங்கள் நினைவையும் இன்னதென்று க்ரமப்பட வெளியிட்டபேக்ஷிக்க (29); அவனும் 'அப்படியே செய்கிறோம்' என்று தலை குலுக்கப்பெற்று க்ருதார்த்தைகளாய்விட்ட க்ரமத்தை, பிற்பட்ட காலத்திலே அந்த பாவ வ்ருத்தியோடே வடபெருங்கோயிலுடையானை அபேக்ஷித்து ஸமகாலரஸமாக நடத்தின ஆண்டாள், 'நம்முடைய பாவவ்ருத்தியில்லே யேயாகிலும் இப்ரபந்தத்தினுடைய பாடதாரணத்தாலே நாம்பெற்ற பேறு பெறுவர்கள்' என்று நிகமிக்கிறாள் (30); ஸமகாலத்திலே அநுஷ்டிதாரோபாதியும் அநந்தரகாலத்தில் அநுகரித்தாளோபாதியும் பிற்பட்டகாலத்தில் கற்றார்க்கும் பலிக்குமென்கை. "கன்றிழந்த தலைநாகு, தோல் கன்றை மடுக்க அதுக்கிரங்குமாபோலே, ஸ்நேஹிகள் சொன்ன இப்பாசுரங்கொண்டு புகவே. அதில்லாத நமக்கும் பலிக்கும்" என்று பட்டர். ஸ்ரீகோபிமாருடைய ஆச்ரயணீய விஷயம் க்ருஷ்ணனுய், அந்த ஆச்ரயணம் பலபர்யந்தமாவது பிராட்டி ஸம்பந்தத்தாலேயாய், அவள்தன்னைப் பெறுகைக்கு அவன் வ்யாபரித்த வ்யாபாரம் அம்ருதமதநமாகையாலே அத்தைச் சொல்லுகிறார்கள்.

வ்யா :— (வங்கக்கடல் கடைந்த) தே₃வகார்யமென்று ஒரு வ்யாஜத்தையிட்டுப் பெரியபிராட்டியாராகிற A பெண்ணமுதைப்பெற்று, அப்போது உகப்போடேயிருந்தாற்போலே, ஊரார் காரியத்தை வ்யாஜமாக்கிப் பெண்கூ₂ப்பெற்ற ஹர்ஷத்தோடே க்ருஷ்ணனிருக்கிறவிருப்பைக் கண்டவாறே "அந்யார்த்த₃மான செயலிலே அபி₄மதம் இவனுக்கு இன்ருக வருகிறதோ?" என்கிறார்கள். (வங்கக்கடல் கடைந்த) பாற்கடலைக்கடைந்து பிராட்டியைப்பெற்றற்போலே இங்கு; தயிர் கடையவென்று ஒரு வ்யாஜமாய், கன்னிகைகளைப் பெறக்கடவனுயிறேயிருப்பது; B "ஒல்லைநானுங் கடைவனென்று". திருமஞ்சநம் செய்து தி₃வ்யமால்யாம்ப₃ரத₄ரையாய், பூ₄ஷண பூ₄ஷிதையாய், ஸகலதே₃வதைகளும் பார்த்துக்கொண்டு நிற்க, மார்பிலே சென்றுணந்தபோதைச் செவ்வி—மார்கழிநீராடி ஆடை₂யுடுத்து ஸம்மாநிதைகளாய் "பல்கலனுமணிந்து" (27) பெண்கள் கூடியிருந்தபோது ப்ரகாஶிக்கும்படியிருக்கையாலே அத்தைச் சொல்லுகிறார்கள். (வங்கக்கடல் கடைந்த) A "விண்ணவரமுதுண" என்று ப்ரயோஜநாந்தரபரர்க்குமகப்பட உடம்புநோவக் கடல்கடைந்து அபேக்ஷிதஸம்வித₄நம் பண்ணும்படி ஶீலவானுன க்ருஷ்ணன், அநந்யப்ரயோஜநர் காரியஞ் செய்யச்சொல்லவேணுமோ? C "அமரர்க்கமுதிந்தவாயர்கொழுந்தை" என்கிறபடியே - க்ருஷ்ணனிறே தே₃வர்களுக்கு அமுதமிட்டவன்; க்ஷீராப்₃தி₄நாத₂ன் கடையில் கடல்தான் அம்ருதம்சுரவாதே. D கண்ணன்கையால் மலக்குண்கையாலேயிறே சுரந்தது. (வங்கக்கடல்) கீழிலம்ருதமெல்லாம் மேலே கிளரும்படி E படுதிரை விசும்பிடைப் படரும்படி கடையாநிற்க, மரக்கலமலசாதபடி கடைந்த நேர்ப்பம் சொல்லுகிறது. (வங்கக்கடல்) கடைகிறபோது F சுழல மலைதிரிக்கையாலே கடலடங்கலும் மரக்கலமாய் நின்றபடி. G "வங்கம்விட்டுலவுங் கடலிறே" - க்ஷீராப்₃தி₄. H "வைகுந்தனென்பதோர் தோணி" சேர்ந்தவிடமென்று, I ஆழ்கடலைப்பேணுதே கடைந்தான். "பரற்கடலில் பையத்துயின்ற" (2) என்று க்ஷீரார்ணவஶயநத்தைத் தொடங்கி அதினுடைய மத₂நத்தைச் சொல்லி நிக₃மிக்கிறார்கள். J "அதிற்கிடந்து முன்கடைந்த."

(கடல் கடைந்த மாதவனை) ஸாத₂நாநுஷ்டா₂நம் பண்ணினால் ஸாத்₄யவித்₃தி₄யுண்டாமிறே. K "அமுதங்கொண்ட பெருமான் திருமார்வன்" என்று — அம்ருதலாப₄மென்று ஒருவ்யாஜமாய், A "அமுதில் வரும் பெண்ணமுதை"யிறே க்ருஷ்ணன் பெற்றது. (மாதவனை) ஆஶ்ரயணீயவஸ்து லக்ஷ்மீஸஹிதமுமாய், ஆஶ்ரயணந்தான் லக்ஷ்மீஸநாத₂முமாயிறேயிருப்பது. ஆஶ்ரிதர் குற்றம் பொறுப்பித்து அபேக்ஷிதங்களைச் செய்விப்பார் அருகேயுண்டாகவேணுமிறே. மாதாவின் முன்பு பிள்ளைகள் செய்த குற்றம் பிதாவுக்குத் தோற்றுதாப்போலே, பிராட்டி ஸந்நிதி.

A பெரியதிரு 6-1-2. B பெரு-திரு 6-2. C திருவாய் 1-7-9. D திருவிருத்தம் 57. E பெரியதிரு 5-7-4. F பெரியதிரு மடல் 106. G பெரியாழ்திரு 4-5-6. H நாச்திரு 5-4. I பெரியதிரு 11-7-1. J திருச்சந்த 28. K பெரியதிரு 6-10-3.

யுண்டானுல் சேதநருடைய அபராதங்கள் அவனுக்குத் தோற்றுதென்கை. பிராட்டி புருஷகாரமாகப் பற்றினவர்களுக்கு அரியனசெய்து அபேக்ஷிதங்களைத் தலைக்கட்டிக் கொடுக்குமென்கைக்காக (கடல்கடைந்தமாதவனே) என்கிறது.

(கேசவனே) A "வாசஞ்செய் பூங்குழலா"ளான பெரிய பிராட்டியார்தான் ஆசைப்படும்படியான ப்ரஶஸ்தமான மயிர் முடி, கட்டு நெகிழ்ந்து அலைய நின்ருய்த்து கடல் கடைந்தது; கடையப்புக்கார்க்கெல்லாம் குழலலையுமிறே. "வாச நறுங் குழலாய்ச்சியர் (9) B "வண்டமர்பூங்குழல் தாழ்ந்துலாவ" என்று அவனோடு பிறரோடு வாசியில்லையே குழலலைய. C "ஆமையான கேசவா" என்று சுமந்து நிற்கிற ஆமைக்குட்பட குழல் அலையாநின்ருல் கடைகிறவனுக்குச் சொல்ல வேண்டாவிறே. (கேசவனே) பிராட்டியோட்டைக் கலவிக்கு விரோதிகளே, பெண் களோட்டைக் கலவிக்கு விரோதியான கேஶியைக்கொன்ருற்போலே போக்கவல்லன் என்னவுமாம். "மாமாயன் மாதவன்" (9) என்றும் "கேசவனைப்பாடவும்" (7) என்றும், "மாவாய்பிளந்தானே" (8) என்றுஞ் சொன்னவற்ருடே தலைக் கட்ட வேணுமிறே. (கேசவனே) D "அதனுள் கண்ணுதல் நஞ்சுண்ண" என்கிற படியே ப்ரஹ்மருத்ராதிகளுக்குக்கோதுகொடுத்து, தன் ஸவபாவந் தோற்றநின்ற நிலையைச் சொல்லிற்ருகவுமாம். த்வயத்தில் பூர்வகண்டத்திற்படியே ஆஶ்ரயணீய வஸ்துவைச் சொல்லுகிறது. (மாதவனே) என்று — 'ஶ்ரீமத்' ஶப்தார்த்தமும், "கடல்கடைந்த" என்கிறத்தாலே — ப்ரயோஜநாந்தரபரருடைய தோஷம் பாராமல் வ்யாபரித்த வாத்ஸல்யமும், D "அண்ணல்செய்து" என்று — ஸ்திரமாம்படி பண்ணப்பட்ட ஸ்வாமித்வமும், E "அசுரர்களுந்தானுமாய்" என்னும்படி நின்ற ஸௌஶீல்யமும், F "பெண்ணுகி யமுதூட்டின" ஸௌலப்யமும், G "ஆழ்கடலைக் கடைந்த துப்பன்" என்னும்படி வேண்டும் உபகரணங்களைத் தேடி வ்யாபரித்த ஜ்ஞாநஶக்திகளும் தோற்றுகையாலே — நராயண ஶப்தார்த்தம் ஸித்தம். "கேசவனே" என்று — ப்ரஶஸ்தகேஶத்வத்தாலே விக்ரஹயோகத்தை நினைத்து சரணஶப்தத்திலர்த்தஞ் சொல்லிற்ருகிறது. சரணக்ரஹணத்தோடு கேஶக்ரஹ ணத்தோடு வாசியில்லையே ப்ரணயிநியாகையாலே. H "கேசவ நம்பியைக் கால் பிடிப்பாள்" என்றிறே நிருபகம். "பரமனடிபாடி" (2) என்று தொடங்கி, "கேசவனே" என்று தலைக்கட்டுகையாலே — பாதாதி கேஶாந்தமாக க்ருஷ்ணனை அநுபவித்தாளாய்த்து. I "அசோதை முன்சொன்ன திருப்பாதகேசத்தை" என்று — இடைச்சிகளநுபவம் பெரியாழ்வார்க்குண்டாகையாலே அது இவளுக்கு தாயப்ராப்தமிறே.

இனிமேல் ஆஶ்ரயித்த அதிகாரிகள் வைலக்ஷண்யம் சொல்லுகிறது (திங்கள் திருமுகத்து) க்ருஷ்ணஸம்ஶ்லேஷத்தாலே குளிர்ந்து மலர்ந்து செவ்விபெற்ற

A திருவாய் 10-10-2, B பெரு-திரு 6-2, C திருச்சந்த 20, D பெரிய திரு 6-1-2 E சிறிய திருமடல் 47, F பெரிய திரு 2-6-1, G திருவாய் 4-7-5, H நாச்-திரு 1-8 I பெரியாழ் திரு 1-2-21.

முக₂த்தையுடை₄யராஞர்கள். ''கதிர்மதியம்போல்முகம்'' (1) என்று — ப்ரதாபமும் தண்ணளியும்கலந்தபடியாலே அநபி₄ப₄வநீயத்வமுண்டு அவன் முக₂த்துக்கு; இவர்கள் முக₂த்தில் குளிர்த்தியே அமைகையாலே அநுகூலமேயாயிருக்கும். ''வங்கக்கடல் கடைந்த'' என்று கடைந்த அமுதில் பிறந்தவள் முக₂த்தோடு ஸாத₄ர்ம்யம் பெற்றுய்த்து இவர்கள் முகமிருப்பது. அவள், A ''திவளும் வெண்மதிபோல் திருமுகத்தரிவை''; இவர்கள் B ''மதிமுகமடந்தையர்''. (திங்கள் திருமுகம்) ஸகல கலாபூர்த்தி இவர்கள் முகத்திலே விழித்தபோதே தோற்றுமாய்த்து. 1. ''ப்₃ரஹ்மவித்தை₂வ ஸோம்ய தே முக₂ம் ப₄ாதி'' C ''குழையும்வாண்முகமும்'' என்றும் சொல்லக்கடவதிறே. முக₂த்தில் ஆநந்த₃ பூர்த்தி கண்டவர்கள், ''இவர்கள் எங்குத்தை மனிச்சர்?'' என்று ஸந்தே₂ஹிக்கும்படி உப₄யவிபூ₄தி வ்யாவ்ருத்தி தோற்ற விருப்பர்களிறே. D ''வெஞ்சிலைவாண்முகத்தீர்''. (திங்கள் திருமுகத்து) இவர்கள் முக₂த்திலே விழித்தவாறே அஹம்மாநோத்₃ப₄வமான அழல் ஆறும்படியிருக்கை. (திருமுகம்) உபமாநமான சந்த்₃ரமண்ட₃லம் உபமேயமான முக₂த்துக்கு நேர் நிற்கமாட்டாமையாலே (திருமுகம்) என்கிறது. E ''முகக்கமலச் சோதிதன்னுல் திங்கள்முகம் பனிபடைக்கு''மிறே. (சேயிழையார்) ஸ்வாப₄ாவிகமான அழகுக்கு மேலே ஆப₄ரணங்களாலே வந்த அழகைச் சொல்லுகிறது. (சேயிழையார்) ''சூடகமே — பாடகமே'' (27) என்று தாங்கள் ப்ரார்த்தித்தபடியே க்ருஷ்ணனும், நப்பின்னைப் பிராட்டியும் கூடவிருந்து பூட்டின ஆபரணத்தையுடையவர்கள். (சேயிழையார்) ஸ்வரூபகு₃ணங்களாலும் ப்₃ரஹ்மாலங்காரத்தாலும் குறைவற்றவர்கள். ''போதுவீர் போதுமினே'' (1) என்றபோதே நேரிழையாராஞர்கள்; நீராடின அநந்தரம் F ''திருவருள் முழ்கின''படியாலே F ''பூனேயினழகளணிந்து'' சேயிழையாராஞர்கள். (சென்று) ஆச்ரணீயவிஷயத்தில் ருசிகார்யமான த்வரையைச்சொல்லுகிறது. (சென்று) இவ்வொப்பனேயோடே நாமே போவோம் என்று அவன் வரவைப் பார்த்திருக்குமளவல்லவாய்த்து த்வரை. க்ருஷ்ணவிஷயீகார யோக்₃யதையாலும் விஷயீகாரத்தாலும் பிறந்த புகர் நிறம்பெறும்படி சென்று. (இறைஞ்சி) ''தூமலர்கள் தூய்த்தொழுது வாயினுல் பாடி மனத்தினுல் சிந்தித்து'' (5) ''அடி போற்றி'' (24) என்கிறபடியே போற்றிப் புகழ்ந்து, ''சென்று சேவித்து'' (18), கும்பிடுகை தொடக்கமான செய்வதெல்லாஞ் செய்து.

(அங்கு) ஆச்ரயணீயஸ்த₂லமிருக்கிறபடி. (அங்கு) திருவாய்ப்பாடியிலே ஸ்ரீநந்த₃கோ₃பருடைய கோயிலிலே நப்பின்னைப்பிராட்டி கட்டிலிலே தி₃வ்யாஸ்த₃ாநத்திலே தி₃வ்யஹ்ருத்₃ஹாஸத்திலேயிருந்த இருப்பிலே. (அப்பறை) நாட்டுக்குச் சொன்ன பறையைக்கழித்து ''எற்றைக்கும்'' (29) என்ற பறையை; அப்பரிமாற்றத்திலே நின்று அவனை ஸர்வஸ்வமும் கொண்டபடியை. (கொண்ட) ''நீ தாராய்'' (29) என்றபடியே அவன் தரப் பெற்றபடி. (ஆற்றை) கொண்ட ப்ரகாரத்தை; தங்கள் வெறுமையையும் அவன்பூர்த்தியையும் ப₃ந்த₄த்தையும் முன்னிட்டு, தப்புக்குப் பொறைகொண்டு ருசியையும் த்வரையையுங்காட்டி, வளைப்பிட்டு அடி

A பெரிய திரு 2-7-1, B திருவாய் 10-9-10, C திருவாய் 6-5-5.
D திருவிருத்தம் 75, E பெரிய திரு 3-4-6, F திருவாய் 8-9-5.

மையை அபேக்ஷித்துக் கொண்ட ப்ரகாரத்தை. ஆஶ்ரயணபலமும் பலஸித்திக்ரம மும் சொன்னபடி. (அணிபுதுவை) க்ருஷ்ணனுக்கு ஶ்ரீநந்தகோபர் ஸம்பந்தம் ஏற்றமாய், அவர் வர்த்திக்கிற ஊரென்று திருவாய்ப்பாடியை "சீர்மல்குமாய்ப்பாடி" (1) என்று ஶ்லாகிக்குமாபோலே, தனக்குப் பெரியாழ்வார் ஸம்பந்தம் உத்தேஶ்யமாய், அவர் அபிமாநித்த தேஶமென்று ஶ்ரீவில்லிபுத்தூரைக் கொண்டாடுகிறார்கள்.

(அணிபுதுவை) நந்தகோபனுடைய கோயிலில், க்ருஷ்ணன் மாத்ரமேயிறே; இவ்வூரில் வடபெருங்கோயிலுடையானும். (அணிபுதுவை) ஸம்ஸாரத்துக்கு ஆபரணமான ஶ்ரீவில்லிபுத்தூர். பிராட்டிக்கு ஶ்ரீமிதிலையும் திருவயோத்தியையும் போலவும், நப்பின்னைப் பிராட்டிக்குக் கும்பகுலமும் திருவாய்ப்பாடியும் போலவுமன்றிக்கே, ஆண்டாளுக்குப் பிறவியும் புக்கவிடமும் ஒரூரிலேயான ஏற்றம் இவ்வூர்க்கேயிறே உள்ளது. பொன்னும் முத்தும் மாணிக்கமுமிட்டுச் செய்த ஆபரணம் போலே, நாச்சியாரும் பெரியாழ்வாரும் வடபெருங்கோயிலுடையானுமான அலங்காரமுள்ள தேஶமிறே. (பைங்கமலத்தண்டெரியல்) ப்ராஹ்மணர்க்குத் தாமரையைத் தாராகவிறே சொல்வது. A "திருவில் பொலிமறைவாணன்" என்னும்படி ப்ராஹ்மணக்ரேஸரரான பெரியாழ்வாருக்குத் தாமரை தாராகக்கடவதிறே. (பைங்கமலத்தண்தெரியல்) பசுத்த கமலத்தினுடைய குளிர்ந்த மாலை, B "தண்ணந் துழாயழல்போல்" என்று — வடபெருங்கோயிலுடையானுடைய மாலைபோலே கொதித்துக் கிடவாது பெரியாழ்வார் கழுத்தில் மாலை; பிரிந்தவன் மாலைபோலன்றே சேர்ப்பார்மாலை. (பட்டர்பிரான்) ப்ராஹ்மணர்க்கு உபகாரகரானவர். C "வேதப்பயன்கொள்ளவல்ல" வராகையாலே தாத்பர்யார்த்தத்தை ஸர்வர்க்கும் உபகரிக்குமவர்; பட்டர்களுக்கு வித்யாப்ரதாநம் பண்ணின உபகாரகர்; D "மறை நான்கு முன்னேநிய பட்டனுக்கு" கந்யகாப்ரதாநம் பண்ணின உபகாரகர். (பட்டர்பிரான் கோதை) பாராஶர்யனை வ்யாஸனென்று ஆப்திக்குச் சொன்னாற்போலே, பெரியாழ்வார் வயிற்றிற்பிறப்பு இவளுக்கு உத்கர்ஷஹேது. "ஆற்றப்படைத்தான் மகன்" (22) என்றிறே ப்ரதிபாத்யனுக்கு ஏற்றம்; ஆழ்வார் ஸம்பந்தம் இவளுக்கேற்றம். E "விட்டுசித்தர் தங்கள் தேவரை" என்று—இவர்க்கு தேவராய், வடபெருங்கோயிலுடையான் நிறம்பெற்றான்; இவர் மகளாய் ஆண்டாள் நிறம்பெற்றாள். F "ஒருமகள் தன்னை உடையேன்" என்று இவள் ஸம்பந்தமிறே நமக்கு உத்கர்ஷமாகச் சொல்லுவது. (சொன்ன) ஆண்டாள் அநுகாரத்தாலே அநுபவித்தது புறவெள்ளமிட்டபடி. (கோதை சொன்ன) ஶ்ரீகோபிமார் தஶையை ப்ராபித்து, G "அணிகுருகூர்ச்சடகோபன்சொன்ன" என்று பும்ஸ்த்வம் மேலிடும்படியான குற்றமற்றிருக்கை. (சொன்ன) ஶ்ருதிஶதஶிரஸ்ஸித்தமான அர்த்தம் ஸர்வோபஜீவ்யமாம்படிசொன்ன. H "மேகம்பருகின ஸமுத்ராம்புபோலே இவர்வாயன திருந்

A பெரியாழ் திரு 4-1-10. B திருவிருத்தம் 3. C பெரியாழ் திரு. 2-8-10. D பெரிய திரு 7-3-6. E நாச்-திரு 10-10. F பெரியாழ் திரு 3-8-4. G திருவாய் 7-3-11. H ஆசார்ய ஹ்ருதயம் - 72.

தின'' என்கிறபடியே இவளுடைய வாக்கின் ஸ்பர்ஶத்தாலே காணும் அதிலும் அவர்பெற்றது. (சொன்ன) தான்ரேன்றியான வேத₃ம்போலல்ல; பிறப்பாலுண்டான ஏற்றமுண்டு. கூ₂ராப்₃தி₄நாத₂னைப்பற்ற ஒருத்தி மகனுய்ப் பிறந்தவனுக்கிறே வருமேற்றமுள்ளது.

(சங்கத்தமிழ்மாலை) ''சங்கமிருப்பார்போல் வந்து'' (22) என்று பஞ்சலக்ஷங் குடியில் பெண்கள் திரளாக அநுப₄வித்த அநுப₄வத்துக்கு ஆண்டாளும் தன்திறத்திற் பெண்களுக்குத் திரளவிருந்து சொன்ன பாசுரமாகையாலே, A ''குழாங்களாய்'' என்னும்படி-திரள் திரளாக அநுப₄விக்கவேண்டும் ப்ரப₃ந்த₄ம். B ''சங்கமுகத்தமிழ் மாலை'' என்னக்கடவதிறே. (தமிழ்மாலை) C ''யவர்க்குஞ்சிந்தைக்கும் கோசர''மல்லாத வஸ்து ''பெற்றம் மேய்த்துண்ணும்'' (29) இடைச்சேரியிலே வந்துபிறந்து எளியனுனுற்போலேயும், உத்தம வர்ணத்திலே பிறப்புடைய ஆண்டாள் ''ஆயர் சிறுமியர்'' (16) திரளிலே ஒருத்தியாய் அந்வயித்தாற்போலேயும் அருமறையின் பொருளான உபநிஷத்து தமிழாய் வந்து ஸர்வஸ₂லப₄மானபடி. ப்ரப₃ந்த₄ஞ் செய்தவளோடு ப்ரதிபாத்₃யனுடு ப்ரப₃ந்த₄த்தோடு வாசியறத் தாழநின்று நிறம் பெற்றபடி. (மாலை) பாவனமானவளவன்றிக்கே போ₄க₃யோக்₃யமுமாய், தலையாலே சுமக்கவேண்டும்படியுமாய், ஸிரோபூ₄ஷணமுமாயிருக்கை. (கோதைசொன்ன மாலை) மாலை கட்டின மாலை. அடுத்தபத்தியோடே இரண்டுதலையும் தாள்பூவும் நடுவே நாயகமுமாகத் தொடுப்புண்ட மாலை. (கோதைசொன்ன மாலை) ''செவிப்பூவே'' (27) என்று - இவள் செவிக்கு ஒருபூவிறே அவன் கொடுத்தது; ஸ்லாக்₄யமான மாலை கொடுத்தாளிவள். 1. ''ஸ்ரஜி நிக₃ளிதம்'' என்னும்படி குழலில் மல்லிகை மாலையாலே விலங்கிட்டு அவனை ஒதுவித்த மாலையிருக்கிறபடி. (முப்பதும்) திருமந்த்ரமும் திருப்பல்லாண்டும்போலே சுருங்கியிருத்தல், வேத₃மும், திருவாய்மொழியும்போலே விரிந்திருத்தல் செய்யாமையாலே, வேண்டுமவையெல்லாம் மிகுதிக்குறையுண்டாயிருக்கையன்றிக்கேயொழிகை. ''நாராயணனே நமக்கே பறை தருவான்'' (1) என்று ஸங்க்₃ரஹேண சொன்ன ஸ்வரூபோபாய பலங்களை ஒன்று பத்தாகச் சொன்னவித்தனையிறே. (முப்பதும்தப்பாமே) இதில் ஒருபாட்டும் நழுவாமே. விலையில்லாத ரத்நங்களாலே செய்த ஏகாவலியிலே ஒரு ரத்நம் குறைந்தாலும் நெடும்பாடாயிருக்குமிறே; அப்படியே ஒரு பாட்டுக்குறையிலும் பேரிழவாயிருக்கும். ப₄க₃வத₃பி₄முக்₂யம் பிறக்கிற கால வைலக்ஷண்யம் அறியாதிருத்தல்(1), த்யரஜ்யோபாதே₃யங்களில் நழுவநிற்றல்(2), பரஸம்ருத்₃த்₄யைகப்ரயோஜனனன்றியிலேயொழிதல்(3), தே₃வதைகளையும் நியமிக்கும்படியான ஜ்ஞாநிகள் வைப₄வம் அறியாதொழிதல்(4), ஆஶ்ரயணகாலத்திலே க்ஷீணபாபராம் ஏற்றம் அறிதல் (5) செய்யாதொழியவொண்ணாது; ப₄க₃வத்₃விஷயத்தில் முதலடியிட்டாரோடு(6), அவகா₃ஹித்தே சிறிது குலையநிற்பாரோடு(9), ஸ்லாக்₄யப்ரதா₄நராயிருப்பாரோடு(7), த்யாஜ்யத்திலே

A திருவாய் 2-3-11, B பெரிய திரு 3-4-10, C திருவாய் 1-9-6.

அல்பல்பர்ஶம் நடையாடுவாரோடு(9), அநுபூவமே நிரந்தரமாக நடப்பாரோடு(10), பூகூவதகுலத்திலே அந்வயித்தாரோடு(11), கைங்கர்ய நிஷ்டூரோடு ஸம்பூந்தமுடையாரோடு(12), ஸ்வரூபஜ்ஞாநமுடையாரோடு வைலக்ஷண்யாநுஸந்தாநம் பண்ணி நிர்வ்யாபாரராயிருப்பாரோடு(13), பக்தியாலே கலங்கி நடப்பாரோடு(14), பூகூவதபாரதந்த்ர்யைக நிஷ்டூரோடு(15)வாசியற உத்தேஶ்யதாபூத்திகுலையாமலிருக்கவேணும் என்றறியவேணும்; பூகூவத்ஸந்நிதியில் செல்லும் க்ரமங்களறியவேணும்(16, 17); புருஷகாரத்தினுடைய ஸ்வரூப ஸ்வபூவங்களும் கார்யமும் அறியவேணும்(18, 19, 20); பூகூவத்குணவித்தராகவேணும்(21); கடாக்ஷகதாரகராம்படி பக்நாபிமாநராகவேணும்(22); ஆபிமுக்ய ப்ரார்த்தநம் பண்ணவேணும்(23); மங்களாஶாஸநபரராகவேணும்(24); அர்த்தித்வந்தோற்றப் பல்காட்டவேணும்(25); முமுக்ஷுதஶையில் அபேக்ஷிதம்(26) முக்ததஶையில் போகூம்(27) இவற்றில் வாஞ்சை நடக்கவேணும்; அதுக்குத் தங்கள் உபாயாந்தர ஸந்யஸனத்தை முன்னிடவேணும்(28); நித்ய கைங்கர்யத்தில் நித்யாபேக்ஷை நடக்கவேணும்(29); இத்தஶை விளைந்தார் பாகூரமே போகூமாகவேணும்(30); ஆகையாலே இம்முப்பது பாட்டிலும் நழுவவிடலாவது ஒருபாட்டில்லை. (இங்கு) பிற்பட்ட காலத்திலே இப்பரிமாற்றத்துக்கு மேட்டுமடையான இந்நிலத்திலே. (இப்பர்சு) இப் ப்ரகாரந் தப்பாமல். (இப்பரிசுரைப்பார்) இப்பூவவ்ருத்தியோடே இப்பாகூரத்தைச் சொல்லுமவர்கள். திருவாய்ப்பாடியிலே பெண்களுக்கு ஸமகாலமாகையாலே ஸாக்ஷாத்காரமுண்டாய்த்து; ஆண்டாள் அநுகார ப்ரகாரத்தாலே பெற்றாள்; இவர்களுக்கு உக்திமாத்ரமே அமையும்.

இவர்களளவு பாராதே பண்டு பாடினவர்களையும் இச்சொல் வழியாலே நினைத்துக் காரியஞ்செய்யும் விஷயத்தைச் சொல்லுகிறது மேல் — (ஈரிரண்டுமால் வரைத்தோள்) பெண்களை அணைக்கப்புக்கபின்பு க்ருஷ்ணனுக்குத் திருத்தோள்கள் பணைத்தபடி. A "வேயிருந்தடந்தோளினு"ரோடு அணைந்த தோள்களிறே. (ஈரிரண்டு) உகவாதார்க்கிறே தோள் இரண்டாய்த் தோற்றுவது; ஆசைப்பட்ட பெண்களுக்கு நாலாப்த் தோற்றுமிறே. வங்கக்கடல்கடைந்த B தோள்கள் நான்கும் கண்டிடப் பெற்றார்கள். (மால்வரைத் தோள்) C "மதுரக் கொழுஞ்சாறுகொண்ட சுந்தரத்தோ"ளாயிராதே, காத்தூட்டவல்ல திண்மையைச் சொல்லுகிறது. (மால்வரை) D "நீண்டமலைகளும்" என்னும்படியிறேயிருப்பது. பெரிய பிராட்டியார்க்கும் கோபிமார்க்கும் க்ரீடூாஶைலமான தோள்கள். (செங்கண் திருமுகத்து) பெண்களைக்கண்ட பின்பு அலப்யலாபத்தாலே திருக்கண்களும் செவ்வி பெற்றுத் திருமுகமும் குளிர்ந்தபடி. இவர்களைப் பிரிந்தபோதிறே ஜலக்ஷயத்தில் பத்மம் போலே முகமும் விழியும் உருவுவது. (செங்கண் திருமுகம்) E "கண்ணன் கோளிழைவாண்முகம்"; அதிலே, F "நீரார்கமலம் போல் செங்கண்"; தோழிமார் 'பாரிகோள்' என்று ஒருவர்க்கொருவர் காட்டி அநுபூவித்த கடாக்ஷமும் முகமும். (செங்கண்) "கதிர்மதியம்போல் முகத்தான்" (1) "பங்கயக்கண்ணனை" (14)

A திருவாய் 6-2-3, B திருவாய் 4-7-5, C நாச்-திரு 9-1, D பெரிய திரு 2-8-5
E திருவாய் 7-7-8, F சிறிய திருமடல் 11.

"செங்கண் சிறுச்சிறிதே அங்கணிரண்டுங்கொண்டு" (22) என்று முடிய இம்முக₂மும் கடாக்ஷமுமிறே இவர்கள் நெஞ்சில் கிடந்தது. "திங்கள் திருமுகம்" என்று — ஸ்ரீகோபிமார் முக₂த்தையும் அவர்கட்கு அநுப₄வ்யனானவன் முக₂த்தையும் ஒரு முகப்பட அநுப₄விக்கிறார்கள். இச்செங்கண் திருமுகமுடையவன்தான் ஆரென்னில்; (செல்வத்திருமாலால்) என்கிறார்கள். A "கண்ணன் திருமால் திருமுக"மிறே இது. (செல்வத்திருமாலால்) உப₄யவிபூ₄தியைஶ்வர்யத்தையுடைய ஸ்ரீய : பதி யாலே. (செல்வத் திருமால்) "திருத்தக்க செல்வம்" (25) செல்வத்துக்குத் தகுதியானவள். (திருமால் — செல்வம்) B "திருவுக்குந் திருவாகிய" செல்வு "செல்வச்சிறுமியரை"ப் (1) பெற்றபின்பு சிறந்தது. இங்கு உத்தரவாக்யத்தில் ,ஸ்ரீமத்'ஶப்₃தஞ் சொல்லுகிறது; ரஹஸ்யத்₃வயத்திலும் மறைந்துகிடந்த லக்ஷ்மீ ஸம்ப₃ந்த₄ம் — வாக்யத்₃வயத்திலேயிறே வெளியாகிறது. இப்பாட்டில், உபக்ரமத் திலும் முடிவிலும் பிராட்டி ஸம்ப₃ந்த₄த்தைச் சொல்லுகையாலே — த்₃வயத்தில் சொல்லுகிறபடியை இங்குச் சொல்லிற்றாய்த்து

(எங்கும்) த்₃ருஷ்டாத்₃ருஷ்டங்களிலும். இங்கிருக்கும் நாளும் பரமபத₃த்தில் போனாலும். (திருமாலால் எங்கும்) C "இங்குமங்கும் திருமால்" என்றிருக்கையிறே அடுப்பது. (திருவருள் பெற்று) இப்ர ப₃ந்த₄ம் கற்றவர்கள் இருந்தவிடத்திலே தானும் பிராட்டியுமாய் நித்யஸந்நிஹிதமாம்படி ப்ரஸாத₃த்தைப் பெற்று. (திருவருள் பெற்று) D "திருமாலாலருளப்பட்ட" E 'திருமாமகளால் அருள்மாரி" என்று - இவளுடைய அருள்பெறுகையிறே உத்₃தே₃ஶ்யம். F "நின்திருவருளும் பங்கயத் தாள் திருவருளுங்கொண்டு". (திருமாலால் - திருவருள் பெற்று) 1. "நிஸ்ஸம்ஶயம் ஸம்பத்ஸ்யதே" என்று 'இவர்களை வாழ்த்திக் கடாக்ஷித்தது பலித்தபடிபாராய்!' என்று பெரியபிராட்டியார் திருக்கையிலே காட்டிக்கொடுக்க, G "பூவளருந் திருமகளா லருள்பெற்று". என்கிறபடியே - அவனடியாக இவள்தன்னுடைய அருளைப்பெற்று. உபாயநிஷ்டை₄யும் இவளாலே; ப்ராப்யவ்ருத்₃தி₄யும் இவளாலே; விரோதி₄ நிவ்ருத் தியும் பலப்ராப்தியும் அவனாலே. (இன்புறுவர்) ஆநந்த₃நிர்ப்ப₄ரராவர். (எங்கும் - இன்புறுவர்) இங்கிருக்கும் நாள் ஸம்ஸாரிகளில் வ்யாவ்ருத்தராய், ப்ரப₃ந்த₄த்தி னுடையவும், ப்ரதிபாத்₃யனுடையவும், ஆண்டாளுடையவும் சீர்மையையும் ஶீலத்தை யும் பூ₄மவ்ருத்தியையும் அநுஸந்தி₄த்து இனியராவர்கள்; அங்குப் போனால் நிரந்தர ஸம்ஶ்லேஷத்தாலே. H "மிகவெல்லை நிகழ்ந்த நம்" என்னும்படி பரமாநந்த₃த் திலே அந்வயிப்பர்கள். (திருமாலால் - இன்புறுவர்) I "இன்பமயக்க" விறே அவர்கள்தானிருப்பது. அந்யோந்யாநுப₄வாநந்த₃ம் போலன்றே மிது₂நாநுப₄வா நந்த₃ம். J "அடியேனுக்கின்பாவாய் பொன்பாவை கேள்வா." எப்படி இன்புறு வர்களென்னில்; (எம்பாவாய் - இன்புறுவர்) எங்கள் ஸ₂ந்த₃ஸ்ஸாலே இன்புறுவர். நாங்கள் யாதொருபடி இன்புற்றோம், அப்படி இன்புறுவர்கள்.

A திருவிருத்தம் 63. B பெரிய திரு 7-7-1. C திருவாய் 7-9-11. D திருவாய் 8-8-11. E பெரிய திரு 8-6-10. F திருவாய் 9-2-1. G பெரிய திரு 11-6-10. H திருவாய் 4-5-3. I திருவாய் 7-10-1. J நான். திருவ 59.

மாதவனே — சேயிழையார் சென்றிறைஞ்சி — பறைகொண்டவாற்றை — கோதைசொன்ன — தமிழ்மாலை — உரைப்பார் — எம்பாவாய் — இன்புறுவர். பெரிய பிராட்டியார் இன்புற்றுற்போலே இன்புற்றுராவர்கள். ஸ்ரீகோபிமார் பாவாய் இன்புற்றேம் நாங்கள்; எங்கள் சொல்லியுரைப்பார் எங்கள் பாவாய் இன்புறுவர்கள்; ஸமகாலத்திலுள்ளாரை, "எம்பாவாய் - நீராடப்போதுவீர் போதுமினே" (1) என்று கூட்டிக்கொண்டார்கள்; பிற்பாடர்க்கும், "எம்பாவாய் ப்ரபந்த முகத்தாலே எம்பாவாயின்புறுவர்" என்று தலைக்கட்டுகிறார்கள். 30.

ஆருயிரப்படி நிறைவுற்றது.

அழகியமணவாளப்பெருமாள் நாயனார் திருவடிகளே ஶரணம்.

ஈராயிரப்படி — முப்பதாம் பாட்டு

அவ :— முப்பதாம் பாட்டு : இப்ரபந்தத்தைக் கற்றார்க்கு இவ்வர்த்த மனுஷ்டித்தாரோபாதி பலம் ஸித்திக்கும்; "கன்றிழந்த தலைநாகு தோல் கன்றை மடுக்க, அதுக்கு இரங்குமாபோலே, இப்பாசுரம் கொண்டு புக நமக்குப் பலிக்கும்" என்று பட்டர் அருளிச்செய்வர்.

வ்யா :—(வங்கக்கடல்) கீழில் அமுது மேலே எழக் கடையாநிற்க, கடலிலே மரக்கலமசையாமல் கடைந்த நொய்ப்பம் சொல்லுகிறது. கடைந்தபோது சுழன்று வருகையாலே கடலடைய மரக்கலமாய் நின்றபடி என்றுமாம். க்ருஷ்ணனே ப்ரயோஜநாந்தரபரர்க்கும் கார்யம் செய்யுமவனென்கை. (மாதவனே) தாய் முன்பு பிதாவுக்கு ப்ரஜை குற்றம் பொறுக்கவேணுமிறே. (கேசவனே) விரோதிநிரஸனஸ்வபாவனே. A "விண்ணவரமுதுண அமுதில் வரும் பெண்ணமுதுண்டவ"னிறே. க்ருஷ்ண ஸம்ஸ்லேஷத்தாலே (குளிர்ந்து) மலர்ந்த முகம். அங்கு கதிர்மதியம்போல் முகம்(1). 1. "ஜகத் வ்யாபார வர்ஜம்" என்று இதொழிய அல்லாததெல்லாம் கொடுக்கையாலே இவர்களுக்குக் குளிர்த்தி வேண்டுகையாலே (திங்கள் திருமுகம்) என்கிறது. B மதிமுக மடந்தையரிறே. (சேயிழையார்) தானுமவனுங் கூடவிருந்து பூட்டின ஆபரணத்தையுடையவர்கள். (சென்று) இவ்வொப்பனையோடே வரப்பார்த்திருக்கும் அளவில்லாத த்வரையைச் சொல்லுகிறது. (இறைஞ்சி) மங்களாஶாஸநம் பண்ணி. (அங்கு) திருவாய்ப்பாடியிலே. (அப்பறை) நாட்டுக்குப் பறை என்று அடிமைகொண்டபடியை.

(அணிபுதுவை) ஸம்ஸாரத்துக்கு ஆபரணமான ஸ்ரீவில்லிபுத்தூர். (பைங்) கமலத் தண் தெரியல்) ப்ராஹ்மணருக்குத் தாமரைத் தாராகையாலே சொல்லுகிறது. (பட்டர்பிரான் கோதை சொன்ன) ஆண்டாள் அநுகாரப்ரகாரத்தாலே அநுபவித்துச் சொன்ன. 2. "ஸ ஹோவாச வ்யாஸ: பாராஶர்ய:" என்றுற் போலே பெரியாழ்வார் மகள் சொன்னதில் அர்த்தவாதமில்லை.

(சங்கத்தமிழ்) C "குழாங்களாய்" என்னுமாபோலே திரளாக அநுபவிக்க வேண்டும் ப்ரபந்தம். (முப்பதும் தப்பாமே) இதில் ஒருபாட்டும் குறையாமே. அல்லாதபோது ரத்நம் குறைந்த ஏகாவளி போலே பேரிழவாயிருக்குமென்கை.

A பெரிய திரு 6-1-2, B திருவாய் 10-9-10, C திருவாய் 2-3-11.

(இங்கு) பிற்பட்ட காலத்திலே. (இப்பரிசுரைப்பார்) இப்பாசுர மாத்ரத்தைச் சொல்லுவார். ஆண்டாள் அநுகாரத்தாலே பலம் பெற்றுளாகையாலே இது சொன்னார்க்கும் இங்கே பலம் கிடைக்கும். (ஈரிரண்டு மால்வரைத்தோள்) பண்டு பாடினவர்கள் சொல்வழியாலே அநுஸந்தி்க்கையாலே தோள்கள் பணைக்கும். ஆண்களுக்கு இரண்டாய்த் தோற்றும். இவர்களுக்கு நாலாயிருக்கும். (செங்கண் திருமுகத்து) அலப்யலாபத்தாலே சிவந்த கண்கள். (செல்வத் திருமாலால்) உபயவிபூதியுக்தனை ஸ்ரீயःபதியாலே. இப்பாட்டில் உபக்ரமோபஸம்ஹாரங்களில் த்ரயத்திற்போலே பிராட்டி ஸம்பந்தம் சொல்லிற்றுய்த்து. (எங்கும் திருவருள் பெற்று) த்ருஷ்டாSத்ருஷ்டங்களிரண்டிலும் பிராட்டியும் தானும் ஸந்நிஹிதமாம்படி ப்ரஸாதமும் பெற்று. (இன்புறுவர்) பகவத் ஸம்ஸ்லேஷத்தால் வந்த ஆனந்தமும் பெறுவர். 30.

நாலாயிரப்படி — முப்பதாம் பாட்டு

அவ:— முப்பதாம் பாட்டு. "பெண்காள்! நீங்களும் நானும் அனுபவித்தோ? பிற்பாடரிழக்குமத்தனையோ?" என்ன, அவர்கள் பெறும்படி சொல்லுகிறார்கள். ப்ரபந்தம் கற்றார்க்கு அநுஷ்டி்த்தாரோபாதி பலம் ஸித்தி்க்கிறது. "கன்றிழந்த நாகு தோற்கன்றை மடுக்க அதுக்கிரங்குமாபோலே, இப்பாசுரம் கொண்டுபுக நமச்சும் பலிக்கும்" என்று பட்டர் அருளிச்செய்வர். "விடிவோறேயெழுந்திருந்து முப்பது பாட்டையுமநுஸந்தி்த்தல்; அதுவும் மாட்டிற்றிலனுகில், "சிற்றஞ் சிறுகாலே" (29) என்கிற ஒருபாட்டையுமநுஸந்தி்த்தல், அதுவும்மாட்டானுகில், இன்றுநாமிருந்த விருப்பை நினைப்பது" என்று பட்டர் அருளிச்செய்தார்.

வ்யா:— (வங்கக்கடல்) கீழிலுள்ள பதார்த்தமும் மேலெழக்கடையாகிற்கச் செய்தே, கடலில் மரக்கலம் அலசாமல் கடைந்த நொய்ப்பம் சொல்லுகிறது. கடைந்தபோது சுழன்று வருகையால் கடலடைய மரக்கலமாய்நின்றபடி என்றுமாம். க்ருஷ்ணனே ப்ரயோஜநாந்தரபரர்க்கும் கார்யம் செய்யும் ஸீலவானென்கை. (மாதவனை) ஆச்ரயணீய தத்வம் லக்ஷ்மீஸநாதமாயிருக்குமென்கை. தாய் மூன்பு பிதாவுக்கு ப்ரஜை செய்த குற்றம் பொறுக்கவேண்டுமாபோலே, ஆத்மாவின் குற்றம் பொறுக்கைக்குப் புருஷகாரமென்கை. அவள் ஸங்நிதி்யில் குற்றம் மிக்க காகம் பிழைத்தது. அவள்ஸங்நிதி்யில்லாமை அத்தனை குற்றமின்றியேயிருக்க, ராவணன் தலையறுப்புண்டான். (கேசவனை) விரோதி்நிரஸநஸ்வபாவனை. (மாதவனைக் கேசவனை) A "கண்ணுதல் நஞ்சுண்ணக்கண்டவனே! விண்ணவரமுதுணவமுதில்வரும் பெண்ணமுதுண்ட ம்பெருமான்" என்று சொல்லுகிறபடியே. "தான் ஸாக்ஷாத் அம்ருதத்தையுண்டு ப்ரஹ்மாதி்களுக்குக் கோதைக்கொடுத்தான்" என்று பட்டர். "மாதவனை" என்று தன் வாயைக்காட்டி, "கேசவனை" என்று கோதைப் பொகட்டார். (கேசவனை) விரோதி்நிரஸநஸ்வபாவனை. ஸ்த்ரீத்வப்ரயுக்தமான ஸ்வாதந்த்ர்யத்தையும் அந்யசேஷத்வத்தையும் போக்கினவனை.

A பெரிய திரு 6-1-2

(திங்கள் திருமுகத்து) க்ருஷ்ணனுக்குட்டைச் சேர்த்தியால் வந்த செவ்வி. அங்கு "கதிர்மதியம்போல் முகம்" (1) என்றது. 1. "ஜகத்வ்யாபாரவர்ஜம்" என்று கொடுப்பார்க்கு இது ஒன்றொழிய அல்லாததெல்லாம் கொடுக்கையாலே இவர்களுக்குக் குளிர்த்தி வேண்டுகையாலே, 'திங்கள் திருமுகம்' என்கிறது. A மதிமுகமடைந்தையரிதே. (சேயிழையார்) தானும் அவனும் கூடப்பூட்டின ஆபரணத்தையுடையராயிருக்கை. (சென்று) இவ்வொப்பனையோடே வரப் பார்த்திராதே சென்று. (இறைஞ்சி) மங்களாசாஸனம் பண்ணி. (அங்கு) திருவாய்ப்பாடியில். (அப்பறை கொண்டவாற்றை) மறந்து நில்லாதே நாட்டுக்குப் பறையென்று அடிமை கொண்டபடியை.

(அணிபுதுவை) ஸட்ஸாரத்துக்காபரணமான ஸ்ரீவில்லிபுத்தூர். (பைங்கமலத் தண்டெரியல்) பெரியாழ்வார்க்குத் தாமரைத்தாராயிருக்கிறபடி. (பட்டர் பிரான் கோதை சொன்ன) ஆண்டாள் அநுகாரத்தாலே அநுபவித்துப்பேசின. 2. "ஸ ஹோவாச வ்யாஸ: பாராசர்ய:" என்று ஸ்ரீபராசரபகவான் 'தன்மகன் ஸ்ரீவேதவ்யாஸபகவான்பாடே சென்று நாம் சொன்ன அர்த்தத்துக்கு ப்ரமாணம் கேட்டுக்கொள்ளுங்கோள்' என்னுமாபோலே, பெரியாழ்வார் மகள் சொன்னத்திலும் அர்த்தவாதமில்லை.

(சங்கத்தமிழ்மாலை) B "குழாங்களாய்" என்னுமாபோலே பஞ்சலக்ஷம் குடியிற் பெண்கள் திரண்டநுபவித்த ப்ரபந்தமாகையாலே, பகவத்ப்ரேமமுடையார்க் கெல்லாம் ஸ்ரவணாவஹிக்கவேண்டும்படியிருக்கை. (தமிழ்மாலை) பிராட்டி ஆண்டாளானுப்போலே உபநிஷத்தும் தமிழானபடி. (முப்பதும் தப்பாமே) இதிலொரு பாட்டும் விழவிடாதே. விலையில்லாத ரத்நங்களாலே செய்த ஏகாவளியிலே ஒரு ரத்நம் குறைந்தாலும் நெடும்பாழாயிருக்குமிறே. அப்படி ஒரு பாட்டுக்குறைந்தாலும் பேரிழவாயிருக்குமென்கை. (இங்கு) பிற்பட்ட காலத்திலே. (இப்பரிசுரைப்பார்) இப்பாசுரமாத்ரத்தைச் சொல்லுவார். திருவாய்ப்பாடியில் பெண்கள் தாங்களே க்ருஷ்ணனுடேகூடி அநுஷ்டிக்கப் போனார்கள். ஆண்டாள் அநுகாரப்ரகாரத்தாலே பெற்றுளாகையாலே இப்ரபந்தம் சொன்னார்க்கும் இங்கே பலம் கிடைக்கும். (ஈரிரண்டுமால் வரைத்தோள்) இவர்களளவு பாராதே பண்டு பாடினவர்கள் சொல்வழியாலே அநுஸந்திக்கையாலே தோள்கள் பணைக்கும், அநுபவிக்கத் தோள்கள் பணைத்தாப்போலே.

(செங்கண் திருமுகத்து) அலப்யலாபத்தாலே சிவந்த திருக்கண்கள். (செல்வத் திருமாலால்) உபயவிபூதியுக்தனான ஸ்ரிய:பதியென்கை. இப்பாட்டில் உபக்ரமத்திலும் உபஸம்ஹாரத்திலும் பிராட்டி ஸம்பந்தம் சொல்லியிருக்கையாலே த்ரிவயத்தில் பூர்வகண்டத்திலும் உத்தரகண்டத்திலும் சொன்னபடியே இங்கு சொல்லிற்றாயிற்றென்கை.

(எங்கும் திருவருள் பெற்று) இத்திருப்பாவை சொன்னார்களிடத்தே எங்கும் தானும் பிராட்டியுமாக ஆதரிக்குமென்கை; கிடக்கைப்பாயிலே வெள்ளம் கோத்

A திருவாய் 10-9-10. B திருவாய் 2-3-11.

தாற்போலே. (இன்புறுவர்) இஸ்ஸை₂த்தை அநுப₄வித்து இனியராவர். பிராட்டியும் தாமும் ஸங்நிஹிதமாம்படி ப்ரஸாத₃த்தைப் பெற்று, (இன்புறுவர்) ப₄க₃வத்ஸம்ஶ்லேஷத்தால் வந்த ஆநந்த₃ம் பெறுவர். A "நின்திருவருளும் பங்கயத்தாள் திருவருளும்" B "திருமாலாலருளப்பட்ட சடகோபன்" C "திருமாமகளாலருள்மாரி"; நிரூபக தர்மம். இசலி இசலி இருவரும் பரியக்கடவர். 30.

ஆயி அருளிச்செய்த நாலாயிரப்படி முற்றிற்று.
ஆயி திருவடிகளே சரணம்.

ஆயி அருளிய

திருப்பாவை நாலாயிரப்படி ஸ்வாபதே₃சம்

முத₃ற்பாட்டில்:— ப₄க₃வத்பரத்வத்தால் சொல்லிற்றாகிறது வேத₃ார்த்த₂ம்; அதாவது — ஸர்வஸமாஶ்ரயணீய ஸ்த₂லம் என்றும், அவதீர்ணனவன் அழகே ருசிஜநகம் என்றும், ருசியுடையார் ப்ராப்யத்வரையாலே அவன்தன்னை மேல் விழுந்து அபேக்ஷிக்கை ப்ராப்தம் என்றும், இவ்விஷயத்திலே இழிவார்க்கு ருசியுடையார் உத்தே₃ஶ்யம் என்றும், ப்ராப்யமாகிறது அநுப₄வஜநிதப்ரீதிகாரிதமுமாய், யாவதா₄த்மப₄ாவியான கைங்கர்யமென்றும், தத்ஸாத₄நமும் அவன் திருவடிகளேயென்னலாயிற்று; ப்ராப்யப்ராபகஸங்க்₃ரஹம். 1.

இரண்டாம் பாட்டில்:— இவ்விஷயத்தில் இழிவார்க்குடைய விரக்தியையும் ஸம்ப₄ாவித ஸ்வப₄ாவத்தையும் சொல்லுகிறது. 2.

மூன்றும் பாட்டில்:— ப₄க₃வத் ஸமாஶ்ரயண ப₂லமான கைங்கர்யமொழியவே 1. "ஆயுராஶாஸ்தே" என்கிறபடியே ஐஹிகப₂லங்களும் ஆநுஷங்கி₃கஸித்₃த₄மாய்க் கொண்டு ஸித்₃தி₄க்கும் என்கிறது. 3.

நாலாம் பாட்டில்:— அநந்ய ப்ரயோஜநனுய், ப₄க₃வத் ஸமாஶ்ரயணம் பண்ணுமவனுக்கு இந்த்₃ராதி₃ தே₃வதைகள் நியாம்யராவர்களென்று, இவ்வதி₄காரிகளுடைய உத்கர்ஷம் சொல்லுகிறது. 4.

அஞ்சாம் பாட்டில்:— இப்படி ப₄க₃வத்₃ப₄ாக₃நாநுப₄வம் பண்ணுமவனுக்கு 2. "உத்தரபூர்வாகா₄யோரஶ்லேஷவிநாஶௌ" என்கிறபடியே, ப₄க₃வதா₃நுப₄வ மாஹாத்ம்யத்தாலே ஸகலது₃ரிதங்களும் போமென்று சொல்லுகிறது. 5.

"மார்கழி" (1) முதல் "மாயனை" (5) என்னுமளவும் — "நாராயணனே" (1) என்று தொடங்கி, "பாற்கடலுள் பையத்துயின்ற பரமன்" (2) என்றும், "ஓங்கியுலகளந்த உத்தமன்" (3) என்றும், "சார்ங்கமுதைத்த ரமழை" (4) என்றும், "மாயனை மன்னு வடமதுரை மைந்தனை" (5) என்றும் அடிப்பாடு சொல்லுகிறது.

இனி மேல்பத்துப்பாட்டிலும் ப₄க₃வத்₃ விஷயம் அபரிச்சி₂ந்நமாய், தனியனுப₄விக்கமாட்டாத சாபலத்தாலும், ப₄க₃வதா₃நுப₄வம் பண்ணுவார்க்கு, D "தொண்டீரெல்லீரும் வாரீர்" என்கிறபடியே துணைத்தேட்டமாயிருக்குமென்னுமத்தைச் சொல்லுகிறது.

A திருவாய் 9-2-1. B திருவாய் 8-8-11. C பெரிய திரு 8-6-10. D திருவாய் 5-2-2.

அதில் முதற்பாட்டில் [புள்] (6) ப₄க₃வதே₃கபோ₄க₃ரான ஸ்ரீவைஷ்ணவர்கள் அநந்யப்ரயோஜநராய் இவ்விஷயத்தில் தே₃ஶிகரன்றிக்கேயிருப்பாரை அவர்கள்பக்கல் பரிவாலே தே₃ஶிகராக்குகை ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு ஸ்வப₄ாவ மென்னுமத்தைச் சொல்லுகிறது. 6.

[கீசு] (7) இரண்டாம் பாட்டில், ப₄க₃வத்₃விஷயமான அர்த்த₂ம் ஒருவனுக்கு விஸ்ம்ருதமானுல் தங்கள் பரிவால் 1. "போ₄த₄யந்த: பரஸ்பரம்" என்கிறபடியே அறிவிக்கையும் ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு ஸ்வரூபமென்கிறது. 7.

[கீழ்வானம்] (8) மூன்றும் பாட்டில், ப₄க₃வத்₃நுப₄வத்தில் ப்ரத்யாஸந்நராயிருப்பார் திறத்தில் ஸாபேக்ஷராயிருக்கையும், அவர்களை முன்னிட்டு ஈஶ்வரனைக் கிட்டுகையும் ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு ஸ்வரூபமென்கிறது. 8.

[தூமணி] (9) நாலாம்பாட்டில், 2. "தத்தஸ்ய ஸத்₃ருஶம் ப₄வேத்" என்று பூர்வார்த்த₄ நிஷ்ட₂ராயிருப்பாரை, ப₄க₃வத்ப்ரேமாதிஶயத்தாலே ததே₃கபோ₄க₃ராயிருக்குமவர்கள் போ₄க₃ார்த்த₂மாக ப்ரேரிக்கை அவர்களுக்கு ஸ்வரூபமென்கிறது. 9.

[நோற்று] (10) அஞ்சாம்பாட்டில், 3. "ஜ்ஞாநீ த்வாத்மைவ மே மதம்" 4. "அஹம் ஸ ச மம ப்ரிய:" என்று அவன் பக்ஷபாத்தியிருப்பார் திறத்தில் ஸ்ரீ வைஷ்ணவர்கள் நித்ய ஸாபேக்ஷராயிருக்கை ஸ்வரூபமென்கிறது. 10.

[கற்று] (11) ஆறும்பாட்டில், "ப₄க₃வத்ஸம்ப₃ந்த₄ம் விச்சே₂தி₃யாதே போந்த ஸந்தாந ப்ரஸூதர் நமக்குப் பூஜ்யர் என்றும், அவர்களடியாக ப₄க₃வத் ஸமாஶ்ரயணம் பண்ணுகை ஸ்வரூபம் என்கிறது. 11.

[கனத்து] (12) ஏழாம்பாட்டில், ப₄க₃வத்₃விஷயம் ஸஹ்யமாம்படி அவக₃ாஹித்தவர்கள் ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு உத்₃தே₃ஶ்யராமளவன்றிக்கே தத்ஸம்ப₃ந்த₄ ஸம்ப₃ந்தி₄கள் உத்₃தே₃ஶ்யரென்றிருக்கை ஸ்வரூபமென்கிறது. 12.

[புள்ளு] (13) எட்டாம்பாட்டில், ப₄க₃வதா₃நுப₄வரூபமான ஜ்ஞாநப₄க்திகளால் பூர்ணராயிருப்பாரிடத்திலும் ததா₃ர்த்த₂மாக ஸ்ரீ வைஷ்ணவர்கள் ஸாபேக்ஷராயிருக்கை ஸ்வரூபம் என்கிறது. 13.

[உங்கள்] (14) ஒன்பதாம் பாட்டில், ப₄க₃வத்₃ விஷயத்தில் மூட்டுகையிலே அதி₄கரித்த நிர்வாஹகர் முன்பாக ப₄க₃வதா₃நுப₄வம் பண்ணுகை ஸ்வரூபம் என்கிறது. 14.

[எல்லே] (15) பத்தாம் பாட்டு — ஸ்ரீவைஷ்ணவ ஸமாஜ தர்ஶநம் அபி₄மதமாயிருக்குமவர்களைக் கண்டால், அந்த ஸமூஹமாக அவர்களை உகக்கை ஸ்வரூபம் என்கிறது. 15.

[காயக]னில் (16) — இவையிரண்டாலும் ப₄க₃வத்₃விஷயத்தைக் கிட்டுவார் தத்ப்ரத்யாஸந்நரைப் புருஷகாரமாகக் கொண்டு புகுருகை ஸ்வரூபம் என்கிறது. 16.

[அம்பரம்] (17)—ப₄க₃வத்₃ விஷயீகாரம் பிராட்டி ஸாபேக்ஷமாயிருக்கிறது. 17.

[உந்து மதகளிற்றன்] (18)—பிராட்டியைப் புருஷகாரமாக வரித்தால் அவனும் அவளும் இசலி இசலிப் பரியும் பரிவையும் சொல்லுகிறது. 18.

[குத்து விளக்கு] (19) — அடிமை செய்யுமிடத்திலும் இருவர்க்கும் சேர்ந்த சேர்த்தியிலே அடிமை செய்வதே முறையாகிறது. 19.

[முப்பத்து] (20) — ப்ரபு₃த்₃த₄னுய், தங்கள் கார்யம் செய்கைக்கு A "ஏத்தவே மூலகுங் கொண்ட" என்கிறபடியே ஆஶ்ரிதர்ானவர்கள். நிர்மமராய்க் கொண்டு அவன் கு₃ணகீர்த்தநம் பண்ணுகை கர்த்தவ்யம் என்கிறது. 20.

[ஏற்ற கலம்] (21) — கீழிற் பாட்டில் தங்கள் அபி₄மாந ஶூந்யதையைச் சொல்கிற்றுய், இப்பாட்டில் அநந்யார்ஹஶேஷத்வம் சொல்லுகிறது. அவனுடைய விஶேஷ கடாக்ஷத்துக்குத் தங்களுடைய அநந்யார்ஹ ஶேஷத்வம் அநுஸந்தே₄ய மென்கிறது. 21.

[அங்கண்] (22) — கர்மபரதந்த்ரராயிருந்துள்ள ப்ரயோஜநாந்தரபரரிற் காட்டிலும், அநந்யப்ரயோஜநராய் ஸாத₄நாந்தர நிஷ்ட்டₒராயிருக்குமவர்களிற் காட்டிலும், ஸித்₃த₄ஸாத₄நம் பண்ணினுர் குற்றம் போகத் தன்கைம்முதலில்லாமையால் ஈஶ்வரனே ப்ரபு₃த்₃த₄னுய்க் கொண்டு ஸம்வித₄நம் பண்ணவேணுமென்று அபேக்ஷிக்க அவ்வதி₄காரத்தைச் சொல்லுகிறது. 22.

[மாரி] (23) — அர்த்தி₂கள் ஆஸ்த₄ாநத்திலிருக்கிற ஶ்ரிய:பதிக்கு ஸ்வரூபாநுரூபகு₃ணவ்ருத்தியை விண்ணப்பம் செய்யவேணுமென்கிறது. 23.

[அன்றிவ்வுலகம்] (24) — அர்த்தி₂களாய்ச் சென்றுலும் தந்தாமுடைய புருஷார்த்த₄த்தை விஸ்மரித்து மங்க₃ளாஶாஸநம் பண்ணவேண்டும்படியான விஷய வைலக்ஷண்யத்தைச் சொல்லுகிறது. 24.

[ஒருத்தி] (25) — ஸ்வரூபலாப₄த்தோபாதி து₃:க்க₃நிவ்ருத்தியும் தத₃ாஶ்ரயணத்தாலே என்கிறது. 25.

[மாலே] (26) — போ₄கோ₃பகரண ஸித்₃தி₄யும் அவனுலே என்கிறது. 26.

[கூடாரை] (27) 1. "தம் ப்₃ரஹ்மாலங்காரேணுலங்குர்வந்தி" என்கிறபடியே கைங்கர்யமே ஸ்வரூபாநுரூபமான புருஷார்த்த₄மென்றறுதியிட்டு, ப்ரதிப₃ந்த₄கநிவ்ருத்திக்கும் உத்₃தே₃ஶ்யமான புருஷார்த்த₄ ஸித்₃தி₄க்கும் அநுகு₃ணுலங்காரம் அவனே பண்ணவேணுமென்கிறது. 27.

[கறவைகள்] (28) — கீழடங்க ஒரு அதி₄காரிக்கு ஸம்ப₄விக்கும் ஸ்வபா₄வங்களைச் சொல்லி, ஆகிஞ்சந்யத்தையும் ப்ராப்தியையும் முன்னிட்டு அவனே உபாயமாக வேணுமென்று அபேக்ஷித்து கூ₄டமணம் பண்ணிக்கொண்டு தலைக்கட்டுகிறது. 28.

[சிற்றம் சிறுகாலே] (29) — ஏவம் ஸ்வீக்ருதஸித்₃தோ₄பாயனுக்கு தத்க்ருத ஸ்வரூபாநுரூபப₂லமும் தத்₃விரோதி₄நிவ்ருத்தியும், 2. "யா: காஶ்சந க்ருதய:" இத்யாதி₃ப்படியே சொல்லித் தலைக்கட்டுகிறது. 29.

[வங்கக் கடல்] (30) — உக்தமான அநுஷ்ட₂ாநமில்லாதவர்களுக்கு அவர்கள் பாசுரமே பேற்றைக் கொடுக்குமென்று சொல்லி நிக₃மிக்கிறது. 30.

ஆசார்யஹ்ருத₃யஸ்யார்த்த₂ஸ் ஸகலா யேந த₃ர்ஶிதா: |
ஶ்ரீஸாநுத₃ாஸ மமலம் தே₃வராஜம் தமாஶ்ரயே ||

நாலாயிரப்படி ஸ்வாபதே₃ஶம் முற்றிற்று.

ஆயி திருவடிகளே சரணம்.

A திருவாய் 2-2-11.